# பாராட்டு விழா மலர்



## சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

சிவமயம்

அச்சுவேலி

# சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

## பாராட்டு விழா மலர்

1960

மலர் வெளியீட்டுச் சபை.

திரு. ச. அம்பிகைபாகன் B. A., தலைவர்

,, ச. பஞ்சாட்சரசர்மா

வித்துவான் க. நடராசா

திரு. மு. வைத்தியலிங்கம்

கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம்.

# பதிப்புரை

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய சீரிய தொண்டுகளைப் பாராட்ட வேண்டுமென்ற நல்லெண்ணம் சில அன்பர்களின் மனத்தில் உதித்தது. இவ்வன்பர்கள் இவ்விஷயத்தை ஆலோசனை செய்து ஆவன செய்வதற்கு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில், யாழ்ப்பாண மாவட்ட அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில், ஒரு கூட்டத்தைக் கூட்டினர். அக்கூட்டத்தில் குருக்கள் அவர்களுக்கு ஒரு பாராட்டு விழா நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டு, அவ்விழாவை நடத்துவதற்கென ஒரு சபை நிறுவப்பட்டது. அச்சபை பாராட்டு விழாவில் குருக்கள் அவர்களுக்கு பொற்கிழி வழங்கி, பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதோடு ஒரு மலரும் வெளியிடவேண்டுமென்று தீர்மானித்தது.

இம்மலரை வெளியிடும் பொறுப்பு ஒரு சிறு குழுவில் விடப்பட்டது. இம்மலரில் குருக்கள் அவர்களின் வாழ்க்கை வரலாறும் பாராட்டுரைகளும், சமயசம்பந்தமான கட்டுரைகளும் இடம்பெற வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டது. இதன் பிரகாரம் மலரில் குறிக்கப்பட்ட மூன்று அம்சங்களும் பொருந்தியிருப்பதைக் காணலாம்.

குருக்கள் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை பாராட்டுச்சபைக் காரியதரிசிகளிலொருவரும், அச்சுவேலி வாசியுமாகிய ஆசிரியர் திரு. மு. வயித்திலிங்கம் எழுதியுள்ளார். மலரிற்காணப்படும் பாராட்டுரைகளிற் பெரும்பாலானவை காலத்துக்குக் காலம் பல பெரியார்கள் குருக்கள் அவர்கள் நூல்களையும் சேவைகளையும் பாராட்டி எழுதியவையாகும். சிறுபாலானவை இம்மலருக்கென்றே எழுதப் பெற்றவையாகும். இவற்றிலிருந்து சைவ உலகம் குருக்கள் அவர்களை எவ்வாறு உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கின்றது என்பது புலப்படுகின்றது.

இம்மலரிற் காணப்படும் கட்டுரைகள் இக்காலத்து அறிஞர்கள் குருக்கள் அவர்களுக்குச் செலுத்திய காணிக்கையாகக் கருதப்பட

வேண்டும். பாராட்டு விழா மலர்களில் இவைபோன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம்பெறுவது மரபாகும். இக்கட்டுரைகளில் சமய உண்மைகள் விளக்கப்படுவதோடு, சமய வளர்ச்சிக்கு வேண்டிய ஆலோசனைகளும் கூறப்பட்டுள்ளன. எனவே, இவை படிப்போருக்குப் பெருவிருந்தாகு மென்பது எமது நம்பிக்கை.

குருக்கள் அவர்கள் ஈழநாட்டிலும், தமிழ் நாட்டிலும் சைவத் தையும் தமிழையும் வளர்த்த ஞானப்பிரகாச முனிவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர், இலக்கணம் முத்துக் குமாரத் தம்பிரான் போல் வேதாகமங்கள், சைவ சித்தாந்த சாத்திரங் கள், திருமுறைகள் முதலியவற்றைத் துறைபோகக் கற்றவர்கள். இதனு லேயே குருக்கள் அவர்கள் சைவ சித்தாந்த உண்மைகளை மரபு பிறழாது எடுத்துரைக்க முடிகிறது. இதற்குமேலாக அவர்கள் சைவக் கிரியைகளைப் பற்றிய அறிவிலும், அவற்றைச் செய்யும் திறனிலும் தலைசிறந்து விளங் குகின்றார்கள்.

குருக்கள் அவர்கள் எழுதிய நூல்களின் பட்டியலை இம்மலரின் இறுதியிற் காணலாம். அவற்றிற் சில பிரதான நூல்கள் அச்சிடுவ தற்குச் செப்பம் செய்யப்பட்டிருப்பனவாகக் காணப்படுகின்றன. அவற்றை வெளியிடுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டியது சைவ நன்மக்கள் கடமையாகும்.

இம்மலரைச் செவ்வனே வெளியிடுவதற்கு உதவிபுரிந்த சகல ருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறோம். பாராட்டுரைகள், கட்டுரைகள் எழுதிய பெரியார்களுக்கும், இம்மலரை அழகுற உரிய காலத்தில் அச்சிட்டுதவிய கலைவாணி அச்சகத்தாருக்கும் எமது நன்றியை விசேஷமாகத் தெரிவிக்க விரும்புகிறோம். பாராட்டுரை களையும், கட்டுரைகளையும் செப்பன் செய்வதிலும் அச்சுத்தாள்களைப் பார்வையிடுவதிலும் உதவி செய்த வித்துவான் பொன். முத்துக் குமாரன், B. O. L. அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
21-9-60.

**ச. அம்பிகைபாகன்,**
மலர்வெளியீட்டுச் சபைத்தலைவர்.

சிவமயம்

# முன்னுரை

இலங்கையில் சிவாச்சாரிய திலகமாக விளங்கும் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களுக்கு, பாராட்டு விழா வைப்பது பற்றிச் சில அன்பர்கள் என்னுடன் கலந்தாலோசித்த போது, நான் அதை மனமுவந்து வரவேற்ற தோடு என்னாலான உதவியும் புரிவதாகக் கூறினேன்.

நமது நாட்டிலே காலத்துக்குக் காலம் பல பெரியார் கள் தோன்றி சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் வளர்த்து வந்துள்ளார்கள். அவர்கள் வழிவந்தவர்கள் குருக் கள் அவர்கள். இளம்வயதிலிருந்தே குருக்கள் அவர்கள் கல்வியில் ஊக்கம் காட்டியுள்ளார்கள். வேதாகமங்களையும், சித்தாந்த சாத்திரங்களையும், திருமுறைகளையும் ஐயந்திரிபறக் கற்றுள்ளார்கள். கற்றதோடமையாது மற்றவர்களுக்குப் பயன் படும் முறையில் சில சமஸ்கிருத நூல்களையும், பல தமிழ் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். இந்நூல்கள் சிறுர் முதல் சிவாச்சாரியர் வரை படித்துப் பயன்பெறத் தக்கவை.

குருக்கள் அவர்களுக்கு அதிக சிறப்பைக் கொடுப்பது சைவக்கிரியைகளைப் பற்றி அவர்களுக்குள்ள அறிவாகும். கிரியைகளைப் பற்றித் தெளிவான விளக்கமிருப்பதாலேயே குருக்கள் அவர்கள் அவற்றைச் செவ்வனே செய்ய முடிகின்றது. சைவக் கிரியைகளைப் பற்றிக் குருக்கள் அவர்கள் எழுதி யிருக்கும் நூல்கள் சில வெளிவரவில்லை என அறிகிறேன். அவற்றை வெளியிடுதற்குச் சைவமக்கள் முன்வருவார்க ளென நம்புகிறேன்.

குருக்கள் அவர்கள் நிறுவி நடாத்திவரும் அச்சுவேலி, சரஸ்வதி வித்தியாசாலை, அவர்கள் சைவக் கல்வியில் கொண்ட அபிமானத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கு கின்றது. பாராட்டு விழா சிறப்புற நடப்பதற்கு உதவிபுரிந்த சகலருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குருக்கள் அவர்கள் இன்னும் பல்லாண்டு திடகாத்திரத் துடன் வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டுபுரிய இறைவன் அருள்புரிவாராக.

கச்சேரி
யாழ்ப்பாணம்
22-9-60.

ம. ஸ்ரீகாந்தா.
தலைவர்
பாராட்டு விழாச் சபை

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | ஆசியுரை, வாழ்த்துப் பாக்கள் | i—iv |
| 1. | அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் வாழ்க்கை வரலாறு. .... .... திரு. மு. வயித்திலிங்கம் | 1— 10 |
| 2. | பாராட்டுரைகள் .... .... | 11— 34 |
| | **சிறப்புக் கட்டுரைகள்** | |
| 3. | குருபரத்துவம் — .... .... சிவஸ்ரீ இ. கு. பூர்ணானந்தேசுவரக் குருக்கள் | 35— 43 |
| 4. | மூர்த்தி, தலம், தீர்த்தம் — .... .... கலைப்புலவர் க. நவரத்தினம் | 44— 51 |
| 5. | அந்தணச் செம்மல் காட்டும் அண்ணாமலை— .... திரு பொ. கிருஷ்ணபிள்ளை | 52— 55 |
| 6. | இந்திய தத்துவ ஞானத்தின் சிறப்பியல்புகள் — திரு. கி, லக்ஷ்மணஐயர், எம். ஏ. | 56— 59 |
| 7. | திருவையாறு அகலாத செம்பொற் சோதி — .... ஐயாறன் | 60— 64 |
| 8. | அந்நியர் ஆட்சியில் சைவத்தின் நிலை — ... திரு. ச. அம்பிகைபாகன், B. A. | 65— 70 |
| 9. | திருமுறைகள் — .... .... கோவைகிழார் | 71— 74 |
| 10. | வைதிக சைவம் — .... .... பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை | 75— 83 |
| 11. | பெரிய புராணமும் சைவசித்தாந்தக் கொள்கையும் வித்துவான் பொன். முத்துக்குமாரன் ( B. O. L. ) | 84— 87 |
| 12. | இந்து தர்மம் — .... .... வியாகரணசிரோமணி தி. கி, சீதாராமசாஸ்திரிகள் | 88— 91 |
| 13. | ஆரியத் தமிழ் — .... .... கண்டனூர் சிவஸ்ரீ அரு. இராமநாதக்குருக்கள் | 92— 95 |
| 14. | புராணங்கள் தென்னாட்டின் சமயக் கருவூலம் — டாக்டர் கா. கைலாசநாதக் குருக்கள், M. A., Ph. D. | 96—103 |
| 15. | வேதாகமங்கள் — திரு சு. நடேசபிள்ளை, B. A. B. L. | 104—108 |
| 16. | சைவசாதனங்கள் — .... .... திரு கு. அம்பலவாணபிள்ளை | 109—112 |
| 17. | சுவேதாசுவதரம் - ஓர் உபநிடதம் — .... திரு மு. ஞானப்பிரகாசம். B. A. B. Sc., | 113—116 |
| 18. | குருமகிமை — .... .... சிவஸ்ரீ S. சுவாமிநாதசிவாசார்யர் | 117—119 |
| 19. | ஆணவமலம் — .... .... ஸ்ரீமத் கா. அருணைசல ஆசிரியர் | 120—121 |

உ

சிவமயம்

மதுரை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த

தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

# ஆசிச் செய்தி.

**ஸ்ரீ மு. வைத்தியலிங்கம்,**

விழாச்சபை செயலாளர்,

**சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள்,**

பாராட்டு விழாச்சபை, அச்சுவேலி.

தங்களுடைய 9 ந் தேதி கடிதம் கிடைத்தது. சிவஸ்ரீ ச. குமாரசுவாமி குருக்கள் அவர்களது அருமந்த சேவைகளைப் பாராட்டு முகத்தான் 10-10-60 தேதியன்று ஒரு விழாக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிற யாழ்ப்பாணத்து அன்பர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம்.

தகுதியுடை பெரியவர்கள், தங்களது வாழ்நாளிலேயே பொதுமக்களால், பாராட்டப் பெறுதல் சாமானியகாரியமல்ல. பெரும்பாலும் பெரியவர்களது காலத்தின் பின்னரே, அவர்களது செயற்கரிய செயல்களை மக்கள் உணரக்கூடும். அதிலும் பெரும்பாலார் பிற நாட்டவர்களால் பாராட்டப் பெற்ற பின்னரே, தாம் பிறந்த நாட்டவர்களால் பாராட்டப்பெறுவர்.

அவ்வாறின்றி, யாழ்ப்பாணத்து நமது சிவ ஸ்ரீ சி. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களுக்கு, யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலஸ்தர்கள்கூடி ஒரு பாராட்டு விழா நடத்தப்பெறுகின்றதென்றால், அதுவே அவர்களது அரும் பெரும் சேவைகள், மக்களது உள்ளத்தை எவ்வளவு கவர்ந்திருக்கின்றன என்பதற்கு சிறந்ததோர் அத்தாட்சியாகும்.

நாம் நமது பூர்வாஸ்ரமத்தில் திருக்கேதீச்சரநாத சுவாமி கோவிலில் கும்பாபிஷேகம் செய்வித்தபொழுது சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களே ஆகமமுறைப்படி வைதீக சடங்குகளை பக்தியுடனும், சிரத்தையுடனும், குறித்த நேரத்தில் சிறப்பாகச் செய்து முடித்தார்கள். அதுசமயம்தான் அவர்களை நேரில் சந்திக்கவும், சமய சம்பந்தமாக சம்பாஷனை செய்யவும் திருவருள் கூட்டிவைத்தது.

அவர்களுக்குச் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக்கலை ஞானமும், உணர்வரிய மெஞ்ஞானமும், சிந்தித மனோரத சித்தியும், அரோகதிடகாத்திரமும், தீர்க்காயுளும், ஐஸ்வர்ய ஆதிக்கமும், நித்தியமங்கள குருகடாக்ஷமும், மென்மேலும் பெருக உண்டாகத் திருவருள் பாலிக்குமாறு எல்லாம்வல்ல அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

இப்பராட்டு விழாவை ஏற்பாடு செய்த பக்தகோடிகள் அனைவருக்கும் எல்லா நலங்களும் உண்டாக ஆசீர்வதிக்கின்றோம்.

**ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்.**

## வித்துவான் க. நடராசா அவர்கள் சொல்லியவை

### வெண்பா

1. ஆதவனு லாரழலா லம்புலியாற் றீராத்தற்
போதவிருள் போக்கவருள் புண்ணியனே—வேதக்
குருமா மணியைக் குமார சுவாமித்
திருமா மணியென்று தேர்.

### கட்டளைக் கலித்துறை

2. நத்தம் புரைமுடி யீசர் நடஞ்செயக் கோயிலொன்றுஞ்
சித்தம் தெளிந்து சிவநெறி வாழச் சேர்ந்து கலை
நித்தம் பயில்வித்தி யாசாலை யொன்றும் நிறுவியிசை
தத்தம் செயுமுனை யொப்பவ ராரித் தரணியிலே.

3. கணங் கொண்டு நின்கடை வாயில்வந் தோர்க்குக் கருத்துடனே
குணங் கொண்ட வின்னமு தூட்டி மகிழுங் கொடைமடத்தால்
பணங் கொண்டல் நாணப் பரித்தியா கஞ்செயும் பண்புடையோய்
கணங்கொண் டுனைத்தொழு வார்கதி சேர்வர் கவலையற்றே.

4. ஆய்வது வேதா கமக்கலை யாதிய வன்புடையோர்
தோய்வது நின்னருள் வெள்ளம் தொழுவார் துரிசகலக்
காய்வது காமாதி முப்பகை கண்டோர் கதிபெறவே
தேய்வது பாச மிருவினை யென்பர் தெரிந்தவரே.

### வெண்பா

5. கண்டி புனைந்து கனவயிரத் தோடணிந்து
கொண்டு பவனி வருங்கோலங் — கண்டுருகிப்
பொன்னுடை போர்த்துப் புகழ்ந்து வணங்குகின்ற
நன்னுளே நம்மவர் நன் னுள்.

ஓ

சிவமயம்

தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர்
சித்தாந்த ரத்நாகரம், வித்துவான்

# மாணிக்க வாசக அடிகள்

எழுதியது.

1. பூவண்ணம் மணம்போல் உண்மை போதாநந்தப் பேரின்பம்
மேவண்ணல் ஆதி சைவ மெய்க்குலம் விளங்கத் தோன்றிப்
பூவண்ணம் ஆவிவண்ணம் புண்ணியப் பொருளின் வண்ணம்
ஆவண்ணம் விளங்கக் காட்டும் ஆசான் தாள் வண்ணம் போற்றி

2. வேதசை வாகமங்கள் விளம்பும்மெய்ப் பொருள்களெல்லாம்
பேதமாய்த் தீயோராலே பெருமையிற் குன்ருவண்ணம்
வாதமோ வம்போஇன்றி வன்மைவீரங் குன்ருமல்
கோதற வரைந்து காட்டுங் குமாரசாமிக் கோவாழ்க.

3. செந்தமிழ் நாட்டிலங்கைத் தீவிலும் வாழ்நல்லோர்கள்
சிந்தனைக் குரியமூர்த்தி சிவநெறி யுணர்த்தும் மூர்த்தி
வந்தனைக் கமைந்தமூர்த்தி வாழ்நெறி காட்டும் மூர்த்தி
மைந்தனைத் தன் போல் ஈந்த வளர் ஞான மூர்த்தி வாழ்க.

4. திரு நீற்றை அன்றிவேறு சிந்தையிற் கொளாத செம்மைப்
பெருநீர்மை யாலேநச்சுத் தீண்டியும் இறவாப் பெம்மான்
வருநீர்செஞ் சடைக்கொண்டான்சே வடிமலரிணையே போற்றும்
ஒரு நீர்மைக் குமாரசாமி ஒண்மலர்க் கழல்கள் வாழ்க.

5. நாவலர் பெருமான் இல்லை நற் சபா பதியும் இல்லை
காவலர் புகழுஞ் சீர்ச்சங் கரபண்டிதரு மிங்கில்லை.
பாவலர் புலவர் பல்லோர் படிமிசை உறினும் எங்கட்
காவலர் குமாரசாமி ஆசானை நிகர்வர் ஆரே.

6. ஆரணி வாழ்ந்தளந்தை அமிர்தேசுவரனும் இல்லை
தாரணி புகழ வாழும் சைவாசா ரியர்க்குக் கோவாய்
நாரணி நெஞ்சும் சைவ நாயகற் கன்பும் மிக்கோன்
சீரணி குருகுமார சுவாமிஎம் செல்வன் வாழ்க.

7. நீதியும் நிதியும் செம்மை நெறியும்எல் லாமும் மாது
பாதியன் அன்றி வேறு பகர ஒன் றில்லை என்று
மாதிடத் தொடுங்கொண் டெந்தை மலரடிக் கேநெஞ்சாக்கி
ஆதியி லிருந்து மாரு அந்தணர் கோமான் வாழ்க.

8. திருக்கருப் பறியல் கோயில் திறல் வேந்தன் கைப ராய்நம்
கருக்கடிந் தாள் வோன் வேள்விக் கருவிப்பே ரிடைநின்ரேங்கும்
பெருக்க வாழ் திருப்போர் வாய்ந்த பெருந்தகை, குமார சாமிக்
குருக்கள் நீடூழி வாழ்க குலம் வழி வழியாய் வாழ்க.

9. அம்பிகை பாகன் வாழ, அணிகொள் ஸ்ரீ காந்தா வாழ
நம்பினேர்க் கருளும்செல்வ நடராசா வைத்திலிங்கம்
தம் பிரான் ஐந்தெழுத்துச் சருமன் நல் முருக வீசன்
எம் பிரான் ஏகம் பன்ரு ளிணை தொழு தினிது வாழ்க.

* * *

உ

சிவமயம்

திருநெல் வேலிச் சைவாசிரியகலாசாலை விரிவுரையாளர்களாலும்,
ஆசிரிய மாணவர்களாலும்,

**சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள்**
அவர்கள் பேரில் மனம் உவந்தளிக்கப்பட்ட

# மங்கல வாழ்த்துப்பா.

## (நேரிசை ஆசிரியப்பா)

ஈழத் திணையிலா விருமொழிப் புலவன்
இருபதாந் நூற்றுண் டிலங்குநற் கலைஞன்
அச்சு வேலியின் அருந்தவப் புதல்வன்
குமார சுவாமிக் குரிசில் அந்தணன்
வாழிய பெரிதும் வாழிய அறமே
குருவும் உருவும் திருவும் உறவே
இறைவ னிணையடி யிலங்குசீர் வள்ளல்
மறையோ டாகமம் மாண்புறத் தெரீஇ
மந்திர தந்திரப் பொருள் புலந் தரீஇப்
பள்ளிச் சிறுரொடு பண்டிதர் பயிலத்
தெள்ளிய நடையில் திறம்பட நுண்பொருண்
நூன்முறை யளித்த நுண்மா ணுழைபுலன்
நாவலன் தரீஇய நன்னெறி தவாஅச்
சங்கர பண்டிதன் சால்பினின் வழாஅ
மொழிவளம் படுத்து முன்னிய நுண்பொருள்
வழிவளப் படுத்திய வள்ளாஅல் வாழிய
மக்கள் சிவநெறி மாண்புறத் தரீஇய
மறைவழி வேள்வியின் மன்னு மாலயங்கள்
குறைவற விழாவொடு பூசைபிர திட்டையும்
நிறைவுற வாற்றுநன் நிகரிலாக் குருவே!
உயிரினும் ஓம்பினை ஒழுக்கம்
விழுமியை ஞாலம் விழைகுதும் வாழி.

ஓ

சிவமயம்

புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர்

**பண்டித ச. சுப்பிரமணியம் அவர்கள் பாடிய**

# வாழ்த்துப்பா.


1. அருங்கலம் அச்சைப் பதிக்குக் குமார சுவாமி அவற்(கு)
அருங்கலம் சைவச் சரஸ்வதி கல்விக் கழகம் அதற்(கு)
அருங்கலம் சித்தி விநாயகன் ஆலயம் ஆங்கதற்கே
அருங்கலம் அக்குரு ஆற்றிடு பூசை அருச்சனையே.

2. எண்ணுஞ் சமயத்தை ஈசனை நிந்தை செயஅறியின்
கண்ணுஞ் சிவக்கும் முகமுங் கறுக்கும் செந் நாக்கடியும்
திண்ணம் மனங் கை பதைக்கும் திருத்தும் உரைசெயுமே
அண்ணல் குமார சுவாமி ஆசார்யன் அருங்குணமே.

3. சொல்லும் அமைச்சன் நடேச பிள்ளையெனுந் தூயனுக்கே
செல்வஞ் சிறப்பருள் சட்டியப் தத்துச் செயுஞ்சடங்கை
செல்லும் விதியின் நடத்தி விருது "சிவாக மத்தின்
சொல்வித் தகனெனப்" பெற்றுப் பொன் ஆடையுஞ் சூழ்ந்துளனே.

4. வாழிய வைதிக சைவ நல் வாய்மைகள் வான்மழையா
வாழிய மன்னறம் தான தவவழி வையகமே
வாழிய எங்கள் குமார சுவாமிக் குருவளர்க
வாழி அவன் குலம் நூல் கல்விச் சாலையும் வாழியவே.

● ● ●





அச்சுவேலி

**சிவஶ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள்**

# அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் வாழ்க்கை வரலாறு

திரு. மு. வயித்தியலிங்கம்,
(ஆசிரியர், அச்சுவேலி)

சற்சமயமாகிய நமது சைவசமயம் வளர்ச்சி யடைதற்கு நாம் செய்யவேண்டிய பணிகள் சைவவித்தியாசாலை தாபித்தல், சமயநூல்களை முறைப்படி கற்பித்தல், சைவப்பிரசங்கம் செய்வித்தல், சமயப் பத்திரிகை வெளியிடுதல், தமிழ் சம்ஸ்கிருதமென்னும் இரு மொழிகளிலுமுள்ள பழைய நூல்களை அழிந்து விடாமற் பாதுகாத்தல், புதிய நூல்களை வெளியிடுதல், குருமார் வகுப்பு நடாத்துதல், புராணபடனம் செய்வித்தல் முதலாயினவாம்.

சிவாசாரிய திலகமாகிய அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்கள், சைவவித்தியாசாலை தாபித்து நடாத்துதல், சைவ நூல்களை வெளியிடுதல் முதலிய மிக மேலாகிய சிவபுண்ணியச் செயல்களிலே தமது காலத்தைப் பயன்படுத்தித் தூயவாழ்க்கை நடாத்திக் கொண்டு வருகின்ற பெரியாராவர்.

**தந்தை தாயர்**

சிவஸ்ரீ குருக்களவர்களின் தந்தையார், யாழ்ப்பாணத்து அச்சுவேலி என்னுமூரில், ஆதிசைவ அந்தணர் வருணத்தில், கௌதமகோத்திரத்திற் பிறந்த நமச்சிவாயக் குருக்களின் புத்திரராகிய சபாபதிக் குருக்கள் என்பவர். இச்சபாபதிக் குருக்கள் ஆசாரியாபிஷேகம் பெற்றுச் சிவபூசையைக் கிரமந்தவறுது செய்துவந்ததோடு, ஸ்ரீசுப்பிரமண்ய நவகண்டயந்திர பூஜையுஞ் செய்து அதனூற் சித்தியு மெய்தியவர்; திருப்புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளியிருக்கும் முத்துக்குமார சுவாமிக் கடவுள் மீது அன்பு மிகுந்து தமக்குச் சொந்தமான வைரவ ஆலயத்தில் கந்தபுராணபடனஞ் செய்தலை நியதியாகக் கொண்டவர்; தமது முன்னோர் பரம்பரையாகச் செய்து வந்த குருத்துவத்தைத் தாமும் சிரத்தையுடன் செய்து கொண்டு நல்வாழ்வு நடாத்தியவர்.

குருக்களவர்களின் அன்னையார், அச்சுவேலியில் சிரேஷ்டகுரு எனமதிக்கப் பெற்று இருந்தவரும், சிவாகமபண்டிதரும் குமாரசுவாமிக்குருக்கள் என்பவரது புத்திரருமாகிய சாமிக்குருக்கள் என வழங்கும் சுவாமிநாதக் குருக்களின் மகள் தங்கம்மா ஆவர்.

**ஜனனம்**

இவ்விருவருக்கும் புத்திரராய் வியவருஷம் கார்த்திகை மீ இருபத் தோராந் திகதி (16-11-1886) புனர்பூச நக்ஷத்திரத்தில் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்கள் ஜனனமாயினர். இவருக்கு உரிய காலங்களில் வித்தியாரம்பம் முதலியன செய்யப் பெற்றன.

**கல்வி பயிலுதல்**

வித்தியாரம்பஞ் செய்யப்பெற்ற இவர் உள்ளூரிற் கல்விபயின்று வந்தனர். பின் இவருடைய தந்தையார், நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவ- சங்கரபண்டிதர் குமாரரும், வித்துவசிரோமணியுமாகிய சிவப்பிரகாச பண்டிதரிடம் தமிழும் சம்ஸ்கிருதமும் கற்குமாறு இவரை ஒப்படைத்தனர். இவர், பண்டிதருடைய கிருகத்தில் அவரோடிருந்து பாடங் கேட்டு வந்தனர். பின்பு வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதன் பரிபாலகராயிருந்த ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்களால் நிறுவப்பெற்ற காவிய பாடசாலையில், சுன்னாகம் வித்துவசிரோமணி ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவரவர்களிடத்தும், ஸ்ரீமத் சங்-சிவப்பிரகாச பண்டிதரவர்களிடத்தும் கிரமமாகப் படித்துவந்தனர். பின்னரும், நீர்வேலியிலே சிவப்பிரகாச பண்டிதரோடு சிலவருஷங்களிருந்து முறைப்படி கற்றுத்தேறினர். இவர்கள், ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்களிடமும் தமிழ் நூல்கள் சிலவற்றையும் சித்தாந்தநூல்களையும் பாடங்கேட்டனர். சங்கானை அ.அருணாசலசாஸ்திரிகளிடமும் புலோலி ம.முத்துக்குமாரசுவாமிக் குருக்களிடமும் சென்று சிவாகமங்களின் ஐயங்களை வினவித் தெளிந்தனர்.

நுண்ணியமதியும் கல்விப் பிரியமும் இயல்பாகவுள்ள குருக்களவர்கள், ஆசிரியர்களிடம் கற்ற அளவினமையாது இரு மொழி நூல்களையும் தாமே மீட்டும் மீட்டும் படித்துத் தமது அறிவை மேலும் விருத்தி செய்து கொண்டனர்.

**ஆசிரியபத்தி**

இவருக்குத் தமது ஆசிரியர்களிடத்திருந்த அன்பு அளவிலடங்குவதன்று. நீர்வேலிச் சிற்சபேசன், சிவசங்கரபண்டிதர் சரித்திர நூன்முகத்தில், "குருக்களவர்கள் ஸ்ரீலஸ்ரீ சங்கரபண்டிதரவர்களின் மகன் ஸ்ரீ சிவப்பிரகாசபண்டிதர் அவர்களிடத்தில் தம்மனத்தைப் பறிகொடுத்துக் கற்றுத் தேர்ந்தவர்கள். அதனை நானே நேரிற்பார்த்திருக்கின்றேன்," என்று எழுதியிருத்தலால் அது அறியத்தக்கதாம்.

**திருமணமும் புத்திரப்பேறும்**

சிறந்த அறிஞராய் விளங்கிய இவருக்கு மாதகல் பரமசுவாமிக் குருக்கள் என்பவரது புத்திரியாராகும் பராசக்தி அம்மாளைப் பெற்றோர்

மணஞ்செய்து வைத்தனர். இவருக்குப் பிள்ளைகள் வைத்தீசுவரக் குருக்கள் என்பவரும், மனோன்மணி அம்மாளுமாவர். இவருக்குப் பேரப்பிள்ளைகளுமுண்டு.

**ஆசார்யாபிஷேகம் பெற்றமை**

இவர்கள் 1910-வது வருஷத்திலே சிவாகம பண்டிதரும் உபந்நியாசகருமாகிய ஊரெழு சிவ. சதாசிவக் குருக்களவர்களிடம் ஆசார்யாபிஷேகம் பெற்றுக் கொண்டனர். ஈசானசிவாசாரியர் என்பது இவர்களது தீக்ஷாநாமம்.

**படிப்பித்தல்**

குருக்களவர்கள், தாம்கற்றகல்வியைப் பிறர்க்கும் பயன்பெறச் செய்தற்பொருட்டு, 1911-வது ஆண்டு தொடக்கம் 1915-வது ஆண்டு வரை தம்முடைய இல்லத்தில் முப்பதுக்குக் குறையாமல் வந்துசேர்ந்த, பிராமணப்பிள்ளைகளுக்கும் சைவப்பிள்ளைகளுக்கும் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் கருவிநூல்களும் நீதிநூல்களும் சமயநூல்களும் படிப்பித்துக் கொண்டிருந்தனர்.

**சிவத்தலயாத்திரை**

சிவத்தலயாத்திரையும் தீர்த்தயாத்திரையும் அதியுத்தம சிவபுண்ணியச் செயல்களாமென்பதை உணர்ந்தவராதலின், குருக்களவர்கள் 1916-ம் 1917-ம் ஆண்டுகளில் இராமேச்சரம், மதுரை, சிதம்பரம், திருவேட்களம், சீகாழி, வைத்தீஸ்வரன் கோயில், திருவிடைமருதூர், திருமயிலாப்பூர், திருவொற்றியூர், திருவான்மியூர், காஞ்சீபுரம், திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, திருக்காளத்தி முதலிய தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்து திரும்பினர்கள்.

**சைவவித்தியாசாலை தாபித்தல்**

குருக்களவர்கள், தம்மூரிலும் அதற்கயலூர்களிலுமுள்ள சிலர் அந்நியமதப்பிரவேசஞ் செய்து கெடுதலையும் சைவசமய அறிவுகுன்றி வருதலையும் நேரிற் கண்டு சகியாது, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றிச், சைவவித்தியாசாலை ஸ்தாபித்து நடத்தி வரவேண்டு மென்ற அவாவுடையராயினர். அந்த அவாவானது மூறுகிவளரவே காலயுத்தி (1918) வருஷத்துச் சித்திரைத்திங்களில் புனர்பூசநக்ஷத்திரத்தில் விக்கினேசுவர வழிபாடுசெய்து சரஸ்வதி வித்தியாசாலை எனப்பெயர் கொடுத்து ஒரு பாடசாலையை ஆரம்பித்தார்கள். இப்பாடசாலை பிள்ளையார்கோயில் மேலைவீதியில், குருக்களவர்களால் விலைக்குப் பெற்றுக் கொண்ட நிலத்தில் அமைந்த சிறு கட்டிட மொன்றில் நூற்றைம்பது பிள்ளைகளும் நான்கு உபாத்தியாயர்களு முடையு

தாய், ஆரம்பபாடசாலையாய் நடைபெறத் தொடங்கியது. சிறந்த தேசாபிமானியாயும், சைவாபிமானியாயும் விளங்கிய கௌரவ ஸ்ரீமாந் அ. சபாபதிப்பிள்ளையும், புலோலிச் சைவாங்கில வித்தியாசாலைத் தாபகர் வேலாயுதம்பிள்ளையும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஸ்தாபகர் ஸ்ரீமத் சி. கந்தையா உபாத்தியாயரும் இவ்வித்தியாசாலை உதவி நன் கொடைப்பதிவு பெறுதற்குச் சகல உதவிகளையுஞ் செய்து கொடுத்தார்கள்.

அக்காலத்தில் பாடவிகித நன் கொடையே பாடசாலைகட்கு அரசினர் அளித்தமையினுற் குருக்களவர்கள் தாம் பரிபாலகராயிருந்ததோடு, 1918-ம் வருஷமுதல் 1928-ம் வருஷம் வரை வித்தியாசாலை முன்னேற்றங்கருதி ஆசிரியராகவுமிருந்து கடமையாற்றினார்கள். வித்தியாபகுதி 1928-ம் ஆண்டின்மேல், ஆசிரியர்களுக்குச் சம்பளத்திட்டம் வகுத்தது. குருக்களவர்கள் பாடசாலையிற் படிப்பித்தலை நிறுத்திக் கொண்டு நூல்களெழுதி வெளியிடத் தொடங்கினர்கள்.

சமயாசாரியர் குரு பூசைகள் வெகுசிறப்பாகப் பெரும் பொருட் செலவில் இவ்வித்தியாசாலையில் நடைபெற்றன. ஆரியதிராவிட பண்டிதர் ம. முத்துக்குமார சுவாமிக்குருக்கள், சு. சிவபாதசுந்தரம் பிள்ளை B. A., நாகலிங்க சுவாமிகள் முதலியோர் உபந்நியாசகர்களாய் அழைக்கப்பட்டு, மாதப்பிரசங்கங்களும் விசேஷதினப் பிரசங்கங்களும் நடந்துவந்தன. தாம்தழுவிய அந்நியமதம் விடுத்துச் சிலர் சைவப் பிரவேசம் செய்து கொண்டார்கள்.

காலந்தோறும் இவ்வித்தியாசாலையில், பெருஞ்சொற் கொண்டல் முருகேச முதலியார், சங்கரசுப்பிரமணிய சச்சிதானந்த யோகிகள், சித்தாந்தசரபம் ஈசான சிவாசாரிய சுவாமிகள், வச்சிரவேல் முதலியார், B. A. L. T., பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலிய அறிஞர்களது பிரசங்கத்தைக் கேட்கும் வாய்ப்பையும் இவ்வூரவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

சிவஸ்ரீ குருக்களவர்கள் ஆரம்பித்துப் பரிபாலித்து வரும் சரஸ்வதி வித்தியாசாலை, இப்பொழுது அறுநூறு பிள்ளைகளும் பதினேழு ஆசிரியர்களுமுடையதாய், சிரேஷ்ட தராதரபத்திர வகுப்புவரையுமுள்ள உயர்தரபாடசாலையாய் விளங்குகின்றது. குருக்களவர்களால் வித்தியாசாலையின் பொருட்டு அண்மையிலுள்ள காணிகள் விலைக்குப் பெற்றுச் சேர்க்கப்பட்டுள்ளன. கட்டடங்களும் காலத்துக்குக் காலம் அமைக்கப்பட்டு வருகின்றன. வித்தியாசாலை மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதும் ஆசிரியர்கள் கடமையுணர்ச்சியுடையராயிருப்பதோடு அறிவிலும் திருவிலும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதும் குருக்களவர்களுடைய மனக் கருத்து.

நூல்களியற்றல்.

சிவஶ்ரீ குருக்களவர்கள் சிறுவர் முதல் முதியோர்வரை படித் துணரத்தக்க முறையிலே வடமொழியிலும் தமிழிலும் எத்தனையோ நூலுரைகளைப் பிரகடனஞ் செய்துள்ளார்கள். சைவப்பிரகாசிகை ஐந்துபாகங்கள், சிவபூசை விளக்கம், பிராசாததீபவுரை, விநாயக பரத்துவம், மகோற்சவவிளக்கம், முப்பொருள் விளக்கம் முதலியவை தமிழிலே வெளிவந்த நூல்கள்.

சிவலிங்கப் பிரதிஷ்டா விதி முதலியவை சமஸ்கிருதத்தில் வெளி வந்த நூல்கள். வைதீக சந்தியாவந்தனம் அச்சிலிருக்கிறது. கந்த புராணக் கட்டுரைகள், சைவசித்தாந்தச் சுருக்கம், தேவிப்பிரதிஷ்டாவிதி, விநாயகபிரதிஷ்டாவிதி, சுப்பிரமண்யபிரதிஷ்டாவிதி முதலியவைகளைப் பிரகடனம் செய்வதற்காக எழுதிவைத்திருக்கிறார்கள். அக்கினிகார்யத் துக்குத் தமிழுரை எழுதி முடித்திருக்கிறார்கள். காலத்தின்பயனை அறிந்த இவர் ஓய்வின்றி இப்பொழுதும் சில நூல்களை எழுதிக் கொண்டு வருகிறார்கள். அகோரசிவாசாரிய பத்ததி பூர்வ பாகத் துக்குத் தமிழுரை எழுதி நிறைவேறும் நிலையிலிருக்கிறது. இவை குருக்களவர்கள் வேதாகமங்கள் தோத்திரசாத்திர நூல்கள் முதலிய வற்றைக் கற்றுத்தெளிந்து சிந்தித்த அனுபவ முதிர்ச்சியினல் வரும் அறிவுப் பொக்கிஷங்கள்.

குருக்களவர்கள் முதன் முதலியற்றிய நூல், தாம் நித்திய நைமித் திகக் கிரியைகளை நன்கு நடாத்தி வழிபட்டு வரும் அச்சுவேலிச் சித்தி விநாயகர் மேலதாகிய ஊஞ்சற் பிரபந்தமாகும். இது அக்கோயில் தருமகர்த்தா நா. ஆறுமுகம்பிள்ளை என்பவர் விரும்பியவாறு அச் சிடப்பட்டது.

இவர்கள் சிவாகமங்களும் நிபந்தகிரந்தங்களும் இருக்குமிடந் தேடிச் சென்று அவற்றிற்குரியாரிடம் பெற்று வந்து அவற்றைப் பிரதி செய்து அழியாமற் பாது காத்து வரும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ள வர்கள். ஆகமப் பெருநூல்களைப் பலமுறை ஆராய்ந்து பிரதிஷ்டா பத்ததிகளுக்கு மூலமாயுள்ள ஆகம வாக்கியங்களைப் பலருக்கும் உப யோகப்படுமாறு பல ஆகமங்களிலிருந்து சங்கிரகித்துள்ளார்கள். அவ்வாறு சங்கிரகித்து வைத்திருக்கும் சுலோகங்கள் ஆயிரத்தின் மேலன. சைவசமய நெறிக்கும் அதற்கு நாவலர் எழுதியருளிய உரைக்கும் மூலமாயுள்ள ஆகமப் பிரமாண சுலோகங்களைத் தொகுத் துக் கொண்டிருக்கிறார்கள். அதிமதுர திவ்யகாப்பியமாகிய கந்த புராணத்துள்ள நீதிச் செய்யுட்களையும் தொகுத்து எழுதி வைத்திருக்கி றார்கள். சிவலிங்கப் பிரதிஷ்டாவிதியை அச்சிட்டு வரும் போது சிவஶ்ரீ ஈசானசிவாசாரிய சுவாமிகள் தாம் நூறு ரூபா உபகரித்தும்,

தமது நண்பர்களைக் கொண்டு திரவியோபகாரம் செய்வித்தும் குருக்களவர்களை ஊக்கப்படுத்தியமை பாராட்டத்தக்கது.

தருமையாதீன வித்துவான் சித்தாந்த ரத்தினாகரம் முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் "இவற்றின் (சிவலிங்கப் பிரதிஷ்டை) ஆசிரியர் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒப்புயர்வில்லாமல் விளங்கும் திப்பிய சிவ ஞானியார் என்பது உலகறிந்த உண்மை" எனவும், சிவக் கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் "தங்கள் அருமையான நூல்களைப் படித்துப் பயனடைந்து வருகிறேன்" எனவும், சித்தாந்தசரபம் ஈசான சிவசாரிய சுவாமிகள் "நிகரறு நற்சிவதரும சிவஞானத்தை நிறுத்திடு வோனிலு முயர்ந் தோனிலத்தினில்லை; பகர் பரம சிவயோகியவனே யாகும்" என்னுஞ் சுருதிக் கேற்பத் தாங்கள் செய்து வரும் அதியுத்தம சைவஸ்தாபன சிவதருமம் பூர்வபக்கத்துச் சந்திரன் போல் என்றும் நின்று நிலவுவதாக. சித்தாந்த சைவர்கள் பொருளாலும் அருளாலும் உற்றவிடத்துதவிக் காக்குமாறு இறையருள் கூட்டுவதாக", எனவும் கூறுவதால் குருக்களவர்கள் இயற்றியருளிய நூல்களினருமையும் பெருமையும் அவற்றுல் சித்தாந்த சைவர்கள் அடைந்து வரும் பயனும், நாம் செய்ய வேண்டிய கடமைகளும் தெளிவாக விளங்குகின்றன.

குருக்களவர்களின் புத்திரர் சிவ ஸ்ரீ. வைத்தீசுவரக் குருக்கள் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவராய், தந்தையார் செய்து கொண்டு வரும் அறப்பணிகளுக் கெல்லாம் உதவியாயிருந்து வருகிறார். திரு மயிலை சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள், இவர்களுடைய நூல்கள் அச்சிடுவதில் முன்னின்றுழைத்து வருகிறார். திருப்புகழ மிர்தம் கிருபானந்த வாரியவர்கள் குருக்கள் பிரகடனஞ் செய்துள்ள நன்னூல்களை பல்லோரிடத்தும் பரப்பிப் பெருநன்மை புரிந்து கொண்டிருக்கின்றனர். யாழ்ப்பாணம் ஸ்ரீ முத்துக்குமாரு வைத்திய சாலை வைத்திய சிரோமணிகள் ஏறக்குறைய இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் தொடக்கம் இன்று வரை, தங்கள் சிறந்த வைத்திய முறைகளினுல் குருக்களையாவினதும் அவர் குடும்பத்தினரதும் உடல் நலனைப்பிரதியுபகாரம் கருதாது கவனித்துக் கொண்டு வருகின்றார்கள். அவ்வாறே திரு. இராசையா வைத்தியரும் செய்து வருகின்றனர்.

கண்டனூர் அரு - இராமநாதக்குருக்களவர்கள் சைவாகம நூற்பரிசோதனையில் இவர்களோடு ஒத்துழைக்கும் கைங்கரியம் பூண்டவர்கள்.

**சங்கங்களும் சபைகளும்**

காலமாறுபாட்டால் வரும் வேதாகம விரோதங்களை நிராகரித்தற் பொருட்டு ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில்

ஸ்ரீ. த. கைலாசபிள்ளை அவர்களால் தாபித்துத் தலைவராயிருந்து நடாத்தப்பட்டு வந்த சைவாபிமானிகள் சங்கத்திலிருந்து மாதமொரு சஞ்சிகையாகப் பல சஞ்சியைகள் வெளிவந்தன. அவற்றைப் பார்வையிட்டு அச்சுக்குக் கொடுக்கும் பொறுப்பாளராக இவர்கள் நியோகிக்கப் பெற்றுர்கள்.

யாழ்ப்பாணம் வேதாகம சைவசித்தாந்த சங்கம் ஆரம்பிக்கப் பட்டகாலந் தொடங்கி அச்சங்கத்தின் உபதலைவராயும் தலைவராயுமிருந்து, குருக்களவர்கள் ஆற்றிய சைவத்தொண்டுகள் அளப்பில. சங்கத்தினர் இவர்களைக் கொண்டு ஆலய அமைப்பு ஆலயசேவை முதலிய புத்தகங்களை எழுதுவித்துப் பிரசுரஞ் செய்தனர். இச்சங்கம் வெளியிட்டுவந்த ஆறுமுகநாவலர் என்னும் பத்திரிகைக்கும் இவர்களே ஆசிரியராயுமிருந்தார்கள். திரு. நாகையா B. A. முதலியோர் இச்சங்க உறுப்பினர்கள். மருதன்கேணியிலும் சோறம்பற்றிலும் குருக்களின் பெருமுயற்சியினல் ஆரம்பிக்கப் பெற்ற சைவப்பள்ளிக் கூடங்கள் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் நிருவாகத்திலிருந்து வருகின்றன.

பிராமணப் பிள்ளைகள் சைவப்பிள்ளைகளது முன்னேற்றங்கருதி, யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலன சபையினர் ஆதரவில் இந்துக்கல்லூரியில் நடந்த குருவகுப்புக்கு இவர்கள் கௌரவ ஆசிரியராயிருந்து சிவாகமங்களும் பத்ததிகளும் போதித்து வந்தார்கள்.

கொழும்பு விவேகானந்த சபை நடத்திவரும் சமயபாடப் பரீக்ஷையின் பரீக்ஷகராயிருந்து வந்ததுமன்றி, அச்சபை விரும்பியபடி தேவார முதலிய அருட்பாக்களைத் தரத்துக் கேற்றவாறு திரட்டிக் குறிப்புரையு மெழுதிக் கொடுத்தனர். அதனைத் திருவருட்பாத்திரட்டு என்ற பெயருடன் அச்சபையே அச்சிட்டுப் பரீக்ஷைப் பாடபுத்தகமாக வைத்திருந்தனர்.

திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையினர், திருப்பணி சம்பந்தமான விஷயங்களிலும், ஆலய நித்திய நைமித்திக சம்பந்தமான விஷயங்களிலும் அன்று தொடங்கி இன்றுவரை வேண்டிய காலங்களில் இவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டறிவதை நியதியாகக் கொண்டுள்ளார்கள்.

கொழும்பு புறக்டர் சு. சிவசுப்பிரமணியம் அவர்களால், நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் நிர்வாகஸ்தர்களுடைய விருப்புடன், அவ்வாலய மண்டபத்தில் தொடங்கி நடத்திவந்த வேதாகமபாடசாலைக்கு இவர்கள் செய்த சேவைகள் என்றும் பாராட்டத்தக்கன.

நீர்வேலியில், அவ்வூரபிமானிகளின் பெருமுயற்சியால் தாபிக்கப் பெற்ற ஸ்ரீ சிவசங்கரபண்டிதர் ஞாபகார்த்த சபையின் தலைவரா

யிருந்து அச்சபை விரும்பியவாறு சிவ-சங்கரபண்டிதர் சரித்திரத்தை அச்சிடுவதற்கு எழுதிக் கொடுத்ததோடு, பிராசாதசட்சுலோகி சங்கரபண்டிதர் தமிழுரையையும் வெளியிட்டார்கள்.


நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோயில் தேர்த்திருப்பணிச் சபையினர் அத்திருப்பணி விஷயமான யோசனைகளை இவர்களுடன் செய்துவந்ததேயன்றி, தேர்த்திருப்பணிச்சபை மலருக்கு இவருடைய அணிந்துரையும் பெற்றுக் கொண்டார்கள்.

குருக்களவர்கள், இவ்வாறு சைவசங்கங்களோடும் தொடர்புடையவர்களாய்ச், சைவாபிமானிகளது உண்மையன்புக்கு உரியவர்களாய் வீற்றிருக்கின்றார்கள்.

சிவஸ்ரீ குருக்களவர்கள் தமது புத்திரருக்கு ஆசார்யாபிஷேகம் செய்விப்பதற்கு, 1939 ஆண்டில் இந்தியாவுக்குச் சென்றிருந்தகாலை, சாஸ்திர விரோதமான பல கிளர்ச்சிகள் தோன்றிச் சமயவரம்பை அழித்துக்கொண்டு வருவது பற்றித் தமது நண்பர்களுடன் பேச நேர்ந்தது. அவர்கள் சாஸ்திர விஷயங்களை வெளிப்படுத்துவதற்கும், நூல்கள் அழிந்து போகாது பாதுகாத்தற்கும் சைவப்பத்திரிகை அத்தியாவசியம் ஆரம்பிப்பது நலமென்று ஊக்கப் படுத்தினர். குருக்களவர்கள், மாயூரம் வைத்தியநாதக் குருக்கள், சிவபுரம் சுவாமி நாதக் குருக்கள், மயிலாப்பூர் சுவாமிநாதக்குருக்கள், திருவாவடுதுறை சுவாமிநாதக்குருக்கள், கண்டனூர் அரு. இராமநாதக்குருக்கள் முதலிய சிவாசார்யர்களுடைய கையெழுத்துடன், "ஓர் வேண்டுகோள்" என்னும் விஞ்ஞாபனத்தை விடுத்தார்கள். அன்பர்கள் உதவிபுரிய முன்வந்தனர். 1939ம் ஆண்டு ஆவணித்திங்களில், சைவசாஸ்திரபரிபாலனம் என்னும் மாதவெளியீட்டை ஆரம்பித்துத் தாமே ஆசிரியராயிருந்து நடத்திவந்தார்கள்.

**இந்தியா செல்லுதல்**

எங்கள் குருக்களவர்கள் 1940ம் ஆண்டில் தமது பத்திரிகைக்கு இந்தியப்பெரியார்களின் உதவிபெறற் பொருட்டும், ஆலயதரிசனத்தின் பொருட்டும் இராமேசுரம், இராமநாதபுரம், குன்றக்குடி, கண்டனூர், பிரான்மலை, கோட்டையூர், பழநி, கோயமுத்தூர், காஞ்சி, திருத்தணி, பவானி, திருச்செங்கோடு, மயிலாப்பூர், திருவாவடுதுறை, திருப்பனந்தாள், சூரியனர் கோயில், திருவாரூர், சிவபுரம் ஆதியாமிடங்களுக்குச் சென்றார்கள். ஆங்காங்குள்ள அந்தணர்களும், பிரபுக்களும், வித்துவப் பெரியார்களும் போகுமிடமெல்லாம் வேண்டிய சௌகர்யங்கள் புரிந்து உதவினர்கள். திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மஹா சந்நிதானம் அவர்களாலும், திருத்தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மஹா சந்நிதானம் அவர்களாலும், திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் அவர்களாலும் பெரிதும் சன்மானிக்கப் பெற்றார்கள்.



குருக்களவர்கள் தாபித்து நடத்தும் சரஸ்வதி வித்தியாசாலை.

சைவசாத்திர பரிபாலனத்துக்கு விஷயதானஞ் செய்தவர்கள் அரு-இராமநாதக் குருக்கள், சேலம் கி. சிவசுப்பிரமணியக் குருக்கள், சிவபுரம் சுவாமிநாதக் குருக்கள், சு. சிவபாதசுந்தரம்பிள்ளை, B. A., மு. ஞானப்பிரகாசம், B. A. B. Sc., மாவை சா. குமாரசுவாமிக் குருக்கள் முதலியோர். இப்பத்திரிகைக்கு வாழ்த்துரைகளும் பாராட்டுரைகளும் எழுதியனுப்பி ஊக்கம் செய்தவர்கள் சூரியனூர் கோயிலா தீனம் ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகள், இலக்கணம் முத்துக் குமாரத்தம்பிரான் சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் பழநிக் குமாரத்தம்பிரான் சுவாமிகள் சிதம்பரம் வித்துவான் ந. சிவப்பிரகாச தேசிகர், சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் முதலியோர். இதனால் இப்பத்திரிகையின் பெருமை நன்கு விளங்கும்.

இச்சிறந்த பத்திரிகை காகிதப் பஞ்சத்தினால் நிறுத்தப்பெற்றது. இதனை மீண்டும் வெளிவரச் செய்வது அறிஞர் சிந்தனைக் குரியது.

குருக்களவர்கள் இந்து சாதனம், ஈழகேசரி, சோதிடபரிபாலினி, சுவதர்மபோதம், சிவநேசன் முதலாம் பத்திரிகைகளில் வரைந்த விஷயங்களும் கண்டனங்களும் புத்தகவடிவில் வெளிவரவேண்டியவைகள்.

விரதாதி விஷயங்களில் சில அறிஞர்களெழுதிய நிர்ணயங்களையும் கருத்துக்களையும் நிராகரித்துச் சிலபத்திரிகைகளையும் குருக்களவர்கள் எழுதி வெளியிட்டுச் சேவை புரிந்திருக்கிறார்கள்.

**மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு.**

தருமையாதீனத்தின் ஆதரவில் 1931ம் ஆண்டில் நடந்த ஸ்ரீ மெய்கண்டான் சித்தாந்த மகாநாட்டுக்கு ஸ்ரீலஸ்ரீ மஹா சந்நிதானத்தின் உத்தரவின்படி சிவஞானபோதம் கூம் சூத்திரவிளக்கக் கட்டுரை எழுதிக் கொடுத்துச் சன்மானமும் பெற்றார். அக்கட்டுரை ஆதீன விசேடமலராக வெளிவந்திருக்கிறது.

**வடநாட்டுயாத்திரை**

சிவஸ்ரீ குருக்களவர்கள் 1957ம் ஆண்டில் வடநாட்டுப் புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்ய விருப்புடையராய் நீதிபதி ஸ்பென்சர் இராசரத்தினம் அவர்களுடன் ஸ்ரீகாசி, கயை, அயோத்தி, வடமதுரை, அரித்துவாரம், பிரயாகை, முதலிய புண்ணியதலங்களுக்குச் சென்று தீர்த்த ஸ்நானமும் தரிசனமும் செய்து கொண்டு திரும்பினர்கள்.

**வைரவர் கோயில் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம்.**

புராதனமான ஆலயங்களைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்வது மிகச்சிறந்த சிவபுண்ணியம். குருக்களவர்கள், தமது முன்னோர்களாற் பரிபாலிக்கப் பெற்றுவந்த ஸ்ரீ வைரவ சுவாமி கோயில் ஜீர்ணம

டைந்தமையால், தம்முடைய செலவில் புதிய திருப்பணி வேலைகள் செய்து, (1958 ம் ஆண்டு) விளம்பி வரு ஆவணி மாதத்தில் சோதி நக்ஷத்திரத்தில் கும்பாபிஷேகமும் சிறப்புறச் செய்தார்கள்.

**சைவக்கிரியைகள் செய்து வைத்தல்**

எமது குருக்களவர்கள் கிரியைக்கிரமங்கள் முற்று முணர்ந்து மந்திரம் கிரியை பாவனை மூன்றும் வழுவாது தரிசிப்போர் பக்தியும் பரவசமுமடையப் பிரதிஷ்டை உற்சவாதி கிரியைகள் செய்வதில் பிரசித்தி பெற்றவர்கள். சைவ உலகம் இவர்கள் கிரியை செய்து வைப்பதை பெறுதற்கரிய பெரும் பேருகக் கருதுகின்றது. இவர்களிடம் தீக்ஷையும் ஆசார்யாபிஷேகமும் பெற்றுக் கொண்டவர் பலர். ஆலய பரிபாலகர்களாலும், ஆலய அபிமானிகளாலும் அழைக்கப் பெற்று, இவர்கள் செய்தும் செய்வித்தும் வைத்த கும்பாபிஷேகம் உற்சவம் முதலியவை பலப்பல. கிரியைகள் நிகழ்த்தும் போது குருக்களவர்கள் அவற்றிலேயே தமது கருத்தைச் செலுத்தி நிற்பார்கள். அவர்கள் பொருள் வருவாயைப் பொருட்படுத்தியதில்லை.

குருக்களவர்கள் சிற்பசாஸ்திரத்திலும் வல்லவராயிருக்கின்றார்கள். ஆலய அமைப்பு, விக்கிரக அமைப்புகளில் சந்தேகமுடையோர் இவர்களிடம் வந்து அச்சந்தேகங்களை நிவிர்த்தி செய்து கொண்டு செல்வர். ஆலய அபிமானிகள் இவரை அழைத்துச் சென்று ஆலயமண்டபம் பிரகாரம் முதலியவற்றுக்குரிய ஸ்தானங்களை இவரைக் கொண்டு வகுத்து வருகின்றனர். யாழ்ப்பாணம் சிற்பசாஸ்திரத்தில் அறிஞராகிய இராமகிருஷ்ண ஸ்தபதி அவர்களும் இவர்களிடத்தில் தமது சந்தேகங்களை நிவிர்த்தி செய்கிறார். குருக்களும் இராமகிருஷ்ண ஸ்தபதியும் கலந்து யோசித்தபடி ஆலயஅமைப்புகள் பல நடை பெற்றிருக்கின்றன.

எமது சிவாசாரியாரவர்கள் அருள், அறிவு, ஒழுக்கம் கொடைமுதலிய புகழ்க்குணங்கட்கெல்லாம் நிலைக்களமாயுள்ளவர்கள். தமது கல்வியறிவு அனுபவமிவற்றுற் சரியென மதிக்கும் கொள்கைகளை நிலை நிறுத்தும் ஆற்றலும், அவற்றினின்று பிறழாததன்மையு முடையவர்கள். சமஸ்கிருதம், தமிழ் என்னுமிரு பாஷைகளிலும் சமதிருஷ்டி யுள்ளவர்கள். அவ்விரு மொழிகளிலும் பேராற்றலுமுடையவர்கள். சைவாகமப் பெரும் புலவர்; வேதாகமநிந்தை பொருதவர்கள். வேதாகமங்களிற் போலவே தேவாரமாதி அருணூல்களிலும் அன்பும் ஆராய்ச்சியுமுள்ளவர்கள். ஆகமங்களை அழியாமற் பாதுகாக்கும் பெரும் பணியில் நிற்பவர்கள்.

இவர்கள் தமிழும் சமஸ்கிருதமும் விருத்தியடையவும் வைதிக சைவம் பரக்கவும் இடையரு ஊக்கத்தோடு செயற்கரும் செய்கைகளைச் செய்து கொண்டு நம்மனோர்க்கெல்லாம் அருள் பாலிக்கும் ஆசாரியராய் வீற்றிருப்பது நமது நாடு செய்த தவப்பயனேயாம்.

ஊ

## மகாவித்துவானும் சித்தாந்த சிகாமணியுமாகிய சூரியனார்கோயிலாதீனம்

# இலக்கணம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள்

சிவஞானச் செல்வர்களாகிய குருக்கள் அவர்கட்கு இனிய விஞ்ஞாபனம். தாங்கள் என்பால் அன்பு கூர்ந்து அனுப்பிய வெளியீடுகள் பெற்று மகிழ்கின்றேன்.

தங்கள் சைவப்பிரகாசிகைப் புத்தகங்கள் இக்காலத்துக் கலாசாலை மாணவர்களுக்குச் சைவசமய உணர்ச்சியோடு ஒழுக்கத்தை உண்மையான இனிய கதைகள் வாயிலாக நன்கு புகட்டும் முறையில் அமைந்துள்ளன. சிறிது கல்வியுடைய முதியோர்க்கும் பெரும் பயன் தருவனவே. இவற்றுட் கூறுஞ் சரிதங்கட் கியைந்த திருமுறைப் பாசுரங்களைத் தந்துரைத்தமை பாராட்டத்தக்கது.

கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பயன்தரும் முறையில் விநாயக பரத்துவத்தை நாட்டுஞ் சரிதங்களைப் பல நூல்களினின்றும் திரட்டி உபகரித்த தங்கட்குச் சைவ உலகம் நன்றிபாராட்டுங் கடமையுடையதே.

தென்புலத்தார் கடன் கொடுக்க விரும்புவார்க்கு உண்மை நெறி காட்டுதற்கும், அதனை விடுக்க முயல்வோரைத் தடுத்து நன்னெறி காட்டுதற்கும் சிராத்த தீபிகை இன்றியமையாத தொன்றென்பது எமது துணிவு.

சிவாலயங்களிற் செயப்படும் நித்தியமும் நைமித்தியமுமாகிய சைவக்கிரியைகளெல்லாம் உயிர்களுக்குத் துன்பம் நீக்கி இன்பப் பெரும்பேறு உதவுதலையே குறிப்பாகக் கொண்டுள்ளன என்பதைப் பல உண்மைநூற் பிரமாணங் காட்டி இனிது விளக்குந் திட்ப நுட்பங்கள் வாய்ந்த மகோற்சவ சந்திரிகை சைவ சித்தாந்த தத்துவங்களையும் நன்கு தெரித்துரைப்பது மிகவும் மகிழ்ச்சி தருகின்றது.

சிவபூசையின் உண்மைக் கருத்துக்களைத் தெரிய விரும்புவோருக்குச் சிவபூசை விளக்கம் சிறந்த கருவியாக உதவும் என்பது எம் கருத்தாம்.

பிராசாததீப உரை மிகச்சிறந்த முறையில் எழுதப்பட்டுள்ளது. தமிழிலே பிராசாதவிஷயமான தெளிவானவுரைநூல் வேறு வெளிவந்திருப்பதாகத் தெரிகிலேன். சித்தாந்த சைவ சாஸ்திரங் கற்றோர்க்கும் கற்போர்க்கும் இது பெரிதும் உபகாரப்படுமென்பதில் ஐயமில்லை.

உ

பிரஹ்மஶ்ரீ மஹாமஹோபாத்யாய தக்ஷிணத்திய கலாநிதி

# டக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

காலமாறுபட்டால் ஜனங்களுக்குத் தெய்வபக்தியும் சமயப்பற்றும் ஒழுக்கமும் வரவரக் குறைந்து வருகின்றன. இக்குறையை அதிகப் படுத்தற்குரிய காரணங்களும் விருத்தியாகின்றன. இந்த நிலைமையில் தெய்வபக்தி முதலியவற்றை அவசியம் கைக்கொள்ள வேண்டுமென்று ஆங்காங்கு உபந்யாஸங்கள் செய்தோ, யாவரும் நன்கு உணரும்படி புஸ்தகங்கள் வெளியிட்டோ உண்மையைத் தெரிவித்தால் அக்குறையை ஜனங்கள் ஒருவாறு போக்கி நல்வழியில் திருப்பத் தலையிடுவார்களென்பது நிச்சயம். இவ்வுண்மை அறிந்த யாழ்ப்பாணத்து, அச்சுவேலி ஸரஸ்வதி வித்தியாசாலை அதிபர் சிவஶ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் சைவசம்பந்தமாக சைவப்பிரகாசிகை என்னும் பாடபுத்தகங்களையும், விநாயகபரத்துவம், சைவசமயசாஸ்திரப் பிரமாணம், சிவபூஜை விளக்கம், சிராத்ததீபிகை என்னும் வசன நூல்களையும் எழுதி வெளியிட்டிருப்பதோடு, பிராசாத தீபம் என்னும் பழைய செய்யுள் நூலுக்கு நூதனமாக உரை எழுதிப் பதிப்பித்துச் சைவாபிமானிகளுக்குப் பேருதவி புரிந்திருக்கிறார்கள். பலபெரியோர்கள் எழுதியுள்ள மதிப்புரைகளால் இந்நூல்களின் பெருமை நன்கு விளங்கும்

சிவஶ்ரீ குருக்களவர்கள் இவ்வெளியீடுகளுக்காகமேற்கொண்டிருக்கும் பெருமுயற்சியும் நல்லுழைப்பும் மிகவும் போற்றற் குரியன. இளமைப் பழக்கமே முடிவுவரையில் துணையாக நிற்குமென்பதனை யறிந்து இவர்கள் சைவப்பிரகாசிகை என்ற பெயருடன் படிப்போர்களின் பிராயங்களுக்கேற்ப வகைப்படுத்தி ஐந்து புஸ்தகங்களை எழுதி அவற்றில் பல சைவநூற்கருத்துக்களையும் உயர்ந்த நீதிகளையும் தக்கமேற்கோள்களுடன் அமைத்திருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. சைவசமயம் மிகச்சிறந்ததென்பதை அவை நன்குகப் புலப்படுத்துமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

பலர், மூர்த்திகளின் பெருமைகளைத் தெரிந்து கொள்ளாமலே ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வருகிறார்கள். அவர்கள் விநாயக மூர்த்தி முதலிய தெய்வங்களின் உண்மைகளைத் தெரிந்து கொள்வார்களாயின், பின்னும் உண்மையாக வழிபட்டுப் பெரும்பயன் அடைவார்களென்பது திண்ணம். இக்கருத்தை உட்கொண்டே விநாயகபரத்துவம் சிவபூஜைவிளக்கம் என்னும் புத்தகங்கள் வெளியிடப்பட்டனபோலும். ஆங்காங்குத்தேவாரம் பெரியபுராணம் முதலிய சைவத்திருமுறைகள், பலபழைய நூல்கள் முதலியவற்றிலிருந்து பொருத்தமான பாடல்களைக் காட்டியிருப்பது இவர்களுடைய சைவ நூலாராய்ச்சியையும் அன்பின் மிகுதியையும் காட்டுகின்றது.

இது காறும் வெளியிடப்படாத பிராசாத தீபம் என்னும் நூல் சிவாகமக்கருத்துக்களை வெளிப்படுத்துவது. சைவாபிமானிகள் இதனைப் பயின்று பயனடையவேண்டு மென்பதைக் கருதி, இதற்கு ஓர் அரிய உரையைக் குருக்களவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

சைவசமயா பிவிருத்திக்காக இத்தகைய அரிய பெரிய தொண்டுகள் இயற்றுபவர் இக்காலத்து மிக அரியர். ஆதலின், சைவசமயா பிவிருதி யொன்றையே பெரும்பயனென்று கருதி மேலே சொன்ன நூல்களை யெல்லாம் இயற்றி அச்சிடுவித்து உதவிபுரிந்துள்ள குருக்களவர்களுக்குச் சைவாபிமான சீவர் யாவரும் எக்காலத்தும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இவை போன்ற வேறு பல நூல்களை யியற்றிச் சைவசமயமும் தெய்வபக்தியும் நல்லொழுக்கமும் விருத்தியாகும்படி செய்விக்கும் வண்ணம் தமிழ் மக்கள் ஆதரவும் ஊக்கமும் அளிப்பார்களென்று நம்புகிறேன்.

சென்னை
30—12—35

* *

ஓ

பழநி சித்தாந்த சரபம்

## காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாசாரியர் அவர்கள்.

"நிகரறு நற்சிவதரும சிவஞானத்தை நிறுத்திடு வோனிலு முயர்ந்தோனிலத்தினில்லை, பகர்பரம சிவயோகியவனேயாகும்" என்னும் சுருதிக்கேற்பத் தாங்கள் செய்துவரும் அத்யுத்தம சைவஸ்தாபன சிவதருமம் பூர்வபக்கத்துச் சந்திரன்போல் என்றும் நின்று நிலவுவதாக.

சித்தாந்த சைவர்கள் பொருளாலும் அருளாலும் உற்றவிடத்து உதவிக் காக்குமாறு இறையருள் கூட்டுவதாக.

ஊ

# பிராசாததீபம்

## சிறப்புப்பாயிரம்

மகாவித்வான்

## பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்

சீர்பூத்த கலைகளொடு தத்துவமா தியதெரிக்கும்
பிராசாத தீபமென்னும்
பேர்பூத்த * நூலதனை யாய்ந்துதமி ழறிஞர்களும்
பெட்பினெடுங் கற்றேயுய்ய
ஏர்பூத்த தமிழ்மொழியா லுரையெழுதி யச்சேற்றி
வெளிப்படுத்தான் யாவனென்னில்
பார்பூத்த தவமென்ன வந்துதித்தோன் சிவனடிகள்
பரிவினுடன் பூசை செய்வோன். (1)

ஈழமண் டலமதனின் சிரம்போல விளங்கியிடும்
யாழ்நகரென் றுரைக்கு நாட்டில்
ஆழமிகு மறிஞர்கள்வா ழச்சுவே லிப்பதிமே
லந்தணர்தங் குலஞ்சேர் தீபம்
வேழமுகற் கன்புடையோன் வேதமுட னுகமநூல்
விரும்பிமிக வாய்ந்தோன் யாருந்
ல தாழுமுயர் குமாரசுவா மிக்குருப்பேர்ப் புலவர்சிகா
மணியாகுந் தகைமை யோனே. (2)

* "நூலதனையச்சேற்றி வெளிப்படுத்தான்" எனவும் "ஆய்ந்து எழுதி வெளிப்படுத்தான்" எனவும் இயைக்க.

ல தாழ்தல்—வணங்குதல்.

வ

திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகரும்,
தேவகோட்டை சிவாகம சங்கச் சித்தாந்த போதகரும்,
சிவஞானசித்தியார் முதலிய நூல்களின் உரை ஆசிரியருமாகிய,

# ஸ்ரீமாந் பொ. முத்தையாபிள்ளை அவர்கள்.

## விநாயகபரத்துவம் — 4-10-34

விநாயகபரத்துவம் வரப் பெற்றுப் படித்தின்புற்றேன். விநாயகருடைய அவதாரம், அவருடைய அருட்செயல்கள் முதலிய அனைத்தும் இந்த ஒரு நூலைக் கொண்டே எளிதிலறிந்து கொள்ளத்தக்கதாக அமைந்து, அவற்றைத் தெரியும் பொருட்டுப் பல நூல்களை ஆராய வேண்டிய சிரமத்தை அன்பர்களுக்கு நீக்கிற்று. இந்த நூலினும் இவ் வாசிரியர் இயற்றிய ஏனைய நூல்களினும் பொருள்களை விளக்குதற்கு வடமொழியிலுள்ள ஆகம முதலிய பிரமாணங்களுடன், தென்மொழியிலுள்ள தேவாரம் முதலியவற்றின் பிரமாணங்களையும் மேற்கொண்டிருப்பது படிப்பவருக்கு மனவெழுச்சியை உண்டு பண்ணுவதுடன், ஆசிரியருக்கு இருமொழிப் பயிற்சியில் பேராற்றலும் வடமொழியிலுள்ள வேதாகமங்களைப் போலவே தென்மொழியிலுள்ள தேவாராதிகளிலும் அன்பும் ஆராய்ச்சியும் உண்டென்பதை விளக்குகின்றது.

சைவர்கள் எவரும் இவர்களுடைய பேருபகாரத்தைப் பாராட்டுவார்கள் என்பதிற்றடையில்லை.

**சிவபூஜை விளக்கம்**

சிவபூஜை விளக்கத்தில் கிரியைகளின் உட்கருத்தை எழுதித் தமிழ்மறை மேற்கோள்களும் காட்டியிருப்பது பாராட்டத்தக்கது. தமிழ்மறைகளை ஆராய்ந்துதவிய நன்றியைச் சைவர்கள் என்றும் மறவார்.

சந்திரிகை மிக உபயோகமானது.

கந்தவனக்கோயிலாதீனகர்த்தரும், சைவப்பிரகாசருமாகிய

# திக்கம் ஸ்ரீமாந் சி. செல்லையாபிள்ளை அவர்கள்

பண்டோர் ஞான்று புறப்புறச் சமயங்களாகிய அருகமும் பௌத்தமும் தலையெடுத்து, வைதிக சைவம் சிறிது ஒளிமழுங்கிய பொழுது, அச்சமயங்களை நிராகரித்து வைதிகசைவத்தை நிறுவியருளியவர் எம் பரசமயகோளரியாகிய சீகாழிப் பெருவாழ்வே. அது போன்று வேதநெறி பிழைத்துச் சைவத்துறைகளாகிய நாற்பாதமும் தலைதடுமாறிச் சரியை இயற்றநாணியும், கிரியை யாற்றச் சோம்பியும் அதனால் யோகமும் ஞானமும் சித்தியாது வாளா வாசாஞானம் பேசித் திரிதலால் அஞ்ஞான அந்தகாரம் மூடியிருக்கின்ற இற்றை ஞான்று அவ்விருளையோட்டுவான் எழுந்த ஞானபானுவைப் போன்றது சைவ சாஸ்திரபரிபாலனம் என்னும் மாசிக சஞ்சிகை.

இப்பத்திரிகை, இலங்கைத்தீவிற் சிறந்த அந்தண குலோத்தமர்களாயுள்ள ஆதிசைவர்களுக்கு இந்தியாவினின்றும் முதலிற் குடியேறுவதற்கிடமாயுள்ளதும், கல்வித்துறைபோய பெரியோர்க்கு ஜனனபூமும், பதினெண்குலத்தாரும் வாசஞ்செய்தற்கிடனையுமுள்ள நீர்வளம் நிலவளம் பொருந்திய அச்சுவேலியூரின்கணுள்ள ஆதிசைவ அந்தண குலோத்தம திலகரும், அருமறையுணர்ந்தோரும், ஆகம பண்டிதரும், சாஸ்திர விற்பன்னரும், கர்ஷணாதி பிராயச்சித்தாந்த கிரியைகள் அனைத்தினுங் கைதேர்ந்த நிபுணரும், ஓதல்; ஓதுவித்தல், வேட்டல்; வேட்பித்தல், ஈதல்; ஏற்றல் எனப்படும் அறுதொழிலையுஞ் செவ்வனே நடாத்திவருபவரும், அதினும் ஈதலே சிறந்ததாகக் கொண்டு அதிதி கட்கும் இரப்போர்க்கும் ஏனையோர்க்கும் அன்னபானாதிகளை மன மகிழ்ச்சியோடு கொடுக்கும் வள்ளலுமாகிய சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களால் நடாத்தப்படுகின்றது. இப்பெருமை வாய்ந்த பத்திரிகை வைதிக சைவம் தழைத்தோங்கி வளர்தற்கு இன்றியமையாததென்பது வெளிப்படை.

'சைவசாஸ்திர பரிபாலனம்' என்றும் நின்று நிலவிப் பரசமய திமிரத்தையோட்டி ஞானசூரியனைய் விளங்குமாறு சிவகாமசுந்தரி சமேத நடராஜப்பிரபுவின் பாதங்களை வணங்கி இதனைச் சைவ உலகிற்களித்த குருமூர்த்திகளது பாதங்களையும் நமஸ்கரிக்கின்றேன்.

தமிழ்ப்பண்டிதர் சித்தாந்தபூஷணம்

## ஸ்ரீமத் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை அவர்கள்.

விண்டலம் புகழு மிந்த வியத்தகு பரத கண்ட
மண்டல மதனில் வேத வழிவரும் பழைய சைவத்
தொண்டல தகில லோகந் துயரொரீஇத் தோமி லின்பங்
கொண்டகங் கரிக்கக் கூறுந் துணைபிறி தியாது மில்லை. (1)

பங்கயக் கண்ணன் பார்த்தற் கரியதாஞ் சம்பு பாத
பங்கய பூசை யந்தப் பணிகளுண் மேல தாகும்
நங்களுக் குய்தி கூட மற்றதைத் தமிழில் நல்கிப்
புங்கவர் போற்று நூலா வைத்தனன் புவனி மீது. (2)

அன்னவ னினிமை தோய்ந்த வருந்தமி ழகத்துப் பாங்கர்த்
துன்னிய விலங்கை தன்னிற் றுகழில்யாழ்ப் பாணஞ் சேர்ந்த
பின்னமி லச்சு வேலிப் பிராமண குலத்துத் தோன்றிப்
பொன்னவிர் சடையாற் கன்பு பூண்டநற் குமார சாமி. (3)

நற்சிவ பூசைக் காய விளக்கமென் றந்நூல் நாமம்
பொற்புறத் தீட்டி யஃதோ டன்பர்கள் புலம்விளக்கு
மற்புற * நிலவுந் ≠ தீபி கையுமென் றளவில் நன்னூல்
சிற்பர னருளாற் றந்தா ≈ னிருசொலுந் தேர்ந்த சீமான். (4)

அம்பிகை பாக னெங்க ளந்தக நாசன் வேளை
வெம்புதல் செய்த வீரன் வெந்தழல் புரத்திலுய்த்தோன்
வம்புறு கொன்றை மாலை மகிழ்ந்தவன் பிறை சேர் சென்னி
நம்பன தருளா லந்நன் நாவல னினிது வாழி. (5)

* நிலவு — மகோற்சவ சந்திரிகை யென்னும் நூல்.
≠ தீபிகை — சிராத்த தீபிகை யென்னும் நூல்.
≈ இருசொல் — தமிழும் சமஸ்கிருதமும்.

உ

மகாவித்துவான்

## பிரமஸ்ரீ சு. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள்

பொதுவாகத் தமிழுலகினுக்கும் சிறப்பாகச் சைவ உலகினுக்கும் பலப்பல நல்லுரை நூல்களை மழைபோல உதவிவருகிறீர்கள். நவ நாகரிகத்தில் ஈடுபட்டு நாத்திகத்துண் மூழ்கிய புல்லறிவாளர் பலரும் அந்நூல்களின் உதவியாற் கரையேறினர் என்பது உலகறிந்தது.

இது போது தாங்கள் அரிதின் முயன்று வெளியிட்டுவரும் சைவ பரிபாலனப் பகுதிகளைக் கண்ணுற்றுக் கழிபேருவகை எய்தினேன்.

நாத்திகவைரமேறிய பலரானும் தத்தம் புல்லிய பொய்யுரைகளைச் சைவாகமப் போர்வை போர்த்தி வெளியிடப்பட்டுவரும் பலசமய நூல்கண் மலிந்த இஞ்ஞான்று அவ்வஞ்ஞானிகள் எழுதிய நூலாகிய படுகுழிகளுள்ளே வாய்மை யறியாதார் விழுந்தழியாமற் புரந்துவரும் மாபெரும் புண்ணியப் பேற்றினையும் இப்பத்திரிகை வெளியீட்டாற் பெற்றுக் கொண்டீர்கள்.

தாங்களும் சைவபரிபாலனமும், நூல்களும், சைவமும் தமிழும் தழைத்து வருக.

உ

சிவாகம வித்துவான்

## சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார்.

தலைமை ஆசிரியர்

சிவாகம பாடசாலை தருமபுர ஆதீனம்.

### சிவலிங்கப் பிரதிஷ்டா விதி.

தாங்கள் அன்புடன் அனுப்பிய சிவலிங்கப்ரதிஷ்டா விதி முதலியன வந்து சேர்ந்தன. அவை நன்றுக அமைந்திருக்கின்றன. தங்களுடைய பிரயாசைக்குச் சைவ உலகம் நன்றிசெலுத்த வேண்டும். நான் என்மனத்திலுள்ள சந்தோஷத்தை எவ்வாறு வெளிப்படுத்துவேன். தாங்கள், ஆகமம், ஆலயம், ஆதிசைவம் தழைக்க நீடுழிகாலம் அரோகதிட காத்திரத்துடன் வாழ்ந்து இப்பணியை இடைவிடாது செய்ய எல்லாம் வல்ல இறைவன் அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று அவ்விறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஒ

## விநாயகபரத்துவம்

### அணிந்துரை

தருமை ஆதீனப் புலவர், சித்தாந்த சிகாமணி

## திரு க. வச்சிரவேல் முதலியார் B.A., L. T.,

தலைமை ஆசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் கருணை கூர்ந்து அனுப்பியருளிய விநாயகபரத்துவம் என்னும் உரைநடைநூலை ஒருமுறை முற்றிலும் படித்தேன்.

நூல் படித்தற்கு இனிதாக, உணர்வும் உறுதியும் பயப்பதாக உள்ளது. விநாயகப்பெருமானை உலகம் வழிபட்டு உய்தி கூடவேண்டும் என்பது சிவாஞ்ஞை. இவ்வுண்மையை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய அருளாசிரியர்மார்கள் திருவாக்குக்களால் தெளிகின்றோம். ஆகலின் அப்பெருமானின் திருவவதாரமும், திருவுருவமும் வரலாறும் உணர்த்தும் பரமார்த்தங்கள், அவரை வழிபட்டார் பெறும் பேறுகள் முதலியவற்றை உணர்ந்து கொள்ளுதல் மக்களாகப் பிறந்தார் யாவர்க்கும் கடமையும் உரிமையும் ஆகும்.

இவற்றை உள்ளவாறு எளிதில் உணர்ந்து நலனுறுதற்கு இவ்வுரைநடைநூல் சிறந்த கருவியாகவுள்ளது. விநாயகர் முதன்மையை முப்பத்தொரு படிமுறையில் வைத்து இந்நூல் உணர்த்தி கற்போர் உள்ளத்தை உயர்த்துகின்றது. இதனை ஆக்கி உபகரிக்கும் ஆசிரியருடைய தகுதியும் பெருமையும் அளவிடற்பாலன அல்ல. சித்தாந்த சைவத்தை விளக்குவனவாகத் தமிழ் வடமொழிகளில் எழுந்து நிலவும் தலையாய பிரமாண நூல்களையெல்லாம் முற்றக் கற்றுணர்ந்து தெளிந்தவராக நம்மனோர்க் கெல்லாம் திருவருள்பாலிக்கும் ஆசாரியராக உள்ளவர் என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்டு திருவருள் சார்பாகத் தலைநின்று அருள்ஞான உரைகளை நம் உள்ளம் கொள்ளும் வகையில் உபகரித்துவரும் சிவாசாரிய சுவாமிகள் நீடுழி வாழ்க ! அவர்கள் வழங்கும் அருளார் அமுதமுண்டு தமிழ் மக்கள் அனைவரும் நன்னெறி கடைப்பிடித்து ஒழுகி இன்புறுக.

காஞ்சீபுரம்.
24-6-59.

சிவமயம்

# சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்

திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவர்

வேதாகமம், பன்னிருதிருமுறை, மெய்கண்ட சாத்திரம் முதலாம் சைவசித்தாந்த நூல்களுக்கு விளக்கமும் அருள் உரையும் பகர்வதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பெருமை தந்த பெருமான் ஆவர். அங்ஙனமே இருபதாம் நூற்றாண்டுக்குப் பெருமை அளித்து வருபவருள் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் தலைசிறந்து விளங்குகிறாரெனக் கூறுவது மிகையாகாது.

அம்மை அப்பரின் திருநோக்கால் காலத்திற்குக் காலம் சமயாசாரியார்கள் பலர் ஆங்காங்கு 'தோன்றித்' சைவ நன்னெறிகளைப் பரப்பியும் அதன்படி வாழ்ந்தும் வாழ்வித்தும் சைவ நன்மக்களால் தெய்வாம்சமாக மதிக்கப்பட்டு வந்தனர். இங்ஙனமே குருக்கள் அவர்களின் தகைமையும் மதிப்பிடத்தக்கது.

இவர் வைதீக சைவசித்தாந்தச் செல்வர். வேதமுடன் ஆகமங்களும், வளம்பெறு புராணங்கள் பலவுடன் சிவஞானபோதமுதல் ஞான நூல் பலவும் கற்று அவற்றிற்கு விரிவிலக்கணமும் தந்துவரும் பிராமணைத்தமர் ஆவர். இவர் சைவ உலகுக்கு அளித்த நூல்கள் வேத ஆகம விற்பன்னர்களின் முகவுரையும் சான்றோரின் அணிந்துரையும் அமையப் பெற்றுச் சைவ சமுதாயம் படித்துப் பயன் அடையத்தக்கனவாய் இருக்கின்றன. இவர் இயற்றிய நூல்களில் சிவலிங்கப் பிரதிஷ்டாவிதி, மூப்பொருள் விளக்கம், மகோற்சவ விளக்கம், சைவப்பிரகாசிகை முதலியனவும் பிறவும் சைவச் சிறார் முதல் ஆசிரியர்வரை படித்துப் பயன் பெறத்தக்கவை. துர்அதிர்ஷ்டவசமாய் இவர் இயற்றிய சில நூல்கள் அச்சுவாகனம் ஏறாமல் கையெழுத்துப் பிரதிகளாகவே இருக்கின்றன என்று அறியும்போது மனம் துயருறுகின்றது.

பூதியும் கண்டிகையும், பூணூலும் பொலியும் இவருடைய காட்சி சுத்தாத்துவித சைவசித்தாந்த நுண்கருவூலங்களை உள்ளடக்கிய உருவாகத் தோன்றும்.

நாவலர் பெருமான் திருக்கேதீச்சரம் ஒரு "தேன் பொந்து" எனக் கூறிச் சைவமக்களை விழிப்படையச் செய்தார். அதன் பயனுய்த் தோன்றியது திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண சபை. இச்

சபை தோன்றிய காலம் முதலாக வேத ஆகம வழுவின்றி ஆலயப் புனருத்தாரணப்பணி நடைபெறுவதற்கு அவ்வப்போது ஆலோசனை களையும் புத்திமதிகளையும் தந்து வருகின்றார். ஆகம ரீதியில் ஆலயம் அமைய இவர்தந்த ஆலோசனைகள் எங்ஙனம் உருப்பெற்றிருக்கின்றன என்பதை இதுவரை ஆலயத்தில் நடைபெற்றிருக்கும் திருப்பணியின் மூலம் பெருமளவு அறியத்தக்கதாய் இருக்கின்றது.

இவ்வுத்தமர் சிவ ஆலயங்களின் நித்திய நைமித்தியங்களிலும், சைவவித்தியாசாலைகளிலும், வேத ஆகம சங்கங்களிலும், பல சைவ நற்சபைகளிலும் இத்தள்ளாத வயதிலும் பணிசெய்துவருவது போற்றத் தக்கது. இவர் பங்குபற்றுத குடமுழுக்கு விழாக்களோ தீட்சையாதி கிரியைகளோ பொலிவு பெறுவதில்லை என்பது பலர் கூற்று.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்" என்று ஆரம்பமாகும் திருமூலரின் திருமந்திரத்தில் காணும் இலட்சியக் குருவின் வரைவிலக் கணத்திற்குத் திருஷ்டாந்தமாக குருக்கள் அவர்கள் வாழ்ந்து வருகின் றார். சுருங்கச் சொல்லப்புகுவோமாகில் இறைவன் ஈழத்திருநாட்டின் இன்பத் தமிழகத்திற்களித்த காணிக்கை இவரென ஏற்றுக்கொள்ளல் சாலத்தகும். எனவே இத்தியாதி அருட்பேறமைந்த குருக்கள் அவர்கள் பல்லாண்டு சைவப் பணிகள் பல செய்ய ஸ்ரீ கௌரி அம்பாள் சமேத கேதீச்சரநாதப்பெருமான் பாதாரவிந்தங்களில் நாள்தொறும் துதி செய்வோமாக.

* *

## ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை B. A; B. L; F. R. E. S. அவர்கள்

### விநாயகபரத்துவம்

தாங்கள் அன்புடன் அனுப்பிய விநாயகபரத்துவம் என்ற புத்த கத்தை மிக்க உவப்புடன் படித்தேன். விநாயகக் கடவுளது மூர்த்தி விசேடங்களை விளக்கமாகவும் சுருக்கமாகவும் செந்தமிழ் நடையிற் புராணசாரமாகக் கூறும் இந்நூல் சைவ மக்களாற் பெரிதும் போற்றற் குரியது.

தாங்கள் வெளியிட்டுள்ள நூல்களுக்காகச் சைவ உலகம் மிகவும் கடப்பாடுடையது.

சிவமயம்

# திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள்

சிவஸ்ரீ குருக்களவர்களை யான் 30 ஆண்டுகளாக அறிவேன். அவர் 1928 ல் எழுதி "அச்சிட்ட சிவபூசை விளக்கம்" என்னும் சிறந்த நூலை யான் 1930 ல் பார்க்க நேர்ந்தது. அவருக்கு கடிதம் எழுதி சில பிரதிகளைத் தருவித்து விற்றுக் கொடுத்து பரவச் செய்தேன். அது முதல் யாங்கள் இருவரும் நண்பரானேம். அவர் நூல்களில் பல, அடியேன் மூலமாக சென்னையில் அச்சிடப்பட்டு அவர்களுக்கு அவ்வப் போது அனுப்பப்பட்டன. அவரை யான் முதலில் சந்தித்தது 1939ல்; அப்போது அவர் சென்னைக்கு வந்தார். அவரது தமிழ், சமஸ்கிருத நூல்கள் அவர் அடைந்த சைவசித்தாந்தப் புலமையையும் சிவாகமத் தேர்ச்சியையும் காட்டுகின்றன.

சிறு பிள்ளைகளுக்கு ஊட்டுவதற்காக "சைவப்பிரகாசிகை" என்னும் 5 பாகங் கொண்ட நூலை எழுதியுள்ளார். இதோடு விடாமல் ஒரு சைவ வித்தியாசாலை வைத்து நடத்துகின்றார்.

சைவம் தமிழ்ச்சமயம் என்று கூறி வேதாகமங்களை வெறுப்பவரை அடக்க வேதாகம நிரூபணம் என்னும் நூலை இரண்டு பாகமாக எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூல் மிகச்சிறந்ததே.

மறைகள் நிந்தனை, சைவ நிந்தனை பொருமனமுடைய இவர் மூப்போதும் திருமேனி தீண்டும் புண்ணியர். தமது மூப்பைக் கவனிக் காமல் பல ஊர்களுக்குச் சென்று கும்பாபிஷேகம், தீ சூழ்முதலிய கிரியைகளை நடத்தித் திருப்பணி செய்து வருவது போற்றத்தக்கதாம்.

1940 - 1941 ல் இவர் நடாத்திய சைவ சாத்திர பரிபாலனம் என்னும் பத்திரிகையின் மாதச் சஞ்சிகைகளில் பல சமஸ்கிருத, தமிழ் சாத் திரக் கருத்துக்கள் நிரம்ப வெளிவந்தன. அப்பத்திரிகையை மீண்டும் ஆரம்பித்தல் சைவ பரிபாலனமாகும்.

குருபத்தியின் அடையாளமாக இவர் தமது ஆசிரியர் சிவப்பிரகாச பண்டிதரின் தந்தையார் சிவ. சங்கர பண்டிதரின் சரித்திரத்தையும் அவர் எழுதி வைத்திருந்த பிராசாதசட்சுலோகியுரை என்னும் சிறிய நூலையும் வெளியிட்டுள்ளார்.

இவருடைய மகனுரும் தந்தையாருக்கு ஏற்றபடி நடந்து கொள் ளுவது இக்காலத்தில் மெச்ச வேண்டியதே.

இவர் 1957 - ல் காசிக்குப் போய் வந்தனர். அதனல் இவருக்கு காசிவாசி என்னும் பட்டம் கொடுக்கலாம். இவருடைய சிவதொண்டுகள் பல்லாண்டு வாழ்க. "வாழ்க அந்தணர்" என்னும் சம்பந்தர் வாக்கை இவருக்கு உதவுகின்றேன்.

"அன்பர் பணி செய்ய வெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

கூ

# திருமேனி தீண்டும் திருவுடையார்

செ. தனபாலசிங்கன் B. A. (Lond)
(செயலாளன், சிதம்பரசுப்பிரமணிய சுவாமிகோவில் உரும்பராய்)

**உருவாய் அருவாய் உளதாய் இலதாய்**
**மருவாய் மலராய் மணியா யொளியாய்க்**
**கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்**
**குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.**

குருவாய் வருவாய் அருள்வாய் குகனே என மாலோன் மருகனை, மன்றுடி மைந்தனை, வானவர்க்கு மேலான தேவனை மேதினியில் குருவாய் வரவேண்டுமென்று முருகபக்தியில் மூழ்கித்திளைத்த அருணகிரிநாதர் அழைக்கின்றார். மக்கள் வாழ்வின் முடிந்தவாழ்வாகிய ஞான வாழ்வை வேண்டி அழைக்கின்றார். அண்டசராசரங்கள் எல்லாவற்றுக்கும் ஆதிகுருவாக இருக்கும் சிவபிரானுக்கும் ஒரு குரு அமைந்தான். அந்தக்குருவே முருகப்பெருமான். அதனாலன்றே அவனைக் குமரகுருபரன், சிவகுரு, சிவசாமி, தகப்பன் சாமி என்றெல்லாம் நாம் வாயார வாழ்த்துகின்றோம். குருவாக நிற்கும் பெருமையுடைய ஞான பண்டித சாமியாகிய அந்த முருகனைத் தவிர்ந்த ஏனையோர் அனைவரும் சற்குருவை வேண்டிநிற்க நாமெல்லாம் குருவைத் தேடாது விடுதல் அறிவுடைமையாகாது.

திருமேனிதீண்டுவார் எல்லோரும் குருவாக அமைந்துவிட முடியாது. இது ஆராயவேண்டிய தொன்று. ஆயின் அச்சுவேலிக் குருக்கள் ஐயா அவர்கள் தனிப்பெருமை வாய்ந்தவர். வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்க வாழ்பவர். சிந்தித்துச் செயலாற்றுபவர். உள்ளத்தாற் பொய்யாதொழுகுபவர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர். உரன்னெனும் தோட்டியால் ஓரைந்தும் காப்பவர். கருவிற் திருவுடையவர். "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்பதற்கு இலக்கணமாக விளங்குபவர். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகுசிவஞானம் கைவரப் பெற்றவர்.

**திருமேனி தீண்டும் திருவுடையார்.**

வடமொழியிலுள்ள வேதாகமங்களைப் போலவே தென்மொழியிலுள்ள தேவார திருவாசகங்களிலும் அன்பும் ஆராய்ச்சியும் அவருக்கு நிரம்பஉண்டு. அவர் எழுதிக் குவித்த நூல்கள் அளப்பில. ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள், உற்சவங்கள் என்ற இன்னோரன்ன விஷயங்கள் அனைத்தையும் குருக்கள் ஐயா அவர்களின் நூல்களிற்

பரக்கக் காணலாம். நாத்திகம் பேசி நாத்தழும்பேறும் இக்காலத்தில் கிரியைகளைப் பொருளுணர்ந்து செய்வோர் சிலர். இலர் எனினும் அமையும். கிரியைகளில் ஈடுபடும்போது குருக்கள் ஐயா அவர்களின் நிலையை சிதம்பர சுப்பிரமணியனின் நவகுண்ட மகாகும் பாபிஷேகத்தில் நாம் நேரிற் கண்டனம். அவை விரிக்கிற் பெருகும். அந்தணர்களுக்கெல்லாம் அவர் கலங்கரை விளக்கம். குருவாக இருப்பவர் மாணாக்கனாகவும் இருப்பார். தன்குருவை நோக்க மாணாக்கனாகவும் பிறருக்கு கல்வி பயிற்றுவிப்பதினால் மாணாக்கனை நோக்க குருவாகவும் இருப்பது இயல்பே. இந்த வகையில் குருக்கள் ஐயா அவர்கள் தொண்டுகிழவராயிருந்தும் இன்றைய இளைஞரிலும் பார்க்க தணியா வேட்கை கொண்டு மாணவனாகித் துருவித்துருவி ஆராய்ந்து நூல் பல எழுதித் தருகின்றார்.

சைவாபிமானிகள், சிறப்பாக அந்தணர்த்தமர்கள் குருக்கள் ஐயா அவர்களை அணுகி வடமொழி வேதாகமங்களையும் தென்மொழி தேவார திருவாசகம் முதலானவற்றையும் ஐயந்திரிபறக் கற்கவேண்டுமென்று அறிவுலகின் பேரினால் வேண்டுகின்றோம். குருவாக நம்முடைய சமூகத்தில் உலாவுவோரை இறைவன் தான் நமக்கு அளித்துள்ளான் என்ற பெருநோக்கு நம்மிடையிருந்தேயாகவேண்டும்!

சைவம் வாழ்க! தமிழ் வாழ்க! குருக்கள் வாழ்க!

* * *

தாங்கள் அனுப்பிவைத்த புத்தகங்கள் கிடைத்தன. அவை பாராட்டத்தக்க பெருமையுடையனவாய் விளங்குகின்றன.

விபுலாநந்தர்.

* * *

சுவாமிகளுக்கு வணக்கம்பல,

தங்கள் அருமையான நூல்களைப்படித்துப் பயனடைந்து வருகிறேன். ஆசீர்வாதங்களை எதிர்நோக்கியுள்ளேன்.

C. K. சுப்பிரமணிய முதலியார்,
கோயமுத்தூர்.

க

சிவமயம்

# திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்

## நூற்பதிப்புப்பகுதி, அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

சிவத்திருவாளர் ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் சென்ற இருபது ஆண்டுகளுக்குமேல் அடியேனுக்குத் தெரிந்தவர்கள். அவர்களது சைவத்தொண்டைத் தமிழுலகம் நன்கு அறியும்.

சிவன் எனும் செம் இறையும் சைவமும் காலங்கடந்தவை. உலகெங்கும் பரவியுள்ள சைவனும் தன் சைவப்பற்றினை அநாதிகாலமாகத் தன்னுள் தாங்கி அறநிலையில் நின்று அன்பு ஒழுகத் தன் வாழ்நாளைச் சிறப்புற நடாத்திவருகின்றான். எனினும், தன் வாழ்க்கைத் துறையின் தலைவனுகிய சிவத்தின் தத்துவப் பொருள்களை ஆராய்ந்து அன்பு செலுத்தத் தகுந்த வாய்ப்பில்லாமலே இருந்து வருகின்றான். இப் பெருங்குறையை நமது சிவத்திரு. குருக்கள் அவர்கள் தமது வாழ்க்கைத் திறத்தாலும், தாம் இதுவரை வெளியிட்டுள்ள அருமைச் சைவ நூல்களாலும் உலகிற்கு ஓர் அரும்பெரும் துணையாய் நின்று நீக்கி வருகின்றார்கள். அவர்களது நூல்களை அடியேன் பழநியில் இறைபணியில் ஈடுபட்டிருந்தபோதும், இதுபோதும் பெற்றுப் பயனடைந்து வருகின்றேன். என் நண்பர்கள் பலரும் அவ்வாறு நற்பயனடைகின்றனர்.

சிவத்திரு. குருக்களவர்கள் சைவ உலகின் பெரும்பாராட்டுக்குரியவர்களாவார்கள். அவர்களைப் பாராட்டு முகத்தான் சைவ உலகம் மேம்பாடடைகின்றது. சிவத்திரு. குருக்களவர்கள் சிவானுபூதிச் செல்வராய் இனியும் பல்லாண்டு பல்லாண்டாக நற்சுகத்துடன் இருந்து இறைபணி செய்ய எல்லாம் வல்ல அம்பலவாணனை வாழ்த்தி வணங்குகின்றேன்.

க

# கவிராஜபண்டிதர் ரா. திம்மப்பையர் அவர்கள்

**தமிழ் விரிவுரையாளர், முனிசிப்பல் கல்லூரி, சேலம்.**

சிவாகமபண்டிதரும் செந்தமிழ்ப் புலவரும் எனது உழுவலன் புடைய உத்தமநட்பாளருமாகிய பிரம்மஶ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் மகாசமுகத்திற்கு அன்பு பூர்வமாகத் தெரிவித்துக் கொள்ளும் விஞ்ஞாபனம்:

தாங்கள் அன்பு கூர்ந்தனுப்பிய சிவபூஜாவிளக்கம், பிராசாததீபம், விநாயகபரத்துவம், சைவபாடப்புத்தகங்கள், ஊசல் ஆதியன நிறைவே வரப் பெற்றுக் கழிபேருவகையுற்றேன். வேதாகமங்களிலும், சைவசித்தாந்தம் திருவருட்பனுவல்கள் புராணங்கள் ஆதிய புனித நூல்களிலும் தங்களிடத்துள்ள பேரறிவையும் சீரிய கூரிய மதிநுட்பத்தையும் இந்த வெளியீடுகள் புலப்படுத்துகின்றன. வடமொழி தென்மொழிகளின்கணுள்ள ஆழ்ந்த அரிய பெரிய கருத்துக்கள் செறிந்துள்ள சைவச்சார்பான விஷயங்களைச் சமநோக்குடன் காய்தலுவத்தலின்றி நேர்நின்ருராய்ந்தெழுதி வெளியிட்டிருப்பது தங்கள் ஆராய்ச்சித் திறத்தை நிலைநிறுத்துதற்குற்ற சான்ருகும். சைவ ஒழுக்கங்களும் சமயாசாரங்களும் குன்றிப் போலியொழுக்கங்கள் மலிந்து வரும் இக்காலத்தில் சைவ உண்மைகளை யெவ்வாற்ருனும் நிலை நாட்டுதல் வேண்டு மென்ற தீவிர கொள்கையோடு சைவபாடப் புத்தகங்களை யுதவிய பெருந்தகைமை சாலவும் பாராட்டற் பாலதாகும்.

கடவுளில்லை சமயமில்லை வினைகளுமில்லை யெனப் பிதற்றித்திரியும் பித்தர் தம் மனம் நாணி முகங்கவிழ அவர்கட்குத் தலையிலடித்து மதி கொளுத்துவதுபோல விடயங்களிலங்க சிராத்ததீபிகையைப் பிரகடனம் செய்திருத்தலைப் பார்த்து, அதனை முறையே யோதி நுணுகிய கருத்துணர்ந்து பேரானந்த மெய்தினேன்.

இந்நூலையோதிய பின்னரேனும் ஒருவனுக்கு ஆஸ்திகபுத்தியும் பெற்ருர்ப்பேணலும் இம்மை மறுமையுண்மையும் புலனுகாமற்போமாயின், அவன்மனிதனேயாயினும் அங்ஙனம் கருதப்படமாட்டான்.

எனது பூரணபக்தியை யேற்றுக்கொண்டனுக்கிரகம் புரியும் மகாவல்லப மூர்த்தியாகிய ஶ்ரீகணேசப்பெருமான் பிரபாவத்தையும் ஊஞ்சலையும் வெளியிட்டிருக்குந் தன்மையை அந்நூல்கள் வாயிலால் தெரிந்து இனைத்தென நுவலொணு மகிழ்ச்சியடைந்தேன். ஊஞ்சற் பிரபந்தத்தில் தங்கள் செய்யுட்கள் சரளமான நடையில் சிறந்த கருத்துக்களுடன் மிளிர்கின்றன. இதிலிருந்தே தமது கவியியற்றும் பான்மை விசதமாகின்றது.

இவற்றினை அனுப்பியருளிய தங்கட்கு எழுமையும் கடப்பாடுடையேன்.

சிவமயம்

# சைவசிவாசாரிய திலகம்

## திரு. குலசபாநாதன்

இக்காலத்திலே எடுத்ததற்கெல்லாம் ஏன்? எப்படி? என்ற கேள்விகள் இளைஞர் உள்ளத்தில் எழுவது சர்வசாதாரணமாகிவிட்டது. சைவக் கிரியைகள் ஏன் நடைபெறுகின்றன? மகோற்சவங்கள் நடாத்துவதன் காரணமென்ன? என்றெல்லாம் சைவ இளைஞர்கள் கேட்கும் காலம் இது. இவற்றிற்கெல்லாம் தகுந்த விடைகளை ஓரிடத்திற் காண்பதரிது. விடை கூறக் கூடியவர் தொகையும் அருகிவிட்டது. இக்காலத்தில் கிளம்பும் கேள்விகளுக்குத் தகுந்த விடையளித்துச் சமாதானம் கூறக்கூடியவர் இலங்கையிலே ஒரேயொருவர்தான் இருக்கிறார். அவர் யார் எனத்தீர் மானிப்பதில் அபிப்பிராய பேதத்துக்கு இடமேயில்லை. இத்தகைய ஆராய்ச்சி அறிஞர் அச்சுவேலி சிவ ஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களே என்பது யாவருக்கும் ஒப்பமுடிந்ததொன்று.

குருக்கள் அவர்கள் தமிழும் சமஸ்கிருதமும் முறையாக நன்கு கற்றவர். சிவாகமவல்லுநர்; சைவசாத்திரநூல்களிலும் தோத்திரநூல் களிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர்; ஆசாரசீலர்; சைவப்பழம்; ஆடம் பரமற்ற வாழ்க்கை நடாத்தும் இயல்புடையவர். இத்தகைய சைவப் பெரியார் நம்மத்தியில் வாழக்கிடைத்தது நாம் செய்த பூர்வபுண்ணிய பலனென்றே கூறலாம்.

குருக்கள் அவர்கள் எழுதியுள்ள சைவப்பிரகாசிகை எனும் தொடர் நூல்கள் சைவசமயத்தை நன்கறிந்து கொள்ளப் பேருதவி புரிகின்றன. இவ்வாறே குருக்கள் அவர்கள் எழுதிய சிவபூசை விளக்கம், பிராசாத தீபம் புத்துரை, அனுஷ்டான அகவலுரை, விநாயகபரத்துவம், புவ நேசுவரிமகத்துவம், முப்பொருள் விளக்கம், வேதாகம நிரூபணம், சிவபூ சாவிதி மகோற்சவ சந்திரிகை மகோற்சவங்களின் உண்மைப் பொருள் சிராத்ததீபிகை முதலிய நூல்கள் சைவசமயப் பேருண்மைகளையும் சைவக்கிரியைகளின் உண்மைக்கருத்துக்களையும் விளக்கும் சைவப் பேரொளியாக விளங்குகின்றன.

கோயில்களில் மகோற்சவங்கள் நடைபெறுவதன் காரணமென்ன? அங்கு நடைபெறும் கிரியைகளின் தத்துவார்த்தம் என்ன? என்பவை போன்ற பல கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைக் குருக்கள் அவர் கள் எழுதிய மகோற்சவ சந்திரிகை, மகோற்சவங்களின் உண்மைப் பொருள் முதலிய நூல்களிற் காணலாம். இவற்றை விளக்கப் புகுந்த

வேறு சிலர் எங்களுக்குப் புரியாத கடுந்தமிழ் நடையில் எழுதித்தள்ளி யிருக்கின்றனர். அவற்றைப் படிப்பதனால் சந்தேகங்கள் இன்னும் அதி கரிக்கின்றனவே யன்றி ஒழிந்தபாடில்லை. ஆனால் குருக்கள் அவர்கள் தமக்குத் தெரிந்தவற்றைத் தமக்கு இயல்பான – தெளிவான - சிறப்பான இனிய செந்தமிழ் நடையில் எழுதும் ஆற்றல் மிக்குடையவர் என்பதற்கு அவர்களுடைய நூல்களே சான்றுபகரும். பக்தியை ஊட்டக் கூடிய முறையிலே எழுதுவதில் கைதேர்ந்தவர்.

கோயில்களிலே இரதோற்சவம் நடைபெறுவதை நாம் வருடந் தோறும் காண்கிறோம். பக்தி சிரத்தையுடன் வழிபடுகின்றோம். ஆனால் இரதோற்சவத்தின் தத்துவார்த்தம் என்ன என்பது எத்தனை பேருக்குத் தெரியும். இதனைக் குருக்கள் அவர்கள் மிகச் சிறப்பாக விளக்கியிருப் பதைக் காணலாம். நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த்திருப்பணிச் சபை மலரில் குருக்கள் அவர்கள் இவ்விஷயத்தை மிகத் தெளிவாக விளக்கிக் காட்டியிருப்பதால், அதனை எடுத்துக் காட்ட என்மனம் விழைகின்றது.

"இரதோற்சவம் சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியங்களுள் சங்காரத் தைக் குறிக்குமென ஆகமங்கள் கூறுகின்றன. பசுபதியாகிய சிவபிரான் சூரிய சந்திரர்களை உருள்களாகவும், சரம் அசரமாகிய பொருள்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும் அமைந்த பூமியாகிய இரதத்தில் மேருவை வில்லாகவும் வாசுகியை நாணாகவும், விட்டுணுவை அம்பாகவும் அக்கினிதேவன் அம்பின் கூராக வுங் கொண்டு எழுந்தருளிப் பிரமாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்த உமாதேவியாருடன் சென்று அத்தேவியா ருடைய திருமுகத்தை நோக்கித் திருப்புன்முறுவல் செய்த மாத்திரத்தே அம்முறுவலக்கினியினால் முப்புரமும் நீறுயின. சிவபக்தி வழுவாதிருந் தமையால் எரியாது எஞ்சிய விரத்தன், பரமயோகன், குணபரன் என் னும் மூவரையும் சிவபிரான் அடிமையாகக் கொண்டு தம்பதமளித்தருளி னர் என்னும் வரலாற்றை இரதாரோகணக்காட்சி உணர்த்துகின்றது.

இங்கே முப்புர மென்பது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் காரியம் என்னுமுண்மையையும், மூவரையும் அடிமை கொண்டமை விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களையும் அடிமைகொண்டு இரக்ஷிக்கும் முறையையும் உணர்த்து வனவாம். ஆகவே திரிபுரசங்காரத்தின் உண்மைக் காட்சியை உணர்த்தி ஆன்மாக்களைப் பந்தித்த மும்மலங்களையும் நீக்கியருளும் குறிப்பா கவே இரதோற்சவம் நடைபெறுகின்றது என்பதாம்.

## திருமந்திரம்

அப்பணி செஞ்சடை ஆதிபு ராதனன்
முப்புர மெய்தன னென்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே,

இன்னும், தேர்வடிவம் சரீரத்தைக் குறிப்பதாம். அதிற் காணப்படும் நான்கு சிங்கங்கள் ஆன்மாவின் சீவகாருண்ய மில்லாத லோப குணத்தையும், பிரபஞ்ச ஆசையையும் விபரீத உணர்வையும், அகங்காரத்தையும் குறிக்கும். எட்டுயாளிகள் ஆன்மாவினது அஞ்ஞானம், அபிமானம், ராகாதிகுணம், துக்கம், விடயப்பற்று, பலவிதகன்மம், உபாதி, அவத்தை என்னும் எட்டு வித அனுபவங்களையும் குறிக்கும். கொடிகள் தத்துவங்களைக் குறிக்கும். மணிகள் சாத்திர அறிவினலுண்டாகும் பாசஞானத்தைக் குறிக்கும். குஞ்சங்கள் வாகுமாலை முதலியன ஆன்மாக்கள் மனச் சலனத்தினல் எழுவகைப் பிறப்பில் எண்பத்து நான்கு இலட்சம் யோனிபேதங்களாக மாறிமாறி அடையும் அவத்தையைக் குறிக்கும். இவ்வாறு கொண்டு, உடம்பு முதலிய இவைகளையெல்லாம் ஆன்மா வெறுத்துத் தியானத்தால் திருவருளைச் சேர்ந்திருக்கும் உண்மைக்கு அறிகுறியாகவும் இரதோற்சவம் ஆலயங்களில் நடைபெறுவதாமெனவும் அறிஞர் கூறுவர். இவ்வாறு உண்மைப் பொருள் காண்பித்து நிற்கும் மிக்க மகத்துவமுடையது இரதோற்சவம்."

குருக்கள் அவர்களைப் பல முறை கண்டு எமது சந்தேகங்களை நீக்கிக் கொள்ளும்பாக்கியம் கிடைத்தது. அவர்களுடைய இல்லத்திற்கு எந்த நேரத்திற்சென்றலும் அன்புடனும் முகமலர்ச்சியுடனும் உபசரித்து அமைதியாகவிருந்து எங்கள் சந்தேகங்களை நீக்குவார்கள். கள்ளங்கபடமற்ற உள்ளம் படைத்தவர்கள். குருக்கள் அவர்கள் கோயிற்கிரியைகள் நடாத்தி நிலையற்ற செல்வப் பொருளை ஈட்டுவதில் தமது வாணாளைக் கழியாது சைவசமயத்தை விளக்குவதற்கான நூல்களை வெளியிடும் சிவதொண்டில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இத்தகைய சைவப் பெரியாரின் திருத்தொண்டினைப் பாராட்ட முன் வந்த சைவநன்மக்களுக்குச் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. நமது குருக்களவர்கள் சைவ நூல்களை வெளியிடும் இச்சிவதொண்டினைத் தொடர்ந்து செய்து வருவதற்கு அரோக திடகாத்திரத்தையும் நீண்ட ஆயுளையும் அவர்களுக்கு அருளும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேம்.

# வாழ்த்து

கி. வா. ஜகந்நாதன்.
ஆசிரியர், கலைமகள்.

ஆகமம் உணர்ந்த ஐயன்;
அருமறை தெளிந்த செல்வன்;
சேகறு குணத்தான்; தூய
செய்கையன்; ஒழுக்கம் மிக்கான்;
வாகுறத் தமிழும் தொன்மை
வடமொழி நூலும் கற்றான்;
சீகரத் தேசு பூத்த
திருமுகம் உடைய நம்பி.

இலங்கையில் அச்சு வேலி
எனும்பதி விளங்க வந்தான்;
துலங்குறு குமார சாமிக்
குருக்களாம் தூய பேரோன்;
மலங்கெடச் சிவத்தைப் பேணி
வயங்குறு பூசை யாற்றி
நலங்கிளர் தரவே வாழும்
நாயகன்; இனிய நாவான்.

அடக்கமே உருவாய்த் தோன்றும்
அந்தணன்; சிலசொல் பேசி
நடத்தையில் சிறந்து நிற்போன்;
நாடுமா லயவி ழாவின்
கிடக்கையை விளக்கும் பெம்மான்;
கிளர்தரு சைவ உண்மை
எடுத்துரைக் கின்ற நூல்கள்
எத்துணை யோஇங் கீந்தான்.

தீட்சைபெற் றுயர்ந்த சாமி;
சிவனடி மறவாச் செம்மல்;
மாட்சிசால் மரபு மாறும்
வழியினை அறியான்; பண்டை
ஆட்சியை மாற்றும் மக்கட்
கறிவினைக் கொளுத்தும் ஆசான்;
காட்சிசால் நீறும் மாலைக்
கண்டியும் பொலிகோ லத்தான்.

தூய ஆ சார சீலன்;
சோம்பலே அறியா தென்றும்
ஏயநூற் பணிகள் செய்யும்
ஏற்றத்தான்; குருக்கள் என்றே
பாயசொற் பொருளாய் நின்ற
பருணிதன்; சுற்றம் நண்பர்
ஆயவர் தெய்வ மேபோல்
அரியனுய் மதிக்கும் சால்போன்.

சீலத்தால் முதிர்ந்த ஆண்டால்
திருவுறக் கனிந்தான் ஆய
கோலத்தான் றன்சீர் எண்ணிக்
குளிர்ந்தநெஞ் சத்தோ டன்னன்
பாலுற்ற பெருமை யெல்லாம்
பரவிப்பா ராட்டி அன்பர்
ஏலச்செய் பெருவி ழாவுக்
கென்அன்பு வாழ்த்துக் கொள்க.

மங்குரு இளையன் வேற்கை
வள்ளல்தன் அருளால் தண்ணென்
திங்களே யென்னக் கல்வி
சிறக்கின்ற குமார சாமிப்
புங்கவன் இன்னும் பன்னுள்
பொற்புற வாழ்ந்து மேலும்
மங்கல விழாக்கள் கொண்டு
மகிழ்ச்சிபெற் றேங்க மன்னே.

வாழிய யாழ்ப்பா ணத்து
மாப்பதி அச்சு வேலி!
வாழிய ஆக மத்தின்
வளந்தெரி அந்த ணாளன்!
வாழிய குமார சாமிக்
குருக்களாம் மறையோன் அன்பர்;
வாழிய சைவம்; யாண்டும்
திருவருள் மலிந்து வாழி.

❋ ❋

சிவமயம்

உலகன்பட்டி

சித்தானந்த சைவநிலையம்

# ஸ்ரீமத் இலக்குமண சுவாமிகள்

சிவபூசை விளக்கம் என்னும் புத்தகம் சிவபூசைக்குரிய பொருள்களையும், செயல்களையும், பயன்களையும் விளக்கிக் காட்டுவதில் புறவிருளை நீக்கிப் புவிப்பொருளை விளக்கும் இரவியைப்போல் நிகரற்று விளங்குகின்றது. இடத்திற்குத் தக்கவாறு தமிழ்மறைப் பாசுரங்களை எடுத்துக்காட்டியிருப்பது தாங்கள் தமிழ்மறையில் வைத்துள்ள ஆர்வத்தையும் ஆராய்ச்சித் திறத்தையும் நன்கு புலப்படுத்துகின்றது.

சிராத்ததீபிகை எத்தகையோராயினும் சிராத்தம் செய்தே தீர வேண்டும் என்பதை நன்கு வலியுறுத்துகின்றது.

பிராசாத தீப உரை பிராசாதமந்திரப் பொருளைப் படத்துடன் விளக்கிக் காட்டுகின்றது.

மகோத்ஸவசந்திரிகை மகோத்ஸவதத்துவத்தை மிக அருமையாக விளக்கிக் காட்டுகின்றது.

விநாயகபரத்துவம் விநாயகப் பெருமானுடைய பெருமையை நன்கு வலியுறுத்துகின்றது.

இப்புத்தகங்களால் தங்கள் வடமொழிப்பயிற்சியும் வடமொழி தென்மொழி நூல்களின் ஆராய்ச்சி வன்மையும் மிகப்பாராட்டத்தக்கதாயிருக்கின்றன. இத்தகைய அரிய நூல்களை இயற்றிச் சைவ உலகிற்கு உபகரித்த தங்களுக்கு இன்னும் உபகரிக்குமாறு நீண்ட வாணாளையும் நோயற்ற உடல் நலத்தையும் பொருட்பெருக்கத்தையுந் தந்துதவுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைச் சிந்திக்கின்றேன்.

உலகன்பட்டி
யுவஹ ஆடிமீ ஹ0ஷ



குருக்களவர்கள் நித்திய நைமித்தியங்கள் செய்யும்
விநாயகராலயம்

சிவமயம்

# பண்பு நிறைந்த பெரியார்

## திரு. த. குமாரசாமிப்பிள்ளை

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே —திருமந்திரம்.

**கல்வி**

செந்தமிழ் வடமொழியிரண்டையும் இருகண் எனப்பயின்றவர் இருமொழிகளிலும் விற்பத்திக்குரிய நூற்பயிற்சி அளவில் நில்லாது உண்மையுணர்த்துவனவாகிய வேதாகமங்கள், சைவசாத்திரங்கள், பன்னிருதிருமுறைகள், பத்ததிகள் அவற்றிற்காதாரமான மூலாகமங்கள் இவைகளைப்பயின்று அவைகளில் உள்ள கிரியாபாகம், ஞானபாகம் இரண்டின் உண்மையுணர்வையும் உள்ளபடி உணர்ந்தவர்.

"கிரியை யெனமருவுமவையாம் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம் எனக்கிளக்கும் நூல்கள்" என்றமையால் ஆதிசைவ அந்தணமரபிற் கேற்ப கர்ஷணுதி, ப்ரதிஷ்டாந்தம், ப்ரதிஷ்டாதி உத்ஸவாந்தம், உத்ஸவாதி பிராயச்சித்தாந்தம் உள்ள கிரியைகளை முற்றுற அறிந்து ஞானபாகத்தோடு ஒப்ப ஆராய்ந்து மந்திரம், கிரியை, பாவனைசெய்யும் முறை, அவற்றின் பயன், இவைகளைத் தெளிந்தவர்.

**ஒழுக்கம்**

சமய, விசேட, நிருவாண, ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கையும் பெற்று கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் வழிபடலே எனமனங்கொண்டு தாம் வசிக்கும் அச்சுவேலி என்னும் பதியில் உள்ள பிரபலமான பிள்ளையார் கோவிலில் நித்திய நைமித்தியங்களைச் செவ்வனம் நடாத்திவருபவர். தமது இல்லத்தில் முன்னோரால் தாபிக்கப் பெற்ற ஒரு ஆலயத்தை விசேடமாகத்திருத்தி அமைத்து நித்திய பூஜை செய்து வருபவர். தம்பதியில் சரஸ்வதி வித்தியாசாலை ஒன்றைத் தாபித்து சிறப்பாக நடாத்தி வருபவர். கல்விஅறிவின் பயன் தம்வாழ்க்கையில் விளங்கக் காட்டுபவர். அதனால் ஒழுக்கமும் உள்ளப் பண்பாடும் அமைந்த பெரியாராய் விளங்குகிறார்.

**சமயத்தொண்டு**

யாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக என்றாங்கு சமய உண்மைகளை விளக்கவல்ல நூல்கள் பலவற்றை பாலர் முதல் அறிவு முதிர்ந்

தோர் வரையும் படித்துப்பயன் பெறத்தக்க வகையில் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றனர். யாராவது காலப்போக்கில் தம் உள்ளத்தை விடுத்து நெறிதிறம்பிய வகையில் எழுதியன தம்பார்வைக் கெட்டினுல் அவைகளை கண்டு பொதுமக்கள் கலங்காவண்ணம் வேத சிவாகம புராண இதிகாச, சாத்திர தோத்திர நூல்களிலுள்ள பிரமாணங்களை எடுத்துக் காட்டி உண்மைகளை விளக்க எழுதிய நூல்களும் பல. இனி அன்பும் அறிவும் ஒழுக்கமும் பண்பும் அமைந்த பெரியாராய் விளங்குவதனுல் பலர் இவரையடைந்து தீட்சைபெறுவர். பலர் இப்பெரியாரைப் பரிந்தழைத்து பிரதிட்டை, கும்பாபிஷேகம் முதலாயின செய்விப்பர். இத்தகைய தொண்டுகள் செய்வதில் உள்ளம் பூரிப்பார். நித்தியமும் தம்முடைய ஆன்மார்த்த பூசை முடித்தே பரார்த்தத்தில் செல்வதை விரதமாகவுடையவர். இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் சைவ ஆதீனங்களோ, சைவசபைகளோ, வேதாகமவிற்பன்னர்களோ இன்னேர் தொடர்பு என்றும் வைத்திருப்பவர் ஆதலின் தாய்நாட்டிலும் இப்பெரியார் பண்பறிந்து பாராட்டுவார் பலராவர்.

**சிறப்பியல்பு**

கிரியைகள் செய்ய ஆரம்பிக்கும் பொழுது "அவனேதானேயாகியவந்நெறியோனுகி" என்றுங்கு சோகம் பாவனையில் திளைத்திருக்கும் நிலையைக்கண்டால் யார்தான் உள்ளம் உருகார். இவ்வண்ணம் பல்காலும் பன்னுளும் பயின்று வரும் பான்மையினுல் குருவடிவம் சிவவடிவமாகத்திகழ்கின்றது. வித்தியாலயம், இல்லத்து ஆலயம், குடும்பக்கருமம் இவைகளை நடத்தப் பெரும்பொருள் தேவைப்படும் எனினும் பொருள்நோக்கம் கொண்டு எவ்வகையிலும் முயல்வதைக் காண்கிலம். ஆயினும் ஒருவாறு எல்லாம் செம்மையாக நடைபெறுகின்றன. சித்தம் சிவமாகச் செய்தனவே தவமாக்கும் அத்தன் கருணையினுல் எல்லாம் நடப்பன. தன்னைச் சரணென்று தாளடைந்தாரைத் தாங்குவன இன்பவடிவான இறைவன் திருப்பாதங்களல்லவா. இத்தகைய பெரியாரைப் பாராட்டவேண்டுவது சைவமக்களாகிய எல்லோர்க்கும் கடமை என்பது சொல்லாமலே அமையும் என்க. அன்பு கனிந்து அருள் தோய்ந்து பண்பு நிறைந்த பெரியாராகிய குருக்கள் ஐயா அவர்களை இன்னும் பல்லாண்டு எல்லாநிறைவுகளோடும் வாழப் பாதுகாத்தருள வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் இணையடி மலர்களை இறைஞ்சுதும்.

சிவ ஸ்ரீ. குமாரசுவாமிக் குருக்கள்

பாராட்டு விழா மலர்

*

# சிறப்புக் கட்டுரைகள்

கணபதிதுணை

# குருபரத்துவம்

## சிவஸ்ரீ. இ. கு. பூர்ணானந்தேசுவரக் குருக்கள்

கந்தசாமிகோயில் ஆதினபிரதமகுரு

**வில்லூன்றி, திருக்கோணமலை.**

ஆனைமுக னுறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

அகண்டாகார சச்சிதானந்த தேஜோமய திவ்ய ஸ்வரூபியாகிய பரமபதியை யடையத் தடையாக நிற்கும் மல இருளினுற் கண்ணிருந் துங் குருடரானோரைச் சிறந்த கல்வியாலும் சைவாகமங்களில் விதித் தவாறே பிரதிஷ்டை, உற்சவம், பூசை, ஓமாதிகளாலும் தீக்ஷை உப தேசங்களாலும் ஞானமாகிய அறிவு விளங்கச் செய்து கண்ணுடையராய் நற்கதி பெற அருள்பவர் குருவெனப் பெயர் பெறுவர். கல்வியறிவே கண்களா மென்பதையும், அஃதில்லாதோர் கண்ணிருந்துங் குருடராவா ரென்பதையும், வடநூலார்,

* "ஐயந்திரிபு அறியாமை முதலிய சம்சயங்களை நீக்குவதும், கட்புலனுக் கெட்டாத தூரத்திலுள்ள பொருள்களை விளக்குவதுமாகிய சாஸ்திரஞானமே கண்களாகும்; அந்த ஞானமில்லாதவன் குருடனேயாவன்"

எனவும்,

"ஒருவன் சாஸ்திரஞானத்தைப் பெற்றிருந்தான் கண்ணுடையவனாகிறான்"

எனவும், தென்தமிழ்நூலார்,

* "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

"எண்ணென்பவேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

எனவும்,

---

* மொழிபெயர்ப்பு

"எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்"

எனவும் கூறுவதால் உணரலாம். இத்தகையோருக்குக் கல்விபோதித்து அஞ்ஞானமாகிய குருட்டுத் தன்மையை நீக்குபவர் குரு எனப்படுவர். அதனை,

"அஞ்ஞானமாகிய இருளினுற் குருடானவனுக்கு அறிவு புகட்டலாகிய அஞ்சனந் தீட்டுங்கோலினுல் அஞ்சனந் தீட்டிக் கண் ஒளிபெறச் செய்கிற குருவுக்கு வணக்கம்"

என்று குருவணக்க சுலோகத்திற் கூறியதாலறியலாம்.

அன்றியும், குரு என்ற சொல்லுக்கு அஞ்ஞானமாகிய இருளை நீக்குபவர் என்பது பொருள்.

இதனை,

> "கு - என்பது அஞ்ஞானமாகிய இருள்; ரு - என்பது அவ்விருளை நீக்குவது; ஆகவே அஞ்ஞான இருளை (கல்வி முதலியவற்றுல்) நீக்குபவர் குரு எனப் பெயர் பெறுவர்"

என ஆகமம் கூறுவதால் அறியலாம். இத்தகைய கல்வியைக் கற்பிப்பவர் வித்தியா குரு எனப் பெயர் பெறுவர்.

"இயமானனிந்திரவி யெரிவானிலஞ் சலிலமெறி காலெனும் பகுதியிருநான் — மயமான" என்றபடி அஷ்டமூர்த்தி ஸ்வரூபராய், "வேதக் காட்சிக்கு முபநிடதத் துச்சியின் விரிந்த போதக் காட்சிக்கும்" காணஇயலாத பரமபதியாய், "ஞானந்தானுருவாகிய நாயகனுய்த்" தமக்கென ஒருருவமின்றி "அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய்" விளங்கும் பெருமானை அடியார்கள் தரிசித்து வழிபட்டுய்யும் பொருட்டாக ஆலய முதலியவற்றில் சிவலிங்கத்து, அன்றேல் உருவத்திருமேனியில் கிரியா காண்டமுறைப்படி பிரதிஷ்டை செய்து ஆவாகித்துத் தியானம் பூஜை உற்சவம் ஓமம் முதலியவற்றைச் செவ்வனே நடத்தி அவ்வடியார்களை நற்கதிபெறச் செய்பவர் பிரதிஷ்டாகுரு எனப்பெறுவர்.

இவர் குருலஷணம் நிறைந்து சமயவிசேஷ நிர்வாண ஆசார்யாபிஷேக தீக்ஷிதராய், ஆத்மார்த்த சிவபூஜா துரந்தரராய், ஆகமக்கிரியாவல்லுநராய், ஆதிசைவ சிவாசாரியர் எனவிளங்குபவராம். இவருடைய லக்ஷணத்தைக் காரணாகமத்து ஆசார்யலக்ஷணவிதிப்படலத்தில்,

> "ஆதிசைவராகிய குருஎன்பவர் ஆத்மார்த்த பூஜையும் பரார்த்த பூஜையும் செய்ய அதிகாரமுடையர்; இவர் பிரதிஷ்டையும் யாக ஓமமுதலியனவுஞ் செய்யத்தகுதியுடையர் ஆதிசைவகுலத்திற் பிறந்தவரேசிறந்த சிவாசார்யராகும். + ஓதுவித்தல் ஓதல் வேட்பித்தல் வேட்டல் ஈதல் ஏற்றல் ஆகிய ஆறு தொழில்களில் தவருதவரும், சைவசித்தாந்த தத்துவங்களை நன்குணர்ந்தவரும்,

+ "இருமூன்றெய்திய இயல்பினின் வழாது" — திருமுருகாற்றுப்படை

கடவுள் சிவாக்கினி குரு ஆகியவற்றிற் குறையாத பக்தியுள்ளவரும், சிவாசார்யர்கட்குரிய எல்லா ஆசாரங்களும் கூடியவரும், சிவத்தியான பாராயணரும் ஐநங்களில் அன்பு பூண்டவரும், சகல சாஸ்திரப்பொருள்களையும் அறிந்து சிறந்தவரும், சைவசமய ஆசாரங்களைப் பாதுகாப்பவரும், பதம் வாக்கியப் பிரமாணங்களை அறிந்தவரும், பதிசாத்திரங்களைத் தவிரப் பசுசாஸ்திரங்களிற் பராமுகமுள்ள வரும், சிவாகமங்களில் ஒரே கருத்தான மனமுடையவரும், எல்லாப் பிராணிகளுடையவும் நன்மையிற் பற்றுடையவரும் ஆக இத்தகைய லக்ஷணங்களுமமைந்தவரே உத்தமராகிய ஸ்தாபக குருவாகும்''

என்று கூறுவதாலறியலாகும்-

முற்கூறிய சிவபூஜை முதலிய கிரியைகளைச் செய்ய அதிகாரம் பெறவும் ஆத்மாவைப் பந்தித் திருக்கிற மலங்களை நீக்கிப் பகவானை அடையச் செய்யவும் நடத்துங்கிரியை, தீக்ஷை உபதேசம் எனப்படும். ''மலகர்மபந்தத்தை நீக்கிச் சுத்தமான ஞானத்தைத் தருவதால் தீக்ஷை எனப் பெயர் பெற்றது'' எனச் சிவாகமம் செப்பும்.

இந்தத் தீக்ஷை சட்சுதீக்ஷை பரிசதீக்ஷை முதற் பலவகையாகும். இதனை,

''சட்சுதீக்ஷை, ஸ்பரிசதீக்ஷை, வாசகதீக்ஷை, மானஸதீக்ஷை, சாஸ்திரதீக்ஷை, யோகதீக்ஷை, ஔத்திரிதீக்ஷை முதலிய பல தீக்ஷைகள் சொல்லப்படுகின்றன''

என்று சிவஞானபோத வியாக்கியானமும்,

''திருநோக்காற் பரிசத்தாற் றிகழும்வாக்காற் பாவனையால்
மிகுநூலாலியோகப்பண்பால் — பரவிவருமௌத்
திரியாற் பாசநாசமேவ அருளும்''

என்று சிவப்பிரகாசமும் கூறுவதாலறியலாம். சட்சுதீக்ஷை முதலிய இந்த அறுவகைத் தீக்ஷையும் சுதந்திரமாகச் செய்யப்படுவதும் ஔத்திரிக்கு அங்கமாகச் செய்யப்படுவதுமென இருவகைப்படும். இவற்றின் விரிவை சிவஞானசித்தியாருரையிலும் ஆகமங்களிலுங்காண்க.

இனி, ஔத்திரிதீக்ஷையாவது ஓமசம்பந்தமான கிரியையாற் சீடனுடைய மலபந்தத்தை நீக்கி, அவனுக்குச் சிவபூஜை முதலியன நடத்த அதிகாரம் கொடுப்பதாம். ஹோமசம்பந்தமாகச் செய்யும் தீக்ஷை ஹௌத்திரி-ஹௌத்திரி என்பது ஔத்திரி என்றுயிற்று.

இத்தீக்ஷை, சமயதீக்ஷை விசேஷதீக்ஷை நிருவாணதீக்ஷை ஆசார்யாபிஷேகம் எனநான்குவகையாம். இவற்றுட் சமயதீக்ஷையாவது, சைவசமயத்திற் பிறந்தாலும் சிவமந்திரஜபம் அநுஷ்டானம் முதலிய

வற்றுக்கு அதிகாரம் பெறச் சிவயாகபூஜை ஓமாதி செய்து மந்திரோபதேசம் செய்வதாகும். இத்தீக்ஷை பெற்றவர் சமயி எனப்படுவர். இந்த ஜபம் அநுஷ்டானங்களோடு ஆத்மார்த்த சிவபூஜை முதலியன நடத்த அதிகாரம் பெற முன்போல யாகபூஜை ஓமாதிகள் செய்து உபதேசம் முதலியன செய்வது விசேஷதீக்ஷையாகும். இத்தீக்ஷை பெற்றவர் புத்திரர் எனப் பெயர் பெறுவர். நிருவாணதீக்ஷையாவது:—

"ஏர்பெற முன்போற் குண்ட மண்டல மியற்றல் செய்து
பூரணகும்பம் வைத்துப் பொருந்துமண் டலத்தி னுப்பண்'
கார்மிடற் றிறையைப்பூசை யாற்றிவெங் கனலுமோம்பி
யார்வமா ணக்கன் றன்னைமண்டலத்தில் வைத்தே"

"வைத்தபின் னேமஞ் செய்து தருப்பணங் கொடுத்து மன்னு
தத்துநீர்க்கலசமாட்டித் ததைமலர் நீர்கைக்கொண்டு
சித்தியுண்டாக இந்த மந்திரமென்று செவ்வே
அத்தனைப் போற்றி வைகுமவன்கையி லளிக்கவேண்டும்"

என்பது முதலாக வாயுசங்கிதை கூறுமுறையே கிரியை செய்து சிஷ்யதேகத்தில் ஷடத்துவநியாசம் பஞ்சகலாசுத்தி முதலியன செய்து, மந்திரங்களை உபதேசிப்பதாகும். இத்தீக்ஷை பெற்றோர் சாதகர் எனப் பெயர் பெறுவர்.

ஆசார்யாபிஷேகமாவது:—

"அறைதரு குணபான் முன்னுங் குடங்களோரைந்திற் சொன்ன
நெறியினிற் கலைகளைந்தும் பூசனை நிரப்பிவாய்ப்பச்
செறியுமுத்திரையுங் காட்டிச் செந்தழல் விதியினேற்பி
யிறைவனைப் பூசைசெய்தாங்கின்னரு ளடைந்து மன்னே"

"நிறைத்து முன்வைத்த குடத்தினீர் சொரிந்து சிவவத்தநிலவுறவைத்துத்
திறம்பட மறைகள்யாவு மோதித்திகழ் சிவாசாரியனுக்கி"

என்று வாயுசங்கிதை கூறுமுறையே ஐந்துகும்பங்களிற் பஞ்சகலைகளைப் பூசித்து, ஓமாதிகள் கிரமமாக நடத்தி அபிஷேகஞ் செய்து சகல கிரியைகளும் நடத்த அதிகாரங் கொடுப்பதாம். இந்த அபிஷேகம் பெற்றவர் சிவாசாரியர் எனப்பெயர் பெறுவர். இத்தகைய சிவாசாரியர் பிரதிஷ்டை மகோற்சவம் ஸ்நபநம் தீக்ஷை முதலிய சகலகிரியைகளையுஞ் செய்யவும் சிவாகமாதி சாஸ்திரங்கட்கு வியாக்கியானம் செய்து உபதேசிக்கவும் அதிகாரமுடையவராவர்.

நிருவாணதீக்ஷை பெற்ற சாதகர் என்பார் பிரதிஷ்டை தீக்ஷை முதலியவை செய்ய அதிகாரமில்லாதவராகும். விசேஷதீக்ஷை பெற்ற புத்திரர் என்பார் ஆத்மார்த்த சிவபூஜையே தவிர மற்றெரு கிரியையும் செய்ய அதிகாரமில்லாதவர். புத்திரர் சாதகர் ஆகிய இருதீக்ஷை

பெற்றேரும் சிவாகமாதிகட்கு வியாக்கியானம் உபதேசம் செய்தலும் கூடாது. சமய தீக்ஷை பெற்ற சமயி என்பார் அநுஷ்டானம் ஜபம் குருவழிபாடு செய்தலேயே தவிர மற்றக் கிரியைகள் செய்ய அதிகார மில்லாதவராவர். இதனை "தீக்ஷாசைவப்ரதிஷ்டாச" என்பதாதியாகக் காரணகமங் கூறுவதாலறிக. தீக்ஷா பிரதிஷ்டாகுரு லக்ஷணம் பற்றி

> "சிவாசார்யருக்குரிய முறை சாஸ்திரஞானம் கிரியை என இரண்டு வகையாம். ஆதலால் சிவாகமசாஸ்திரஞானம் நிறைந்தவரும், கிரியாகலாப வல்லுனரும், சிவபிரானிடத்தும் குருவிடத்தும் பக்திமிக்கவரும், பொறுமை ஆத்மாக்களில் இரக்கம் இனிய வார்த்தை முதலிய குணசீலரும், நல்ல சம்பிரதாயமுடையவரும், சகல அங்கலக்ஷணங்களும் நிறைந்தவரும், எனவே அங்கங்குறைதல் முதலிய குற்றங்களின்றி நிறைந்த வடிவினரும், லௌகிக விஷயங்களிற் சாமர்த்திய முடையரும் ஆகிய சிவாசாரியரே தீக்ஷை பிரதிஷ்டை முதலிய கிரியைகட்குச் சிறந்தவராகும்"

என்பார் பிறரும்.

சிவபிரானுலருளப் பெற்ற சிவாகமாதிசாஸ்திரங்கட்கு வியாக்கியானம் உபதேசம் முதலியவற்றை நிறைந்த கல்வி ஞானமுதலியன அமைந்த சிவாசாரியரே செய்தற்குரியர். ஏனெனில்;

> "எழுத்துக்கள் உயிரெழுத்து மெய்யெழுத்து முதற் பலவகையாம்; அந்த மெய்யெழுத்துக்கள் உயிரெழுத்துக்களோடு சேர்ந்து பதமாகவும், அந்தப் பதங்கள் சேர்ந்து வாக்கியமாகவும் அமைகின்றன. அதனுல் அர்த்தவியுற் பத்தியுடையவரே வியலஹாரம் சுவபக்ஷஸ்தாபனம் முதலியன செய்ய வல்லவர். அ வருக்கம் ஆகிய உயிரெழுத்துக்களிற் சிவனும், க வருக்கம் ஆதிய மெய்யெழுத்துக்களில் தேவியும் அதிபர்களாக விளங்குவர். ஆகலின் இவற்றின் தராதரமறிந்த வல்லவரே உபதேசஞ் செய்யத் தகுந்த நிபுணராகும். காமிகாகமமுதலிய ஆகமங்கள் சிவபிரானுலருளப்பெற்றன. ஆகலின் ஆப்தவாக்கு எனப் பெற்றன. அவை கண்புலனுக்கெட்டாத பொருள் கனையும் வெளிப்படுத்தத் தக்க சாதனங்களாம்"

எனச் சிவஞானசித்தியுரை ஆசிரியர் சிவாக்கிர யோகிகள் கூறுவதாலென்க.

இத்தகைய சிவாசாரியராகிய குரு செய்யும் நயநதீக்ஷை முதலியவற்றுலும், உபதேசத்தாலுமே மலபந்தம் நீங்கும். இதனை,

> விடநகுலமேவினு மெய்ப் பாவகனின் மீளுங்
> கடனிலிருள் போவதிவன் கண். —திருவருட்பயன்.

> [ஒருவனை விடந்தீண்டி மயங்கி உறங்கும்போது கீரியைக் கொண்டு வந்து கழுத்திற் கட்டினுலும் விடம் விட்டு நீங்காது. உண்மையாகிய மந்திரவாதி வந்து தன்னைக் கீரியாக அல்லது கருடனைப் பாவித்து நோக்கிய பின்பே விடம் விட்டு நீங்கும். அதுபோலக் குருவும் சிவசொரூபமாக இருந்து சீடனையும் சிவசொரூபமாக ஞானக்கண்ணினுலே பார்க்கவே மலம் நீங்கும். பாவகன் - பாவனைசெய்பவன்; மந்திரவாதி.]

என்பதாலறிக.

ஆத்மாக்கள் ஆணவம் என்ற ஒரேமலத்தையுடைய விஞ்ஞானகலரும் ஆணவம் கன்மமென்ற இருமலங்களையுமுடைய பிரளயாகலரும், ஆணவம் கன்மம் மாயை யென்ற மூன்று மலங்களையுமுடைய சகலருமாக மூன்றுவகையினராகும். இவர்களுள், விஞ்ஞானகலருக்குச் சிவபிரான் அவர்களறிவினுட் பேரறிவாக விளங்கி மலநீக்கம் செய்வரென்றும், பிரளயாகலருக்கு இடபாரூடராய்க் காட்சிகொடுத்து மலநீக்கம் செய்வரென்றும், சகலராகிய தேவர் இருடியர் மனிதர் ஆதியோருக்கு அவர்களைப் போன்றுவந்து மலநீக்கம் செய்வரென்றும் கூறப்படும். இதனை,

உரைதருமிப் பசுவர்க்க முணரின் மூன்றுமுயரும்
விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்
நிரையின் மலம் மலங்கன்ம மாயை நிற்கு
முதலிருவர்க்கு நிராதாரமாக்கிக்
கரையிலருட் பரன்துவி தாசத்திநிபாதத்காற் கழிப்பன்
மலஞ், சகலருக்குக் கன்மஒப்பிற்
றரையிலாசான் மூர்த்தி யாதாரமாகித்தரித் தொழிப்பன்மலஞ்
சதுர்த்தா சத்தினிபாதத்தால்

எனச் சிவஞான சித்தியார் கூறுவதினுலறிக.

சகலவர்க்க ஆன்மாக்கட்குப் பெருமான் குருமூர்த்தமாய் வந்து மலநீக்கம் செய்வதை,

"ஐம்புல வேடரோடு கூடியிருந்து உன்பெருமை அறிந்திலை என்று ஞானசாரியாராலே அறிவுறுத்தப்பட்டவனுகிய (முன்னரே தவத்தை ஈட்டும் பேறு பெற்ற) செல்வமுடைய ஆன்மாவானவன், இவ்வைம்புல வேடரை விட்டு அனன்னியனுய்ச் சிவனுர் திருவடியை அடைகிருன்"

என்று சிவஞானபோதமும், இதையே

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மை யினரன் கழல் செலுமே"

என்று சிவஞான போத எட்டாஞ்சூத்திரமும் கூறும்.

இஃதன்றியும், நம் முருகப்பெருமானும் குருவாக இருந்து அகஸ்திய முனிவர்க்குப் பிரணவப்பொருள் முதலியவற்றைப் போதித்தார். இதனை,

"அளவில் பலகலை யங்கமாரணங்களுணர்ந்த
அகத்தியனுக் கோத்துரைக்கு மண்ணல்"

(சிவப்பிரகாசம்) என்று கூறியதாலறிக. இதைக் கச்சியப்ப சிவாசாரியரும்,

"ஆங்குறு குமரப்புத்தேளருமறைக் காதியாகி
யோங்குமெப் பொருட்கு மேலாமோரெழுத்துரையினுண்மை
தீங்கற வணங்கிக் கேட்பச் சிறுமுனிக்குதவி மற்றும்
பாங்குறு மிறைவனுலும் பரிவினுலுணர்த்தினனால்"

எனக் கந்தபுராணத்தில் வலியுறுத்தினர்.

இப்படிப் பரமபதியே குருமூர்த்தமாக வருதலால் குரு என்பார் எத்துணைப் பெருமை நிறைந்தவர் என்பதை உணரலாம். இத்தகைய சிறப்பமைந்த குருவை வழிபாடு செய்து சேவிப்பதால் நன்மைகள் பல அபிவிருத்தியாகும். இதனை

"குருவை நன்முக வழிபட்டுச் சேவிப்பதால் அறிவு வீரியம் கீர்த்தி வலிமை முதலியன நாடோறும் விருத்தியாகும்"

என ஆலாஸ்ய மகாத்மியம் கூறுவதாலறியலாம். மேலும், இத்தகைய குருவை அவமதிப்பதால் வருந்துன்பத்தையும், "குருவை அவமதித்துத் துரோகஞ் செய்வது எல்லாப் பாவங்களினும் மிகக் கொடிய பாவமாம். இதனால் ஒளி வலிமை கல்வி முதலியன நாடோறுந் தேய்ந்து குறைந்து மிக்க துன்பமுண்டாகும்" என்று ஆலாஸ்ய மஹாத்மியமும்,

"அண்ணலம் பரமன்றன்னை ஆசாரியன்றன்னை யவமதித்தோர்கள்
எண்ணருங்காலம் பவ்வீயிடைத்துளை கிருமியாவர்"

என்று சிவதருமோத்திரமுங் கூறும்.

குருவையவமதிப்பதால் நேருந் துன்பத்துக்கு உதாரணமாக, தேவராஜசபையில் இந்திரன் மிக்க வைபவத்துடன் வீற்றிருக்கும் போது, தேவகுருவாகிய வியாழபகவான் அச்சபைக்குவர, இந்திரன் (செல்வச்செருக்கினால் மயங்கி) மிக்க அகங்காரத்துடன் குருவைக் கவனியாது மௌனமாக இருந்து அவமதிக்க, உடனே வியாழபகவான் திரும்பிச்சென்றுவிட, அப்பொழுதே சபை பொலிவிழந்தும், இந்திரன் பெற்ற செல்வம், வலிமை முதலியவற்றையுமிழந்தும், பலப்பல துயரனுபவித்தானென்று திருவிளையாடற் புராணங் கூறும்.

இப்படித்துயரடைந்த இந்திரன் பலவகையான இடர்களை யனுபவித்து நொந்து, பின் அக்குருவினருளாற்றானே பிராயச்சித்தஞ் செய்து துயர் நீங்கினன்.

"ஈசனுக் கிழைத்தகுற்றந் தேசிகனெண்ணித்தீர்க்கும்
தேசிகற் கிழைத்தகுற்றங் குரவனேதீர்ப்பதன்றிப்பேசுவதெவனே"
(திருவிளையாடற்புராணம்)

என்றபடி சிவபிரானுக்குச் செய்த பாபத்துக்குரிய பிராயச் சித்தத்தைக் குருவேசெய்து பாபந்தீர்ப்பார். ஆனால் அக்குருவுக்குச் செய்த குற்றத்துக்குரிய பிராயச்சித்தத்தை அக்குருவே மனமுவந்து செய்வதன்றி வேறெவராலும் அப்பாவந்தீராது - ஆகலின் இதை நன்கு புலனுக்கிக் குருவினிடம் மிக்க பக்தி சிரத்தையுடன் நடந்து கொள்ள வேண்டும். குருவேண்டியதில்லை, புஸ்தகங்களில் எல்லாக்கல்விகளும் மந்திரமுறைகளும் இருப்பதால் அவற்றைப்பார்த்து அறிந்து கொள்ளலாமென்பாருமுளர். ஆனால்,

"குருவின் உபதேசம் போதஜனயின்றிப் புஸ்தகத்தில் படித்த வித்தை மந்திரம் முதலியன பிரகாசித்துச் சித்தியாக மாட்டா" என்றும்,

அறிவைம் புலனுடனே நான்றதாகி
நெறியறியாதுற்ற நீராழம் போல
அறிவறிவுள்ளே யழிந்தது போலக்
குறியறிவிப்பான் குருபரனுமே (திருமந்திரம்)

என்றும் ஆன்ரோர் கூறியதை இவர்கள் உய்த்துணரக்கடவர்.

"குரவரைவர் அரசனுபாத் தியாயன் தந்தை தேசிகன்
மூத்தோன்" என்றும்,

"ஐவர்தந்தையர் பிறப்பித்தோன் கற்பித்தோன்
உபதேசஞ் செய்தோன் அன்னந்தந்தோன்
ஆபத்துக்குதவினோனெ மென மொழிப"

என்றும் (பொருட்டொகை நிகண்டிற்) கூறிய பிரமாணப்படி ஐந்து குரவருள் உபாத்தியாயன் தேசிகன் எனக் குரு இரு ஸ்தானத்தையும், தந்தையரைவருள், கற்பித்தோன் உபதேசஞ் செய்தோன் எனக் குரு இரு ஸ்தானத்தையும் பெற்றுச் சிறப்பிக்கப் பெறுகிறார்.

இதுகாறும் கூறியவற்றுல், குருவின் சிறப்பு, வித்யாகுரு, பிரதிஷ்டாகுரு, தீக்ஷாகுரு ஆகியோரின் லக்ஷணம், தீக்ஷையின் வகைகள் குருசேவையின் விசேஷம் முதலியவற்றைக் கண்டோம்.

இத்தகைய குருபரரின் லக்ஷணங்கள் சிறப்புக்கள் யாவும் அச்சுவேலி சிவஶ்ரீ ச. கு. குருபரர் அவர்களிடம் நன்கு அமைந்திருக்கின்றன. எங்ஙனமெனில் அச்சுவேலியில் விநாயகராலய மேலவீதியில் சரஸ்வதி வித்தியாசாலையை நடத்தியும், மருதன்கேணியிலும் சோரன் பற்றிலும் சைவபாடசாலைகளாரம்பித்தும் வித்தியாதானஞ்செய்து வித்தியாகுரு ஆகிறார். இலங்கையிற் பல பாகங்களிலும் அமைந்த பல ஆலயங்களில் பிரதிஷ்டை உற்சவம் விசேஷஸ்நபநம் முதலியன நடத்திப் பிரதிஷ்டாகுரு ஆகிறார். பலமாணவர்கட்குத் தீக்ஷை ஆசார்யாபிஷேகம் மந்திரோபதேசம் முதலியவற்றை நடத்தித் தீக்ஷாகுரு ஆகிறார். இவற்றோடு தீக்ஷைவகையிற் சாஸ்திர தீக்ஷைக்குரிய முறைப்படியே பல குருமாருக்கு ஆகமக்கிரியை முதலியவற்றிலும் மற்றும் பல சாஸ்திரங்களிலும் தேர்ச்சிபெற்று விளங்கத்தக்க ஞானத்தைப் போதித்தும், இவைபற்றிய பல நூல்களை இயற்றியும் விளக்க உரைகள் எழுதி அச்சிடுவித்தும் குரு என்ற பதத்துக்குரிய இலக்கியமாக விளங்குகிறார். ஆகவே குருலக்ஷணம் பற்றி ஆகமங்கள் கூறும் "ஆகமவித்," (ஆகமங்களில் ஞானம் நிறைந்தவர்;) "க்ரியாசுநிபுண;" (கிரியாகலாப வல்லுநர்;) "ஷடகர்ம நிரத: (ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் முதலிய ஆறுகர்மாக்களையும் தவருதியற்றுபவர்) "சைவசித்தாந்த

தத்வஜஞ": (சைவசித்தாந்த தத்துவங்களை நன்குணர்ந்தவர்;) தேவாக் நிகுருபக்திமான்" (தேவர்கள சிவாக்கினி குரு ஆகியோரிற் பக்தி நிறைந்தவர்;) "சர்வாசாரஸமாயுக்த: (சிவாசாரியருக் குரிய சகல ஆசார அநுஷ்டானங்களுடன் கூடியவர்;) "ஸர்வசாஸ்த்ரார்த்த தத்வ ஜஞ: வயாக்யாதா சிவசாஸ்த்ராணும்" (சமஸ்தசாஸ்திரங்களின் பொருளையும் நன்குணர்ந்து போதித்தும் புஸ்தக மாக வெளியிட்டும் மிக்க சிறப்புப் பெற்றவர்) "பதவாக்யப்ரமாணஜ்ஞ:" (பதம் வாக்கியம் பிரமாணங்களை நன்குணர்ந்தவர்) "சிவந்திரைக சித்தாத்மா (சிவாகம சாஸ்திரங்களையே ஆராய்ந்து வெளியிடவேண்டு மென்ற ஒரே சிவாகம சிந்தனை நிறைந்து அதனற் பரிசுத்தமடைந்த ஆத்மாவை உடையவர் என்ற குரு லக்ஷணங்கள் நிறைந்து சிறந்து விளங்குகிறார். தவிரவும், "சாந்தஸ்ஸர்வதயாபர: பரியவச:" என்றபடி சாந்தசீலராயும், நிறைந்த தயவு இரக்கமுடையராயும் இனிய வார்த்தைகள் வசனிப்ப வராயும் விளங்கிவருகிறார்கள்.

தமியேன் வண்ணை நாவலர் வித்யாசாலையில் ஸ்ரீமாந் த. கைலாச பிள்ளை அவர்கள் அதிபராக இருந்தபோது கல்வி கற்றகாலத்தில் இவர்களும் அங்குக் கற்றவர்கள். ஆகலின், அக்காலத்தும் பின்பு என் மாதாமகர் புலோலிவித்துவாமிசர் சிவஸ்ரீ ம. கு. குருமூர்த்திகளிடம் பலமுறை வருங்காலத்தும் இவர்களோடு நன்கு பழகியும், பின்புபல முறைகளிற் சந்தித்தும் நட்புரிமை, அன்பு பூண்டவர்கள். ஆகலின் இவர்களின் கல்வி குணநலன்களை நன்றாக அறிந்துள்ளேன். எந்த நேரம் எவர்கள் சென்றாலும் மிக்க அன்புடன் இனிமையாகப்பேசி மகிழ்விக்கும் சாந்தகுண சீலர் என்பது வெள்ளிடைமலையாம்.

ஐம்பெருங்குரவர் தந்தையரைவர் என்ற பகுதியில் முற்குறித்த படியே வித்தை கற்பிக்கும் உபாத்தியாயராகவும் குருவாகவும் இரண்டு ஸ்தானங்களைப் பெற்று விளங்குவதோடு, முற்காலத்தில் தசரதச் சக்ரவர்த்தியின் அரசவையில் வஸிஷ்டமுனிவர் புரோகிதராக இருந்து விளங்கியதாக இராமாயணம் கூறும்; அதுபோலவே இவர்களும் ஆங்கில அரசியார் இலங்கைக்கு விஜயஞ்செய்து வீற்றிருந்த ராஜ சபையில் சைவசமயக் குருமாரின் பிரதிநிதியாக இருந்து சிறப்புப் பெற்றார்கள்.

இப்படியே சகல குருலக்ஷணமும் நிறைந்து சிவாசாரிய சிரே ஷ்டராக விளங்கும் இவர்கள் அரோகதிடகாத்திரத்துடன் பல்லாண்டு வாழ்ந்து குருத்துவத்திற் பிரகாசித்து நீடுழிவாழ ஆதி நடு அந்தமிலா அருண்ஞான மூர்த்தியாம் பரமசிவனர் திருவருள் புரிய வேண்டுமென அநவரதமும் பிரார்த்திக்கிறேன்.

* * *

ஒ

# மூர்த்தி, தலம், தீர்த்தம்.

கலைப்புலவர் க. நவரத்தினம்.

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

எனத் தாயுமான அடிகள் மூர்த்தி தல தீர்த்த உபாசனையின் பயனை உணர்த் தியுள்ளார்கள். இம் மூன்றும் சமயத்தின் முக்கிய சாதனங்களாகும். இம்மூன்றின் அடிப்படைத் தத்துவத்தை ஒரு சிறிது விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சமய சாதனங்களைப்பற்றி ஆராயமுன் சமயத்தை ஆராய்வது பொருத்தமாகும். சமயம் என்னும் பொருள் மார்க்கம், அல்லது வழி என்னும் கருத்தில் உபயோகிக்கப் படுகின்றது. இறைவனை அல்லது அநுபூதியை அடையும் வழியே மார்க்கம். சமயம் ஒரு முயற்சி, அம்முயற்சியால் அடையும் பயன் சிவாநுபூதி. சமயம் என நாம் கருதும் பொழுது, ஆலயம், மூர்த்தி, தலம், பூசை, விழா ஆகிய யாவும் அதனுடன் தொடர்புபட்டு விளங்குகின்றன. ஆலயத்தோடு தொடர்பு படுத்தி எம்மால் செய்யப்படும் பணிகள்யாவும் சமயமாகவே கருதப் படுகின்றன. எந்நோக்கத்தோடு ஆற்றப்படினும், அவை சமயப்பணி களாகவே கொள்ளப்படும்.

**சமயமும், மாந்திரீகமும்**

சமயம் வேறு மாந்திரீகம் வேறு. சமயம் கடவுளின் திருவருளைப் பெறுவதற்கும் சிவாநுபூதிப் பேற்றை அடைவதற்கும் மாத்திரம் செய்யப்படும் சுயநலமற்ற பணியாகும். மாந்திரீகம், சுயநலத்தின் பொருட்டு இலௌகிக சுகத்தையும், இன்பத்தையும் அடைவதற்குச் செய்யப்படும் முயற்சியாகும். இக்கால 'மக்கள் இயல்' துறை ஆராய்ச் சியாளர் (Anthropologists) மாந்திரீகத்திலிருந்தே சமயந் தோன்றிய தென்பர். மாந்திரீகம் நன்மைக்கத்தோடு நற்பயனை விரும்பிச் செய் வதும், கெட்ட நோக்கத்தோடு பிறர்கேடுவிரும்பிச் செய்வது மென இருவகைத்து.

பொருள், கீர்த்தி, உடல்நலம், உத்தியோக உயர்வு ஆகிய இலௌகிக சுகங்களைப் பெறும் பொருட்டு மக்கள் இடைவிடாது முயற்சிக்கின்றார்கள். தாம் தமது சொந்த முயற்சியால் இவற்றைப் பெற முயல்வதோடு நில்லாது, தம்மிலும் புறம்பாயுள்ள தெய்வத்தினது துணையையும் நாடுவது மனித இயற்கை. நல்ல பயன்களை விரும்பித் தெய்வத்தைநாடுவது மாத்திரமன்றி, பிறருக்குக் கேடுவிளைவிப்பதற்கும் மக்கள் தெய்வத்தை நாடுவதும் வழக்கம். பின்னையது, "பில்லி", "சூனியம்" என்னும் வகையிலடங்கும். தலைமைப்பதவிக்குப் போட்டியிடுவோர், தமது எதிரிகள் தோல்வியடைந்தால், கோயில்களில் அபிஷேகம், ஆராதனைகள் நடத்துவோமெனப் பிரதிக்ஞை செய்வதும், வெற்றியடைந்தபின் குதூகலத்துடன் அக்கிரியைகளை ஆற்றுவிப்பதும் உலகமறிந்த விஷயமன்றே! நாகரிகமும் அறிவுமுடையோர் இத்தகைய செயல்களில் ஈடுபடும் பொழுது, அறியாமையில் மூழ்கியுள்ள மக்கள் "பில்லி", "சூனியம்" முதலிய கிரியைகளை நாடுவதில் வியப்பென்ன? இவ்விரு சாராரது முயற்சிகள் மாந்திரீகத்தின் பாற்பட்டதேயாம். ஆனல் நன்மையை விரும்பி மக்கள் செய்யும், சுயநலப் பற்றுடைய கிரியைகள் இன்றும் என்றும் சமயத் தொடர்புடையனவாகவே கருதப்படுகின்றன.

சைவ நூல்கள் நாம் மேலே கூறியனவற்றை, உண்மைச் சாதனைகள் உபாயச்சாதனைகள் எனப்பிரித்துக் கூறும். உலக இன்பத்தையும், உயர்வையும் நாடிச்செய்யும் வழிபாடு உபாயச் சாதனையாகும். சிவானுபூதியை நாடிச் செய்யும் வழிபாடு உண்மைச் சாதனையாகும். சமய சாதனங்களுள் மிகமுக்கியமானவை, ஆலயங்களும், திருமூர்த்திகளும், அடியார் சேவையுமாம். ஆலயங்களை நாம் முக்கியமாக எதற்காக உபயோகிக்கவேண்டுமென்பது இங்கு ஆராயப்பட வேண்டிய பொருளாகும். தாயுமானவரின் கருத்தின்படி மூர்த்தி, தல, தீர்த்த உபாசனை, ஞானநெறிக்கு மார்க்க மென்பது அறியற்பாலது. சற்குருவின் உபதேசப்பேறே ஆலய வழிபாட்டின் முடிபு. குருவின் உதவியின்றி ஞானநிலை கைகூடாதென்பது சமய நூற்துணிபு. இலௌகிக சுகங்களை நாடி நாள்தோறும் ஆலயத்துக்குச் செல்வோருக்கு ஞானகுருவின் கிருபாகடாட்சம் கிட்டுமெனக் கொள்ளுதல் தென்திசை செல்வோன் இமயத்தை அடைவான் என்னும் பொருத்தமற்ற கூற்றுக்குச் சமமாகும்.

நாம் இதுவரை கூறியனவற்றிலிருந்து, இலௌகிக வாழ்க்கை விருப்புடையோர் ஆலய வழிபாடு இயற்றுதல் பிழையென்பது எமது கருத்தெனக் கொள்ளுதல் தவறு. இலௌகிக விருப்புடையோரின் ஆலய சேவை உண்மைச்சமய சாதனமன்று என்பதே நாம் வற்புறுத்த விரும்

பும் உண்மையாகும். இலௌகிக வாழ்க்கைச் சுகங்களை ஆலயசேவையின் மூலம் பெறவிரும்புவோர், ஆலயங்களின் உண்மை நோக்கத்திற்குப் பங்கம் ஏற்படுத்தாத முறையில் தமது வழிபாட்டை இயற்றிக்கொள்ளுதல் வேண்டுமென்பதையும் நாம் வற்புறுத்த விரும்புகின்றோம். எந்த ஆலயம் ஆத்மீக ஞானவளர்ச்சிக் கேற்ற பண்புகள் அற்றதாக விளங்குகின்றதோ அவ்வாலயம் ஞானவாழ்க்கைக்கு உதவாத நிலையமாகும். எமது நாட்டில் இன்று ஆலயங்கள் பெரும்பாலும் உண்மைச் சமய சாதனைக் குகந்த நிலையங்களாக விளங்கவில்லை யென்பதைப் பலர் அறிவார்கள். இதற்குக் காரணம் இரண்டுள. ஆலய அதிகாரிகள் உண்மைச் சமயப் பற்றில்லாதிருப்பதும், பொருள் வருவாய்க்காக அதைப் பரிபாலிப்பதும் ஒருகாரணம். இரண்டாவது காரணம், ஆலய வழிபாட்டிற்குச் செல்வோரில் பெரும்பகுதியினர் இலௌகிக தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கோடு சென்று வழிபடுவதுடன், இலௌகிக சம்பந்தமான கேளிக்கைகளையும், விழாக்களையும் அங்கு நடத்துவதுமாம். நாட்டில் உண்மைச் சமய அறிவு வளர்ச்சி பெற்றால், ஆலயங்களிலும் அது பிரதிபலிக்கு மென்பதற்கு ஐயமில்லை. இவ்வழியில் கல்லூரிகளும், சமயப் பிரசாரசபைகளும், சைவத்தலைவர்களும் பணியாற்ற முன்வருதல் வேண்டும்.

## மூர்த்தி

ஆலயத்தில் வைக்கப்படும் மூர்த்தியில் மூன்று அம்சங்கள் பொருந்தியுள்ளன. அவை யந்திரம், மந்திரம், திருவடிவம் என்பனவாம். யந்திரத்தில் அமைக்கப்படும் பீஜமந்திரமும், தியானமந்திரங்களும் மூர்த்தியின் காரணசரீரமாகும். ஆசாரியர் மந்திர தியானத்தினாலும், புறக் கிரியைகளினாலும், திருவடிவத்தில் ஆவாகனஞ் செய்யும் வடிவம் மந்திரமூர்த்தியாகும். இதுவே மூர்த்தியின் சூக்கும சரீரம். சிற்பியால் அமைக்கப்பட்ட வடிவமே தூலசரீரமாகும். வழிபடுவோருக்குக் காட்சிப்பொருளாயமைந்துள்ளது திருவடிவம். திருவருட் பிரகாசம் மக்களின் மனத்தில் பொருந்தத் துணைசெய்வது மந்திரவடிவம். யந்திரமாகிய காரணசரீரம் மேலே கூறப்பட்ட தூலசூக்கும மூர்த்திகளுக்கு ஆதாரமாகவுள்ளது. யந்திரத்திலும், சிலாவடிவத்திலும் அமையும் தெய்வசாந்நித்தியம் ஆசாரியரின் சிந்தனாசக்தியின் வலிமையாலும், தியானத்தினாலும், வழிபடுவோரின் ஒரு வழிப்பட்ட பக்தியாலும் ஏற்படுகின்றது. தூயசிந்தனாசக்தியால் அமைக்கும் ஆற்றலை, தீய சிந்தனாசக்திகள் பங்கப் படுத்தலாம். ஆலயங்களில் பிராயச்சித்தங்கள் அமைக்கப்பட்டிருப்பதன் காரணம், ஒழுங்கீனங்களால் பங்கப்படும் சக்தியை, மறுபடி நிலைக்கப்பண்ணுவதற்கேயாம். இக்

காலத்தில் இவற்றின் உண்மைத் தத்துவங்களை விளங்கிக் கொள்ளாது, இவற்றுடன் தொடர்புடைய கிரியைகள் வெறும் புறத்தொழிலாக நிகழ்த்தப்படுகின்றன.

நாம் மேலே கூறிய இலக்கணங்கள் மூலமூர்த்திகளுக்கே உரியன. இடத்தைவிட்டு எக்காலத்திலும் எடுக்கப்படாத திருவடிவங்களே மூல மூர்த்திகள் எனப்படும். விழாக்காலங்களிலும், விசேஷ காலங்களிலும் அலங்காரஞ் செய்யப்பட்டு வீதிகளில் உலா வரும் வடிவங்கள் உற்சவ மூர்த்திகள் எனப்படும். மூல மூர்த்தியிலிருந்து தான் உற்சவமூர்த்திகள் தமது சக்திகளைப் பெறுகின்றன. திருவிழாக் காலங்களில் நிகழும் கிரியை ஒழுங்குகளை நோக்கு வோர்க்கு இவ்வுண்மை புலனாகும். மூல மூர்த்திகளை அசல மூர்த்திகள் என அழைப்பதும் வழக்கம். அசைக்கப்படாத மூர்த்திகள் என்பது இதன் பொருள். மூல மூர்த்திகளை முறைதவறி அசைப்பதும் தீண்டத்தகாதவர் தீண்டுதலும் அதன் மந்திர ரூப நிலைக்குப் பங்கம் விளைக்குஞ் செயல்களாகும். அவ்விதசெயல்கள் நிகழ்ந்தால், பிராயச்சித்தம் முறைப்படி செய்தல் விதி. மூல மூர்த்திகளை பிறர் வரம்பு கடந்து தீண்டுதல் தடுக்கப்பட்டிருப்பதின் காரணங்கள் எவை என்பதை நாம் இது காறும் எடுத்து விளக்கியன வற்றிலிருந்து அநுமானித்துக் கொள்ளலாம். அவற்றை விரித்து விளக்கின் கட்டுரை நீண்டுவிடும்.

ஓர் ஆலயத்தின் முக்கிய பொருள்கள் அங்குவைக்கப்பட்டுள்ள திருவடிவங்களாம். இத்திருவடிவங்கள் எவ்விதம் அமைக்கப்படவேண்டுமென்பதை ஆகமங்கள் கூறும். அவற்றை எவ்விதம் சிற்பிகள் செய்யவேண்டுமென, சிற்பநூல்கள் கூறும். இவ்வடிவங்களைச் செய்யும் சிற்பி எத்தகைய கல்வி, ஒழுக்கம், ஆற்றல், தவம் முதலியன உடையோனுய் இருத்தல் வேண்டுமெனவும் சிற்பநூல்கள் கூறும். உண்மையானதியானயோகம் கைவரப் பெற்ற ஒருசிற்பியே திருவடிவங்களை அமைத்தல் வேண்டும்.

திருவடிவங்கள் கலை வனப்பும், தத்துவப் பண்பும் பொருந்தியனவாக இருத்தல் வேண்டும். கோயில்களிலுள்ள திருவடிவங்கள் கடவுளின் பிரதிரூபங்களல்ல. அவை இறைவனின் அளப்பரிய திவ்விய தெய்வீகத்தன்மைகளை எமக்கு ரூபகப்படுத்திக் காட்டும் வடிவங்களேயாகும். "ஓர் உருவம், ஓர் நாமம், ஒன்றுமில்லார்க்கு ஆயிரந் திருநாமம்பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ," என்றுர் மாணிக்கவாசகரும். அகண்டமாய், அருவுருவாயிருக்கும் பரம் பொருளை, மனத்தினுல் தியானஞ் செய்து, உடம்பினுல் அஞ்சலிசெய்வதற்குத் துணையாகவே, திரு வடிவங்கள் அமைந்துள்ளன. எனவே, அவை அழகும்

வசீகரமும், பார்ப்பவர் உள்ளத்தில் பரவசத்தை ஏற்படுத்த வல்ல பண்பும் பொருந்தியனவாக இருத்தல் வேண்டுமெனச் சொல்லவும் வேண்டுமா? சுக்கிர நீதியில் திருவடிவங்களின் தன்மைகள் பின் வருமாறு கூறப்பட்டுள்ளன :—

> "திருவுருவங்களின் இயல்புணர்ந்தோர், அவ்வுருவங்களின் உறுப்புக்கள் எப்பொழுதும் எங்ஙனம் இருக்கவேண்டுமென்று கூறியிருக்கின்றனரோ, அங்ஙனமே அவ்வுறுப்புக்கள், அவ்வவற்றிற்குக் கூறிய அளவினின்றுங் கூடுதல், குறைதல் இல்லாமல், ஒத்தனவாகவும் அழகு மிக்கனவாகவும் இருத்தல் வேண்டும்.
>
> வழிபடுவோர்க்குத் தியான யோகஞ் சித்தித்தற் பொருட்டுத் தெய்வத் திருவுருவ இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. ஆதலின், அத்திருவுருவங்களை இயற்றுஞ் சிற்பிகள், அத்திருவுருவ இலக்கணங்களைத் தியானிப்பதில் மிகவும் பற்றுடையோராய் இருத்தல் வேண்டும். அத்தியான நெறியால் அன்றிக் காட்சி முதலிய வேறெவ்வழியானும், அத்திருவுருவ இலக்கணங்கள் அமையா. நலமிக்க தெய்வத்திருவுருவங்கள் வழிபடும் மக்கட்குத் துறக்க வின்பம் தருவனவாம். நலமில்லாத அவ்வுருவங்கள் அத்துறக்கவின்பம் பயப்பனவல்லவாம்."

**மூர்த்தியின் மந்திர ரூபம்**

இறைவனின்சிறந்த அருள் நிலைகளைத் திருவடிவங்கள் எமக்கு விளக்கி நிற்பதோடு, அவன் திருவருள் எமக்குச் சுரக்கும் கருவியாகவும் அவை அமைந்துள்ளன. பிரதிஷ்டாமந்திர தியானம், அபிஷேகம் பூசை, வணக்கம், தோத்திரம் முதலிய கிரியைகளால் ஆசாரியர் திருவடிவத்தில் மந்திர மூர்த்தியை ஆவாகனஞ் செய்கின்றார். இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும் அவர் உடம்போடும், மனத்தோடும் வாழும் ஆன்மாக்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும் பொழுது ஒருவடிவத்தின் மூலமே அச்செயல் நிகழுகின்றது. வெறுஞ் சடப் பொருளின் மூலம் திரு அருட்பிரசாதம் எமக்குக் கிடைப்பதில்லை. ஆசாரியரின் சிந்தனை சக்தியால் உருவாக்கப்பட்ட மந்திர மூர்த்தி, திருவடிவத்தில் அமைக்கப்படுகின்றது. அதன் பின் திருவருள் மந்திர வடிவமாக அமைந்துள்ள மூர்த்தியின் மூலம் தொழிற்படுகின்றது.

> "கல், வெள்ளி, செம்புகளிலே, பதியினது விளக்கம்,
> மந்திர நியாசத்தின் பின்னன்றி, முன்னில்லை"

என விளக்கியுள்ளார் நாவலர் அவர்கள்.

மந்திரமூர்த்தி தூய்மையான, சாத்வீகசிந்தனை சக்தியால் ஏற்படுத்தப்படும் பொருள். நினைவுக்கு உருவம் உண்டு என்பது இக்கால விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகளிலொன்று. சிந்தனைசக்தியால் சடத்தில் மாறுதல்கள் ஏற்படலாம். அவ்வித ஆராய்ச்சிகள் மேல்நாட்டில் நிகழ்ந்திருக்கின்றன. "By thoughts I can definitely make an object heavier or higher than it is, as I wish, and I have demonstrated this on many occasions to scientists and also to public medical audiences, including the British Medical Association." "சிந்தனையினால் ஒருபொருளின் கனத்தைக் குறைக்கவும் கூட்டவும் முடியும். இதை விஞ்ஞானிகள் முன்பும் வைத்தியர்களடங்கிய சபைகளிலும், ஆங்கிலேய வைத்திய சங்கத்திலும் நிரூபித்துக் காட்டியுள்ளேன்." பொருள்களில் பதிந்துள்ள சிந்தனைசக்திகளை அறியும் ஆற்றல் ஆங்கிலத்தில் "Psychometry" எனப்படும். அவ்வாற்றலுடையோரை "Psychometrist" எனக் கூறுவார்கள். நினைவுக்சக்திகள் சடப் பொருள்களில் பதியுந்தன்மையுடையன. தூய சிந்தனைகள் நிறைந்துள்ள இடங்களிற் தியானஞ் செய்தல் சுலபமென்பதை அவ்வழியில் முயன்றோர் நன்கறிவர். இக்காரணம் பற்றியே கெட்டவாழ்க்கையும் கெட்டசிந்தனைகளுமுடையோர் ஆலயங்களுட்செல்லக்கூடாதெனவும், அப்படிச் செல்லுங்காலங்களில் அதற்கெனவகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை அனுசரித்துச் செல்லுதல் வேண்டுமெனவும் நூல்கள் வற்புறுத்துகின்றன. திருவிழாக்கள் நடைபெற்று முடிந்தவுடன் பிராயச்சித்தஞ் செய்யும் நோக்கமும் இதுவேயாம். ஆலயத்தில் திருவிழாக்களால் ஏற்பட்ட கெட்டதன்மைகளை மாற்றி புனிதநிலை மேவச் செய்வதே பிராயச் சித்தத்தின் நோக்கம்.

மந்திர மூர்த்தியை உருவத்தில் ஆவாகனஞ் செய்யப்பட்டபின், அது எப்பொழுதும் அங்கு நிலைத்து நிற்கும் வண்ணம்தான், நித்திய பூசை தவருது இயற்றப்படும். வழிபாட்டிற்குச் செல்வோர், திருவடிவத்தில் மந்திரமயமாக நிறைந்துள்ள மூர்த்தியைக் கலைத்துவிடாதமுறையில் நடந்து கொள்ளுதல் வேண்டும். ஆலயத்தில் ஏற்றப்படும் தீபங்களின் பிரகாசம், உபயோகிக்கப்படும் இசையின் தன்மை, உச்சரிக்கப்படும் மந்திரங்களின் ஓசை முதலியன விதிப்படி அமைய வேண்டுமென்பதின் காரணம், இவற்றின் பிழையான அசைவுகளால் (Vibrations) மந்திரமூர்த்தியிலும் ஆலயத்தின் சாந்தநிலையிலும் பங்கம் ஏற்படும் என்பதேயாம். சூரிய வெளிச்சம் எங்கும் நிறைந்திருந்தாலும் துலக்கப்பட்ட பொருளில்தான் சிறப்பாகப் பிரதிபலிக்கின்றது. அது போலவே, திருவருள் எங்கும் நிறைந்திருந்தாலும், சாத்வீகமும், தூய்மையுமுள்ள பொருள்களிலும், இடத்திலுந்தான் அதன் பிரகா

சத்தை மனிதன் அனுபவிக்கக்கூடியதாக விருக்கின்றது. ஆலயங்களில் நிகழ்த்தப்படும் கிரியைகள் யாவும், திருவருட்பிரகாசம் ஏற்படுவதற் குகந்தனவாகவே அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை விதிப்படி செய் தாலொழிய, அந்நிலை ஆலயத்திலேற்படாது. ஆலயங்களில் அதிகப் பிரகாசம் பொருந்திய மின்சார விளக்குகளை வைப்பதும், ஒலிபெருக்கி களைவைத்துச் சினிமாப் பாட்டுக்களைப் போடுவதும், பூசை நேரங்க ளில் பொருத்தமற்ற இராகங்களில் இசைக் கருவிகளை வாசிப்பதும், மந்திர மூர்த்திக்கும் வழிபடுவோரின் மனேலயத்திற்கும் இன்னல் விளை விக்குஞ் செயல்களாகும்.

**தலமும், தீர்த்தமும்.**

தலம், சேத்திரம், இடம் என்பன ஒருபொருட் சொற்கள். ஆலயமிருக்குமிடம் அல்லது ஊர் தலமெனப்படும். பண்டைத்தமிழர், இயற்கை வனப்பும், அமைதியும், தூய்மையும் நிறைந்த சூழலிற்றான் தெய்வவழிபாட்டை நிகழ்த்திவந்தனர். நறுமணம் வீசுஞ்சோலைகளின் மத்தியிலும், மலை உச்சியிலும், வசீகரமான தென்றல் வீசும் ஆற்றங் கரையோரத்திலும், ஞானிகள் வசித்த அல்லது அவர்களது உடல்களைப் புதைத்த இடங்களிலும் கோயில்கள் கட்டி இறைவனை வணங்கினர்கள், பண்டைத் தமிழர்கள். தலயாத்திரை இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள சமய சாதனங்களிலொன்று. அடியார்களின் பார்வையையும், அன் பையும் பெற்றமூர்த்திகளுக்கு விசேஷசக்தி உண்டென்பது சைவசமயக் கோட்பாடுகளிலொன்று. இக்காரணத்தினாற்றான் தேவார திருவாசகப் பாடல்கள் பெற்ற ஆலயங்கள் விசேஷ புண்ணியப்பதிகளாகக் கருதப் படுகின்றன. புண்ணிய சேத்திரங்கள் மனேலயத்தையும், சாந்தியை யும், பக்தியையும் வளர்க்கும் இடங்களாக இன்றும் விளங்குகின்றன. புண்ணியத்தலங்களின் புனிதத்தன்மை பங்கப்படாத முறையில் அவற்றைப்பாதுகாப்பது சிறந்த சமயத் தொண்டாகும்.

தீர்த்தங்களும், தலங்களைப் போன்ற பெருமைவாய்ந்தனவேயாம். ஒன்றுக்கொன்று ஆதாரமாக அமைந்துள்ளன. தீர்த்தத்தினால் உடற் தூய்மையும், தவத்தினால்மனத்தூய்மையும், மூர்த்தியால் அருட்பேறும் ஒருபக்தன் பெறுவான் என்பது சைவசமய நூற்கருத்தாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கேயமைந்த சேத்திரங்கள் ஆத்மீக சாதனைக்கு மிகப்பொருத்தமான இடங்களாகும்.

நாம் இது காறும் கூறியனவற்றால் அறியப்படுவனயாவையெனில்:

1. சமயம் சிவானுபூதிக்கு மார்க்கமேயன்றி வேறல்ல வென்பதும்;
2. ஆலயங்களின் முக்கிய நோக்கம் உண்மைச் சமய வாழ்க் கைக்குச் சாதனமாக அமைதலே என்பதும்;

3. இலௌகிக வாழ்க்கையின் அபிவிருத்தியை விரும்பி, ஆலயத்துக்குச் செல்வோர் உண்மைச் சமய நெறிக்கு இன்னல் விளைவிக்கும் முறையில் தங்கள் வழிபாட்டை நிகழ்த்தக் கூடாதென்பதும்;

4. திருவடிவங்கள் ஆகமப்பிரமாணங்களுக்கமையவே செய்யப் படவேண்டுமென்பதும்;

5. அவற்றைச் செய்வோர் தியானயோகம் கைவரப்பெற்றோராய் விளங்கவேண்டு மென்பதும்;

6. அழகற்றவிகார வடிவங்களை ஆலயங்களில் வைத்து வழிபடுதல் தியான மார்க்கத்திற்கு இன்னல் பயக்கும் செயல் என்பதும்;

7. திருவடிவத்தில் மந்திர மூர்த்தியை ஆவாகனஞ் செய்ய முன் வரும் ஆசாரியர், தியானயோகப் பண்புடையோராய் தூய சிந்தனைசக்தி நிரம்பியவராக விருத்தல் வேண்டும் என்பதும்;

8. ஆலயவழிபாட்டிற்குச் செல்வோர் மந்திரரூபியாக விளங்கும் மூர்த்திக்குப்பங்கம் ஏற்படாதமுறையில் தம்மை அமைத்துக் கொள்ளுதல் வேண்டுமென்பதும்;

9. ஆலயத்தில் நடக்கும் கிரியைகளும், விழாக்களும், உபயோகிக்கப்படும் தீபங்களும், மனோலயத்தைக் கெடாத விதத்தில் அமைதல் வேண்டும் என்பதும்;

10. ஆலயமானது ஆத்மீகப்பண்பின் வளர்ச்சிக்காகவே பரிபாலிக்கப்படவேண்டுமென்பதுவுமேயாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள், ஆலயங்கள் எவ்விதம் நடாத்தப்பவேண்டுமெனப் பல கட்டுரைகள் மூலம் விளக்கியுள்ளார்கள். அவர்களது பிரபந்தத்திரட்டில் அவற்றையெல்லாங் காணலாம். நாவலர் அவர்களது சிறந்த அறிவுரை யொன்றை இங்கு வரைந்து இக்கட்டுரையை முடிப்பாம்.

"சைவசமயிகளே! நீங்கள் தேவவழிபாட்டில் யதார்த்தமாகவே விருப்பம் உடையீர்களாயின், உங்கள் உங்களால் இயலும் பொருள் கொண்டு உங்கள் உங்கள் ஊரிலுள்ள ஆலயத்தை இயன்றமட்டுஞ் சிவாகமப்பிரகாரந்திருத்தி நல்லொழுக்கமும், ஈசுரபக்தியும் வளர்த்தற்கேற்ற சைவப்பிரசங்கமுந் தேவார திருவாசக பாராயணமும் ஏற்படுத்தி, அங்கங்கே வழிபட்டு அன்பு செய்து உய்யக் கடவீர்களாக."

சிவமயம்

# அந்தணர் செம்மல் காட்டும் அண்ணாமலை

## திரு. பொ. கிருஷ்ணபிள்ளை

அழலோம்புதல் அந்தணர் தம் அறம். அவர்களை முத்திச் செல்வர் களென்று அருள் நூல்கள் இயம்பும். பொருளை அவர்கள் பெரிதாகப் பேணுது கற்றுங்கு எரியோம்பலால் கலியை ஓட்டுவர். அதனால் ஊர் செழிக்க உலகோர் இன்புறுவர். இங்ஙனம் உலகுய்ய அவர் வேள்வித் தீ காரணமாயிருத்தலால், அத்தீயே செல்வமாகி அவர்களும் செல்வரா கின்றனர்.

தீச்செல்வரென்னும்போது இன்றைய உலகவர் கருஞ் சுருட்டுப் பிடிக்கும் கிழவரையும் வெண் சுருட்டுப் புகைக்கும் இளைஞரையுமே அவர் வாயிலே தோன்றும் தீப்பொறி காரணமாகக் குறிப்பிடுவர். யாகத்தீ வளர்ப்பாரில்லாத உலகில் தீத்தொழிலும் தீச் செல்வமும் முறையே தீயகருமங்களில் ஈடுபடுவார் தொழிலையும் தீயவழியால் ஈட் டியோர் செல்வத்தையுமே குறிப்பிடுதல் இயல்பே. தீயோம்பி, கலியை ஓட்டி உலகின் ஒப்பிலாச் செல்வத்திற்குக் காரணமான நல்ல அந் தணரை நாம் இன்று காண்டல் அரிதாகையினாலே தீச்செல்வம் என் பதற்குப் பொருள் காண்டலும் இன்று இயலாததாயிருக்கின்றது.

### குருக்கள்பெருமை

இக்கால நிலைக்குப் புறனடை விதியாக அமைந்தவர்கள் சிவச் செல்வர் குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள். கும்பாபிஷேகம் முதலிய நற்கருமங்களினால் வரும் பொருளினையும் அவர்கள் தாம் கண்ட சைவக்கல்லூரிக்கும், சைவநூற் பிரசுரத்திற்குமே அர்ப்பணித்து விடு கின்றார்கள். அந்தண தருமத்தை நன்றே கடைப்பிடித்துத் தமது முதிர்ந்த வயதிலும் இளைஞருக்குரிய முகச் சோபையுடனும் சிறந்த மனச் சாந்தியுடனும் வாழுகின்றார். காசினை அவர் தூசென மதிக்க எல்லாச் செல்வமும் அவரைத் தாமாகவந்தடைகின்றன. அவர் செய்யும் அக்கினி கருமங்களும் காயத்திரி மந்திர செபமும் அவர் காயத்தைப் பொன்னுக்கி மனத்தையுமே அன்னதாக்கி விட்டன. அவர்கள் இலங் கையிலே சைவ உலகின் செல்வமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றமை சைவர் செய்த புண்ணியப் பலனென்றே யாவரும் கூறுவர். அழலோம் பும் அந்தணர் அழல் வண்ணனையே அகத்தும் புறத்தும் கண்டு அவன் அருள் ஒளியிலே வாழுகின்றார்கள்.

ஞானசம்பந்தராம் அந்தணக் குழந்தை அருள்வளர் அண்ணாமலைப் பிரானை ஒளிப் பிழம்பாகக் காட்டித் தாமவதரித்த காழிப்பதியின் சிறப்பையும் பாட்டோவியமாகத் தீட்டுதலை நம் அந்தணைச் செல்வக் குமாரசுவாமிக் குருக்கள் செய்துள்ள சைவத் தொண்டுகளுக்காக அன்னாரைப் பாராட்டும் விழாப்போது கண்டும் கேட்டும் பயனுறுதல் பொருத்தமானதாகும்.

**அனல் வடிவன்**

அண்ணாமலையானை நினைக்கும் போதே ஆண்டவனுடைய அழற்பிழம்பாம் ஞானத்திருமேனி நமக்குத் தோற்றமளிக்கிறது. பிரமவிஷ்ணுக்கள் அடிமுடி காணவொண்ணா இந்த அனற்றிரு வடிவம் எம்பாவங்களைப் பொசுக்கி நல்லோர்க்கெல்லாம் நலந்தரும் நல்ல ஒளி வழியைக் காட்டுகின்றது. அனல் வடிவனை அனலோம்பும் குலத்துதித்த சைவநற்கொழுந்தாம் ஞானசம்பந்தப்பிள்ளை அழகுறக் காட்டுகின்றார். எல்லா ஒளிகளுக்கும் இருப்பிடமான பெரும் பேரொளியாம் சிவம் அனல்வடிவாக நின்ற அண்ணாமலையை உலக ஒளிப்பொருள்களிலே தலைசிறந்த கதிரவன் அணுகக் கூசுகின்றான். முன்னொருகால் தன் முகத்திற்கு ஒளிதரும் பல்லைப் பறித்த அனல் வடிவினனது மலையைக் கண்டதும் அவன் கூசி வழி விலகி அத்திக்கிலும் தன் சிற்றொளிக் கிரணங்களை வெளிவிடாது சாய்த்து விடும் தன்மையினாலே மலைப் பெருமானுக்குத் தன் தாழ்மையான வணக்கத்தைத் தெரிவிக்கின்றான்.

"வானுழை வாளம் பலத்தரன் குன்றென்று வெட்கிவெய்யோன் தானுழையா....." என்ற மணிவாசகப் பெருமான் அருள் மணிவாக்கை நம் மனத்திடை உதிப்பிக்கும் பான்மையில் ஞானசம்பந்தக் குழந்தை "வெம்புந்திய கதிரோன் ஒளி விலகும் விரிசாரல்" என்று அண்ணாமலையை நமக்குக் காட்டியருளுகின்றார். எங்கும் நிறைந்து செல்லும் கதிரோனே அனல்மலையின் முன் தன் ஒளியைச் சுருக்கி இறைவனிடம் ஒளிச் செல்வத்தை வேண்டி நிற்றலை இவ்வடி காட்டுகின்றது. எங்கும் தன் வெப்பத்தைச் செலுத்துதலையே இயல்பாக உடைய கதிரவன் காணக்கூசும் இம்மலைச் சாரலை "கதிரோன் ஒளி விலகும் விரிசாரல்" என்கின்றார் பிள்ளையார். எத்துணை ஒளிவரினும் அவ்வொளியை எல்லாம் தன் பேரொளிக் கண்ணடக்கும் எம்பெருமான் உறையும் சாரல் "விரிசாரல்" ஆகக் காட்சி தருகிறது. இது விரிசாரல் எனவே இதன் முன் ஏனைய ஒளிகளெல்லாம் ஒல்கி ஒசிந்து ஓடும் என்பது தானாகவே புலப்படுகின்றது. இந்த விரி ஒளியோன் முன் சுருங்காத ஒளியும் உளதாமோ?

மூவெயிலெய்தவன்

சிவன்திரு முன்னிலையில் ஒடுங்காது தலை நீட்டினர் முப்புரத் தசுரர். அவரது ஒளி விஞ்சிய முப்புரங்களும் அவன் திருவொளியின் முன்னன்றி அவன் பற்றிய அம்பின் முன்னரே நிற்க வழியிலாது சாய்ந்தொடுங்கிச் சாம்பராயினமையைச் சம்பந்தப்பெருமான் "அம் புந்தி மூவெயிலெய்தவன்" என்ற தொடர்களால் சுலபமாக்கிக் காட்டு கின்ருர். பெருந்தவமும் பேராற்றலும் வாய்ந்த இம்முப்புரத்தாரையும் வரம்பில் பேராற்றலுடையான் ஒடுக்குவது அவனுக்கு ஒரு கருமமன்று, ஒரு திருவிளையாடலேயாகும் எனக் குறிக்க மூவெயிலெய்தவன் என்ற அளவிலேயே சுவாமிகள் நமக்கு உணர்த்தி விடுகின்ருர். அத்தகையவன் வேறு எந்தத் திருக்கோயிலிலும் தன்வடிவத்தைச் சுருக்கி இருத்தல் போலன்றி இங்கு நீண்டு நிமிர்ந்து தன் சுவரூபத்தோடு தானே தானுய் நிற்றலால் அங்ஙனம் நிற்கும் அழிவிலாத் திருக்கோலத்தவனை அண்ணு மலையான் என்று அழகுறப் பெயரும் காட்டிச் சுட்டுகிருர். படைத்தல், காத்தற்ருெழில் செய்யும் இருவரும் அணுகுதற்கரிய மலையை, அண்ணு - அணுகமுடியுமா — மலையென்னுது வேறெங்ஙனம் கூறமுடியும்? உலகில் ஒருவனுக்கு மிக அண்மையில் உள்ளவன் அவன் மூத்த சகோதரனே. ஆகலின் அன்னவனை இவன் மிக அண்மையில் உள்ளவன் என்றே யாவரும் கூறுவர். மணிவாசகப் பிரானும் சுந்தரமூர்த்தி அடிகளாரும் எட்டாப் பரனை அண்ணு என்றே திருப்பாடல்களில் எழுதி இயம்பு கின்றனர்.

"அண்ணு மலையெம் அண்ணு போற்றி
கண்ணு ரமுதக் கடலே போற்றி" (போற்றித்திருவகவல்)

என்ற மணிவாசகர் திருவாக்கு எத்துணைப் பொருள் பொதிந்தது! எவரும் அணுகமுடியா மலையில் இருக்கின்ற அவனே நம்மை இலகுவில் அணுகும் அண்ணுவாய் ஆகமப் பொருளாய் இருக்கின்ருன். கண்ணுற் பார்க்க முடியாத அக்கினிப் பிழம்பான அண்ணுமலையான் கண்ணிற்கு அதிசுவையும் இதமும் தரும் இயல்பு நோக்கியே அடிகளார் கண்ணு ரமுதக் கடலே என்ருர். செருக்குடையாருக்கு அவன் அணுகுதற்கரி யன். ஆயின் அஃதொழிந்து குறைந்து நின்று தொழுமடியாருக்குப் பேரிடர் வருங்காலெல்லாம் அண்ணனைப் போல் அசையாது நின்று தவுதலால் இறைவனை அண்ணுமலை யான் என்று கூறும் உளமும் வாயும் அமிழ்துண்ட உணர்ச்சியை எய்துகின்றன. ஆகவே,

"வெம்புந்திய கதிரோன் ஒளி விலகும் விரிசாரல்
அம்புந்தி மூவெயிலெய்தவன் அண்ணு மலை அதனை"

ளின் முதலீரடிகளாலும் பிள்ளையார் அண்ணு மலையைச் சிறப்பித்தார். அண்ணுமலையானிடம் நம்மை அணுக அழைத்துச் சென்ற குழந்தைப் பிரான் அவனைக் கும்பிட்டுப் பயன் பெற்ற தாம் பிறந்தருளிய பெருமையையும் அமிழ்தூற நவிலுகின்ருர்.

**பொழில்காழி**

ஓர் ஊருக்குச் சிறப்பு நல்குவது அதன் வளமிகுதி. வளத்தின் கொழுமையை வெளியாக எவரும் விழைதரும் முறையில் காட்டுவன பொழில்களே. பொழிலின் வளத்தை தூரத்தில்இருப்பார்க்கும் எடுத் தொலித்து தம்பாடல் மூலம் காட்டுவன குயிலினங்களே. பொழிலும் குயிலும் சேர்ந்த இடம் மக்கள் நல்வாழ்வுக்கு உகந்த வளம் வாய்ந்த செழுநிலப் பரப்பாகும். பொழிலில் உள்ள தளிர்களும் தீங்கனிகளும் குயிலினங்கள் கோதவும் உண்ணவும் வாய்ப்பளிக்கின்றன. சீகாழிப் பதியில் குயிலினங்கள் உண்டவுடன் பறந்து அயற்புலம் பெயர்ந்து செல்லாது என்றும் உறைவனவாயிருத்தலை "கொம்புந்துவ குயிலா லுவ குளிர்காழி" என்ற அடியால் சம்பந்த சுவாமிகள் நமக்குப் புலப்படுத்துகின்ருர். குடிஎழுபறியாப்புலம் என்று புலவர் எல்லாம் நேரே இடத்தின் செழுமையைச் சொல்ல நம் சுவாமிகளோ குயிலெழு பறியாப் பொழில் காழி என்று அஃறிணை வருக்கமுமே விட்டகலா எனக் கூறு முறையால் மாந்தரே விட்டு இடம் பெயரா அத்தவத் தலத்தின் சிறப்பைக் குறிப்புற உணர்த்தும் பெற்றியை அறிந்தின்புறு வோமாக. கோதிப்பழமுண்டு குயில் துயில்புரிய அவாவுகிறது. கொம் பரின் மிசை பள்ளி கொள்ள தென்றல் கொம்பரினை அசைக்க குயில் கள் ஊசலாடும் கவலையற்ற சிறுர்போல வதியும் காழி நாட்டுச் சிறப்பை அழகு மீதூர, செம்பவழ வாய்ப் பிள்ளையார்

"கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன் தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே"

என விருப்புடன் துள்ளி எழும் சொற்களாற் பாடுகின்ருர். தாம் பிறந்த பதியையும் அண்ணுமலையான் நீண்டு நிமிர்ந்து ஞானவடிவாய் ஒளிதரும் அண்ணுமலையையும் ஒரேதொடர்பில் இயம்பும் பிள்ளையார் அருள் வாக்கின் முழுமையையும் நுகர்ந்து நாமும் நற்றவப்பயன் எய்துவோமாக.

"வெம்புந்திய கதிரோன் ஒளி விலகும் விரிசாரல்
அம்புந்திமு வெயிலெய்தவன் அண்ணுமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன் தமிழ்வல்லவர் அடிபேணுதல் தவமே"

*

சிவமயம்

# இந்திய தத்துவ ஞானத்தின் சிறப்பியல்புகள்

திரு கி. லக்ஷ்மணஐயர், எம். ஏ.

கீழைத் தேசத்தவராகிய நமக்குத் தத்துவஞானம் பரம்பரைச் சொத்து. இந்த ஒன்றுதான் நம் முன்னோர் தேடிவைத்த செல்வம். இதைத் தவிர வேறு எதையும் அவர்கள் நமக்காக வைத்துவிட்டுச் செல்லவில்லை என்றுகூடச் சொல்லலாம். எனவே நமக்குரிய ஒரே யொரு செல்வமாகிய இதனது இயல்புகளைப் பற்றி நாம் அனைவரும் ஓரளவாவது அறிந்திருப்பது அவசியம்.

தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மை என்பது பொருள். எனவே தத்துவஞானம் என்பது உண்மையை அறிவது எனப் பொருள்படும். உண்மை என்பதற்கு உள்ளது, அதாவது என்றும் உள்ளது என்பதே கருத்து. நம் உடல் உட்பட நாம் காணும் பொருள்கள் யாவும் என்றும் உள்ளவை அல்ல. என்றுமே உள்ள பொருள் ஏதாவது உண்டா? உண்டாயின் அது எது? அதன் இயல்புகள் எவை? என்பன போன்றவற்றை ஆராய்வதே தத்துவஞானம் எனக் கூறலாம்.

1. இந்திய தத்துவத்தின் சிறப்பியல்புகளை உணர்த்துவதற்கு அதனை மேல்நாட்டுத் தத்துவஞானத்தோடு ஒப்பிடுவது சுலபமான வழி. மேல் நாட்டிலே தத்துவ ஆராய்ச்சி குறிப்பிட்ட ஒரு காலத்தில் குறிப்பிட்ட ஒருவரால் தொடங்கப்பட்டது. இந்திய தத்துவஞானம் அத்தகையதன்று. அது இன்ன காலத்தில் இன்னாரால் தொடங்கப் பட்டதென்று சொல்ல முடியாத அளவு பழமை வாய்ந்தது. அதன் தொடக்கம் சரித்திர காலத்துக்கு எவ்வளவோ முற்பட்டது.

2. மேல் நாட்டினர் இத்துறையிலே இன்னும் ஒரு முடிவுக்கு வந்த பாடில்லை. ஒருவர் கொண்ட கருத்துக்களை அவருக்குப் பின் வருபவர் மறுப்பர். அல்லது அக்கருத்துக்களைத் தழுவி மேலும் தொடர்ந்து சிந்தித்து மேலும் பல முடிவுகளை எழுதி வைத்து விட்டுச் செல்வர். அவருக்குப் பின் வருபவரும் தமக்கு முன் சென்றவரின் கருத்துக்களை மறுத்தோ தழுவியோ மேலும் சில கருத்துக்களை வெளியிட்டுச் செல்வர். இத்தகைய ஒரு நிலையிலேதான் மேல் நாட்டுத் தத்துவஞானம் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. இந்திய தத்துவஞானத்தின் நிலை இதைப் போன்றதன்று. இங்கே ஆராய்ச்சி என்றைக்கோ முடிந்து முடிவு களும் அறுதியாக வெளியிடப்பட்டு விட்டன. பின் வந்த ஞானிகளின் ஆராய்ச்சிகள் யாவும் அம்முடிவுகளைச் சரியாக விளங்கிக் கொள்வதன் பொருட்டே மேற் கொள்ளப்பட்டன.

3. மேல் நாட்டிலே முதன் முதல் புறவுலகத்தைப் பற்றியே தத்துவ ஆராய்ச்சி தொடங்கியது. அப்புறவுலக ஆராய்ச்சியிலேயே தத்துவ ஞானிகள் நீண்ட காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தனர். ஆனால் இந்திய தத்துவ ஞானத்துக்கு முக்கியம் புறவுலகமன்று. ஆன்மாதான் இங்கு முக்கியம். ஆன்மாவைப் பற்றிய ஆராய்ச்சியில் தொடங்கி அதற்கு அனுசரணையாகவே இவர்கள் புறவுலக ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

4. மேல்நாட்டவர் பெரும்பாலும் வேடிக்கையாகவும் பொழுது போக்காகவுமே தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடத் தொடங்கினர். அவர்கள் புறவுலக ஆராய்ச்சியில் அதிகக் காலம் கழித்தமைக்கு இது ஒரு காரணமெனலாம். இந்திய ஞானிகள் தத்துவ ஆராய்ச்சியைப் பொழுது போக்காகத் தொடங்கவில்லை. மனிதன் படும் அல்லலும், மனிதர்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுமே இந்திய ஞானிகளை இவ்வாராய்ச்சியில் ஈடுபடச்செய்தன. ஆன்மாக்கள் அனுபவிக்கும் துன்பத்தைக் கண்டு அதன் காரணத்தை அறிந்து அத்துன்பத்தைப்போக்க வழிகாணும் நோக்கத்தோடு எழுந்தது இந்திய தத்துவ ஞானம். மேல்நாட்டிலே தத்துவ விசாரம் ஒரு பொழுது போக்கு. இந்திய தேசத்திலே அது உணவையும் உடையையும் தேடும் விசாரத்தைவிட மிக அடிப்படையான விசாரம்.

5. நோக்கத்திலே இரு தேசத்துக்கும் இடையிலுள்ள இவ்வேற்றுமைகளின் விளைவு மிகப் பாரதூரமானது மேல் நாட்டிலே தத்துவ ஞானக் கொள்கைகளுக்கும் மக்களது வாழ்க்கைக்கும் அதிகத் தொடர்பு கிடையாது. அங்கே தத்துவ விசாரம் சிந்தனையோடு மட்டும் நின்றுவிடும். பாரத தேசத்திலோ தத்துவஞானமும் வாழ்க்கையும் ஒன்று என்று கருதுமளவுக்கு அவை இரண்டும் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றன. பாரததேசத்தில் சமயம் வேறு, தத்துவஞானம் வேறு என்றில்லாமல் இரண்டும் பிணைந்து கிடப்பதும் இதனாலேதான். பேராசிரியர் ஹிரியண்ணா கூறுவதுபோல் இந்திய தத்துவஞானம் சரியாகச் சிந்திப்பதற்கு மட்டுமன்றி முறையாக வாழ்வதற்கும் வழிகாட்டுகின்றது. கொள்கையளவில் மட்டுமே நில்லாது வாழ்க்கையோடு ஒன்றுகக் கலந்து நிற்பதே இந்திய தத்துவ ஞானத்தின் முக்கியமான சிறப்பியல்பு.

6. இந்திய தத்துவ ஞானிகள் தத்துவ ஆராய்ச்சியில் மட்டுமன்றி அவ்வாராய்ச்சிக்குத் துணையான சாதனங்களை ஆராய்வதிலும் பெரிதும் ஈடுபட்டனர். இங்கே சாதனங்கள் எனக் குறிப்பிடுவன அறிவைப் பெறும் வழிகள். இவைகளை இந்திய தத்துவ ஞானிகள் பிரமாணங்கள் என்பர். அறிவைப் பெற நம் கண் காது போன்ற

பொறிகள் எவ்வளவு தூரம் பயன்படும்? நம் அறிவு எவ்வளவு தூரம் பயன்படும் ? நம்முன்னோர்கள் கண்ட முடிவுகளைக் கூறும் நூல்கள் எவ்வளவு தூரம் பயன்படும்? என்பன போன்றவற்றையும் மிக ஆழமாக ஆராய்ந்தார்கள். பொறிகள், நூல்கள் ஆகிய இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரமாணம் எனப்படும். இப்பிரமாண ஆராய்ச்சியில் இந்திய தத்துவ ஞானிகள் ஈடுபட்ட அளவு மேல் நாட்டுத் தத்துவ ஞானிகள் ஈடுபட்டுள்ளனர் எனக் கொள்ளமுடியாது. ஆகவே இதனையும் இந்திய தத்துவ ஞானத்தின் சிறப்பியல்களுள் ஒன்றுகக் கருதலாம்.

இந்திய தத்துவஞான முடிவுகள் என்றைக்கோ வெளியிடப்பட்டு விட்டன என மேலே குறிப்பிட்டோம். அவைகள் வெளியிடப்பட்டிருப்பதும் வேதம், உபநிடதம், ஆகமம் எனப்படும் மிகப்பழைய வடமொழி நூல்களிலேயாகும். இவைகளே இந்திய தத்துவ ஞானத்துக்கு ஆதார இலக்கியங்கள். இவை யாரால் எக்காலத்தில் ஆக்கப்பட்டவை என்று கூறமுடியாத அளவு பழையவை. வேதங்கள் மனிதனல் ஆக்கப்பட்டவை அல்ல என்ற கருத்தில் அவற்றை அபௌருஷேயம் என்ற சொல்லால் குறிப்பிடுவதும் உண்டு.

இந்த வேத உபநிடதங்களில் கூறப்பட்டவற்றுக்கு விளக்கம் கூறுவதில் ஏற்பட்ட வேறுபாடுகளால் பிற்காலத்தில் பல பிரிவுகள் தோன்றின. இந்திய தத்துவ ஞானிகள் அனைவரையும் இரு பெரும் பிரிவினராகப் பிரிப்பது வழக்கம். ஒரு பிரிவினர் வேத உபநிடதங்களில் கூறப்பட்டவற்றைச் சரியென ஒப்புக்கொள்வோர். மற்றப்பிரிவினர் அவற்றைச் சரியென ஒப்புக் கொள்ளாதோர். வேதத்தை ஒப்புக் கொள்வோரை வைதிகர் என்ற சொல்லாலும் ஒப்புக் கொள்ளாதோரை அவைதிகர் என்ற சொல்லாலும் குறிப்பிடும் மரபும் உண்டு. உலகாயதர், சமணர், பௌத்தர் ஆகிய மூவருமே அவைதிகர் எனப்படும் பிரிவைச் சேர்ந்தவர். வைதிகருள் சாங்கியர், யோகமதத்தினர், நையாயிகர், மீமாம்சர், வேதாந்திகள், சித்தாந்திகள் எனப் பல உட்பிரிவினர் இடம் பெறுவர். வேதத்தை ஆதரித்தமையால் எழுந்தவை சில பிரிவுகள்; அவற்றை எதிர்த்தமையால் எழுந்தவை சில பிரிவுகள். எனவே ஒரு விதத்தில் இந்திய தத்துவஞானத்துட் காணப்படும் எல்லா உட்பிரிவுகளுக்கும் வேதந்தான் மூலகாரணம் எனக் கொள்ளலாம்.

இங்கு முக்கியமான கருத்தொன்றைக் குறிப்பிடுவது அவசியம். இந்திய தத்துவஞான உட்பிரிவுகள் பெரும்பாலும் வேத உபநிடத வாக்குகளையே ஆதாரமாகக் கொண்டவை எனக் கூறும்போது அவைகளில் மனிதனது அறிவுக்கும் அனுபவத்துக்கும் இடமில்லை எனக்

கருதலாகாது. சுருக்கமாகக் கூறுவதாயின் வேதவாக்கு ஒப்புக்கொள்ளத் தக்கது என இந்திய தத்துவ ஞானி முடிவு பண்ணியது கூடத் தன் அறிவையும் அனுபவத்தையுங் கொண்டுதான் என்று கூடக் கூறி விடலாம்.

இவ்வுட்பிரிவுகளைத் தத்துவ தரிசனம் என்ற சொல்லாற் குறிப்பிடுவதுண்டு. தரிசனம் என்ற சொல்லுக்கு காட்சி என்பது பொருள். ஞானிகளின் காட்சிக்குப் புலப்பட்ட பேருண்மைகளே இத்தரிசனங்களில் அடங்கியவை என்பதை உணர்த்தவே இச்சொல் வழங்கப் படுகின்றது. இவற்றுள் ஆறு உட்பிரிவுகளைச் சேர்த்து ஷட்தரிசனங்கள் எனப் பேசுவதுண்டு. நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் என்பனவே அவை.

நாம் இந்நூலில் எல்லாமாகப் பன்னிரண்டு உட்பிரிவுகளை ஆராய்ந்துள்ளோம். இவைகளையே நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். உலகாயதம், சமணம், பௌத்தம் ஆகிய மூன்றும் முதற் பிரிவு. இவைகள் வேதத்தை எதிர்த் தெழுந்தவை என்பது மேலே கூறப்பட்டது. சாங்கியம், யோகம், வைசேடிகம், நியாயம், மீமாஞ்சை ஆகிய ஐந்தும் இரண்டாவது பிரிவு. இவற்றுள் வைசேடிகம் வேதத்தை ஒப்புக் கொள்ளாவிடினும் வேதத்தை ஒப்புக்கொள்ளும் ஏனையவற்றோடு பல அம்சங்களிலே நெருங்கிய ஒற்றுமையுடைமையின் இதனையும் அவற்றோடு சேர்த்துப் பேசுவது மரபாகிவிட்டது. அத்துவித வேதாந்தம், இராமாநுச வேதாந்தம், மத்துவ வேதாந்தம் ஆகிய மூன்றும் மூன்றாவது பிரிவு. வேத உபநிடதங்களின் சாரம் எனத்தக்கதாக வேதாந்த சூத்திரம் என்ற பேரில் ஒருநூல் எழுந்தது. அந்நூலுக்கு இம்மூன்று உட்பிரிவுகளின் ஆசிரியர் மூன்று விதமாக விளக்கங்களை எழுதினர். வேறு வேறு விளக்கங்கள் எழுதிய போதிலும் வேதாந்த சூத்திரமே இம்மூவருக்கும் ஆதாரமானது. ஆகையினால்தான் இவைகள் மூன்றையும் ஒரு பிரிவாகக் கொள்ளலாம் என்கின்றோம். சைவ சித்தாந்தம் மட்டுமே கடைசியாகிய நான்காவது பிரிவு. இது வேதத்தைவிட ஆகமங்களையே சிறப்பாகக் கைக்கொள்கின்றது. எனவே இதனை ஒரு தனிப் பிரிவாகக் கொள்ளலாம்.

இவ் வுட்பிரிவுகளுக்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் அவற்றின் காரணங்களையும் ஆராயின் இந்திய தத்துவ ஞானத்தின் அடிப்படைகள் சிலவற்றையும், வேதகால இலக்கியங்களிலே அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் கருத்துக்கள், சென்ற பல நூற்றாண்டுகளிலே எவ்வாறு வளர்ச்சியுற்றுள்ளன என்பதையும் அறியலாம்.

**[அண்மையில் வெளிவரவிருக்கும் 'இந்திய தத்துவஞானம்' என்ற நூலின் ஒருபகுதி]**

* * *

உ

சிவமயம்

# திருவையாறு அகலாத செம்பொற் சோதி

## ஐயாறன்

"எந்த ஊர்?" என்று கேட்டார் பெரியவர்.. 'திருவையாறு' என்றேன். "திருவையாறு அகலாத செம்பொற் சோதியா? அங்கு நுளம்பு அதிகமாயிற்றே. நாற்பது ஆண்டுகளுக்கு முன் அப்படி இருந்தது" என்றார்கள். இப்போது அந்தத் தொல்லைமிகக்குறைவு.

சில வருடங்களுக்கு முன் கொழும்பு வந்திருந்த திருவாளர் சேதுப்பிள்ளை அவர்களும் ஊரைப்பற்றிக் கேட்டதும், "திருவையாறு அகலாத செம்பொற் சோதியா?" என்றே வினவினர்கள்.

அங்கிருந்து அகன்று பல்லாண்டுகளாகியும், என் நெஞ்சம் அதை மறக்கமுடியவில்லை.

கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் படிக்கும் ஒரு சிறுமியைத் தேவாரம் ஒன்று சொல்லுமாறு கேட்டதும்,

"எல்லா உலகமும் ஆனாய் நீயே,
ஏகம்பமேவி இருந்தாய் நீயே,
நல்லாரை நன்மை அறிவாய் நீயே,
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே,
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே,
புகழ்ச் சேவடி என்மேல் வைத்தாய் நீயே,
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி."

என்று திருநாவுக்கரசரின் திருத்தாண்டகத்தை இனிமையாகப் பாடினாள். இதைக்கேட்டதும் இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. சொந்த ஊர்பற்றிய அபிமானம் ஒரு பக்கம். பல நூறுமைல்களுக்கப்பாலுள்ள ஒரு சிவஸ்தலத்தின் மகிமையை, அதைக்கண்டிராத கொழும்பிலுள்ள ஒரு சிறுமியும் கூடப் பாடுகின்றாளே என்பது மற்றோர் புறம்.

**பாடல் பெற்றதலம்**

இன்று சைவஉலகம் பிரிந்து பிரிந்து கிடப்பினும், பெரியோர் முதல் சின்னச்சிறுமிவரை திருவையாற்றின் பெயரை அறிந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் நமது சமய குரவர்கள்தான். நால்வராலும் பாடல் பெற்ற திருத்தலம் திருவையாறு. அவர்களது அருள்வாக்குகள் ஐயாற்றையும் அதன் பெருமையையும் சைவஉலகம் என்றென்றும் மறக்கமுடியாதபடி செய்துள்ளன.

திருக்கேதீச்சர ஆலயத்தை அந்நியர்கள் பன்முறை இடித்தார்கள். அதை இடித்தால் சைவமே அழிந்து விடுமென நினைத்தார்கள். ஆனால் அதுமீண்டும் மிகுந்த சிறப்புடனே தலைதூக்கிவருவதைக் காண்கிறோம். திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடிய தேவாரப் பதிகங்கள் உள்ள வரை அந்தக்கோவிலை யாரே அழிக்கமுடியும்? நமது உண்மையான தமிழ்க்கலாசாரத்தையும் அழியாமல் பாதுகாப்பதும் இதே அருள்வாக் குகளன்றே!

நால்வரும் பாடிய தேவார திருவாசகங்களைப்படித்தால், திருவை யாறு செல்லவேண்டுமென்ற ஆவல் யாருக்குத்தான் உண்டாகாது? நமது பொல்லா வினைகளையெல்லாம் அழித்து, செல்வாய செல்வமெல்லாம் தரும் ஒருவன் அங்கிருக்கின்றான் என்று நினைவூட்டுகிறார் அப்பர் சுவாமிகள். "புலனைந்தும் பொறிகலங்கி, நெறிமயங்கி, அறிவழிந் திட்டு, ஐமேலுந்தி அலமந்தபோதாக அஞ்சேல் என்று அருள் செய் வான்," அங்கு கோவில் கொண்டிருக்கின்றான் என்று நமது பயம் நீங்க வழிகாட்டுகின்றார் ஞானசம்பந்தர்.

"ஐயாற்று அடிகளோ!" என்று காவிரியின் தென்பாலிருந்து கதறி னார் சுந்தரர். காவிரி ஆறு வழிவிட்டதாம்! ஐயாறதனில் சைவனுகி அருள்பாலித்த விந்தையை குறிக்கிறார்மாணிக்கவாசகர்.

**ஐயாற்றுக்குச் செல்வோம்**

நமது சமயகுரவர்கள் கூறும் வாக்குப்பொய்யா? பொல்லாவினைக ளெல்லாம் நீங்கி, செல்வாய செல்வம் பெறக் கூடிய ஐயாற்றுக்குச் செல்லவேண்டுமென்ற உந்தல், இத்திருமுறைவாக்குகளைக் கேட்ட யாருக்கும் ஏற்படுவது உறுதி. ஆனால் பாய்மரம் கட்டி, மரக்கலங்களில் செல்லவேண்டியிருந்த காலத்தைவிட, சந்திரனைச் சாடும் இந்தக்காலத் தில் நம்மிற் பலர் அண்டை நாட்டிலுள்ள ஐயாற்றுக்கும் விருப்பம்போல் செல்லமுடியாதபடி பலப்பல தடைகள் உள்ளனவல்லவா?

இருந்தும் என்ன? விமானத்துக்குப் பதில் மனோரதத்தில் என்னுடனே வாருங்கள். அதோ சோழ நாட்டின் தலை நகரான தஞ்சாவூர், பெரிய கோவில் கோபுரம் தெரிகிறதா? ராஜ ராஜ சோழனின் சிவ பக்தியை யும் தமிழரின் பண்டைய கலைப்பெருமையையும், கைத்திறனையும் கண்டு மேல் நாட்டவரும் வியப்படைகிறார்கள். அங்குள்ள பெரிய நந்தியையும் பெரிய சிவலிங்கத்தையும் போல் வேறெங்கும் கண்ட துண்டா? கோவில் தரிசனம் செய்தபின், அங்கிருந்து எட்டுமைல் தூரத்திலுள்ள திருவையாற்றிற்குப் பஸ்ஸில் புறப்படுவோம்.

வழியிலே பல ஆறுகளைப்பார்க்கிறோம். வடவாறு, வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவேரி என்று இந்த ஐந்து நதிகளாலும்

தான் 'ஐயாறு' என்று பெயர் வந்ததற்குக்காரணம் என்று பொது வாகப் பலர் கருத்து. ஆனால் அங்கு ஐந்து தெய்வீக ஆறுகளான சூரியபுஷ்கரணி, சந்திர புஷ்கரணி, கங்கை தீர்த்தம், பாலாறு, நந்தி தீர்த்தம் உள்ளனவென தலபுராணம் கூறும். நால்வர் காலத்தில் இல் லாதபடி, நல்ல ரோட்டும், பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளதால் 20 நிமிடங்களில் திருவையாறு சென்று விடுகிறோம்.

'ஏழ்தலம் புகழ்' காவிரியின் வடபாலுள்ள அழகான திருத்தலமே திருவையாறு. பட்சிகளும் நல்வாழ்வு வாழவேண்டுமென்ற தயாள நோக்கத்துடனே இருபெரிய புரக்கூடுகள் என்ற உயரிய கோபுரங்களை நம் மன்னர்கள் கட்டியுள்ளதைப் பாருங்கள். பட்சிகளிடம் அவ்வளவு அன்பாயின் மக்களிடம் எப்படி இருந்திருப்பர்?

**காவேரி ஓரத்தில்**

தெருவுக்குத் தெருதர்ம சத்திரங்கள், வேதநெறி தழைத்தோங்க வேத பாடசாலை. காவேரி ஓரத்திலே பெரிய அழகான மச்சுக்கட்டடங் கள் தெரிகின்றனவல்லவா? அதுதான் தஞ்சை மகாராஜா கட்டிய சமஸ் கிருத கல்லூரி. மாணவர்கள் இலவசமாக உணவு, உடை எல்லாம் பெற்று வடமொழிகற்க மன்னர்கள் செய்த வித்தியாதானம். யாத்திரி கர்கள் தங்கி இருக்க பல மடாலயங்கள். முன்னர் ஊரெங்கும் பலப்பல தர்மங்கள் தழைத்தோங்கிய அறிகுறிகளை இன்றும் காண்கிறோம்.

ஊருக்கு மத்தியிலே நடு நாயகமாக விளங்குவது ஐயாறப்பர்— அறம் வளர்த்த நாயகி ஆலயம். உடலில் இதயமாகிய மத்தியஸ் தானத்தில் இறைவன் குடி கொண்டுள்ளதுபோல், ஊருக்கு உயிர் நிலையம் போல், மத்தியிலே பெரிய மதில்களும், கோபுரங்களுமுள்ள பெரிய கோவில் அமைந்துள்ளது.

தெற்கு வாசலில், புகை எழுகின்றதே, அதுதான் ஆட்கொண்டார் சன்னதி. தேள், பாம்பு முதலியன இம்சை செய்யாதிருக்க, அங்கு குங்கிலியம் வாங்கிப் போடுவர். அனைதையான ஓர் அந்தணச் சிறு வனை எமனிடமிருந்து காத்து, எமனைச்சங்கரித்து, மீண்டும் அவனை உயிர்ப்பித்த வீரவடிவமே ஆட்கொண்டார். அந்த ஸ்தலத்தில் இறப் பவர்களுக்கு எமபயமில்லை என்று கூறுவர். வடைகளை மாலை மாலை யாகக் கோத்துப்போட்டு, எல்லாருக்கும் விநியோகம் செய்வர்.

**தட்சிணகைலாசம்**

கோபுரவாசல் வழியே சென்றால் தெற்குப் பிரகாரத்தில் தெரிகி றதே அதுதான் தட்சிண கைலாசம்-என்ற அப்பருக்குக் கைலாசக் காட்சி அளித்த இடம். கைலாசத்தைக் காண, ஊர்ந்து உடல் தேய்ந்து சென்ற திருநாவுக்கரசருக்கு இரங்கி, இறைவன் அவர்முன் ஓர்

அந்தணராக வந்து அங்கிருந்த குளத்தில் மூழ்கச் சொன்னர். அடிகளார் அங்கு மூழ்கி 'யாதும் சுபடுபடாமல்' ஐயாற்றை அடைந்து, அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் எழுந்து பார்க்கவே, 'காதல் மடப்பிடியோடு களிறு வருவனக்' கண்டார். பிடியும் களிறும் அம்மையும் அப்பருமானவடிவமே என்பதையும், எல்லாம் இறைவடிவமென்பதையும் உணர்ந்து, கண்டறியாத கைலாசக் காட்சியைக் கண்டேன் என்று திருப்பதிகம் பாடிய இடம் அதுவே. ஆடி அமாவாசையன்று தான் இந்தக் காட்சி அப்பருக்கு அங்கு கிடைத்தது. ஆடி அமாவாசையன்று, அதே இடத்தில் அப்பருக்குக் காட்சி அளிக்கும் உற்சவம் நடப்பதையும், அப்பர் தேவாரமும் திருத்தாண்டகமும் இராவெல்லாம் பக்தியோடு பாடப்படுவதையும் காணலாம். தட்சணகைலாசமெனும் அக்கோவிலில், அப்பரின் அழகான திருவுருவம் வைத்து நித்திய பூசை நடைபெறுகின்றது.

இதேபோல் வடக்குப்பிரகாரத்திலே உத்தரகைலாசமெனும் அழகிய கோவிலுண்டு. முதலாம் இராஜராஜனது மனைவியாரான உலோகமாதேவியாரே, இக்கோவிலைக் கட்டுவித்தார். அதனால் இதற்கு உலோகமாதேவிச்சரம் என்ற பெயருண்டு. தமிழ் மன்னர்களின் திருப்பணிச் செய்திகளைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

**சுயம்புமூர்த்தி**

கோவிலுக்குள்ளே மூலஸ்தானரை தரிசிப்போமா? அது சுயம்புலிங்க மூர்த்தி. ஐயாறப்பன், பஞ்சநதீச்வரர், ஐபேசர், பிரணதார்த்திஹரர் என்ற பல திருநாமங்கள் உண்டு. அங்கு நெருங்குகையில் நமது சமய குரவர் நால்வரும் இம்மூர்த்தியை பக்திப்பெருக்கெடுக்க, அருள் பாடல்களான திருமுறைகளால் பாடிப் பரவிய அதே இடத்தில் நிற்க நம் கால்கள் கூசுகின்றன. என்ன புண்ணியம் செய்தமோ அதே மூர்த்தியை நாமும் தரிசிக்க! அங்கிருந்து செல்ல மனம் வருகிறதா?

உட்பிரகாரத்தில் குருமூர்த்தி புலனடக்கத்தைக்குறிக்கும் ஆமையைக் காலடியில் வைத்து, சின்முத்திரை காட்டுகின்றார். அவரைத் தாண்டி அப்பால் சென்று விடாதீர்கள். அங்கு பல முனிவர்கள் இன்னும் தவம் செய்து கொண்டிருப்பதாக ஐதீகம்.

இரண்டாம் பிரகாரத்தில் இந்தக்கோவிலைக் கட்டவேண்டிய தனம் கிடைத்த மூன்று குழிகளைக் காணலாம். பிரகாரத்தைச் சுற்றி கருங்கல்லால் மச்சுக் கட்டடம். முன்னர் அங்கு என்னென்ன அரங்குகள் நடந்தனவோ? இன்று எல்லாம் சும்மா கிடைக்கின்றன. நால்வரிடமும் விடை பெற்றுக்கொண்டு அறம் வளர்த்த நாயகியைத் தரிசிக்கப்போவோம்.

**பெரிய விசேஷம்**

இங்கு ஒரு பெரிய விசேஷம். "அரியலால் தேவியில்லை ஐயனையாறனுர்க்கே" என்பது தேவாரம். அம்பிகை அறம் வளர்த்த நாயகியின் கைகளில் சங்கு சக்கரம் இருப்பதைப் பாருங்கள். சிவபெருமானுக்கு மகாவிஷ்ணுதான் தேவியாம். சைவவைணவ ஒற்றுமையை இத் திருத் கோவிலில் பார்க்கின்றோம்.

பங்குனி மாதத்தில் நந்திதேவருக்குத் திருக்கல்யாணமும் சித்திரையிலே சப்தஸ்தான உற்சவமும் அவசியம் பார்க்கவேண்டியவை. பக்கத்திலுள்ள திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என்ற ஆறு பாடல் பெற்ற ஸ்தலங்களுக்கும் அலங்காரப் பல்லக்கிலே அறம் வளர்த்த நாயகி சமேதமாக ஐயாறப்பன் பின்னும், முன்னே வெட்டிவேர் பல்லக்கில் நந்திதேவர் தமது தேவியுடனும் ஊர்வலம் செல்வர். வழிநெடுக தேவார திருமுறை பஜனை கோஷ்டிகளும், வேதபாராயணமும், தண்ணீர்ப் பந்தல்களும், அன்னதானங்களும் பழைய தமிழ்ப் பண்பாட்டை நினைவுறுத்தும். ஆறுகோவில் சுவாமிகளும் பல்லக்கில் ஐயாறு வருவார்கள். எங்கும் பக்தியும் அருள் வெள்ளமும்தான். இவற்றை எல்லாம் எப்படி வர்ணிப்பது? தர்மபுரம் ஆதீன நிர்வாகத்தில் கோவிலும் திருவிழாவும் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன.

கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரும் பக்த சிகாமணியுமான தியாகராஜ சுவாமிகளும் இங்குதான் வசித்து முத்தி அடைந்தார்கள். வருஷாவருஷம் மார்கழி மாதம் தியாகராஜ உற்சவம் சிறப்பாக நடந்து, அங்கிருந்து வானொலிமூலம் அவற்றைப் பலரும் பருகி வருகின்றனர்.

ஒரே ஒரு தாழ்மையான வேண்டுகோள். நமது அப்பர் சுவாமிகளுக்கு கைலாசக் காட்சி கிடைத்ததான தலம் பக்கத்திலேதான் உள்ளது. இந்தப்புண்ணியப் பதியை நீங்களும் இந்தத் தேகமிருக்கையிலேயே ஒருமுறையாவது சென்று கரணவேண்டாமா? நம் பொல்லா வினைகளைத் தீர்க்கவும் நமக்குச் செல்வமெல்லாம் தரவும் ஐயாறை விட்டு இன்னும் அகலாமல் காத்து இருக்கிறார் அந்த செம்பொற் சோதி!

* *

உ

சிவமயம்

## ஈழநாடும் சைவமும்

# அந்நியர் ஆட்சியில் சைவத்தின் நிலை

திரு. ச. அம்பிகைபாகன், B. A.

இலங்கைச் சரித்திரத்தை உற்றுநோக்கும்போது சிங்கள, தமிழ் அரசர்கள் இலங்கையை ஆண்ட காலத்தில், பௌத்தமும் இந்து சமயமும், ஒன்றுக்கொன்று உதவியாய் வளர்ந்து வந்தனவென்பது புலப்படுகின்றது. புத்தமதத்தைச் சேர்ந்த அரசர்கள் இந்து மதக்கோயில்களைக் கட்டியும், அவற்றுக்கு உதவிபுரிந்தும் வந்தனர். இந்து மதத்தைச் சேர்ந்த அரசர்களும் புத்தகோயில்களைக் கட்டியும் அவற்றுக்கு உதவி புரிந்தும் வந்தனர். சிவபாதசேகரன் என்னும் விருதுப் பெயருடன் சைவசமயத்தைக் கண்ணும் கருத்துமாக வளர்த்துவந்த முதலாம் இராஜராஜ சோழன் திருக்கோணமலைப் பகுதியில் இராஜராஜப்பள்ளியென்னும் புத்தகோவிலைக் கட்டியதோடு, நாகபட்டினத்தில் கட்டப்பட்ட சூடாமணி விகாரைக்கு உதவி புரிந்து வந்தான். இலங்கையைச் சோழ அரசரிடமிருந்து விடுவித்த விஜயபாகுவின் கீழிருந்த வேளைக்காரப் படையினர் (தமிழர்) தமது உயிரைக் கொடுத்தேனும் பொலனறுவையில் புத்த விகாரையைக் காப்பாற்றுவதாகச் சத்தியஞ் செய்து கொடுத்தனர். இந்தச் சமயப்பிணக்கற்ற சுபிட்சமான நிலை அந்நியர் இலங்கையில் கால் வைத்ததும் மாறிவிட்டது.

**போர்த்துக்கீசர் காலம். (1505 — 1658)**

16ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து போர்த்துக்கீசர் இந்தியா, இலங்கை, யாவா முதலிய நாடுகளுக்கு வியாபாரத்தின் பொருட்டு வந்தனர். இவ்விடங்களில் முதல் வியாபாரத் தலங்களை ஏற்படுத்திப் பின்னர் அவற்றுக்குப் பாதுகாப்பாகக் கோட்டைகளைக் கட்டினர். இலங்கையில் காணப்பட்ட குழப்படியான அரசியல் நிலையைப் பயன்படுத்திக் கரையோரப் பிரதேசங்களை ஒவ்வொன்றுகக் கைப்பற்றினர். போர்த்துக்கீசர் வியாபாரத்தை விருத்தி செய்ததோடு தங்கள் மதமான கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதில் கண்ணுங்கருத்துமாயிருந்தனர். பல பிரிவுகளைச் சேர்ந்த கத்தோலிக்க குருமார் இலங்கைக்கு வந்து பாடசாலைகளைத் தாபிப்பதிலும் மதப்பிரசாரம் செய்வதிலும் ஈடுபட்டனர். மாவிட்டபுரம், கீரிமலை, நல்லூர், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முனீஸ்வரம் முதலிய கோயில்களை இடித்து, பெரும்பாலும் அவைகள் இருந்த இடங்களில் இடிந்த கோயிற் கற்களைக் கொண்டே கோட்டை

களைக் கட்டினர். இடிந்த கோயில்களில் கண்ட திரவியங்களைச் சூறை யாடினர். சிற்சில கோயில்கள் இடிபடமுன் அவற்றுளிருந்த விக்கிரகங் களை அர்ச்சகர் முதலியோர் எடுத்துக் கேணிகளிலும் குளங்களிலும் போட்டும் நிலத்திற் புதைத்தும் காப்பாற்றினர். திருக்கேதீஸ்வரக் கோயிற் கற்களைக் கொண்டே மன்னர்க் கோட்டை கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

போர்த்துக்கீசர் இடித்த கோயில்களில் மிகப் பிரசித்திபெற்றது கோணேசர் கோயிலாகும். கோணேசர் மலையில் கடல் மட்டத்துக்கு 400 அடிக்குமேல் மூன்றுகோயில்கள் காணப்பட்டன. கத்தோலிக்க ருக்கு ரோமாபுரி எப்படியோ அப்படிச் சைவர்களுக்கு கோணேசர் ஆலயமும் அதன் சுற்றுப்புறமும் விளங்கியதாகக் கூறப்படுகின்றது. கோயிலில் ஏராளமான பொன் முத்து வைரங்களால் இழைக்கப்பட்ட நகைகளும் திரவியங்களும் காணப்பட்டன வென்றும் அவற்றைப் போர்த்துக்கீசர் சூறையாடினர் என்றும் கூறப்படுகின்றது. இந்தக் கோயில் கொன்ஸ்தத்தின் டி சா (1623 — 30) உத்தரவின்படி இடிக் கப்பட்டு அதுவிருந்தவிடத்திலேயே கோட்டை கட்டப்பட்டது.

போர்த்துக்கீசர் சைவசமயிகளுக்குப் பலவிதமான இன்னல் களை விளைவித்தனர். இக்காலத்தில்தான் நல்லூர் ஞானப்பிரகாச முனி வர் போர்த்துக்கீசருக்கு உணவுக்குப் பசு கொடுக்க மறுத்து இந்தியாவுக் குச் சென்று, அங்கு நிரந்தரமாக வசித்து, சைவத்துக்கு அருந்தொண் டாற்றினர். அவரால் சிதம்பரத்தில் வெட்டுவிக்கப்பட்ட குளம் அவர் பெயருடன் இப்பொழுதும் அங்குக் காணப்படுகிறது. மேலும் அவர் சிவஞான சித்தியார் போன்ற நூல்களுக்கு உரை கண்டுள்ளார்.

**ஒல்லாந்தர் காலம்.(1658 — 1796)**

ஒல்லாந்தர் போர்த்துக்கீசரிடமிருந்து கரைப்பிரதேசங்களை ஒவ் வொன்றாகக் கைப்பற்றினர். இவர்கள் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். கத்தோலிக்கரையும் பௌத்தரையும் இந்துக்களையும் தங்கள் மதத்தில் சேரும்படி பலவந்தப்படுத்தினர். இதைப்பற்றி வண. பெரெரா என்னும் ஆசிரியர் கூறுவது பின்வருமாறு. "ஒல்லாந்தர் கத்தோலிக்க மதத்துக்கு மாறுகச் சட்டமியற்றி, கத்தோலிக்க கோயில் களையும் பள்ளிக்கூடங்களையும் கைப்பற்றி, கத்தோலிக்க குருமாரை நாட்டிலிருந்து கடத்தி, கத்தோலிக்கரைத் தங்கள் மணபிணைச் சடங் குகளை ஒல்லாந்தர் கோயில்களில் நடத்துமாறும் பிள்ளைகளைப் புரட்டஸ் தாந்து மதத்தைக் கற்குமாறும் பலவந்தப்படுத்தினர். பௌத்தர், இந் துக்களோடும் இப்படியே நடந்து கொண்டனர். ஒல்லாந்தர் மதத்தை எல்லோர்மீதும் பலவந்தமாகத் திணிப்பதின் முகமாக, பௌத்தரை

யும் இந்துக்களையும் தங்கள் தங்கள் மதத்தைப் பின்பற்றுதவாறு சட்ட மியற்றினர். இதனல் பலர் தங்கள் தங்கள் சமயானுஷ்டனாங்களை மறை முகமாகச் செய்து வந்தனர். விரத காலத்தில் மக்கள் சாப்பிட உப யோகிக்கும் வாழையிலைகளை வீட்டுக் கூரையில் செருகும் வழக்கம் ஒல்லாந்தர் காலத்தில்தான் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது.

இப்படி மறுசமயத்தவர்களைத் துன்புறுத்திய போதிலும் தாங்கள் இந்தியாவிலிருந்து வரவழைத்த நெசவாளருடைய வழிபாட்டுக்காக வண்ணர்பண்ணையில் ஒரு வைணவ ஆலயம் (பெருமாள் கோயில்) நிறு வுவதற்கு உத்தரவு கொடுத்தனர்.

கடைசிக்காலத்தில் ஒல்லாந்தர் மதவெறி சிறிது குறைந்ததாகக் காணப்படுகின்றது. 1790ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் பிரபல வியா பாரியாக விளங்கிய வைத்தியலிங்கச் செட்டியார், ஒல்லாந்தர் அனுமதி பெற்று வண்ணைச் சிவன்கோயிலைக் கட்டுவித்தார். ஒல்லாந்தர் இறுதிக் காலத்தில்தான் இரகுநாத மாப்பாணர் போர்த்துக்கீசரால் இடிக்கப் பட்ட நல்லூர்க் கந்தசாமி கோயிலைத் திருப்பிக் கட்டினர்.

**கண்டிப் பிரதேசம் (1505 - 1815)**

இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் 1505ல் போர்த்துக் கீசராலும், 1658ல் ஒல்லாந்தராலும், 1796ல் ஆங்கிலேயராலும் கைப் பற்றப் பட்ட போதிலும் கண்டிப் பிரதேசம் 1815ம் ஆண்டு வரைக் கும் தனது சுதந்திரத்தைக் காப்பாற்றி வந்தது. 16ம், 17ம், 18ம் நூற் றுண்டுகளில் பல காரணங்களினுல் கண்டிப் பிரதேசத்தில் இந்து சம யத்தின் - சிறப்பாகச் சைவ சமயத்தின் - ஆதிக்கம் வளர்ந்து வந்தது. முதலாம் இராஜசிங்கன் (1582 - 1592) சைவ சமயத்தைத் தழுவினன். பின் கண்டியை ஆண்ட அரசர் நாயக்க வம்சத்தைச் சேர்ந்த பெண்களை விவாகஞ் செய்தனர். இதனல் இந்தப் பெண்களைச் சேர்ந்த பல நாயக்க குடும்பங்கள் கண்டியில் குடியேறின. கடைசியில் நரேந்திர சிங்கனென்னும் அரசன் பிள்ளைகளில்லாமல் இறக்க (1739) அவ னுடைய மைத்துனனும் நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவனுமான சிறீ விஜய இராஜசிங்கன் அரசனுனன். இவன் பட்டத்துக்கு வந்ததும் புத்த சமயத்தைத் தழுவினபோதிலும் இவனுடைய உற்றார் உறவின ரெல்லாரும் இந்துக்களாகவே இருந்தனர். இக் காலம் தொடக்கம் கண்டி இராச்சியம் வீழ்ச்சியுறும் வரைக்கும் (1815) இந்து சமயமும் தமிழ் மொழியும் கண்டிப்பிரதேசத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தன.

இப்பொழுது ஆவணி மாதத்தில் கண்டியில் நடைபெறும் பெரகரா பெரும் பௌத்த விழாவாகக் கருதப்பட்ட போதி லும் 17ம், 18ம் நூற்றுண்டுகளில் கதிர்காமக் கடவுள், பத்தினித்தெய்

வம் முதலியவற்றிற்கே இந்த விழா எடுக்கப்பட்டது. கீர்த்தி சிறீ (1747 - 1782) காலத்தில் ஏற்பட்ட பௌத்த மறுமலர்ச்சியின் பின்புதான் புத்தருடைய தந்தத்துக்கு இந்தப் பெரகராவில் பிரதானவிடம் கொடுக்கப்பட்டது.

ரொபேட் நொக்ஸ் என்னும் ஆங்கிலேயன் கைதியாகக் கண்டிப் பிரதேசத்தில் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் (1660-1679) கழித்தான். அவன் தனது அனுபவங்களை ஒரு நூலாக எழுதியுள்ளான். அதைப் படிக்கும் பொழுது புத்தசமயத்தை இந்து சமயம் எவ்வாறு பாதித்தது என்பது புலப்படுகிறது.

**ஆங்கிலேயர் காலம். (1796—1948)**

ஆங்கிலேயர் மத விஷயங்களில் நடுவு நிலைமை வகிப்பதாகக் கூறியபோதிலும் ஆரம்பத்தில் தமது மதஸ்தாபனங்களுக்கும், தமது மதப் பாடசாலைகளுக்கும், தமது மதத்தைத் தழுவினவர்களுக்கும் விசேஷ சலுகை காட்டி வந்தனர். இதனால் உத்தியோக நிமித்தமும், கல்வியின் பொருட்டும் அனேகர் மதம் மாறினர்.

**நாவலர் தொண்டு.**

கிறிஸ்தமிஷனரிமாரின் மதம் மாற்றும் செயல்களை எதிர்த்துத் தடுத்த பெருமை ஆறுமுக நாவலர் அவர்களையே (1822—1879) சாரும். நாவலர் அவர்கள் தமது பிரசங்கங்கள் மூலமும், நூல்கள் மூலமும் தீவிர பிரசாரம் செய்து வந்தார். அக்காலத்துச் சமய நிலையை அறிய விரும்புவோர் நாவலர் அவர்கள் எழுதிய "யாழ்ப்பாணச்சமய நிலை" என்னும் கட்டுரையைப் படிக்கவேண்டும். நாவலர் அவர்கள் முயற்சியாலேயே யாழ்ப்பாணத்தில் பல சைவப் பள்ளிக்கூடங்கள் தோன்றின. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை தாபிக்கப்பட்டதும் (1889), இந்து சாதன, ஆங்கில தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்ததும் நாவலர் அவர்களின் கிளர்ச்சியின் பெறு பேறுகளாகும்.

போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட இரு கோயில்களின் புனருத்தாரண வேலையில் நாவலர் அவர்கள் ஊக்கங் காட்டினர். இவைகளிலொன்று கீரிமலைச் சிவன்கோவில்; மற்றையது திருக்கேதீஸ்வரம். கீரிமலைச் சிவன் கோயில் கட்டப்பட்டு நித்திய நைமித்திகங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால், கோயில் முட்டின்றி நடப்பதற்கு நாவலர் அவர்கள் கேட்டுக்கொண்டது போல் கீரிமலையில் அந்தியேட்டி முதலியன செய்வோர் கோயிலுக்கு விசேட தானங்களைக் கொடுத்தும் கேணியில் நீராடப் போவோர் கோயிலுக்குக் காணிக்கை செலுத்தியும் வருவதவசியம்.



திருமகள் அழுத்தகம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

நாவலர் அவர்கள் திருக்கேதீச்சர ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டிய அவசியத்தைப் பன்முறை வற்புறுத்தியுள்ளார். இதுபற்றி அவர்கள் 1872 ல் ஈழநாட்டுச் சைவர்களுக்கு விடுத்த வேண்டுகோள் பின்வருமாறு:– "சைவசமயிகளே! இன்னுமொன்று சொல்லி முடிப்போம். தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களில் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றுகிய திருக்கோணமலைக்குச் சம்பந்த மூர்த்தி நாயனர் திருப்பதிகம் ஒன்று இருக்கிறது. மற்றொன்றுகிய திருக்கேதீச்சரத்துக்குத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் திருப்பதிகம் ஒன்றும், சுந்தரமூர்த்தி நாயனர் திருப்பதிகம் ஒன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் இவ்வடமாகாணத்திலுள்ள மன்னருக்கு அதி சமீபத்தில் மாதோட்டத்தில் உள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாய்க் கிடக்கிறதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோவில்கள் கட்டப்படுகின்றனவே!, நீங்கள் இந்த மகாஸ்தானத்தைச் சிறிதும் சிந்தியாததென்னையோ! இலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லோரும் சிறிது சிறிது உபகரிக்கினும், எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்துவிடும். இதை நீங்கள் எல்லோரும் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்".

நாவலர் அவர்கள் காலத்தில் புனருத்தாரண வேலை ஆரம்பிக்கப் படாவிட்டாலும், அவர்கள் பிரசாரம் வீண்போகவில்லை. 1893-ல் பழைய கோவிலிருந்த நிலம் அரசினரிடமிருந்து வாங்கப்பெற்று புதிதாக ஒரு கோயிலும் அமைக்கப்பட்டது.

சைவசமயிகள் சார்பாகத் திருக்கேதீஸ்வர ஆலயமிருந்த இடத்தை வாங்கியும், கோயில் கட்டுவதற்கு உதவி புரிந்தும், கோயில் கட்டப்பட்டபின் அதை நெடுங்காலம் திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை அந்தப்பொறுப்பை ஏற்கும் வரைக்கும் பரிபாலித்தும் வந்த பெருமை நாட்டுக்கோட்டைச் செட்டிமாரையே சாரும். இதற்கு மேலாக நாட்டுக்கோட்டைச் செட்டிமார் தாங்கள் வியாபாரம் செய்த இடங்களிலெல்லாம் - கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், கம்பளை, நாவலப்பிட்டி முதலிய இடங்களில் கோயில்களைக்கட்டிச் சைவத்தை வளர்த்து வந்தார்கள். இப்பொழுது அவர்கள் ஒவ்வொருவராக நாட்டை விட்டு வெளியேறின போதிலும் அவர்கள் கட்டிய கோயில்கள் அவர்களின் வள்ளன்மைக்கும், சமயப்பற்றுக்கும் ஞாபகச் சின்னங்களாக விளங்குகின்றன.

ஆறுமுகநாவலர் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சைவத்தை வளர்த்த இன்னுமொரு பெரியாரைப்பற்றி இங்குக் குறிப்பிடுவதவசியம். அவர்

தான் சேர் பொன்னம்பலம் இராமநாதன். அவர் யாழ்ப்பாணத்தில் இரு சைவக்கல்லூரிகளை நிறுவியதோடு, கொழும்பு கொச்சிக்கடைச் சிவன்கோயிலுக்கு கருங்கல் திருப்பணி செய்துள்ளார். இலங்கையில் முழுவதும் கருங்கல்லால் அமைக்கப்பட்ட கோயில் இதுவொன்றே யாகும்.

**இராமகிருஷ்ண சங்கம்**

சிகாகோவில் 1893 ம் ஆண்டில் நடைபெற்ற சர்வ சமய மகா நாட்டில், விவேகானந்த சுவாமிகள் பங்குபற்றி வாகைமாலை சூடியது கிழக்கு நாடுகளில் ஒரு பெரும் விழிப்பை ஏற்படுத்தியது. இந்த மகாநாட்டில் பங்குபற்றி விட்டு இந்தியா திரும்பும் பொழுது முதன் முதல் கொழும்பு வந்தடைந்தார். கொழும்பிலும் யாழ்ப்பாணத்தி லும் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும் அவர் அவ்விடங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளும் இலங்கை மக்களிடையே ஒரு புது உணர்ச் சியையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தின. சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு வந்ததன் பெறுபேருகவே கொழும்பு விவேகானந்த சபை 1902ல் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் காலத்துக்குக் காலம் இராம கிருஷ்ண சங்க சன்னியாசிகள் இலங்கையில் பிரசாரஞ் செய்ததன் பயனாக கொழும்பில் இராமகிருஷ்ண சங்கத்தின் கிளை யொன்று நிறு வப்பட்டது. இந்தச் சங்கத்தைச் சேர்ந்த சுவாமி விபுலானந்தர் கிழக்கு மாகாணத்தில் அரும்பணியாற்றியிருக்கிறார். திருக்கோணமலையிலும் மட்டக்களப்பிலும் இருசைவக்கல்லூரிகளை நிறுவியதோடு கிழக்கு மாகாணம் முழுவதும் பல சைவப் பாடசாலைகளை நிறுவியுள்ளார். கிழக்கு மாகாணத்தில் சைவத்தைப் பாதுகாத்த பெருமை சுவாமி விபுலானந்தரையே சாரும்.

**சுதந்திர இலங்கை**

சுதந்திர இலங்கையில் தமிழருக்குப் பல இன்னல்களிருந்த போதி லும் சமயத்துறையில் ஒரு மறுமலர்ச்சி காணப்படுவது மகிழ்ச்சிக்குரிய தாகும். பாடல் பெற்ற தலங்களாகிய திருக்கேதீச்சரம் திருக்கோணமலை என்னும் திருத்தலங்களின் திருப்பணி வேலை துரிதமாக நடைபெற்று வரு கிறது. வன்னி நாட்டில் பலவிடங்களில் - பனங்காமம், உருத்திரபுரம், குமாரபுரம் முதலியவிடங்களில் பழைய ஆலயங்கள் இருந்தவிடங்களில், புது ஆலயங்கள் கட்டப்படுகின்றன. இலங்கையின் பலபாகங்களிலும் சிதறுண்டு கிடக்கும் சைவ மக்கள் ஒன்று சேர்ந்து, தமது சமயத்துக்குக் காலத்துக்கேற்ற முறையில் பணியாற்ற முன்வரவேண்டும். அந்தநாள் கூடிய சீக்கிரத்தில் வர இறைவன் அருள் புரிவாராக.

* *

சிவமயம்

# திருமுறைகள்

## கோவைகிழார்

திருமுறைகள் பன்னிரண்டு. அவைகள் சைவசமய நூல்கள். அதாவது தெய்வத்தன்மை பொருந்திய நூல் எனப்படும். திரு என்றுல் புனிதம் அல்லது தெய்வத்தன்மை. முறையென்றுல் நூல். ஆகவே திருமுறை என்றுல் சமயநூல் என்று பொருள்படும். அச்சொல் சைவசமய நூல்களுக்குச் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. மற்றச் சமயங்களில் புனித நூல்கள் இருப்பது போன்று சைவசமயத்திற்கு ஏற்பட்ட புனித நூல்கள் பன்னிரண்டு திருமுறைகள் ஆகும்.

முறை என்பதனுக்கு நூல் என்ற பொருளில் கந்தபுராண ஆசிரியர் அவையடக்கத்தில் "இளைய பாலகன் முறை வரைவேன் என முயல்வது" என்கிறர். மண்ணில் எழுதிய எழுத்துக் கற்கும் இளைஞன் நூல் எழுத முயல்வேன் எனத்துணிதல் போன்று என்று அவையடக்கத்தில்தன் ஆற்றலிலாமையைக் குறித்து உவமிக்கின்றர். இங்கே முறையென்ற சொல் நூல் என்ற பொருளில் வந்திருக்கின்றது. அதேபொருளில் திருமுறைகள் என்ற சொல் ஆளப்பட்டு இருக்கின்றது.

**இராசராசன் பணி.**

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் சம்பந்தர் மூன்றும், அப்பர் மூன்றும், சுந்தரர் ஒன்றுமாக ஏழும் தேவாரங்கள் ஆயின. வாதவூரார் அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாவதும், திருவிசைப்பா ஒன்பதாவதும், திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாவதும், பல அடியார்கள் பாடியவை பதினென்றுவதும் என்று நம்பியாண்டார் நம்பி இராசராச சோழர் கேட்க வகுத்தருளினர். இவைகள் ஆரும் நூற்றுண்டு முதல் பதினென்றும் நூற்றுண்டுவரையில், சைவ சமயம் மேம்பாடுற்ற காலத்தில் தோன்றின. மூவர் அருளிய தேவாரங்கள் தில்லையில் திருவறையில் வைக்கப்பட்டிருக்க அவைகளை நம்பிகள் எடுத்தபோது பல ஏடுகள் கறையான் தின்றிருக்க எஞ்சியனவாய்க் கிடைத்தனவற்றை நம்பிகள் தொகுத்து ஏழு திருமுறைகள் ஆக்கினர். பிறகு மற்ற நான்கும் தொகுத்துத் தம் பாடல்களைச்சேர்த்து பதினெரு திருமுறைகள் ஆக்கினர். பின்வந்த சேக்கிழார் குலோத்துங்கன் காலத்தில் பெரியபுராணம் பாடி பன்னிரண்டாக ஆக்கினர். இவ்வரலாறு திருமுறை கண்ட புராணம் என்பது.

இப்பன்னிரண்டில் தேவாரம் திருவாசகம் என்ற எட்டும் இறைவனை மட்டும் துதிக்கும் நூல்கள். ஒன்பதாம் திருமுறையில் இறைவன் குமாரன் முருகனைப்பற்றிய பதிகம் அமைந்திருக்கிறது. பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் சிவகுமாரன் துதிகளோடு சைவ தத்துவங்கள் விளக்கப்பட்டுஇருக்கின்றன. பதிஞென்றும் திருமுறையில் பல அடியார்களால் சிவபெருமான், மூத்தபிள்ளையார், இளையபிள்ளையார் ஆகிய கடவுளர்களையும் அடியார்களையும் துதித்துப்பாடிய பாடல்கள் உள்ளன. ஆகவே எட்டாம்நூற்றுண்டுவரையில் துதிகள் இறைவனைப் பற்றி மட்டும் இருக்க, பின்னல் சிவகுமாரர்களைப் பற்றிப் பத்தாம் நூற்றுண்டில் ஏற்பட, பிறகு பதிஞென்றும் பன்னிரண்டாம் நூற்றுண்டுகளில் அடியார்களைப் பற்றிய துதிகளும் வரலாறுகளும் புனித நூல்கள் ஆயின. இச் செய்தி சமய வளர்ச்சி எவ்வாறு சென்றது என்பதை விளக்கும். கல்வெட்டுகளும் இதனை ஆதரிக்கின்றன. இராசராசனுக்குமுன் இறைவன் உருவங்கள் மட்டும் தொழப்பட்டன. அவனே அடியார்கள் உருவங்களையும் அமைத்தான். அவர்களுடைய தேவாரதிகளைப் பாடச் செய்ய ஓதுவார்களை நியமித்து நிபந்தங்களும் தந்தான். ஆகவே பதிஞென்றும் நூற்றுண்டில் அடியார் வணக்கமும் தேவாரங்களோடு ஓதப்பட்டன.

**எழுதுங்கிளவி.**

இந்த முறையில் தேவாரங்கள் வேதங்களின் பெருமை பெற்றன. அதற்குத் தக்க சான்றுகளும் அவைகளில் இருக்கின்றன. வேதங்கள் எழுதாக் கிளவி. தேவாரங்கள் எழுதுங் கிளவி ஆயின. வேதங்கள் ஓதுவதினுல் ஓத்து என்றும் தேவாரங்கள் வேதப் பொருளையுடையன வாய் ஓதப்படுவதினுல் திருமறைகள் என்றும் ஆயின.

> "எல்லையிலா மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறையை
> மல்லல்நெடும் தமிழால் இம்மானிலத்தோர்க் குரைசிறப்ப"
>
> (திருஞான 75)

செவியைச் சிறப்பித்து

> "தோடுடை செவியன்"

என்று சம்பந்தர் தொடங்கினர் திருமுறையை. பிறகு பன்னிரண்டு திருமுறைகளின் இறுதியில் "உலகெலாம்" என்று சேக்கிழார் முடித்தார். ஆகவே "ஓம்" என்ற பிரணவாக்கிர வேதம் போல திருமறைகளும் முடிக்கின்றன. முதற் செய்யுளாகிய இத் "தோடுடைய" என்ற பாசுரத்தில் சைவதத்துவங்கள் முழுவதையும் காணலாம்.

இனி எந்த நூலும் மங்கலச் சொல்லால் தொடங்க வேண்டும் என்பது இலக்கணம். திரு, உலகு, சீர், மலர் முதலிய சொற்கள் மங்கலச் சொற்கள். இவைகளில் தோடு இல்லை ஆனலும் தோடு

பெண்ணுக்குத் தாலியைவிடச் சிறந்த மங்கலப் பொருள் என்பது உலக வழக்கு. ஓலைச் சுருளை கன்னிப்பூசையின் போது நீரில் விடுவது தென்னாட்டு வழக்கம். சுமங்கலிகள் எதைநீக்கினாலும் காதோலையை நீக்கார்கள். ஆகவே அது மங்கலமாகும். ஓங் காரத்தோடு கூடிய தகரம் சிறப்புடையது. தமிழ் என்ற இனிய சொல்லில் உள்ள தகர ஒற்றை அது ஏற்கிறதினால் தமிழரின் வேதம் தேவாரம் ஆகும்.

இனி முதல் செய்யுளில் இறைவனின் தோடு, விடை, வெண்மதி, பொடி, என்ற அடையாளங்கள் எல்லாம் சத்துவகுணமாகிய வெண் மையை எடுத்துக்காட்டுகின்றன. மேலும் ஐந்து தொழில்களும் இங்கே காணப்படுகின்றன. செவியன் - படைத்தல்; விடை - காத்தல்; சுடலை - அழித்தல்; கள்வன் — மறைத்தல்; அருள் — அருளல் என்ற பஞ்சகிருத் தியங்களும் இங்கே காட்டப்பட்டன. இவன் என்ற அண்மைச் சொல்லால் இறைவன் அருகே இருக்கின்றான் என்று குறிக்கப்பட்டது.

தேவாராதிகள் வேதங்களில் உள்ள பொருளையே விளக்குவதினால் அவைகளும் வேதங்கள் ஆகும். வேதங்கள் எழுதப்படவில்லை. கேட் கும் சிலருக்கே பயன்படும். தேவாரங்களோ எழுதும் மறைகள். ஆன தினால் எல்லாருக்கும் பயன்படும். வேதங்கள் வடமொழியில் இருப்பதி னால் அதனைத் தெரிந்தவர்களுக்கே பயன்படும். மேலும் பொருளைப் பிறர் சொன்னாலன்றி இக்காலத்தவர்க்குப் பயன்படா. தேவாராதிகள் தமிழில் உள்ளதினால் தமிழ் பேசும்மக்களுக்குச் சொல்லால் அறியப் படும்.

**அருட்பாடல்கள்.**

இனி தேவாரம் அருளிய மூவர்களும் எவ்வெவ் வமயங்களில் திருவருள் பெற்றுத் தமிழ்மறைகளை அருளினர்கள் என்று ஒரு சிறிது கூறுவாம். ஆரும், ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தர் மூன்றாவது வய திலிருந்த சமயத்தில் சீகாழியில் தகப்பனாருடன் கோயிலுக்குச் செல்ல மன்றடி, திருக்குளத்தில் தகப்பன் குளிக்க, குழந்தை இறைவனையும் இறைவியையும் பார்த்து அழ, அவர்களால் ஞானப்பால் ஊட்டப் பெற்று அழுகை நிற்க, தகப்பன் வந்து எவருடைய எச்சில் பால் உண்டனை என்று கோல் ஓச்ச, இறைவனை நோக்கி 'இவன்' என்று தேவாரம் அருளிச் செய்தார். உலகம் உய்ய தமிழில் அருளினர். "உள்நிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால்" செந்தமிழில் அருளினர்.

பிறகு அப்பர் சமண்புகுந்து சைவத்தை விட்டுவிட, இறைவன் மறக்கருணை காட்டி ஆட்கொள்ள, சூலை நோய் தந்தருள, பொறுக்

கமாட்டாது தமக்கையாரிடம் சரண் அடைய, திருநீறு அளித்ததினுல் சூலை நீங்கி திருவருள் பெற்று அரியதமிழில் "கூற்றுயினவாறு விலக்க கலீர்" என்ற பதிகம்பாடித் திருவதிகையில் சைவர் ஆனுர். திருநீறு சைவத்திற்கு அடி கோலி தமிழ் மாலை எழும்பியது.

சுந்தரர் தடுத்தாட்கொள்ளப் பெற்று திருமணம் தவிர்க்கப்பட்ட போது இறைவனுக்கு அடிமையாய் திருவெண்ணெய் நல்லூர் அருட்டு றைக்குள் சென்றபோது "நான் எப்படி உன்னைத் துதிப்பது" என்று கேட்க, இறைவன் "நமக்கு அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டே ஆகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொல்தமிழ் பாடுக" என்ருர். அதன்மேல் "பித்தா பிறைசூடி" என்னும் தேவாரம் தோன்றியது. ஆகவே திருக்கோயில்களில் தென்னட்டில் தமிழில் பாடி அருச்சனை செய்ய வேண்டும் என்று ஏற்பட்டது. முதலாம் இராசராசன் அதனை ஒரு ஆணையால் விதித்தனன். தற்போதும் ஓதுவார் கோயில்களில் தேவாரங்களை ஓதிப் பூசையை முடிக்கின்றனர். இனி நான்காவது சமயாச்சாரியாராகிய வாதவூரர் திருபெருந்துறை யில் குருந்தமரத்தடியில் இறைவனுல் ஆட்கொள்ளப்பெற்றுப் பாண்டி யனுல் ஒறுத்தல் பெற்று இறைவனருளால் துறவியாகி அரிய திருவா சகமும் திருக்கோவையாரும் அருளிச் செய்தார். அவையும் அருட் பாடல்.

மற்ற நான்கும் பின்னுல் தொகுக்கப்பட்டன. அவைகளில் தத்து வமும், துதிகளும், சரிதங்களும் அடங்கியுள்ளன. இரண்டாம் குலோத் துங்கன் காலம் முதல் இப்பன்னிரண்டு திருநூல்களாக ஏற்பட்டிருக் கின்றன. இவைகளை எல்லாமக்களும் முறையாக ஓதுதல் விதிக்கப் பட்டுள்ளது. அவ்வாறு ஓதினுல் மட்டுமே சமயத்தை அறிந்து அவ் வாறு ஒழுகநேரிடும்.

* * *

அருகசமயமும் புத்தசமயமும் எங்கெங்குந் தலைப்படச் சைவங் குன்றிய குன்றிய பொழுது இவைகளெல்லாங் கூடியும் அப்புறச் சமயங்களை யோட்டிச் சைவத்தை நாட்டினவா? இல்லையே. பின்பு அது செய்தவை யாவை? தேவார திருவாசகங் களன்றே? இவ்வுண்மை நீங்கள் அறியீர்களா? பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திரு வாதவூரடிகள் புராணங் கேட்டதில்லையா? இவை படிக்கப்பெறுத மடங்களும் மடங்களா? இவை அறியாத கோயிலதிகாரங்களுங் கோயிலதிகாரிகளா? இவை அறியாத பிராமணர்களுங் பிராமணர்களா? இவை அறியாத சைவாசாரியர் களுஞ் சைவாசாரியர்களா? இவை அறியாத சைவர்களுஞ் சைவர்களா?

—நாவலர்.

*

ஓ

சிவமயம்

# வைதிக சைவம்

## பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை.

**சைவம்**

சிவம் என்ற வார்த்தையிலிருந்து பிறந்த ஒரு வார்த்தை சைவம். சிவசம்பந்தம் சைவம் என்பார்கள். சைவன் என்றுற் சிவத்தோடு சம்பந்தம் வைத்தவன் என்பது பொருள். உயர்ந்த இடத்திலே சம்பந்தம் செய்வது யாவரும் விரும்புகின்றதொரு காரியம். ஆனல் அப்படிச்செய்வதற்குப் பெரிய ஆயத்தங்கள் வேண்டும்.

ஒரு நாள் வண்ணைபண்ணைச் சிவன் கோயிற் சந்நிதியில் ஆறுமுக நாவலர் அவர்கள் 'ஆயத்தமில்லை' என்றுர்கள். அன்று அந்தச் சந்நிதியில் பிரசங்கம் செய்யும் முறை மற்றொருவருடைய முறை. அவர் அன்று வரவில்லை. சபையில் உள்ளவர்கள் நாவலர் அவர்களைப் பிரசங்கஞ் செய்யும்படி கேட்டார்கள். நாவலர் அவர்கள் 'ஆயத்தமில்லை' என்றுர்கள். அது கேட்டுச் சபையோர்கள் சிரித்தார்கள். உடனே நாவலர் அவர்கள் 'ஆயத்தமில்லை' என்ற வார்த்தையை மூன்றுதரம் உரக்கச் சொல்லி நாம் சிவத்தோடு சம்பந்தம் வைக்க ஆயத்தமில்லை என்று அத்தொடரின் பொருளை விரித்து, ஆயத்தஞ் செய்து வரும் பிரசங்கத்திலும் பார்க்க உயர்ந்ததொருபிரசங்கத்தை 'ஆயத்தம் இல்லை' என்பது பற்றிப் பொழிந்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பீதாம்பரன் என்பது மற்றொரு பெயர். பீதாம்பரனுகிய ஸ்ரீ கிருஷ்ணனைத் தரிசிக்கும் பொருட்டுக் கந்தை வஸ்திரதாரியாகிய குசேலர் ஒரு நாள் துவாரகை வாயிலை அடைந்தார். வாயிற் காவலன் தடுத்துப் பீதாம்பரனைத் தரிசித்தற்கு உயர்ந்த பீதாம்பரம் தரித்துச் செல்லவேண்டும்; அவனுடன் பேசும்போது கைகாட்டிப் பேசுவதானுல், ஒவ்வொருவிரலிலும் இரத்தினம் அழுத்திய கணையாழி தரித்திருக்கவேண்டும் என்றன். குசேலர் அப்படி ஆயத்தத்துடன் நான் வரவில்லை என்றுர்.

நாவலர் அவர்களின் ஆயத்தமில்லாப் பிரசங்கத்திலிருந்தும் குசேலர் கதையிலிருந்தும் உயரிய சம்பந்தத்துக்கு ஆயத்தம் அத்தியாவசியகம் என்பதை உணருகின்றேம்.

**வைதிகம்**

சிவத்துக்குமேலே ஒரு பொருள் இல்லை. அப்படிப்பட்ட பொருளோடு சம்பந்தம் வைப்பதானால் எத்துணை ஆயத்தம் வேண்டுமென்பது ஊகிக்கத்தக்கது. சிவசம்பந்தமான சைவத்தை ஒருவன் அணுகுவதற்குரிய ஆயத்தமே வைதிகம் எனப்படும்.

வேதம் என்ற சொல்லிலிருந்து பிறந்தது வைதிகம். வேதம் 'வித்' என்ற அடியிலிருந்து பிறந்தது. 'வித்' என்பதற்கு அறிவு என்பது பொருள். வேதம் அறிவைச் செய்வது. வைதிகம் அறிவின் பரிபூரணம். முதலில் மனிதன் அறிவறிந்த மகனுதல் வேண்டும். தூய அறிவோடு சம்பந்தப்படுதல் வேண்டும். அறிய வேண்டியவைகளை அறிந்து நம் அறிவைத் தூய்மை செய்யவேண்டும்.

கண்டகேட்டபொருள்களை அப்படியே அறிவது அறிவாகாது. அப்பொருள்கள் மூலம் மெய்ப்பொருளை விசாரித்தறியும் அறிவே மெய்யறிவு. கயிற்றைப் பாம்பு என்று தீர்த்து விடுதல் ஆகாது. பாம்புத்தோற்றத்தின் மூலம் கயிற்றின் இயல்பை அறியவேண்டும்.

நாங்கள் காணப்பட்ட உலகத்தில் வாழுகின்றோம்; இந்தச் சரீரமும் ஒரு உலகமேயாம்; இந்த உலகங்களிலேயல்லாமல், சிந்தனைகளாகிய எண்ணிறந்த கருத்துலகங்களிலும் வாழுகின்றோம். இந்த உலகங்களெல்லாம் வருகின்றன போகின்றன. 'இந்த உலகங்கள் எங்கிருந்து வருகின்றன? எங்கே போகின்றன?' என்ற கேள்வியை வியாசபகவான் பிரம சூத்திரத்திலே, இரண்டாவது சூத்திரத்தில் எழுப்புகின்றார். திருவள்ளுவ தேவர் அக்கேள்விக்கு விடையிறுப்பவர் போன்று, 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்கிறார். இந்த உலகங்களெல்லாம் போக்குவரவு புரிதற்குக் காரணமாய் ஒரு முதல் இருக்கின்றதென்கின்றார்; முதல் விதை முதல், வினைமுதல் என இருவகைப்படும். இங்கே வள்ளுவதேவர் சொல்லும் முதல் வினைமுதலாயிருக்கும். இந்த வினைமுதலை அறிந்தால், உலகத்தின் போக்குவரவு விளங்கும் என்பதே தேவர் கருத்து. அன்றி, மாற்றலரிதான மனக்கவலைகளை மாற்றும் மருந்தும் அதுவேயாகும்.

நாமோ அறியாமையாகிய சமுத்திரத்துள் மூழ்கிக்கிடக்கின்றோம்; செய்வதின்னது தவிர்வதின்னது என்று தெரியாமல் தவிக்கின்றோம். அப்படிப்பட்ட நாம் தனக்குவமை இல்லாதவனும், உலகமுதலும் ஆகிய ஆதிபகவனோடு சம்பந்தஞ் செய்வது எப்படி என்பது கேள்வி.

இந்தக் கேள்விக்கு விடைகாண்பவர்கள் போன்று,

'இந்தச் சரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்,' என்கின்றார்கள் நாவலர் அவர்கள். முத்தி என்ற வார்த்தைக்கு விடுதல் என்பது பொருள். அறியாமையை விடுதல் என்றவாறு. இந்தச் சரீரம் அறியாமையினின்று விடுபட்டுச் சிவசம்பந்தஞ் செய்வதாகிய இன்பம் சித்திக்கும் பொருட்டுக் கிடைத்திருக்கிறது. நாம் இந்தச் சரீரமாகிய உலகத்திலிருந்து கொண்டு அதை எவ்வாறு உபயோகிக்கின்றோம் என்பது ஒவ்வொருவரும் சிந்தித்தற்குரியது. ஒரு யந்திரத்தைப் பெற்றால், அதனுடன் ஒரு புத்தக முங்கிடைக்கின்றது. அதில் அதை உபயோகிக்கும் வழி காட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சரீரத்தையும், அதனுள் அமைந்திருக்கும் நுண்கருவிகளாகிய அந்தக்கரணங்களையும், காணப்படும் உலகையும், கருத்துலகுகளையும் எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்பதை அறிதற்கு ஆயிரக்கணக்கில் நூல்கள் அருளப் பட்டிருக்கின்றன. 'வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்.' நூல்களெல்லாம் இந்த இரண்டு நூல்களில் அடங்கும். இவற்றுள் முதற் கணின்றதாகிய வேதநூல் மேற்கண்ட சரீராதிகளின் இயல்பையும் உபயோகங்களையும் எடுத்துரைக்கும். அதுதான் வேத நெறி என்றும், வைதிகம் என்றுங் கூறப்படுவது. வைதிகத்தில் வருணாசிரம தர்மம் உயிர் போன்றது. பண்டைக்காலத்துக் குரு குலங்கள், அவரவர்க்குரிய வருணாசிரம தர்மத்தில் அவரவரை நிறுத்தி, ஒவ்வொருவருந் தத்தம் அந்தக்கரணங்களைச் சுத்தி செய்தற்கு வழியை வகுத்துக் காட்டிக் கொண்டிருந்தன. இதிகாசங்களில் விதந்து பேசப்படும் மகாபுருஷர்களெல்லாம், குருகுலங்களிலிருந்து, முற்றும் உணர்ந்த முனிவர்களுக்கு ஏவல் செய்து அவர்களிடந் தருமம் பயின்றவர்களாயிருந்தார்கள். தரும மூர்த்தியான ஸ்ரீகிருஷ்ணன் இளமையில் குருகுலவாசஞ் செய்து சாந்தீபமுனிவரிடம் தருமம் பயின்றவன்; குசேலரின் சகபாடி. ஸ்ரீராமன் வசிட்ட ராசிரமத்தில் வளர்ந்தவன்; விசுவாமித்திரருடன் வாழ்ந்தவன். அவனுக்கு வித்தைகற்பித்தவர் வசிட்டர். ஒரு சமயம் தாடகை ஒரு பெண்ணையிருக்கின்றாளே, அவளுக்குப் பாணப் பிரயோகம் செய்யலாமா என்று யோசித்தவன் இராமன். அருச்சுனன் பெரியோர்களுக்கும் இனத்தவர்களுக்கும் பாணம் விடலாமா என்று யோசித்தவன். இப்படியான தருமப் பிரச்சினை அணுக்குண்டுலகில் இல்லை.

ஒரு அணுக்குண்டைக் கண்டு பிடிப்பதுதான் ஒரு விஞ்ஞானியின் விவேகமானதும் உந்நதம் ஆனதும் ஆகியவேலை. அப்பால் யார்தலையில் அது விழுந்தாலும் அதைப்பற்றிய விசாரம் விஞ்ஞானிக்கு இல்லை. பனங்காய் யார்தலையில் விழுந்தாலும் விழலாம். அது பற்றிய கவலை பனைக்கில்லை. இவ்விஷயத்தில் இக்கால விஞ்ஞானி

பூனமரம் போல உயர்ந்து நிற்கின்றன். இவ்வாறான விஞ்ஞான அறிவுக்கு அவைதிகம் என்பது பெயர். அவைதிகமாவது அறிவை மண்ணுக்குவது. அறிவு, அறியவேண்டுவனவற்றை அறிந்து, அந்தக் கரணங்களைத் தூய்மை செய்து, சிவசம்பந்தம் உறுதற்கு உபகாரஞ் செய்வது. அதுவே வைதிகம். சைவத்தில் சென்று முடியாத-சைவத்தைத் தீண்டாத அறிவு வைதிகம் ஆகாது. சைவத்துக்கு மற்றொரு பெயர் சத்திநிபாதம். திருவருள் பதிதல் என்பது பொருள். வைதிகம் ஒருவனைச் சத்திநிபாதன் ஆதற்கு ஆயத்தம் செய்து வைப்பது.

'வேதநூல் சைவநூல்' என்ற சித்தியாரில், அவையிரண்டும் முறையே 'உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும்' ஓதப்பட்டன என்பது உரைக்கப்பட்டிருக்கின்றது.

**வைதிக சைவம்**

உலகர் ஆவார் உலகத்தோடு தொடர்புபட்டவர்கள்; உலகத்தின் இயல்பை ஆராய்ந்து அதனின்றும் விடுபடமுயல்பவர்கள். முனிவர்கள் அப்படிப்பட்டவர்கள். அவர்களுக்குரிய நூல் வேதநூல். வேதநூல் வழிநின்று உலகியல்பை உள்ளவாறுணர்ந்து, உள்ளந்தூயர் ஆனவர்கள், அடுத்தபடியிற் சத்திநிபாதர்கள் ஆவார்கள். அஃதாவது திருவருள் வயப்பட்டவர் ஆவார்கள். அந்நிலையில் அவர்களுக்கென்று செயலில்லை. அவர்கள் செயல் திருவருட்செயலாயிருக்கும். அந்நிலையிற் சத்திநிபாதர்கள் என்று சொல்லப்படுவார்கள். அவர்களே சைவர்கள். அவர்களுடைய சமயம் சைவம். சைவம் வைதிகத்தின் பெறுபேறாய், வைதிகத்தின் வழி வருவது. அறியவேண்டியவைகளை அறிகிறமுறையில் அறிந்து தூய்மை எய்திய வழி உதிப்பது சைவம்.

சைவம் அறுவகையாகிய அகச் சமயங்களுள் ஒன்று. 'மெய்தரு சைவமாதி இருமூன்று' என்பது சிவஞான சித்தியார். சைவம் போலவே, அதனோடெண்ணப்படும் ஏனைய ஐந்து அகச்சமயங்களும் வைதிகத்தின் வழி - வைதிகமுதிர்வில் - அதன் முடிவில் உதிப்பனவேயாம்.

வைதிகம் முற்றி அதன்பயன் ஆக வராத சைவம், சைவமாகாது. அது அசைவம்; வெறுஞ் சூனியமேயாம். அவ்வாறே ஏனைய அகச் சமயங்களும் வைதிகத்தின் வழி வாராதவைகள் கொள்ளற்பாலனவாகா. அவை பாசண்டம் எனப்படும். 'அறுவகைப் பாசாண்டிகரும்' என இழித்துக் கூறுவர், வைதிகத்தின் வழிவாராமல் பெயர் மாத்திரையால் தம்மை அறுவகைச் சமயத்தவர் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்களை.

ஆகவே சைவமானது வைதிகத்தின் விரோவாய் இருத்தல் வேண்டும்; வைதிகமாவது சைவம் முரோ கொள்ளக்கூடியதாயிருக்க வேண்டும். சைவத்தில் முற்றுத வைதிகம், அவைதிகம்; அவ்வாறே வைதிகத்தின் வழிவாராத சைவம் அசைவம்.

வைதிகத்தில் உயிர்போன்றிருப்பது வருணாசிரம தர்மம். சைவத்தில் அதற்கு முக்கியத்துவம் இல்லை. சைவத்திலே உயர்ந்த வருணத்தில் உதித்தவன், தாழ்ந்த வருணத்தவனிடம் பாடங்கேட்கலாம். வேளாளராகிய மெய்கண்டாரின் மாணவர், ஆதிசைவராகிய அருணந்திசிவாசாரியர். சத்திநிபாதமாகிய சைவத்தை அடைந்தவர்களுக்குச் சாதி குலம் பிறப்பால் எய்தும் உபாதிகளில்லை. அவற்றுல் அவர்கள் நிலைதவறுவதில்லை. பிரளயாகலரை மாயையும், விஞ்ஞானகலரை மாயை கன்மம் இரண்டும் பந்திப்பதில்லை. அதுபோலவே சத்தி நிபாதரான சைவரைச் சாதி குலம் பிறப்புப்பந்திப்பதில்லை.

தில்லைவாழந்தணரும் திருநீல கண்டத்துத்துக் குயவனாரும் ஒரு சாதியே.

'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' என்ற வாக்கு இப்பொழுது பயின்று வழங்கப்படுகின்றது.

சைவநிலை அடைந்தவர்கள் குலத்தாற் பாதிக்கப்படாதவர்கள்; அவர்கள்பாற் சாதிவேற்றுமை இல்லை. 'சாதியினும் சமயமே அதிகம்' என்றார்கள் நாவலர் அவர்கள். சைவர்கள் சரியைச்சாதி, கிரியைச் சாதி, யோக ஞானச் சாதி என்ற சமயச் சாதியைச் சேர்ந்தவர்கள்; பிறப்புச் சாதியால் விடுபட்டவர்கள். அவர்கள் நூறு தெய்வத்தை வணங்குவதில்லை. நூறு தெய்வமாய் நிற்கின்ற ஒரே ஒரு தெய்வத்தை வணங்குபவர்கள். அவர்களுக்கு 'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' என்பது பொருந்தும்.

வைதிகத்தில் எத்தனையோகுலமும், எத்தனையோ தெய்வமும் உண்டு. ஒரு பெரியவர் சொன்னார், சந்நிதியில் சாதியில்லை, சந்நிதிக்கப்பாற் சாதி வேற்றுமை உண்டு என்று. அது சிந்தனைக்குரியது.

சந்நிதியை அணுகுவோர் சத்திநிபாதர்கள். அவர்கள் சுடச் சுடரும் பொற்றிரள்கள். அவர்களுக்கேது சாதி?

சந்நிதியை அணுகாத வைதிகர்கள், பிறப்புப் புத்தி போகாதவர்கள்; போகாதவரையில், போதற்கேற்ற முறையிற் சாதியாசாரத்தின் வழி ஒழுகற்பாலர். சாதியால் வரும் பந்தம் போதற்கே சாதியாசாரம் மேற்கொள்ளப்படுவது.

இந்த இலங்கையில் ஒருசாதியார், மற்றொருசாதியாரை அடக்க முயல்கின்றார்கள். இது சாதிப்புத்தி. அவ்வாறே அடக்கப்படுபவர்களும் ஆதிக்கம் வந்தால் மற்றவர்களை அடக்குவார்கள். அவர்களுக்கும் அதேபுத்தி நிறைய உண்டு. இதற்குச் சாதிப்புத்தி போய்விட்டது என்று செபிப்பது மருந்தாகாது. செபிக்கச் செபிக்க இன்னும் சாதிவியாதி கூடும். அந்த வியாதியைப் போக்கும் மருந்துதான் வருணசிரம தர்மம். அது மற்றொருவரை நிந்திப்பது, நசுக்குவது அன்று.

ஒரு பெரியவர் சொன்னார் சைவன் ஆவான் தீண்டாதான் என்று. தன் வாழ்க்கையில் மற்றொருவரைத் தீண்டாமல், வாழ்பவனே சுதந்திரன்; சைவன். ஒருமிடறு தண்ணீருக்குக்கூட இரந்து வாய் பிளக்கிறவன் எப்படிச் சைவனுதல் முடியும். எவன் ஒருவன் மற்றொருவரைத் தீண்டாமல் வாழ்வானே, அவன் மற்றொருவரால் தீண்டப்படான் என்பது மற்றொருவிதி.

வைதிகத்தில் உயர்ந்த வருணத்தான் தாழ்ந்த வருணத்தானிடம் பாடங்கேட்கலாகாது. கேட்டாற் பாடஞ் சொல்லுகிறவனின் சாதி வியாதி கேட்கிறவனுக்கு நோய்செய்யும். வைதிகத்தில் நடக்கும் பாடம் உலகபாடம்; சைவத்தில் நடக்கும் பாடம் சத்திநிபாத பாடம். அஃதாவது ஞானபாடம். ஜனகரிடம் பிராமணர்கள் பிரம விசார பாடம் கேட்டார்கள்.

ஞானபாடஞ் சொல்லுவோன் சாதிப்புத்தியில்லாதவன்; அவன் புத்தி திருவருட்புத்தி; புத்தியை ஒப்பித்தவன். உலகபாடம் சொல்லுவோன் புத்தியைத் தன்வயத்தில் வைத்திருப்பவன். அவனுக்குச் சாதி குலம் பிறப்புப் புத்தி போகாது. அவனிடம் பாடங்கேட்டால் அவன் தீக்குணம் கேட்போரைப் பற்றிக்கொள்ளும்.

பாரத தேசம் ஆயிரக்கணக்கான வருஷங்களாக மிலேச்சர்களுக்கு அடிமைப்பட்டு, அவர்களிடம் உலகபாடம் படித்து வந்தது; வருகின்றது. அதனாலே அது தனது பாரத கலாசாரத்தை இழந்து விட்டது.

இமயமலையிலே ஒரு சரித்திரக் கணவாயிருக்கிறது. அதன் வழியாலே தான் மிலேச்சர்கள் ஆதியில் வரத்தொடங்கியவர்கள். அவர்கள் தெற்கு நோக்கி வந்தார்கள். பாரத கலாசாரமும் தெற்கு நோக்கி வரத் தொடங்கியது. மகமதியர்கள் தெற்கே அதிக நாசம் செய்யவில்லை. சைவமும் ஆலயங்களும் தெற்கேதான் உயிர்வாழ்ந்தன. இப்பொழுது மிலேச்சர்கள் பத்துத்திக்கிலுமிருந்து வரலாம். இனி ஆலயத்துக்கு இடமில்லை. இறுதியாகச் சைவம் சரணடைந்த இடம் யாழ்ப்பாணம் ஆகலாம். கடல் சூழ்ந்திருந்தது, கலாசாரம் சிறிது காலங் குடியிருப்பதற்கு வாய்ப்பாயிருந்தது.

இப்பொழுது உலகத்தில் வைதிகமும் இல்லை; சைவமும் இல்லை. இவன் ஒரு வைதிகம் என்று நிந்தனை தொடங்கியிருக்கிறது.

காசிபர் சூரன் முதலிய தம் புதல்வர்களை இருத்திச், "சான்றவர் ஆய்ந்திடத் தக்க ஆம் பொருள் மூன்றுள" என்று ஒரு பாடந்தொடங் கினர். அவர்கள் நித்திரை போனார்கள். அதுகண்டு அவர் அப் பாடத்தை நிறுத்தித், 'தருமம் என்று ஒரு பொருள் உளது' என்று பாடந் தொடங்கினர். அது வைதிகத்தின் ஆரம்ப பாடம். 'அறஞ் செய விரும்பு' என்ற பாடத்துக்கு மூன்று படி கீழேயுள்ளது. அறத் தைத் தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என நான்காக வகுப்பர். சார்புணர்ந்து சார்புகெட ஒழுகுதல்தான் மோக்ஷம். தீச்சார்பு கெடு தல்தான் மோக்ஷம். அஃதாவது விடவேண்டியவைகளை விடுதல். இது அறத்தின் பரிபூரணம். வீடுபேற்றுக்கு அது தொடக்கம். அதற்குத் தருமம் தொடக்கம். அந்தத் தொடக்க பாடத்தைக் காசிபர் தொடங் கினர். அதனைப் பார்த்துக் கொண்டிருந்தவள் மாயை "நன்னயை மாய வள் நகைத்துக் கூறுவாள்". அவள் களுக் கென்று சிரித்துக் காசி பரைப் பரிகாசஞ்செய்துவிட்டாள். இந்தப் பிள்ளைகளுக்குந் தருமத் துக்கும் எவ்வளவு தூரம். சருகு பக்ஷணிகளாகிய முனிவர்களின் வற்றல்களாகிய பிள்ளைகளுக்குச் சொல்லுகிற பாடங்களை, மாயையாகிய நான் பெற்ற பிள்ளைகளுக்குத் தொடங்குவது அடாது என்றுள் அவள். காசிபர் நாணித் தலைகுனிந்து உபாத்தியாயர் வேலையை ஏடுகட்டி னர். மாயை அந்தப் பிள்ளைகளைச் சுக்கிரனிடம் அழைத்துத் சென்றுள்.

சுக்கிரன் 'கொலையொடு களவு காமம் நிலையெனப் புரிதிர்' என்று பாடந்தொடங்கினர். ஏதோ ஒரு கலியுகத்திலேதான் அந்தப் பாடம் நடந்திருக்கவேண்டும். இப்பொழுது அதேபாடந்தான் இந்த உல கத்தில் நடக்கின்றது.

கலியிலே எவருக்காயினுந் தருமம் விளங்காது; விளங்குதற்கு வழியுமில்லை. எங்கேயாவது விளங்கினவர்கள் அருமையின் அருமை யாக இருந்தால் அவர்கள் இறுகக் கண்ணை மூடிக்கொள்வார்கள்; இந்த உலகத்தைப் பார்க்க மாட்டார்கள். கலி 5000-த்துக்குப் பின் கண்திறக்கவே மாட்டார்கள். இது நன்கு சிந்தித்தற்குரியது.

இப்பொழுது வைதிகர்கள் என்று இருப்பவர்கள் அவைதிகர்கள். வேதப் பொருளை ஒரு நாள் ஜனகர் முதலியவர்கள் தெளிவிக்க வேண்டுமென்று தக்ஷிணாமூர்த்தியிடம் கேட்டார்கள். இப்பொழுது அவ்வளவு கட்டமில்லை. பீ. ஏ. பரீட்சைக்குச் சம்ஸ்கிருதம் எடுப் பவர்கள் வேதத்துக்குப் பொருள் விரிப்பார்கள். மிலேச்சர்கள் பொருள் விரித்த புத்தகம் அவர்கள் கையில் இருக்கிறது. 'நரிப்பாய் நாயேன்

இருப்பேனே' என்பதற்கு 'நரிபாய்ந்த நாய்போல இருப்பேனே' என்று ஆங்கிலத்திற் பொருள் விரித்த திருவாசகமும் அவர்களிடம் உண்டு.

வேதாங்கங்கள் தெரியாதவர்களுக்கு வேதம் விளங்காது; அதுவும் குருமரபில் வரவேண்டும். அது நிற்க.

சைவம் முதலிய உண்மைச் சமயங்களுக்கு இப்பொழுது இப்பொழுதைய வைதிகத்துக்குரிய மதிப்புக்கிடையாது.

சைவத்தை தத்துவக்கட்டுள்ள, தருக்கரீதியில் அமைந்த ஒரு சமயம் என்று மேலைத்தேசத் தத்துவ சாத்திரிகள் கொள்ளார்கள். அவர்களுக்கு ஒரு சமயம் என்றால் வளர்ந்த வரலாறு தெரியவேண்டும். வாற்பேத்தையிலிருந்து குரங்குக்கு வந்து அப்பால் வால்போய் மனிதன் உதித்தான் என வரை வரையாக வளர்ச்சி தெரியவேண்டும்; கிரேக்க சமயம் யூத சமயம் வளர்ந்த வரலாறுபோல் வளர்ச்சி வரலாறு சைவத்துக்கு இல்லை என்பார்கள்.

இக்கால சமயதத்துவ ஆராய்ச்சிக்காரர் உலோகாயதம் பௌத்தம் முதலிய புறச் சமயங்களுக்குக் கொடுக்கும் மதிப்பைத்தானும் சைவத்துக்குக் கொடுப்பதில்லை. அது ஒரு குருட்டுச் சமயம் என்பது அவர்கள் கருத்து. அவர்கள் சொல்லுவதில் ஒரு உண்மையுண்டு. குருடர்களுக்குத் தெரியாத சமயம் அந்தச் சமயம். நாமோ குருடர். அதனைக் காணக் காட்ட நம்மால் முடிவதில்லை. அவ்வளவில் அவர்கள் சொல்வது நீதி.

இமாசலக் குகையிலிருந்து, ஒரு சித்தன் அம் மலை முழுவதிலு முள்ள மூலியின் குணங்களைச் சொல்லி விடுவான். அவனிடம் பரிசோதனைக் கருவி யாதும் இல்லை. அவனுடைய அந்தக்கரணங்கள் பளிங்கு போன்று பரிசுத்தமானவை. அவன் எல்லா மூலிகளைப் பற்றியும் சொல்லுவான். இதனை அழுக்கு மூடிய அணுக்குண்டு மனிதன் நம்பமாட்டான். அவன் ஒரு மூலியை எடுத்து, ஒரு நூறு குரங்குகளிற் பரிசோதித்து, ஒரு நாள் தான் பெரிய காரியத்தைக் கண்டதாகச் சரித்திரபூர்வமாகச் சொல்லுவான். முன் அதுபற்றிச் சொன்னவர்கள் குருட்டுத்தனமாகச் சொல்லி இருக்கிறார்கள் என்பான். யார் குருடர் என்பது கண்ணுள்ளவர்களுக்குத்தான் தெரியும்.

விஞ்ஞானிகளர், பிரளயாகலர் கண்ட உண்மைகளுக்கு இக்கால மனிதன் விரும்பும் சரித்திர வளர்ச்சி எப்படி வரும்! மனிதன், தான் வளர்ந்து அந்த உண்மைகளைக் காணவேண்டும் என்கின்றது சாத்திரம்,

மனிதன் வைதிகத்தின் மூலவேரான தர்மத்தை முதலில் ஆராய வேண்டும்; ஒவ்வோர் சமயத்தில் இதிகாச புருஷர்கள் தர்மத்தை அறிந்து நடக்க எவ்வளவு சங்கடப்பட்டார்கள் என்பதை உணர வேண்டும்.

விதுரர் வீட்டுமர் முதலிய மகாஞானிகள்; துரியோதனனிடம் வாழவேண்டி நேர்ந்ததால் எவ்வளவு தர்மசங்கடப்பட்டார்கள்.

"தெண்ணீரடு புற்கையாயினும் தாடந்தது உண்ணலின் ஊங்கினி யதில்" என்கின்றது தமிழ் வேதம். அன்னத்தை அறி என்கின்ற வேதம். உனக்குக் கீரை தின்னத் தெரியுமா? என்று அது கேட்கிறது. அதற் குரிய சடங்கு செய்யாமல் உண்ணுகிறவன் மலத்தை உண்ணுகின்ருன் என்கிறது அந்தவேதம்.

இலவச தேயிலைப் பானம் அமெரிக்க மா இவைகளைப் பிள்ளை கள் வயிற்றில் திணிக்கிறோம். மலத்தை உண்டால் மந்தந்தான் பலம். மந்தர்கள் வாழ்க்கையை எப்படி உணர முடியும்? இதனை நாம் சிந்திக்கவேண்டும். மனிதன் உணவுக்கும் உடைக்குமாகத் தான் அருமந்த மனிதப் பிறவியை எடுத்தானு?

ஓ மனிதனே உன் தருமம் என்ன? நீ வைதிகனுதற்கு முயல். ஒரு நாள் சைவன் ஆவாய்.

**நமது சமயம்**

**வைதிக சைவம்.**

* * *

இவ்வருமைபாகிய மனிதப்பிறப்பை உண்டாக்கியது உயிர்க்குயிராகிய கடவுளை மனம் வாக்குக் காயங்களினுலே வழிபட்டு அழிவில்லாத முத்தியின்பத்தைப் பெற்று உய்யும் பொருட்டேயாம். சரீரம் கருப்பையில் அழியினும் அழியும். பத்துமாதத்திற் பிறந்தவுடனே அழியினும் அழியும். மூன்று வயசுக்கு மேற் பதினுறுவயசுவரையி லுள்ள பாலாவத்தையின் அழியினும் அழியும். அதற்கு மேல் நாற்பது வயசுவரையி லுள்ள தருணவத்தையின் அழியினும் அழியும். அதற்குமேற்பட்ட விருத்தாவத்தை யின் அழியினும் அழியும். எப்படியும் இந்தச் சரீரம் நிலையின்றி அழிவது உண்மை யாமே. அழியுங்காலமோ தெரியாதே. இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ, யாது வருமோ, அதுவும் தெரியாதே. ஆதலால் இந்தச் சரீரம் உள்ளபொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங் கருணைக்கடலாகிய கடவுளை வழிபட்டு உய்யவேண்டும். — நாவலர்

* * *

உ

சிவமயம்

# பெரிய புராணமும் சைவசித்தாந்தக் கொள்கையும்

வித்துவான் பொன். முத்துக்குமாரன் (B. O. L.)

இலக்கியங்கண்டு அதற்கு இலக்கண மியம்புவர் இயற்றமிழ்ப் புலவர்கள். முற்காலத்து வாழ்ந்த தமிழறிஞர்கள் தம் மாணாக்கர்க்குக் கல்வி கற்பிக்கும்போது முதலில் நைடதம், பாரதம், கம்பராமாயணம் முதலிய இலக்கியங்களைப் போதித்து, அதன்பின்னரே நன்னூல் முதலிய இலக்கணநூல்களைப் போதிப்பர். அவ்வாறே சங்கஇலக்கியங் களைக் கற்பித்தபின்னரே தொல்காப்பியம் கற்பிக்கப்படும். இயற்ற மிழின் திறத்தை அறிதற்கு அமைந்த இந்த முறைமைபோல சைவ சமயத்தின் இலக்கணத்தை அறிதற்கும் அவ்வறிவு துணையாக வாழ்க்கை நடத்துதற்கும் விருப்புடையோர் முதலில் சைவப்பேரிலக்கியமாய பெரியபுராணத்தை நன்குகற்று, அதன்கண் நுட்பமாயமைந்த சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை 'உந்திகளிறுஉயர்போதம்சித்தியார்' முதலாம் மெய்கண்ட சாத்திரங்கள் வாயிலாகப் பின்னர்த் தெளிந்து கொள்ளல் வேண்டும். அங்ஙனமன்றி, தனியாகச் சாத்திரங்களைக் கற்பதும், பெரிய புராணத்தைக் கற்றுச் சாத்திரங்களைக் கல்லாது விடுவதும் பெரும் பயனைத் தராமாட்டா.

**அன்புநெறி அமைதல்**

இராமாயணம் முதலியன, 'தக்கவின்னதகாதன வின்னவென்று' அறிவுகாட்ட அந் நெறிநின்று சான்ரோராய பெருமக்களின் வரலாற் றைக் கூறுவனவாம். அந் நூல்கள் மக்களை மக்களாய் வாழ வழி காட்டுவன. மக்களாய் வாழ்ந்து சிறப்புற்ற தக்கோர்கள் தமது பண் பட்ட அறிவின்முதிர்ச்சியினாலும் முன்னைத்தவத்தின் நன்மைப் பாட்டினாலும் சிவனே ஆன்ம நாயகரென்றும் அவர்க்கன்பு செய்தலே தமக்கு இன்பமாவது என்றும் கருதும் உள்ளப்பாங்கினைப் பெறுவர். இக்கருத்து,

புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்று புகலுமாச் சிரம
அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப் பொருளை மிகத்தெளிந்தும் சென்றுற் சைவத்
திறத்தடைவர் இதிற் சரியை கிரியாயோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்

என்னும் சிவஞானசித்தித் திரு விருத்தத்தால் தெளியப்படும். இவ்வாறு இறையன்பில் தலை நின்ற மெய்யடியார்கள் இறைவனை மட்டுமன்றிக் குருவினையும், லிங்கத்தினையும் சிவவேடத்தினையும் சிவமெனக் கருதி அன்பு செய்து உய்ந்தனர். அவர் வரலாற்றைக் கூறுவதே பெரிய புராணமாகும்.

**மெல்வினையும் வல்வினையும்**

தன் மகனிடத்துக் கழிபெருங் காதலுடைய தாயானவள் தனது மனை செல்வம் முதலிய எல்லாவற்றிலும் மேலாக அம்மகனையே கருதுகின்றாள். அதுபோல, சைவநாயன்மார்களும் உலகியலார் போல மனைவி மக்கள் முதலிய சுற்றமும் மனை வயல் முதலிய செல்வமும் உடையராயினும் சிவனையும் சிவனடியார்களையுமே மேலாக நேசித்தனர். இளையான்குடிமாறர்க்கு ஒரு போது வறுமையுண்டாக, அவர் தமக்கும் தம்மனையாட்கும் உணவில்லையே என்று நினையாது அடியார்களை அமுது செய்விக்க முடியவில்லையே என்று வருந்தினர் என்றும், குங்குலியக்கலயர் நாடோறும் சிவாலயத்தில் குங்குலியத் தூபமிட்டு வருங்கால் ஒருபொருளும் இல்லையாம்படி வறுமை வந்துற்றதாக, தமது மனையாள் கொடுத்ததாலியைக் கொண்டு பொருள் பெறச் சென்றவர் வழியிலே குங்குலிய வியாபாரியைக் கண்டதும் தமது மனைவிமக்கள் முதலானோரின் பசித்துன்பத்தை நீக்குதலையும் மறந்து, குங்குலியத்தை விலைக்குவாங்கிக் கோயிலுட் சென்று நறுந் தூபமிட்டாரென்றும் பெரிய புராணத்தில் அறிகிறோம். இந்நாயன்மார்கள் அன்புப் பணியில் இன்பம் கண்டனர். இறைவனிடத்தும் அடியார்களிடத்தும் வைத்த பேரன்பு காரணமாக இவ்வாறு செய்யும் தொண்டுகள் மெல்வினைகள் எனப்படும். இம்மெல்வினைகள் பார்ப்போர்க்கு எளியனவும் இனியனவுமாயிருத்தலால் இப் பெயர் பெற்றன. பலபிறவிகளிலும் மெல் வினைகள் பலவும் இயற்றி அன்பென்னும் புணையை நன்கிறுகப்பற்றி நிற்போர் மறுபிறவிகளில் அந்த அன்பின் முதிர்ச்சியால், கண்டார்க்கு அரியனவான செயல்களைச் செய்யவும் வல்லவராவர். சிவனடியாரை அமுது செய்வித்தற் பொருட்டுத் தமது மகனை அரிந்து கறிசமைத்த சிறுத்தொண்டர் செயலும், சிவபூசைக்கு வைத்த பாற்குடத்தைக் காலால் எற்றிய தம்தந்தையைத் தண்டித்த சண்டீசர் செயலும் செய்தற்கரிய செயல்களாம். இது,

> "வரங்கள் தரும் செய்ய வைரவர்க்குத் தங்கள்
> கரங்களினுல் அன்றுகறி யாக்க — இரங்காதே
> கொல்வினையே செய்யும் கொடுவினையே ஆனவற்றை
> வல்வினையே என்றது நாம் மற்று."

"பாதக மென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும்—சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
சண்டீசர் தம் செயலாற்றுன்."

என்னும் திருக்களிற்றுப் படியாரிலுள்ள திருச்செய்யுள்களாலறியப்படும்.

**அருள்வெளிப் பாடு**

சிவநேயம் முதிரமுதிர முன்னர் மெல்வினையும் பின்னர் வல்வினையும் ஆற்றவல்ல பெரியோர்கள், உலகியலாரை நோக்க ஆன்ம வளர்ச்சியில் இறப்பப் பெரியராயினும் சிவஞானம் கைவரப்பெற்ற சீவன் முத்தரல்லர். இவர்கள் உள்ளத்தில் தம்நினைவற்றுச் சிவநினைவே தழைத்திருத்தலை உயிர்கள் தோறும் ஒளித்திருக்கும் இறைவன் உள்ளவாறே அறிவன்.

"அகத்துறுநோய்க்கு உள்ளினர் அன்றிச்
சகத்தவரும் காண்பரோ தான்"

என்றபடி உலகத்தவரால் அறிந்துணர முடியாத அவ்வடியார்களது பக்குவத்தினையறிந்து அவர்க்கு அருள் செய்யும் பொருட்டு இறைவனே மானிடச்சட்டை சாத்தி நேர்முகமாகத் தோன்றுவன்.

**செயலறுதல்**

ஆன்மாவானது அஞ்ஞானத்தினால் மயங்கி ஆசைவழிச்சென்று தன்னையும் தன்சூழலையுமே நினைந்து இடையருது தொழிற்படுகின்றது. பின்னர் அன்பின் வழிநின்று சிவனையும் சிவனடியார்களையும் கனவிலும் நனவிலும் மறவாது, அன்பர்கட்குச் செய்யும் தொண்டே தொழிலாக அவர்பால் வைத்த அன்பே இன்பாக அமைகின்றது. ஆசைநிலை, அன்புநிலை ஆகிய இவ்விருநிலையிலும் ஆன்மாவின் வினை முனைப்பு அடங்குவதில்லை. வினைசெய்வதற்கான முனைப்பு அடங்குதற்குச் சிவஞானம் கைவரப்பெறல் வேண்டும். சிவஞானம் கைவருதற்குத் திருவருள் குருவடிவாய் வந்து நயனம், பரிசம் முதலிய தீக்ஷைகளால் அஞ்ஞானத்தைப் போக்கி ஆன்மாவைச் சிவமாக்கவேண்டும். சிவானுபூதியை யெய்தியவர்க்கன்றி ஏனையோர்க்குச் செயலற்ற நிலை கூடப் பெறாது.

**சிவானுபூதி**

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக்கரசுநாயனர், சுந்தரமூர்த்திநாயனர் ஆகிய மூவரும் திருவருளால் ஆட்கொள்ளப்பட்டுத் தம்செயலற்றவர்களாவர். அவர்கள், முற்கூறப்பட்ட இளையான்குடி மாறர் முதலிய மெய்யடியார்போல் பக்திவசப்பட்டுப் பணிசெய்தவரல்லர்; திருவருள் வசப்பட்டுச் சீவன்முத்தரானவர்களே. அவர்களுடைய கரணங்களெல்லாம் பசுகரணமாந்தன்மை யொழிந்து சிவகர

ணமாந்தன்மை யெய்தினமையால் அவர்களிடத்து நிகழ்ந்த செயல்க ளெல்லாம் அருட்செயல்களென்றும் அவர் வாக்கினின்றெழுந்தவை யெல்லாம் அருள்வாக்குக்கள் என்றும் கருதப்படும். இது,

பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன்றேவிக் கராம் கொண்ட — பாலன்
மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம் போலல்லாமை காண்.

என்னும் திருக்களிற்றுப்படியாரிலுள்ள திருவெண்பாவாலறியப்படும்.

பெரியபுராணத்துட் கூறப்பட்ட ஆளுடையபிள்ளையார் முதலிய மூவரும் சித்தமலமற்றுச் சிவமாந்தன்மை யெய்தி நின்றனராயினும் அந்நிலை பெருத ஏனையோர் போலத் தாமும் சரியை முதலிய நெறி நின்று வழிகாட்டியருளினர். சீவன் முத்தர்க்கும் ஆலயவழிபாடு உண்டு என்பது,

செம்மலர் நோன்ருள் சேரலொட்டா
அம்மலங்கழீஇ அன்பரொடுமரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே.

என்னும் சிவஞானபோதத்து இறுதிச் சூத்திரத்தால் தெளியப்படும். தேவாரம் பாடிய செல்வர்களாகிய மூவரும் சிவஞானம் பெற்றவள வில் சமாதிநிலைகைகூடப் பெருது, சைவம்பரக்கவும் நீறுதழைக்கவும் தொண்டு சிறக்கவும் திருத்தொண்டத் தொகை பிறக்கவும் காரண ராய், தமிழ் நாட்டிலுள்ள சைவத்தலங்கடோறும் சென்று சென்று சைவநன்மக்களிடத்தே சிவபக்திப் பயிரை வளர்த்தனர். இதனுல் அவர்கள் சைவசமயகுரவர் என்றும் போற்றப்படலாயினர்.

இதுகாறும் கூறியவற்றுல், மக்கள் மாக்களாகாமல் மாண்பெய் துவதற்கு வழிகாட்டியாக இலக்கியங்கள் இருத்தல்போல, மக்கள் அன் புவழி நின்று இன்பநிலையெய்துதற்கு உற்ற துணையாகப் பெரியபுராணம் உள்ள தென்பதும், அதன்கண் கூறப்படும் அடியார்கள் குருலிங்க சங்கம பத்தியிற் சிறந்து நின்று வாழ்வு நடத்தினர்கள் என்பதும், அவர்களின் அன்புச் செயல்கள் மெல்வினையென்றும் வல்வினை என்றும் இருதிறத்தன வென்பதும், அவ்வித அன்புநிலையில் மேம்பாடுற்றமை கண்டு இறைவன் அத்தகையோருக்குக் குருவடிவாய் வந்து சிவஞா னத்தை அருள்வனென்பதும், அவ்வாறு ஆட்கொள்ளப்பட்டுச் சிவஞா னமெய்தியவர்களே ஆளுடையபிள்ளையார் முதலானேர் என்பதும், அவர்கள் தம்செயல் நீங்கிச் சிவன் செயலாய் நின்றவர் என்பதும், அவ்வருளாளர்களின் அவதாரத்தினுல் சைவமும் சிவநேயமும் தழைத் தன என்பதும் கூறப்பட்டன.

* * *

ஓம் முருக.

# இந்து தர்மம்

வியாகரணசிரோமணி தி. கி. சீதாராமசாஸ்திரிகள்.

இந்துக்களின் தர்மம் மனுதர்மநூலில் விரிவாகக் கூறப் பட்டிருக்கின்றது. வேதத்தின் சாரத்தை உணர்ந்து செயல் முறையில் அவைகளைப் பின்பற்றுவதற்காக மனு என்பவர் இந்நூலை இயற்றி யுள்ளார். அதில் பலவகையான தர்மங்கள் கூறப்பட்டுள்ளன. அவை களுள் தானதர்மம் என்பதே சாலச் சிறந்ததாகும். தானதர்மம் என்ற சொல் வழக்கில் உள்ளது. அதன் கருத்தைச் சிறிது ஆராய வேண்டும். தானம் தர்மம் என்று இரண்டாகக்கருத்துக் கொண்டால் தானம், தர்மத்திற்குள் அடங்காது. 'தானமாகிய தர்மம்' என்று கருத்துக் கொண்டால் ஏனைய தர்மங்கள் குறைவு படுத்தப்பட்டதாக ஆகும். இரண்டு சொல் என்று எடுத்து இரண்டிற்கும் புண்ணியம் என்று கருத்துக் கொள்ளுவதே சிறந்ததாகும். பொருளாலும் புண்ணி யத்தைத்தேடலாம். ஞானேந்திரியங்களாலும் கர்மேந்திரியங்களாலும் புண்ணியத்தைத் தேடலாம். பொருளால் தேடப்படும் புண்ணியம், தானம் என்றும், கர்மஞானேந்திரியங்களால் தேடப்படும் புண்ணியம், தர்மம் என்றும் வழங்கலாயிற்று.

**தானம்**

புண்ணியம் செய்தவர்கள் மேலுலகத்தையும் பாபம் செய்தவர் கள் கீழுலகத்தையும் அடைகின்றனர் என்பது சாஸ்திர விளக்கம். ஆகவே புண்ணியத்தின் தன்மை மேல் நோக்கிச் செல்லல். பாபத் தின் தன்மை கீழ்நோக்கிச் செல்லல் என்ற விளக்கம் கிடைக்கின்றது. பொருளை ஈபவருடையகை மேலாகவும் ஏற்பவருடைய கை கீழாகவும் இருப்பதை நாம் காணலாம். தானம் கொடுப்பவரின் கீழ்நோக்கிச் செல்லும் இயல்புடைய பாபம் பெறுபவரிடம் செல்கின்றது. பெறுப வரின் மேல் நோக்கிச் செல்லும் இயல்புடைய புண்ணியம் கொடுப்ப வரை அடைகின்றது. பெறுபவர் பாபத்தை ஜபம், தவம் முதலிய வற்றுல் நீக்கிக்கொள்ள வேண்டுமென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதுவே தானத்தின் கருத்தாகும்.

பொருளால் தேடப்படும் புண்ணியம் மூன்று வகையாகும். அவை பதி புண்ணியம், பசு புண்ணியம், பாச புண்ணியம் என்று வழங்கப்படும். பாசப்பொருளுக்காகச் செலவழிக்கப்படும் பொருள் பதி பசு புண்ணியத்திற்குச் சாதகமாக அமையுமானல் அதனைப் பாசபுண்ணியம் என்ற சொல்லால் வழங்குதல் தவருகாது. அந்த நேரத்தில் மட்டிலும் சிறிது இன்பம் தரக்கூடியதாக அமைந்து

பதி பசு புண்ணியத்திற்கு சாதகமற்றதாக அமையுமானால் அதைப் பாச புண்ணியம் என்ற சொல்லால் வழங்குவது முறையாகாது. செவிக்கு இன்பம் பெறுவதற்காக நல்ல கீதங்களைக் கேட்கப் பொருளைச் செலவழிக்கிறான் ஒருவன். அந்தக் கீதம் ஆண்டவன் புகழ் பற்றியதாய் இருந்தால் கான ரசத்துடன் மனமும் பதியினிடம் பற்றுவதற்குக் காரணமாகின்றது. இதுவே பாசபுண்ணியமாகும். கண்களின் ஆனந்த அனுபவம்கருதிக் காட்சிப் பொருளுக்குப் பணத்தைச் செலவிடுகிறான் ஒருவன். அவன் ஆண்டவன் திருக்கோயிலை அலங்கரித்து அவனது திருமேனியை அலங்கரித்து, அக்காட்சியைக் கண்டு ஆனந்த அனுபவம் கொள்வானேயானால் அதுவே பாச புண்ணியமாகும். சித்தம் சுத்தமாகி, பதியைப் பூஜிக்கச் சாதகமாகும். ஆகவே ஐம்பொறிகளின் மகிழ்ச்சிக்காகப் புறப்பொருளில் செலவிடப்படும் பொருள்கள் பதி பசு புண்ணியத்திற்குச் சாதகமாயின் பாச புண்ணியம் என்று வழங்கப்படும்.

இரண்டாவது பசு புண்ணியம். ஆன்மாவைச் சுற்றி மும் மலங்களும் சூழ்ந்திருக்கின்றன. ஆன்மா தூய்மை பெறச் செய்து கொள்ளப்படும் புண்ணியம் பசு புண்ணியமாகும். ஏழைகளுக்கு அன்னமளித்தல்; சமயக் கல்வி போதிப்பதற்குரிய கல்விச் சாலைகளை அமைத்தல்; கூன், குருடு, செவிடு முதலியோருக்கு உதவி புரிதல்; இது போன்றவைகளுக்குச் செலவிடப்படும் பொருள் பசு புண்ணியமாகும். இச் செயலால் ஆன்ம பரிசுத்தி உண்டாகின்றது.

**பதி புண்ணியம்**

மூன்றுவது பதிபுண்ணியம். ஆண்டவனுடைய வழிபாட்டிற்காகவே செலவிடப்படும் பொருள் பதி புண்ணியமாகும். பகவான் நிலம், நீர், ஒளி, காற்று, ஆகாயம் ஆகிய இவ்வைந்து மா பூதங்களைப் படைத்தருளியிருக்கின்றார். அவைகளைச் சமநிலையில் வைத்து சத்தியத்திற்குட்பட்டதாக இயக்கிக் கொண்டிருக்கின்றார். பஞ்ச பூதங்களின் அம்சங்கள் கொண்டு ஜீவராசிகளையும் படைத்தருளியிருக்கின்றார். உடல் நிலத்தின் அம்சமாகவும், இரத்தம் நீரின் அம்சமாகவும், கண்ணொளி வயிற்றிலுள்ள நெருப்பு (சாடராக்நி) ஒளியின் அம்சமாகவும்; பிராண வாயுக்கள் காற்றின் அம்சமாகவும்; வாய், மூக்கு, செவி முதலிய துவாரங்கள் ஆகாயத்தின் அம்சமாகவும் கொண்டு அமையப்பெற்றிருக்கின்றது. சீவராசிகளை, கூடுதல் குறைவின்றிப் பஞ்சபூத அம்சங்களின் சமநிலையுடையனவாகப் படைத்தருளியிருக்கின்றார். அவரவர் நல்வினை தீவினைக் கேற்ற வாறு உடல் கரணங்கள் இடம் போகப் பொருள் இவைகளை அருளியிருக்கின்றார். சகல ஜீவான்மாக்களின் மலங்களை நீக்கி நல்லருள் புரிய, துதிகள் நிரம்பிய வேதங்களையும் கிரியை முறைகள் நிரம்பிய ஆகமங்களையும் அருளியிருக்கின்றார். இறைவன்

சூக்கும சிவம் என்ற பெயர் தாங்கி, யோகிகள் உள்ளத்தில் தீப ஒளி வடிவமாக நின்று அருள் புரிகின்றார். தூல சிவம் என்ற பெயர் தாங்கி, போகிகளுக்கு மந்திரவடிவமாக நின்று அருள் புரிகின்றார்.

தூல சிவத்தை ஆகம முறைப்படி ஆலயங்கள் அமைத்துக் கிரியை முறைகளைச் செய்து ஸ்தாபித்து வேத மந்திரங்களால் பூஜித்து வழிபட்டு வருகின்றோம். அவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட மூர்த்தியில் பகவான் பஞ்சமா பூதங்களின் தொடர்புடன் நின்று அருள்புரிகின்றார். நித்திய சிவ பூசை செய்து உள்ளொளி பெருக்கிச் சிவானுபூதிபெற்ற ஆசாரியர் வேதமந்திரங்களை உச்சரித்து சிவாக்நியில் ஓமம் செய்கின்றார். சிவசான்னித்தியம் உண்டாகின்றது. (அக்நி முகா: தேவா:) 'அக்நியை முகமாகக் கொண்டவர் தேவர்' என்ற வேதவாக்கு, இதனை உணர்த்துகின்றது. பின் அக்நியிலுள்ள சிவசான்னித்தியத்தை கும்பத்தில் ஒடுக்குகின்றார். பின் கும்பத்திலிருந்து பிம்பத்தில் ஒடுக்குகின்றார். பின் பிருதுவி அம்சமாகிய பிம்பத்தில் மந்திர சான்னித்தியத்துடன் நின்று அடியார்களுக்கு அருள்புரிகின்றார். இங்ஙனம் பஞ்சமா பூதங்களைப் படைத்தவரும் அவர். பஞ்சபூத அம்சங்களைக் கொண்டு நம்மைப் படைத்தவரும் அவர். பஞ்சபூதத்தொடர்புடன் நமக்கு அருள்புரியத் திருக்கோலம் பூண்டிருப்பவரும் அவர். அந்தப் பரமபதிக்கு நாம் தேடிய பொருளைச் சமர்ப்பித்து வழிபடவேண்டும். அல்லாவிட்டால் நாம் நன்றிமறந்தவராவோம். பஞ்ச பூதங்களின் குணப் பொருளைத் திரவியம் கொடுத்து வாங்கி பூசை வழிபாட்டிற்குச் சமர்ப்பிக்கவேண்டும். நிலத்தின் குணம் நறுமணம். சந்தனம் கஸ்தூரி கோரோசனை குங்குமப்பூ புஷ்பரசம் இவைகளை வாங்கி பதியின் அபிஷேகத்திற்குக் கொடுக்கவேண்டும். நீரின் குணம் ரசம் (சுவை); பால், தயிர், நெய், பழரசம், கரும்பு, தேன் இவைகளை வாங்கிச்சமர்ப்பிக்க வேண்டும். ஒளியின் குணம் ரூபம்; பூசை வழிபாடுசெய்யும் நேரங்களில் விளக்கிடுதல் கற்பூரம் ஏற்றுதல் இவைகளைச் செய்யவேண்டும். காற்றின் குணம் உணர்ச்சி; குங்கிலியமும் வெண்சாம்பிராணியும் கலந்து தூபம் போடுவித்தல், இறைவன் பவனி வரும்பொழுது சாமரை போடுவித்தல் இவைகளைச் செய்யவேண்டும். ஆகாயத்தின் குணம் சப்தம்; பூசாகாலங்களில் சங்கநாதங்கள், மணியின் நாதங்கள் இவைகள் ஒலிக்கப் பொருள் கொடுத்து ஒழுங்கு செய்யவேண்டும். நித்திய பூசைகளிலும் விசேஷபூசைகளிலும் வேதபாராயணம், தேவாரபாராயணம் இவைகள் நடப்பதற்குரிய ஒழுங்குகளும் அமைக்கப்படவேண்டும்.

ஆலயங்களில் சலபேரம் அசலபேரம் என இரண்டுவகை மூர்த்திகள் உண்டு. சலபேரம் உற்சவ மூர்த்தியாகும். அசல பேரம் மூல மூர்த்தியாகும். அதுபோலவே சரலிங்கம், அசரலிங்கம் என இருவ

கைப்படும். அசரலிங்கம் ஆலயமூர்த்தி, சரலிங்கம் அடியார்கள். நின்றும், கிடந்தும், நடந்தும், மனத்தாலும், வாக்காலும், புத்தியாலும் சதா சிவத்தியானத்தில் ஈடுபட்ட அடியார்கள் சரலிங்கம் என்றும் வழங்கப்படுகின்றனர். நடமாடும் கோயில் எனவும் வழக்கில் உள்ளது. சரலிங்கத்தில் மறைவாக பிரத்யக்ஷமாகவும், ஸ்திரலிங்கத்தில் மறைவாகவும் நின்றும் அருள்புரிகின்ருர் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பிரத்யக்ஷரூபமான சிவனடியார்களைச் சேவிப்பது அவர்களுக்குப் பொருளைக் காணிக்கையாக அளிப்பது. இவைகள் உத்தம பதி புண்ணியமாகும்.

**தர்மம்**

இவ்வாறு நாம் தேடிய பொருளைப் பதி, பசு புண்ணியத்திற்காகச் செலவிடுதல் தானம் என்பதாகும். அடுத்தது தர்மம். இது இரண்டு வகையானது. பதி தர்மம், பசுதர்மம். ஆன்மசுத்தியைக் கருதிச் செய்யப்படும் தர்மம் பசு தர்மம். பதியின் திருவளைக் கருதிச் செய்யப்படும் தர்மம் பதிதர்மம். ஆன்மசுத்தி உண்டாக மனு, தர்மத்தைப் பத்து விதமாகப் பிரிக்கின்ருர். பிறர் நமக்குத் தீமை செய்திடினும், அவர்களுக்குத் திரும்பத் தீமை செய்ய முயற்சியாதிருத்தல், (திருதி), உள்ளம் விகாரமடைவதற்குரிய காரணப்பொருள் அண்மையிலிருந்தும் விகாரம் அடையாதிருத்தல், (ஷமா), குளிர் வெப்பம் முதலியவற்றைப் பொறுக்கும் தன்மை அல்லது மனஅடக்கம் (தம), அநீதிவழியில் பிறர் பொருளைக் கவரவேண்டுமென்ற எண்ணம் கொள்ளாமை (அஸ்தேயம்) உடல் சுத்தி (சௌசம்), ஐம்பொறி அடக்கம் (இந்திரிய நிக்கிரகம்). சாஸ்திரங்களைக் கற்றுத் தத்துவ ஞானத்தை அறிதல் (தீ) ஆன்ம ஞானத்தைப் பெறல் (வித்தியா). உண்மைப் பொருளை அறிதல் (சத்தியம்). கோபத்திற்குக் காரணம் இருந்தும் கோபம் கொள்ளாதிருத்தல் (அக்ரோதம்). இந்தப் பத்துவிதமான தர்மங்களைப் பின்பற்றுபவர் பதிஞானம் பெற்று பேரின்பலோகம் செல்வர். இத்தர்மங்களைப் பின்பற்றுவதால் ஆன்மசுத்தி உண்டாகிப் பதியின் திருவருளால் பதிஞானம் பெற்று பேரின்பப் பெருவாழ்வை அடைபவராவர். தூல சிவபூசை நீக்கி சூக்கும சிவ ஸ்வரூபத்தைச் சித்தத்தில் தியானிப்பவர்களாகி எல்லாம் சிவ ஸ்வரூபமாகவே காண்பார்கள்.

ஈசுவரன் சகல போக போக்கிய வஸ்துக்களைப் படைத்து, அதில் நம்மை நல்வாழ்வு வாழ்வதற்குரிய நல்வழிகளை வகுத்துத் தந்திருக்கிருர். அந்தப் போக்கிய வஸ்துக்களில் நின்று நாம் நல் வாழ்க்கையை நடத்தும் பொழுது தியாக உணர்ச்சியுடன் வாழ்வோமானல் பாசபந்தங்கள் நம்மை அணுகா. முடிவில் பேரின்ப வாழ்வைப் பெறலாம்.

**ந கர்மணு நபிரஜயா தனேன தியாகேநை**
**கே அமிருதத்துவம். ஆனசு.**

❋ ❋ ❋

உ

சிவமயம்

# ஆரியத்தமிழ்

சிவகாமவித்துவான்

கண்டனூர் சிவஸ்ரீ அரு - இராமநாதக்குருக்கள்

தையலோர் கூறுடையான்றண்மதிசேர் செஞ்சடையான்
மையுலாமணி மிடற்றன் மறைவிளங்கு பாடலான்
நெய்யுலா மூவிலைவேலேந்தி நிவந்தொளிசேர்
கையுடையான் மேவியுறை கோயில் கைச்சினமே — சம்பந்தர்

நான் எழுத எடுத்துக் கொண்ட விஷயத்திற்குப் பூர்வாங்க மாகக் கூறவேண்டுவதொன்றுண்டு. அது, அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்களின் பாராட்டு விழா மலர் வெளியீட்டுத் தலைவர் திரு. ச. அம்பிகைபாகன் B. A., அவர்களின் கடிதங்கண்டதும் எனதுள்ளம் மதுவுண்டவண்டாயதென்பதே. எல் லாம்வல்ல முழுமுதற் கடவுளை முப்பொழுதும் வேண்டி இச்சபையி னர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

குருக்களவர்களை ஏறக்குறைய முப்பதாண்டுகளாக நன் கறிவேன். அவர் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுபவரல்லர். திரைமறைவிலிருந்து அவர் பேசுவதோ எழுதுவதோ கிடையாது. அப்படிச்செய்பவர் தெய்வபக்தியும் தன்நம்பிக்கையும் இல்லாத கோழை களாவர். மேலும் தாம் எழுதுவது வெற்றிகரமாக முடியுமோ என் கிற அச்சத்தைக் கவசமாகப் பூண்டவர் அவர்.

நமது குருக்களவர்களோ வடமொழித்துவேஷமற்ற தமிழ் மொழிப் பற்றும் தெய்வபக்தியும் உடையராய், இருமொழிகளையும் இரு கண்களெனப் பெற்றுச் சமயத்தை ஆராயமுற்பட்டுச் சரியையாதி நான்கு வழிகளிலும் சென்றவராதலாலேயே, எங்கும் எப்பொழுதும் வெற் றியே கண்டனர். ஆனல் அவர் வாள்வீரரல்லர். சைவசமய சித்தாந்த வெற்றிவீரர்.

பழையநூல்களைத் தொகுத்தும், பலநூல்களை ஆக்கியும், சில நூல்களுக்கு உரை எழுதியும், பலபத்திரிகைகள் துண்டுத்தாள்கள் வழியாக விரதாதி நிர்ணயங்களிலே குதர்க்கவாதிகளின் கருத்தைத் தகர்த்தும் உலகிற்குதவிய அவ்வுத்தமரின் அடிச்சுவடுபற்றி நான்

ஆரியத்தமிழென்று எழுத முன்வந்ததைக் குறித்து அது காரியத் திற்கான தொன்றென்றே கொள்வீர்களென்று நம்புகிறேன்.

முன்னொரு தனித்தமிழபிமானி வடசொல் காடின்யமான உச் சரிப்புள்ளதென்றும், அதனல் சுவாசாதிகமேற்பட்டு ஹிருதயகோசம் கெட்டு ஆயுள் குன்றி விடுமென்றும் கூறினர். அஃதெப்படியாவதிருக் கட்டும். அன்னர் போன்றவர்களின் கருத்துப்படியே வடசொல்லின் இயல்பு திடமானதென்று கூறலாகும். செந்தமிழோ எம்மொழியிலு மில்லாத "ழ" என்பதைப் பூஷணமாகப் பெற்று அழகுடன் மெல்லிய இயல்புள்ளதாகவுள்ளது. ஆகவே, ஆரியமும் செந்தமிழும் சிவசக்தி ரூபமாகும். இதனை,

"வடமொழியுந் தென்மொழியு மறைகணன்கும் ஆனவன்"
"ஆரியந் தமிழோடிசையானவன்"

எனவரும் தேவாரவாசகத்தால் தெளியலாம். இவ்வாறு ஆரியமும் செந்தமிழுமான அரனர் அர்த்தநாரீசர் எனப்படுவர்.

இவ்விருமொழிகளும் அர்த்தநாரீசர் போன்ற அபின்னமான தொடர்புடையன. இன்னும் இவ்விருமொழிகளையும் பாணினிக்கும் குட முனிக்கும் இறைவனரே முதற் குரவராய் வகுத்தருளினர். இவ்வுண் மையை,

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவரியல்வாய்ப்ப
விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தரிசை பரப்பு
மிருமொழியுமான்றவரே தழீஇயினரென்ருலிவ்
விருமொழியு நிகரென்னுமிதற்கைய முளதேயோ"

எனவும்,

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளியதற் கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல் வரைப்பினிதான் பெருமையாவரே கணித்தறிவார்"

எனவும் வரும்பாக்களால் அறியலாகும். இதன்பெருமை என்ற ஒருமை வாசகமும் சிந்திக்கத்தக்கதாகும்.

ஆரியமும் செந்தமிழும் இரண்டாகத் தோன்றினும் ஒன்றுபட்டு அர்த்தநாரீசன் போன்று பிரிக்க முடியாதன வெனப் பெறப்படுவதால் ஆரியமும் தமிழும் என்றெழுத மனமின்றி ஆரியத்தமிழ் என்றெழுத முன்வந்துள்ளேன்.

பாஷை ஒலிரூபமானது. அது மக்களின் செவிக்குப் புலனுவது. அவ்வொலியைத் தூரத்தேயுள்ளவர்களுக்கு வரிவடிவத்தில் எழுதி அறி


விக்கலாம். அவ்வரி அக்கர வடிவமாகும். இது மக்களின் விழிக்குப் புலனுவது. சிவன் செவிக்குப் புலனுகும் (ஒலி) மந்திரமூர்த்தியாகவும், விழிக்குப் புலனுகும் மாதிருகாமூர்த்தியாகவும் ஆகமங்களிலே பேசப் படுகிறுர்.

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"
"செந்தமிழோடாரியனைச் சீரியானை"
"ஆரியந் தமிழோடிசை யானவன்"


எனவரும் தேவாரச் சுருதிகளால் அரன் இருபாஷாரூபி யெனப்பெறப் படுகிறதே யன்றி, ஹிந்தி, தெலுங்கு முதலான பாஷாரூபியெனப் பேசப் படவில்லை. (இதனுல் சர்வவியாபகத்துவம் இல்லையென்று கருதக்கூடாது; அது வேறு விஷயம்; எடுத்துக் கொண்டதுவல்ல.) அஃதில்லை யென்பதெதனுலெனில் பொதுநூலான வேதமும் சிறப்பு நூலான சிவாகமமும் ஷடங்கநூல்களும் சமஸ்கிருத நூல்களாகவேதான் உள்ளன. அவைகளைச் சௌராஷ்டிரர் ஆந்திரர் முதலானேர் தங்கள் தங்கள் பாஷை எழுத்துக்களால் எழுதிக்கொண்டனர் என்பது மறுக்கப்படாததொன்று. சில நூல்களிற் சில பகுதிகளையும் சில நூல்கள் முழுவதையும் மொழிபெயர்த்துமிருக்கின்றனர். ஆனுல் மந்திரங்கள் வடமொழியிலே தான் இருக்கின்றன. அவைகள் மொழிபெயர்க்கப் படவுமில்லை; அப்படிச்செய்யவும் முடிவதன்று. சிற்றறிவுடைய நாம் செய்துவிட்டதாகவோ, செய்து விடுவதாகவோ நினைத்தாலும் பிர யோஜனப்பட மாட்டாது. கடவுள் சிருஷ்டியிலே ஏகதேசமான பழ வர்க்கங்களைப் போல மனிதன் மண்ணினுற் செய்து வர்ணங்கள் தீட்டிக் காட்டலாம். ஆனுல் அவற்றைச் சுவைக்க முடியாதது போலாம்.

தமிழபிமானிகள் சிலர் தமிழ் நாட்டிலே தமிழர்பொருட் செலவிலே தமிழர்களாலே கட்டப்பட்ட திருக்கோயில்களிலே தமிழ் மொழி கேட்கவில்லை என்கின்றனர். இது முற்றிலும் உண்மையன்று. திருக்கோயில்களிலே உபசாரமுடிவில் திரு முறைப்பாராயணம் செய்யப்படுகின்றது. சூர்ணேத்சவகாலத்தில் பொற்சுண்ணம் ஓதப் படுகின்றது. திருவாதிரைத்திருநாளில் திருவெம்பாவை ஓதித் தீபதரிசனம் செய்யப்படுகின்றது. திருவிழாக்காலங்களில் வேதபாராயணத்தோடு தமிழ்மறைப்பாராயணம் செய்யப்படுகின்றது.

சைவசமய உண்மைகளை அறிவுறுத்தும் நூல்கள் தமிழ் வடமொழியாகிய இருமொழிகளிலும் அளவிறந்தன உள்ளன. அஃதன்றி, சைவாலயங்களின் அமைப்பைப்பற்றிக் கூறும் நூல்களும் வழிபாட்டு முறைகளை வகுத்துக் கூறும் நூல்களும் தமிழ் மொழியிலன்றி வடமொழியிலேயே மிகுதியாயுள்ளன. ஆகவே சைவசமய உண்மைகள்



குருக்கள் அவர்களும், மகன் வைத்தீஸ்வரக் குருக்களும்
நூலாராய்ச்சி செய்கின்றனர்.



திருக்கேதீச்சரம் - திருப்பணிவேலை நடைபெற்றுக்
கொண்டிருப்பதைக் காணலாம்.

முதலிய பலவற்றையும் சந்தேகவிபரீதமின்றி அறியவும், அவற்றைத் தமது வாழ்க்கையிற் கடைப் பிடிக்கவும் விருப்ப முடையோர் தமிழ் வடமொழியிரண்டினையும் சைவ உண்மைகளைக் காட்டும் இருகண்க ளெனக் கருதி அம்மொழிகளில் வல்லராதல் வேண்டும். அங்ஙனமன்றி இவ் விருமொழிகளில் ஒன்றினை உயர்த்தியும் மற்றதைத்தாழ்த்தியும் பேசுதலும், ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்பும் கொள்ளுதலும் சைவாபிமானிகளுக்கு அழகாகா.

முன்னமே என்மனம் மதுவுண்டவண்டாயது என்று கூறிவிட் டேன். ஆதலால் மதுமயக்கத்தில் ஏதேனும் உளறியிருப்பினும் அறி ஞர்கள் மன்னிக்க வேண்டும். கல்வியறிவிற் குறைவுள்ள யான் இஃதெழுதமுன்வந்தது, குருக்களவர்களின் பாராட்டு விழாவில் விருந்துண்ணக் குழவிகளுக்கும் பங்குண்டு என்ற துணிவினாலேதான் என்று கூறி எனது சிற்றுரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

சுபம் பவது.

* * *

# சமானமற வாழி தழைத்து.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்
ஆசிரியர், திருப்புகழமிர்தம், சென்னை.

## வாழ்த்து.

நேரிசை வெண்பா.

அச்சுவே லிப்பதியில் அன்பாப் பணியுலகம்
மெச்சும் படிசெய்யும் வித்தகனர் — விச்சை
குமாரசா மிக் குருக்கள் கோதிலரு ளாலே
**சமானமற வாழி தழைத்து.**

*

சிவமயம்

# புராணங்கள்
## தென்னாட்டின் சமயக் கருவூலம்

டாக்டர் கா. கைலாசநாதக் குருக்கள், M. A., Ph. D.

புராணங்கள் பழமை சான்ற நூல்கள். இதனால் இவை இப் பெயர் பெற்றன. வேதசிவாகமங்கள் இறைவனாலருளிச் செய்யப் பட்டவை. புராணங்களப்படியன்று. ஐந்திலக்கணங்களையும் பொருந் தியே புராணங்களமைதல் வேண்டும் என வரைவிலக்கணம் கூறப் பட்டுள்ளது.[1] எனினும் மிகச் சில புராணங்களில் மட்டுமே இது ஏற்றவாறு அமைந்திருக்கக் காண்கின்றோம். பிரமா விஷ்ணு சிவன் ஆகிய மும்மூர்த்திகளைப் பற்றிக் கூறும் பகுதிகளே புராணங்களிற் பெரிதுங் காணப்படுகின்றன.

புராணங்கள் பதினெட்டும்[2] ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து லக்ஷம் சுலோகங்களைக் கொண்டுள்ளன. இப் பெரும் புராணங்களை[3] விட வேறு உபபுராணங்களும் உண்டு. பாரதத்தின் தென் பகுதியிற் சிறப்புற்று வழங்குஞ் சைவமும் அதைச் சார்ந்த ஏனைய மதங்களும், வைணவமும் அதன் பாகுபாடுகளும், இம் மதங்களைக் கடைப்பிடிப் போர் நிற்கும் நெறியும் புராணங்கள் மூலமே எளிதில் விளக்க வல்லவை. சுருங்கச் சொல்லின், இச்சமயங்கள் நெறியினிற்க வேண்டப்படுங் கருத்துக்களை இன்னதெனப் பாமரமக்களுக்கு விளக்கு முகமாகப் புராணங்களமைந்துள்ளன எனலாம்.

சமய வரலாற்றைச் சரிவர அமைப்பதற்குப் புராணங்கள் இன்றியமையாதவை. சைவர்கள் தாம் வணங்கும் முழுமுதற்

---

1. அமர கோசம், சப்தாதிவர்க்கம், சுலோ. 5.
2. பதினெண் புராணங்கள் :- பிராமம், பாத்மம், வைஷ்ணவம், சைவம், இலிங்கம், கருடம், நாரதீயம், பாகவதம், ஆக்நேயம், ஸ்காந்தம், பவிஷ்யம், பிரமவைவர்த்தம், மார்க்கண்டேயம், வாமனம், வராகம், மத்ச்யம், கௌர்மம், பிரமாண்டம் என் பனவாம்.
3. உபபுராணங்களுள் முக்கியமானவை :- தேவிபாகவதம், விஷ்ணு தர்மோத்தரம், விநாயக புராணம், சௌர புராணம், ஹரிவம்சம், நாரசிம்மம், பிருகத் தருமம், பிருகத் நந்திகேஸ்வர புராணம், சாம்ப புராணம் என்பனவாம்.

கடவுளாகிய சிவபெருமான் இத்தகையவன்[1] என மனதில் உன்னித் தியானிக்கவோ, திருவுருவில் எழுந்தருளச் செய்து வழிபடவோ வேண்டப்படும் விரிவான கருத்துக்களைத்தருவன புராணங்களே. பெயர், உருவம் ஆகிய இரு வரையறைவுகளுக்கப்பாற்பட்ட இறைவனுக்குப் பெயரிட்டழைத்து நாம் வழிபட வேண்டிச் சுயநலங் கொண்டு ஒன்றுடன் நின்றுவிடாது பல பெயர்களை யிட்டழைத்தும்,[2] ஒன்றுடன் திருப்திப்படாது பல திருவுருவங்களையும் கற்பித்து விக்கிரகங்களைத் தாபித்தும் வழிபடுவதற்கு வழிகோலி, இதற்கு வேண்டப்படும் அறிவை விரித்துத் தருவதனாற் புராணங்கள் இன்றியமையாது வேண்டப்படும் சமயநூல்களாம். சைவர்களுக்கு மட்டுமன்றி வைணவர்களுக்கும் இவை முக்கியமானவை.

ஆகமங்கள் சுருங்கக் கூறும் கருத்துக்களுக்குப் புராணங்கள் விளக்கங்கள் போலமைந்துள்ளன. சிவபெருமான் முக்கண்ணன்[3]; விடையூர்தி[4]; விரிசடைக்கடவுள்[5]; எண்டோள் வீசி நின்ருடும் பிரான்[6]; நீலக்கழுத்தன்[7]; இறைவி அவனுடலிற் பாதியைப் பற்றி விளங்குகின்ருள்[8]; சூலப்படையுடனும்[9] பிநாகம்[10] என்னும் வில்லைத் தாங்கியும்,

---

1. ஐந்து முகங்கள். ஸ்கந்த. பு I. 34. 36., பாகவதம் VIII - 7. 29
2. இவ்விதம் பல பெயர்களை இறைவனுக்கு இட்டழைக்கும் தொகுதிகள் சஹஸ்ரநாமங்கள் எனப்படும். இவை புராணங்களிலே முதன் முதலிற்கூறப்பட்டுள்ளன. வாயு புராணம், I. 30. 180 - 284; லிங்கப். பு. I. 32; I. 96; சிவபுராணம் ஞான சங்கிதை, 71. 1 - 166; சிவசகஸ்ரநாமம் :- பிரமபுராணம், I. 38; தேவிசகஸ்ரநாமம். பிரமாண்ட புராணம். லலிதோபாக்யானம்.
3. ஸ்கந்த. பு I 1. 34. 46; I. 2. 25. 75; சிவபுராணம் ஞானசம்ஹிதை 16. 6; பத்ம. பு I. 43. 240; கூர்ம. பு. I. 15. 205.
4. பாகவதம். VIII. 12 2; X 63. 6; பத்ம. பு. I. 43. 414; மத்ஸ்ய புராணம் 154. 400; ஸ்கந்த. பு. I. 2. 26. 26.
5. மத்ஸ்ய புராணம், 259. 5; வாயு. பு. I. 54. 97
6. இலிங்க. பு. II. 19. 7. கூர்ம. பு I. 20. 63.
7. அக்னிபு. 3. 8 - 9; வாயு. பு I. 54. 90; மத்ஸ்ய பு. 250. 59 - 60; சிவ புராணம் ஞானசங்கிதை 14. 33; பிரமாண்ட. பு. I. 25. 86 - 89;
8. கூர்ம புராணம் I. 12. 27 - 29; இலிங்க புராணம் I. 41. 1; I. 5. 28; மத்ஸ்ய. பு. 260. 1 - 10
9. மத்ஸ்ய புராணம், 260. 3; 11. 29; ஸ்கந்த. பு. I. 2. 26. 26; பத்ம. பு. I. 46. 82; கூர்ம புராணம், I. 16. 190;
10. வாயு. பு I. 55. 45; பிரமாண்ட. பு. I. 26. 46;

தோலியுடுத்தும்[1], சுடலைப்பொடிபூசியும்[2] அவ்வப்போது தோன்றுவான் எனப் புராணங்களிறைவனது திருக் கோலங்களமைய வேண்டுவதைத் தெளிவாக விரித்துக் கூறுகின்றன. இவை இவ்விதம் அமையவேண்டி நிகழ்ந்த சந்தர்ப்பங்களையும் புராணங்கள் விளக்கிக் கூறுவதுபோல் வேறெந்த நூல்களும் கூறமாட்டா[3]. இவ்வர்ணனைகளுக் கமையத் திருவுருவங்களையமைத்து வழிபட்டு வரும் மரபு தென்னாட்டிற்றான் சிறப்பாக உண்டு. செய்யவேண்டுவ தொன்று மில்லாத விடத்தும் உயிர்களினீடேற்றங்கருதி இறைவன் செய்த பல திரு விளையாடல்களை (லீலைகளை) விரித்துக் கூறுவன புராணங்களே. புராணங்கள் கூறும் விளக்கங்களுக்கமையவே இறைவனைப் பலதிருக்கோலங்களிலமைத்துத் தென்னாட்டு மக்கள் வழிபட்டு வரலாயினர்[4]. புராணங்கள் கூறும் பல நிகழ்ச்சிகளை யடிப்படையாகக் கொண்ட திருக் கோலங்களில் இவனைத் தியானித்து வழிபடும் மரபு தென்னாட்டிற்றான் காணப்படும்[5]. திருக் கோவில்களில் வைத்து வழிபட்டு வரும் இறைவனின் மூர்த்தி பேதங்

---

1. பத்ம. பு. I. 43 . 43 ; கருட. பு. III. 18 . 16 ; கூர்ம. பு. I. 25 . 51 ; II. 31 . 34 ; மத்ஸ்ய பு, 259 . 6 ; நாரத. பு. I. 125 . 1 . 7 ; சிங்கத் தோல். இலிங்க புராணம் I. 33 , 18 ; வாமன. பு. I. 26 ; சிவபுராணம் ஞானசம்ஹிதை 14 . 27

2. பத்ம. பு. I. 5 . 36 - 37 ; ஸ்கந்த பு. I- 2 . 25 - 60 ; வாமன பு. 53 . 33 ; 51 . 64 ; வாயு. பு I. 55 . 46 ; சிவ பு ஞானசம்ஹிதை. 16 . 7 ; 14 . 27

3. ஆகமங்களில் இறைவன் திருவுருவமைக்க வேண்டும் விதிகள் கூறப்படு மிடங்களிலெல்லாம் அமைய வேண்டும் முறைமட்டு மே கூறப்படுவதும் இவற்றினியல்பு, வரலாறுகள் ஆகியவை கூறப்படாததும் குறிப்பிடத்தக்கவை. புராணங்களே இவற்றை விளக்கிக் கூற எழுந்த நூல்களுள் முதல்வைத்தெண்ணப் படத் தக்கவை.

4. அறுபத்து நான்கு திருவுருவங்கள் வழிபாட்டிற்குரியவையென விரித்துக் கூறப்பட்டதை சிவலிங்கப் பிரதிஷ்டா விதி பாகம் 2. பக்கம் 270 - 72 காண்க.

5. தென்னாட்டுக் கோவில்களிற்றான் இறைவனை பிக்ஷாடனராகவும், கிராத மூர்த்தியாகவும், திரிபுராந்தக மூர்த்தியாகவும், அர்த்த நாரீஸ்வர மூர்த்தியாகவும் என்றெல்லாம் உருவங்களைப் பலவாறுக வார்த்து பிரதிட்டித்து வணங்கி வருகின்றார்கள். வடநாட்டில் சிவலிங்க வழிபாடு மட்டுமேகாணப்படுகின்றது.

கள் இவ் வுண்மையை வலியுறுத்துகின்றன. ஆகமங்களிலும் இவற்றின் வழிபாடு விதிக்கப் பட்டுள்ளது[1].

பாரத நாட்டிற் பல மொழிகள் வழங்கி வருகின்றன. இவற்றுள், தமிழுக்கும் புராணங்களுக்கும் உள்ளதொடர்பு தனிச் சிறப்புடையது. தமிழிலே காணப்படுவது போல் வேறெந்த மொழியிலும் புராணங்கள் இடம் பெறவில்லை. தமிழிலெழுந்துள்ள புராணங்கள்[2] கணக்கிடப்படின், சம்ஸ்கிருதத்தில் உள்ள மூல புராணங்களின் எண்ணிக்கையை மீறியே இருக்கக் காண்கிறோம். புராணங்கள் ஐந்து இலக்கணங்களைக் கொண்டு அமைதல் வேண்டும் என்னும் ஒழுங்கு

---

1. உதாரணமாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில், இவற்றைக் காணலாம் :-

   இலிங்கோற்பவ மூர்த்தி, காரணாகமம் II. 69 ; காமிகம். II. 50 ; கங்காதர மூர்த்தி - காரண. I. 81 ; காமிகம். II. 63 ; திரிபுராந்தக மூர்த்தி - காரண. I . 85, II.60 ; காமிகம் - II. 49 ; கல்யாணசுந்தர மூர்த்தி - காரண II. 56 , காமிகம் - II. 58 ; அர்த்தநாரீஸ்வர மூர்த்தி, காரண. II. 63 ; கஜாரி மூர்த்தி, காரண. II. 77 ; ஹரிஹர மூர்த்தி, காரண, II. 62 ; பிக்ஷாடனமூர்த்தி, காரண II. 57 ; காமிகம் II. 52 ; சிம்ஹக்ன மூர்த்தி, காரண. II. 73 ; காமிகம், II. 54 ; காலாந்தக மூர்த்தி காரண, II. 84 ; காமிக, II. 57 ; காமாரி மூர்த்தி, காரண, I. 83 பைரவ மூர்த்தி, காரண, II. 70 ; வீரபத்திர மூர்த்தி, காரண, II. 61 ; கிராத மூர்த்தி, காரண, II. 79 ; ஜலந்தர மூர்த்தி, காரண, II. 80 ; ஏகபாத மூர்த்தி, II. 66 ; காமிகம், II. 61 ; சக்ரதான மூர்த்தி, காரண, II. 81 ; விஷாபஹரண மூர்த்தி, காரண, II. 65 ; பிரம சிரச் சேதக மூர்த்தி, காரண, II. 1 ; சண்டேஸ் வரானுக்கிரக மூர்த்தி, காரண, II. 64 ; காமிகம், II. 65 ; சந்திர சேகர மூர்த்தி, காரண, II. 54 ; காமிகம், II. 65 ; விருஷாரூட மூர்த்தி, காரண, II. 59 ; காமிகம், II. 62 ; நடராஜ மூர்த்தி, காரண, II. 55 ; காமிகம், II. 171 ; தக்ஷிண மூர்த்தி, காரண, II. 68 ; காமிக, II. 51 ;

2. இவற்றுட் சில. பின் வருவன :- பெரிய புராணம் ; திருவிளையாடற் புராணம் ; கந்த புராணம் ; காஞ்சி புராணம் ; தணிகைப் புராணம் ; சிவராத்திரி புராணம் ; சிவ புராணம் ; திருவாதவூரடிகள் புராணம் ; சேது புராணம் ; கோயிற் புராணம் ; திருவருடந்தைப் புராணம் ; தக்ஷிணகைலாச புராணம் ; திருநாகைக்காரோண புராணம் ; திருவாரூர்ப் புராணம் ; திருச்செந்தூர்ப் புராணம் ; விஷ்ணு புராணம் ; விநாயக புராணம் ; ஸ்ரீபுராணம் ; பிரமோத்தர காண்டம் ; காசி காண்டம் என்பனவாம்.

சம்ஸ்கிருதத்திற் போன்று இங்குங் காணப்படவில்லை. தமிழ்ப்புராணங்கள் பெரும்பாலும் செய்யுள் வடிவத்திலமைந்துள்ளன. சுருக்கங்களும், விளக்கமான வரலாறுகளும், வாசிப்போரின் நலங் கருதிச் சில புராணங்கள் உரைநடையிலும் மிகப் பிற்காலத்தில் தமிழில் எழுதப்பட்டன[1]. சில தமிழ்ப் புராணங்கள் சம்ஸ்கிருத மூலங்களின் மொழி பெயர்ப்பாக அமைந்துள்ளன. கந்தபுராணம் சம்ஸ்கிருத ஸ்கந்த புராணத்திற் காணப்படும் ஒரு பகுதியின் விரிவாக இருக்கின்றது. தமிழில் எழுந்த புராணங்களுள் தனிப்பெருஞ் சிறப்புடன் விளங்குவது பெரிய புராணம்; மதுரையில் எழுந்தருளியுள்ள இறைவனின் திருவிளையாடல்களைக் கூறுவது திருவிளையாடற் புராணம்[2]. தமிழிலக்கிய நூல்களில் இவ்வகை நூல்களைப் பற்றி விரிவாகக் கூறப்படாததாலும், இவ்வகை நூல்கள் இன்னவையென இப் புராணங்களின் பெயர்களைத் தானும் எடுத்துக் கூறுததாலும் புராணங்களைப் பற்றிய விரிவான வரலாறு அறிய முடியாததாக இருக்கின்றது. இவ்வகைப் புராண நூல்களை இந்தியாவின் இதர பகுதிகளில் வழங்கும் ஏனைய மொழிகளுள் இவ்வளவிற்குக் காணலரிது. இது ஒன்றே தென்னாட்டிற்கும் புராணங்களுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை எடுத்துக் கூறும். தென்னாட்டில் எழுந்த புராணங்களுள் தல புராணங்கள் எண்ணற்றவை. இவை தமிழில் மட்டுமின்றிச் சம்ஸ்கிருதத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் ஒவ்வொரு திருத்தலத்தைப் பற்றிய புராணத்தில், அவ்வத்தல விசேடமும் மூர்த்தி விசேடமும் தீர்த்த விசேடமும் கூறப்பட்டுள்ளன.

---

1. இதற்கு எடுத்துக் காட்டாக ஆறுமுக நாவலர் எழுதிய கந்த புராண வசனத்தைக் குறிப்பிடலாம்.
2. இது முதன் முதலில் தமிழிலெழுதப்பட்டு பின்னர் ஹாலாஸ்ய மாஹாத்ம்யம் எனச் சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப் பட்ட தென்பர்.

தேவாரங்கள் கூறும் உயரிய கருத்துக்கள் இறைவனைக் கற் பனைக்குள்ளகப்படுத்திச் சித்திரிக்கும் புராணஅடிப்படையிலமைந் துள்ளன.[1] சித்தாந்த நூல்களிற் கூறப்படுங் கருத்துக்களையும் விரிவு ரைகளையும் வாதங்களையுந் தெளிவாக விளக்கப் புராணங்கள் பெரிதும் எடுத்தாளப் படுகின்றன[2].

---

1. உமை பாதியுடல் பெற்றது :— சம்பந்தர் தேவாரம் I. 97 . 2; III. 35 . 6; II. 87 . 3;அப்பர் தேவாரம். IV. 2 . 7; IV. 6 . 3; IV. 8 . 2; IV. 8 . 10; IV. 22 . 6; IV. 10 . 3; IV. 40 . 9; IV. 73 . 1; IV. 103 . 2; விஷ்ணு பாதியுடல் பெற்றது - சம்பந்தர் தேவாரம் I. 97 . 2; II. 87 . 3; III. 35 . 6; அப்பர் தேவாரம், IV. 22 . 4; IV. 24 . 7; IV. 37 . 7; IV. 43 . 7; IV. 40 . 5; IV. 66 . 3; IV. 78 . 7; காமனை யெரித்தது : சம்பந்தர் தேவாரம், I. 66 . 3; III. 103 . 2; அப்பர் தேவாரம், IV. 8 . 4 i; V. 63 . 9i; VI. 69 . 4; கரியுரி போர்த்தது, சம்பந்தர் தேவாரம் I. 75 . 1; அப்பர் தேவாரம், IV. 73 . 6; சலந் தரனை வதைத்தது, சம்பந்தர் தேவாரம், III. 122 . 2; அப்பர் தேவாரம் IV. 54 . 1. தக்கன்யாகமழித்தது, சம்பந்தர் தேவாரம், 1. 20 . 3; I. 118 . 5; I. 131 . 3; III. 33 . 3; அப்பர் தேவாரம், VI. 96 . 9; முப்புரமெரித்தது, சம்பந்தர் தேவாரம் I. 11 . 6 I. 11 . 7; I. 69 . 1; அப்பர் தேவாரம், V. 72 . 5; VI. 64 . 4; VI. 86 . 9: நஞ்சுண்டது, சம்பந்தர் தேவாரம் I. 22 . 1; அப்பர் தேவாரம். IV. 65 . 2; V. 33 . 6; VI. 99 . 2; மாலுக்குச் சக்கர மருளியது சம்பந்தர், III. 119 . 7; அப்பர் தேவாரம் IV. 14 . 10; IV. 49 . 5; மார்க்கண்டேயருக்கருளியது. சுந்தரர் தேவாரம் VII. 1 . 63; VII. 1 . 243; சம்பந்தர் தேவாரம் I. 20 . 7; அப்பர் தேவாரம், IV. 4 . 6; IV. 31 . 9; IV. 49 . 2; IV. 64 . 1; பிரமன் சிரங் கொய்தது, சம்பந்தர் தேவாரம், I. 30 . 7; I. 131 . 7; பிரமன்விஷ்ணு அடி முடி தேடியது I. 48 . 9.

2. உதாரணமாகச் சிவஞான சித்தியார் பரபக்கத்தில் தன் மதத்தை நிறுவப் புராணங்கள் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப் படுவதை அங்கங்கே காண்க.

பதினெண் புராணங்களில் விரித்துக் கூறப்பட்டுள்ள இலக்கணங்களுக்கமையவே, வழிபடுவதற்குக் கோவிலில் தாபிக்கப்படும் இறைவனின் திருவுருவங்களும், சுவர்கள், கோபுரங்கள், தூபிகளில் சித்திரிக்கப்பட்டும், தீட்டப்பட்டும் விளங்கும் திருக்கோலங்களும் அமைந்துள்ளன. பதினெண்புராணங்கள் இவ்வரலாறுகளை விரிவாகப் பல இடங்களிற் கூறுகின்றன. [1] வழிபடுவதற்காகப் பிரதிஷ்டை செய்யப்படுந் திருவுருவங்கள் புராணங்கள் கூறும் விளக்கங்களுக் கேற்ப இவ்வகையாக அமைந்து நிறுவப்பட்டிருப்பதைத் தென்னுட்டுக் கோவில்களில் மட்டுங் காணலாம். இது தமிழ் நாட்டுக்கும் புராணங்களுக்கும் உள்ள தொடர்பையெடுத்துக் காட்டுகின்றதல்லவா! இது மட்டுமா! புராணங்கள் விரித்துக் கூறும் எட்டுத்திருவிளையாடல்களும் நிகழ்ந்ததாகக் கூறப்படும் இடங்கள் தென்னுட்டில் காணப்படுவது குறிப்பிடத்தக்க தொன்றன்றே! [2] வடநாட்டில் புராணங்களுடன் இவ்வகைத் தொடர்பு ஏற்பட்டதற்கு அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை.

---

1. இவைகளுள் முக்கியமானவை :– பிரமன் தலையைக் கொய்தது; அரக்கனை அழித்தது; முப்புரமெரித்தது; தக்கன் யாகம் அழித்தது; ஜலந்தரன், கஜாசுரன், ஆகியோரை அழித்தது மன்மததகனம்; யமனை உதைத்தது; நஞ்சுண்டது; கங்கையைச் சடையுள் வைத்தது; தாருவனரிஷிகளின் கர்வபங்கம்; பிறை சூடியது; நாரசிம்கம்; வராகம் ஆகிய அவதாரங்களை எடுத்தது; மாலுக்குச் சக்கரமருளியது முதலியனவாம்.

2. திருக் கண்டியூர் - பிரமன் தலையைக் கொய்தது; திருக்கோவலூர், அந்தகனையழித்தது; திருவதிகை, முப்புரங்களை யெரித்தது; திருப்பறியலூர், தக்கயாகம் அழித்தது; திருவிற்குடி, ஜலந்திரனைச் சங்கரித்தது; வழுவூர், யானையின் தோலுரித்தது; திருக் கொளுக்கை, மன்மததகனம் புரிந்தது; கடவூர், யமனை உதைத்தது; திருவண்ணுமலை, பிரமவிஷ்ணு அடிமுடி தேடியது; கடவூர், பிரமனைப் படை விடும்படி ஏவியது; திரு மாற் பேறு, விஷ்ணுவுக்குச் சக்கரமருளியது.

இன்று வைணவர்கள் வணங்கும் விட்டுணுவையும் சைவர்கள் வழிபடும் சிவபெருமானையும், உமாதேவி,[1] விநாயகர்[2] சுப்பிரமணியர்[3] பைரவர்,[4] முதலிய தெய்வங்களையும் பற்றிய விரிவான அறிவை நாம் வழிபடுவதற்கு இன்றியமையாததாக விளக்கித் தருவன புராணங்களே. இவை பாரத நாடெங்கணும் போற்றிப் படிக்கப்படுவனவெனினும், தென்னாட்டுச் சமய நிலையைச் சரிவர உணர மிகவுந் துணை புரிகின்றன. இவை தென்னாட்டுச் சமயக் கருவூலம் என்பது சொல்லாமலே விளங்குகின்றதல்லவா!

---

1. தேவிபாகவதம், பிரமாண்டபுராணம், லலிதோபக்கியானம், காலிகா புராணம் முழுவதும் தேவியின் பெருமையைக் கூறும்.
பிரமாண்ட பு. I. 13: III. 1; பாகவத பு. IV. 2.4; கூர்ம பு. I. 1 4; I. 15; வாயு பு. I. 30; இலிங்க பு. I 96; I 100; சிவ பு ஞான சம்ஹிதை; 15 - 20; பிரம பு. I. 1.32ம், 37ம்; வாமன 5; வராஹ பு 21; 90, 22 - 27; கருட பு I. 5, 35ம், 38ம்; ஸ்கந்த பு I. 3ம் 4ம்; மார்க்கண்டேய பு 84.

2. பத்ம புராணம் I. 43; மத்ஸ்ய பு I. 155; இலிங்க பு I. 103; சிவ பு வித்யே ஸ்வரசம்ஹிதை 16. 98 - 129 ; பாகவதம் I. 65. 1-35 ஸ்கந்த பு I. 10 - 11; III. 2. 121 வராஹபுராணம் 23. 19 - 38; பிரம வைவர்த்த பு III. 8; பத்ம பு. I. 76; v. 61. 20; சிவபுராணம் ஞான சம்ஹிதை 32 - 36; வாமன பு 54. 56 - 78; பிரம பு II. 44 ; பவிஷ்ய பு I 24. 1 - 51 கணேச புராணம்.

3. ஸ்கந்த பு. I. 229; I 3. 2. 21; I. 27; மத்ஸ்ய பு, 4. 1; 6 - 27; 154; 158. 39 - 41; 160, 1 - 25; 159, 1 - 3; வராக பு 25; 1 - 43 24, - 1 - 45 பிரமாண்ட பு. III. 10. 40 - 51; வாமன பு 57 1 59; 21. 1 - 22; 57, 52 - 102. 58, 1 - 21; வாயு பு I. 54.24; I, 154. 24 பிரமபு II. 11. சிவபுராணம் கைலாச சம்ஹிதை, 7. 40; 7. 64;

4. பவிஷ்ய பு. III. 13. 1 - 19; பிரம்ம பு II. 43; பிரம்மாண்ட பு III. 23. 75; III. 23. 81; கூர்ம பு. II. 31. 23 -38; மத்ஸ்ய பு 183. 80 - 100; நாரதீய பு. II. 29; சிவ பு ஞானசம்ஹிதை 49. 65. 96; வித்யேஸ்வர சங்கிதை, 6. 11 - 21; ஸ்கந்த பு. II. 3. 2; III. 1. 24; IV. 1 -31;

* * *

சிவமயம்

# வேதாகமங்கள்

திரு சு. நடேசபிள்ளை, B. A. B. L.

தமிழ் நாட்டில் அவதரித்த சைவசமயாசாரியார்களும் சந்தானாசாரியர்களும் வேதங்களையும் ஆகமங்களையும் பிரமாணமாகக் கொண்டனர். அவை கூறும் முடிபுகளில் அவர்கள் வேறுபாடு காணவில்லை. அவற்றின் முடிபான உண்மையை அவர்கள் தமது அநுபவத்தில் உணர்ந்தனர். இவ்வநுபவம் மனவாக்குகளுக்கு எட்டாத பராநுபவமாகும். வேதங்களின் ஞானகாண்டமாகிய உபநிடதங்கள் இப்பராநுபவத்தைப் பற்றி முழங்குகின்றன; ஆகமங்கள் இவ்வநுபவத்தைப் பெறுவதற்கான வழிகளைப் படிப்படியாக விளக்குகின்றன. உபநிடதங்கள் ஞானப்பிழம்பாய் அமைந்துள்ளன; ஆகமங்கள் ஞானசாத்திரங்களாய் உண்மையைத் தெளிவிக்கின்றன. உபநிடதங்களின் உட்கருத்தைப் பற்றிப் பக்குவமில்லாதவர்களுக்கு மலைவு உண்டாகிறது; ஆகமங்கள் அம்மலைவை அகற்றும் மூலபாடியங்களாகப் பயன்படுகின்றன. வேதங்களைப் பற்றியும் ஆகமங்களைப் பற்றியும் திருமூலர் கூறும் திருமந்திரச் செய்யுள் சிந்திக்கத்தக்கது.

வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாத னுரையவை நாடிலிரண் டந்தம்
பேத மதென்பர் பெரியோர்க் கபேதமே.

உண்மை ஞானம் சிவப்பிரசாதமாகும். ஆன்மாவின் மலஇருளை நீக்குபவன் ஞான சூரியனாகிய இறைவனேயாவன். ஆதலால் ஞான சாதனங்களாயுள்ள வேதங்களும் ஆகமங்களும் இறைவன் அருளிய நூல்களாகவே கொள்ளப்படும். அங்ஙனமே திருமூலர் கொண்டு, வேதத்தைப் பொது என்றும் ஆகமத்தைச் சிறப்பென்றும் குறிப்பிட்டார். அவர் கூறும் இரண்டு அந்தங்கள் வேதாந்தம், ஆகமாந்தம் என்பனவாகும். இங்குக் குறிக்கப்பட்ட ஆகமங்கள் சைவாகமங்கள்; அவற்றின் முடிபு சைவ சித்தாந்தம் என்று வழங்கப்படுகிறது. வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம் என்று சைவசந்தானாசாரியருள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியார் கூறினர். வேதங்களுக்கும் சைவாகமங்களுக்கும் யாம் பேதம் கண்டிலேம் என்று பிரம்மசூத்திர பாடியகரராகிய நீலகண்ட சிவாசாரியார் அறுதியிட்டுரைத்தார். இப்பழைய கருத்தையே குமரகுருபரர், தாயுமானவர் முதலிய பிற்காலத்துப் பெரியோரும் கொண்டனர்.

**வழிபாட்டு முறைகள்**

வேதாகமங்களின் முடிபு ஒன்றுயிருப்பினும், அவற்றிற் கிடையில் வழிபாட்டு முறையில் வேறுபாடுகள் உண்டு. வேதங்கள் கர்ம காண்டத்திற் காட்டும் வழிபாட்டுமுறை யாகாதி கர்மங்களைப் பற்றியதாகும். வேதமந்திரங்களில் பெரும்பான்மையானவை அக்கினி, வாயு, இந்திரன் முதலிய தேவாத்மசக்திகளை விதந்தோதுவன. கர்மகாண்டத்தின் முக்கியபகுதி பலவித காரணங்களால் வழக்கொழிந்து போய்விட்டது. இறை வழிப்பாட்டிற்குரிய திருஉருத்திரம் போன்ற ஒரு சில வேத மந்திரப் பகுதிகளும், அக்கினிகாரியம் முதலிய வைதிகமுறைகளும் ஆகம வழிப்பாட்டில் இடம்பெற்றுள்ளன. ஆகமங்கள் பிரதானமாகக் கொண்ட ஆலயவழிபாட்டு முறை வேதங்களிற் காணப்படவில்லை. சைவமக்கள் பல நூற்றாண்டுகளாக அநுட்டித்து வரும் வழிபாட்டு முறை ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டதாகவும், வைதிகத்திற் சிற்சில பகுதிகளைத் தழுவியதாகவும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உருவமும் நாமமும் கடந்த முழுமுதற் கடவுளுக்கு உருவமும் நாமமும் கொடுத்து ஆன்மா வழிபடுதற்குரிய முறையை ஆகமங்கள் வகுத்துள்ளன. இறைவன் மந்திரத் திருமேனி கொள்பவன் என்றும், ஆன்மா வழிபடுகின்ற உருவத்தில் தோன்றி அருள்புரியும் இயல்புடையவன் என்றும் அவை போதிக்கின்றன. ஆலயப் பிரதிட்டை, மூர்த்திப் பிரதிட்டை முதலியவற்றை அவை விரித்துக் கூறுகின்றன. ஆகமங்கள் காட்டும் வழிபாட்டு முறை பக்திமார்க்கத்தில் ஆன்மாவைச் செலுத்துவதாகும். ஆலய வழிபாடு ஆன்மாவின் புறக்கரணங்களையும் அகக்கரணங்களையும் சிவசம்பந்தப் படுத்தும் சிவபுண்ணியமாகக் கொள்ளப்படும். செபம், தியானம் முதலியவை அந்தர்யாக பூசையாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நான்கு பாதங்களாக ஆகமங்கள் அமைந்துள்ளன. சரியை முதலியவை தவம் என்று சொல்லப்படும். இவற்றுல் ஆன்மா சித்தசுத்தியும் பரிபக்குவமும் அடைந்து ஞானத்துக்கு அதிகாரியாகும். ஆகமங்கள் படிப்படியாகக் காட்டும் இவ்வழி சோபான மார்க்கம் என்று கூறப்படும்.

**ஞானபாதம்**

ஆன்மாவைப் பற்றியும், ஆன்மாவின் பொய்ச்சார்பாகிய உலகத்தைப் பற்றியும், அதன் மெய்ச்சார்பாகிய இறைவனைப் பற்றியும் ஆகமங்கள் ஞானபாதத்தில் விளக்குகின்றன. ஆன்மா உலகவாழ்வில் கட்டுப்பட்டிருக்கும் பந்தநிலையில் பசு என்றும் சொல்லப்படும். அதைக் கட்டும் ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்கள் பாசமாகும். அக் கட்டினின்றும் அதை விடுவிக்கும் இறைவன் பதியாவான். பதி, பசு

பாசம் என்ற இம்மும்முப்பொருளுண்மையை ஆகமங்கள் தெளிவாக்குகின்றன. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது. அது பாசத்தைச் சார்கின்ற இடத்துப் பாசமயமாகவும், அதை நீங்கி இறையாகிய சிவத்தைச் சாருமிடத்துச் சிவமயமாகவும் நிற்கும் தன்மையுடையது. ஆன்மா சிவத்தைச் சார்ந்து சிவமயமாக நிற்பது அத்துவித நிலையாகும்; இரண்டற்ற அனந்நிய நிலை என்று இது பொருள்படும்.

இத்தகைய ஆன்ம இலக்கணத்தின் விளக்கத்தை அநேக உபநிடதங்களில் காண்பதற்கில்லை. அவை ஆன்மா அடையும் முடிவான பராநுபவத்தை ஆன்மாவில் சார்த்தியே கூறுகின்றன. ஆன்மாவைக் காட்டி உபநிடதங்கள் ஆன்மாவே சிவம் என்ற அத்துவிதாநுபவத்தைத் தூலாருந்ததி நியாயமுறையில் உபதேசிக்கின்றன. பாசத்தினின்று நீங்கிய பரிபக்குவ நிலையிலே தான், ஆன்மா இவ்வுபதேசத்துக்கு உரியதாகின்றது. பாசத்தைச் சார்ந்து பாசமயமாகப் பெத்த நிலையில் இருக்கும் ஆன்மாவுக்கு இவ்வுபதேசம் விபரீதத்தை விளைவிப்பதாகும். உபநிடதங்களிலுள்ள தத்துவமசி (அதுநீ ஆகின்றாய்) முதலிய மகாவாக்கியங்கள் பக்குவிகளுக்கே உரிய இரகசிய மறைப் பொருள் என்று சொல்லப்படும். பரிபக்குவ நிலையடைந்து சுவாநுபூதி பெற்ற ஆன்மாவுக்குத் தான் வேறு, சிவம் வேறு என்ற பேதவுணர்வு இல்லை. "நான் சிவமாகின்றேன" என்ற சிவோகம் பாவனையில் அது தலைப்படுகின்றது. திருமூலர் இவ் வநுபவத்தைக் கூறும் செய்யுள் பிரமாணமாகும்.

நானென்றும் தானென்றும் நாடினே னுடலும்
நானென்றும் தானென்றிரண்டில்லை யென்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினன்
நானென்று நானும் நினைப்பொழிந்தேனே.

சிவஞானத்தைப் பெற்ற ஆன்மா சிவபோகத்தில் நிலைத்துவிடுகிறது. இந்நிலையில் ஆன்மாவுக்கு உலகம் ஒருண்மைப் பொருளாகத் தோன்றுது. "யாவையும் சூனியம் சத்தெதரீ" என்பது சிவஞான போதச் சூத்திரம். இது பெத்த நிலைகடந்த ஞானிகளின் அநுபவம்; ஏனையோர்க்கு உலகம் உண்மைப் பொருளாகும்

**உபநிடதங்களின் கருத்து.**

அநேக உபநிடதங்கள் பராநுபவப்பொருள் ஒன்றைப்பற்றி பிரதானமாகப் பேசுவதாலும் முப்பொருள் விளக்கத்தை அவைவெளிப்படையாகக் கூறுமையினாலும் உபநிடதங்களின் உட்கருத்தைப்பற்றி மலைவு ஏற்படலாயிற்று; மாயாவாதம் எழுந்தது. உபநிடதங்களின் கருத்தை

விளக்குவதற்கு எழுந்த பிரம்ம சூத்திரத்தையும் அதன் பாடியகாரர்கள் தத்தம் கொள்கைக்குத் தக்கவாறு மாறுபட்டுப் பொருள் கொண்டனர். ஏகான்மவதாம், விசிட்டாத்துவைதம், துவைதம் என்ற மூவகையில் இப்பாயடிங்கள் அமைந்தன. விசிட்டாத்துவைதத்தை நாட்டிய இராமாநுசர் பிரம்மசூத்திரத்தைக் கூடிய அளவு நேரியமுறையில் பொருள் கொண்டார் என்பது காய்தல் உவத்தல் இல்லாத ஆராய்ச்சியாளரது கொள்கையாகும். இராமாநுசர் சித்து, அசித்து, ஈசுவரன் என்ற முப்பொருள் உண்மையை அடிப்படையாகக் கொண்டே தமது பாடியத்தை எழுதியுள்ளார். இவர் அக்கொள்கைக்கு உபநிடதங்களினின்று பிரமாணம் காட்டுதற்குச் சுவேதாசுவதர உபநிடதத்தையே மேற்கொண்டார் என்பது அவர் பாடியத்தினின்று நன்கு விளங்குகிறது. சுவேதாசுவதர உபநிடதம் புராதன உபநிடதங்களில் ஒன்று. அது சைவச்சார்பாகிய உபநிடதம் எனினும், வைணவராகிய இராமாநுசர் அதையே முக்கிய பிரமாணமாகக் கொண்டார். நீலகண்ட சிவாசாரியார் சைவபரமாக எழுதிய பாடியம் இராமாநுசருடைய பாடியத்துக்கு முற்பட்டதென்று கருதுவாருளர். நீலகண்ட பாடியத்துக்கும் இராமாநுசர் பாடியத்துக்கும் ஓரளவு கருத்தொற்றுமை உண்டென்பது பலருடைய அபிப்பிராயமாகும். நீலகண்டசிவாசாரியர் ஆகமங்களைத் தழுவியே உபநிடதங்களுக்குப் பொருள்கொண்டார். சுவேதாசுவதர உபநிடதத்தின் பொருள் காண்பதற்குச் சைவாகமங்கள் பயன்படுகின்றன.

ஆன்மாக்களின் அறிவுக்கு ஏற்றவாறு பௌட்கரம், மிருகேந்திரம் போன்ற ஆகமங்கள் முப்பொருள் உண்மையைத்தருக்கமுறையில் சாதிப்பினும், முடிபாகிய பராநுபவத்தைப்பற்றி அவை உபநிடதங்களினின்று வேறுபட்ட கருத்துடையன அல்ல. இப்பராநுபவத்தையே வற்புறுத்தும் சருவஞாஞேத்தர ஆகமம், ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்பினைவிளக்கி முறையே பூதான்மா, அந்தரான்மா, சீவான்மா, மந்திரான்மா என்றபடிகளில் அதைக்காட்டி, முடிவில் அது பரமான்வாகச் சிவத்தோடு அத்துவிதநிலை எய்துவதைக் குறிப்பிட்டு, இதற்குமேல் உண்மைப்பொருள் எதுவும் இல்லை யென்று முக்காலும் சத்தியமிட்டுரைக்கின்றது. தைத்திரீய உபநிடதத்தில் வருணன் பிருகுவுக்கு அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசத்தைக் காட்டி ஈற்றில் ஆனந்தமயத்தில் அவனை நிலைநிறுத்தும் முறை சருவ ஞாஞேத்தர ஆகமம் உண்மை ஞானத்தை உணர்த்துவதுபோன்றதாகும். இவ்வாகமத்தின் உபதேசம் உபநிடதங்களினின்று வேறன்று என்பதுஅதில்வரும் சிலசுலோகங்களால் அறியக்கிடக்கின்றது. அவற்றின் கருத்தைப் பின்வரும் மொழிபெயர்ப்புச் செய்யுள் தெளிபவுடுத்துகின்றது.

சிவன் வேறே யென்றும்நான் சிவனினும்வே றென்றும்
திரிவுபட வேருகக் காண்பதனை விட்டுச்
சிவனேநான் நானேயச் சிவனெனவொன் றுகச்
சிந்திப்பா னெவ்விடத்தும் வியாபகனு மாகி
அவனேயச் சருவான்மா வானசிவ சொரூபம்
ஐயமறக் காண்குவனு மனநிய பாவனையால்
சிவனேநா னெனவிகற்பா தீதனு யிருந்த
சிவயோகிக் குச்சருவக் ஞத்துவமும் விளங்கும்.

வேதங்களும் ஆகமங்களும் காட்டும் முடிபான ஞானனுபவம் பெரியோர்க்கு அபேதம் என்பது முற்றும் உண்மையாகின்றது. பரம ஞானியாகிய அருணகிரிநாதருடைய கந்தரலங்காரச் செய்யுளொன்று யாம் நினைவு கூர்வதற்குரிய தாகும்.

வேதாகமச் சித்ரவேலாயுதன் வெட்சி பூத்ததண்டைப்
பாதாரவிந்தம் அரணுக அல்லும் பகலுமில்லாச்
சூதானதற்ற வெளிக்கே யொளித்துச் சும்மா இருக்கப்
போதாயினி மனமே தெரியாதொரு பூதர்க்குமே.

* * *

## தியானம்

பாலில் வெண்ணெய் மறைந்து இருப்பதுபோல் மனிதன் உள்ளத்தில் அந்தராத்மா மறைந்து நிற்கிறது. பாலைத் தயிராக்கி அதைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல், உள்ளத்தைப் பக்குவப்படுத்தி அதனுள் மறைந்திருக்கும் ஆத்மாவைக் கடைந்து திரட்டி எடுக்கவேண்டும்.

வெள்ளம் ஓடாத ஆற்றில் மணலுக்குள் தண்ணீர் மறைந்து நிற்கிறது. தோண்டினால் ஊற்று உண்டாகும். அவ்வாறே, உள்ளத்தில் மறைந்து நிற்கும் ஈசுவரனையும் அடையலாம்.

அரணியிலிருந்து நெருப்பு உண்டாக்குவது போலும், பாலிலிருந்து வெண்ணெய் கடைந்து திரட்டி யெடுப்பதுபோலும், ஆற்று மணலில் ஊற்றுத்தோண்டித் தண்ணீர் மொண்டுகொள்வது போலும், தவத்தினால், அதாவது மனதையும் புலனையும் அடக்கித் தியானம் செய்வதனால், உள்ளத்திலே மறைந்து கிடக்கும் பரமாத்மாவைத் தரிசியுங்கள் என்று சுவேதாசுவதர உபநிஷத்தில் உபதேசம் செய்யப்படுகிறது.

— ராஜாஜி

* * *

சிவமயம்

# சைவசாதனங்கள்

திரு. கு. அம்பலவாணபிள்ளை

மலர்தலையுலகில் மானிடராய்ப் பிறந்தவர்கள் தாம்பிறந்த நோக்கின் உண்மைப் பேற்றினை யடையமுயல்வதே பெருங்கடனுகும். இறைவன் கடாட்சத்தால் காலத்துக்குக் காலம் உண்மைப் பெரியார்கள் தோன்றி உண்மைகளை உள்ளபடி யெடுத்துரைத்து வழிகாட்டியது மன்றி எக்காலத்திலும் ஒளிகுன்றுது பிரகாசித்து மக்கட்கு அறிவு விளக்கத்தைத் தரக் கூடிய தெய்வத் தன்மை வாய்ந்து நூல்களையும் நமக்களித்துச் சென்றுள்ளார்கள். உலகிலுள்ள பல் வேறு சமயங்களும் இறைவனடியை ஆன்மா சென்றடைய வழிகள், சாதனங்கள் வகுத்துள்ளன. அவைகளைக் கூறும் நூல்களும் பல. இவைகள் யாவற்றிலும் சிறந்தனவாகவும் இறைவனுக்கணித்தாக விரைந்து ஆன்மாவை கூட்டிவைக்கும் ஆற்றலும் தகுதியும் வாய்ந்தனவாகவு முள்ளவை சைவசாதனங்களே யென்பாம். இச்சாதனங்கள் எத்துணைச் சிறப்பாக நம்மை இறை வழியில் செல்லவைக்கின்றனவென்பதைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்காகும்.

சமய சாஸ்திரங்களை எத்தனை முறைகற்றும் பாண்டித்திய மடையினும் ஒருவர் உண்மை ஞானத்தைப் பெற்று விடவியலாது. சைவசாதனங்களை உள்ளபடி மனவன்புடன் கைக் கொண்டு இடை விடாது கடவுளைப்பக்தி செய்தாலன்றி அனுபவஞானம் உதிப்பதென்பது அருமையிலருமை. சார்ந்ததின்வண்ணம் நிலைபெறும் ஆன்மா தன்னையறிந்து தலைவனையறிய எவ்வளவுக்கு ஊக்கத்துடன் முயலுகின்றதோ, அவ்வளவுக்குத் தூய்மையடைந்து ஒளியைப் பெறுகின்றது. உண்மைஞானமானது, சாதனங்களை மேற்கொண்டுவரபடிப்படியாக வந்து கைகூடுவதொன்று. இலக்குத்தவருது நேரியவழியே சென்று விரும்பிய உண்மைப் பேற்றினையடையச் சைவசாதனங்கள் போல் எவையும் நமக்கு இன்றியமையாத உசாத்துணையாகா.

## ஐம்புலன்கள்

வினைப் போகமே தேகமாகக் கொண்டுபிறவியை யெடுத்த ஆன்மாவினை, நல்வழியிற் சேரவிடாது தடுத்து மேலுந் தீய வழிகளில் செலுத்தி நிற்பன ஐம்புலன்களே. இந்த ஐம்புலவேடர்களை நாம் வென்றுலன்றி நமக்குஉய்வு ஏது? அவைகள், மத்திலகப்பட்டதயிர் போல்

நமது மனதினைக் கலக்கியடித்துத் தீயவழியில் நம்மை இழுத்துச் செல்லும் இயல்புடையன. இவைகளை நாம் வென்றுலன்றி உய்வடைந்து இறைவனது அடித்தலத்தை அடையவியலாது. ஐம்புல வேடரோ மனமாகிய குதிரையிலேறிச் சவாரி செய்து தாம் விரும்பியபடி கொண்டு செல்கின்றனர். தூயநெறியிற் செல்லவிடார். அப்போது ஆன்மா மாயையில் அகப்பட்டு ஆற்றொணாத்துயரில் மாள்கின்றது. இந்நிலை நீங்கி, ஐம்புலன்களையே குதிரையாகக் கொண்டு மனம் அக்குதிரைகளில் ஏறி யவைகளை யடக்கி சவாரி செய்யும் பெருநிலைவந் தெய்தப் பெற்றுற்றுன் ஆன்மாவுக்கு உய்வுண்டு. இது எப்படிக்கை கூடுமென்பது பெருங்கேள்வியாகும். சைவசாதனங்களை மேற்கொண்டு தான் இது ஆகவேண்டியது. அவைகளைத் துணையாகக் கொண்டு புலன்களை வென்று இறைவன் திருவடியே தஞ்சமென்ற வுணர்ச்சி மிகுந்து திருவடிப் பேற்றைப் பெறவேண்டும்.

எச்சமயத்தவர்க்கும் முத்தியைப் பெறச் சாதனங்கள் வகுக்கப் படாது போகவில்லை. ஆனல், சைவசாதனங்ளோ அவைளெல்லாவற்றி லும் பன்மடங்கு சிறப்புடையன. அச்சாதனங்களின் பெருமையையுந் தெய்வீகவாற்றலையும் புறச்சமயத்தவர் உண்மையில் விளங்கிக் கொள்வதென்பது அசாத்தியம். அவைகளில் மிகப் பிராதானமாக எடுதுரைக்கப்படக் கூடியன திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாட்சரம், சிவநாமம், சிவவிரதம், சிவபுராணம், சிவத் தோத்திரம், சிவனடியார் வழிபாடு என்பன. இவைகளை மெய்யன்போடு சாத்திரங்களில் விதித்த பிரகாரம் ஆர்வத்துடன் கைக்கொண்டு வாழ்க்கையிற் பயன்படுத்திவரின் நம்மைப் பீடித்துவருத்தும் மலங்கள் வலிகுன்றிச் செயலொழிந்து திருவருள் நோக்கம் சித்திக்கும். அப்போது தான் ஆன்மா "நான்" "எனது" என்ற அகங்காரமும் மமதையும் அகலப்பெற்று இறைவன் திருவடியேதஞ்சமெனக் கொண்டு அதைப்பற்றிநிற்கும். "எல்லாம் சிவன் செயல்" என்றவுணர்ச்சி உதிக்கப் பெற்று ஆன்மா தன்னை முற்றுக இறைவனடியில் அர்ப்பணஞ் செய்து நிற்கும் நிலைவந்து சித்திக்கின்றது.

திருநீறு, உருத்திராக்கம் இரண்டும் சைவசமியிகட்கு இன்றிய மையாத சாதனங்கள் என்பாம். அவைகுறிப்பன யாவையென்றும், மெய்யன்போடு அவைகளை அணிவதால் ஏற்படும் பெரும் பயன்கள் எத்தன்மையன வென்றும் சைவசமய சாத்திரங்கள் விரித்துக் கூறி யுள்ளன. தேவாரம், திருவாசகம் முதலிய அருட் பாக்களில் இவை களின் பெருமையும் ஆற்றலும் பரக்கக் கூறப்பட்டிருப்பது கண்கூடு. இவைகளை அணிந்திருக்கும் போது நமது சிந்தை பரிசுத்தமடை கின்றது. தீயஎண்ணங்கள், உரைகள், செயல்கள் நம்மையணுகாது

எட்டிச் செல்கின்றன. மனமும் நல்வழிப்பட்டுப் பொருளின் பேராற்றலில் ஊறிநின்று பரவச மடைகின்றது. இச்சின்னங்களை மெய்யன்போடு அணிகின்றவர் பஞ்சமகாபாதங்களைக் கனவில் எண்ண மாட்டார்.

**ஐந்தெழுத்தின்மகிமை**

இறைவன் நாமமாகிய பஞ்சாட்சரத்தையும் அந்திசந்தியிலும் மற்றும் வசதியான காலங்களிலும் மனவன்போடு ஜெபித்துவருதலால் நம்மைப் பீடித்த வினைகளினின்று நீங்கப்பெற்று உயர்கதியை நாமடைவது நிச்சயம். "மந்திர நமச்சிவாய மாக நீறணியப் பெற்றால், வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே" என்பது ஆன்றோர் வாக்கு. "நானேயோ தவஞ் செய்தேன் சிவாய நம வெனப் பெற்றேன்" என்பது மணிவாசகப் பெருமான்வாக்கு. மேலும் பட்டினத்தடிகள் "அஞ்சக்கரம் என்னுங் கோடரியால் வஞ்சப் புலக்காட்டை வேரற வெட்டி வளஞ் செய்து விஞ்சத்திருத்து சதாசிவம் என்கின்ற வித்தை யிடவேண்டும்" என்றார். இவ்வஞ்செழுத்தின் பெருமையைத் தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகள் நமது மனத்தில் நன்கு படியும் படி எடுத்தோதுகின்றன. பஞ்சாட்சரஜெபத்தை முறையேகைக் கொண்டுவருவோர்க்கு புலன்களின் சேட்டைக்கு எப்படி இடமேற்படும்?

அவ்வாறே சிவநாமங்களைக் கூறுதல், சிவவிரதங்களை அன்போடு அனுட்டித்தல், சிவபுராணப்படனங்களை அன்போடு கேட்டல் என்பனவும் நமது மனத்தைத் தூய்மையடையச் செய்து கடவுட்பக்தியை வளர்ப்பதற்கு மிக்க உதவியாகின்றன. புராணங்களைப் படிப்பதாலும் கேட்பதாலும் திருவருளின் திறத்தையறிந்து நம்மனம் மிக்க உருகுவதுடன் அரிய பெரிய சாஸ்திரங்களின் உண்மைகளையும் தெளிந்து கொள்ள வசதிகிடைக்கின்றது. பத்தியை வளர்ப்பதற்கும் ஆன்மாக்களை இறைவன் திருவருள் புரிந்து ஆட்கொள்ளுந் திறத்தையறிதற்கும் புராணங்கள் இன்றியமையாதன.

**அடியார் பூசை**

சிவத் தோத்திரம் என்பது சிவபெருமானது அநாதிப் பெருமையைப் புகழ்ந்து கூறும்பாக்களைப் படித்தல். தேவார திருவாசகங்களையும் மற்றைய திருமுறைகளையும் ஓதி அடக்கி நிற்கும். எம்பெருமான் புகழையும் அருட்டிறத்தையும் மாத்திரம் இத் திருமுறைகள் எடுத்துரைக்கவில்லை. இவைகள் அரிய பெரிய சமயசாஸ்திரவுண்மைகளைப் பொதிந்துள்ளனவாய்த் திகழ்கின்றன. இவ்வருட் பாக்களை உள்ளன்போடு ஓதிவருவதால் நம்மாட்டுக் கடவுட் பக்தி வளர்ச்சியடைவதுடன் அரிய கருத்துக்களையும் உரிய எண்ணங்களையும் அவை நமது

உள்ளத்திற் புகுத்தி இறையுணர்ச்சியை உண்டாக்குகின்றன. நமது வாழ்க்கை நெறியும் தூய்மையும் வளமுமடைகின்றது. இறைவனருளால் நமக்குக் கிடைத்த தேவாரம் திருவாசகம் நமக்கு என்றும் துணையாக நிற்குங் கருவூலங்களாகும். நம்முடைய வாழ்க்கையில் எவ்வளவு காலம் அவமே பயனற்றவழியில் செலவாகின்றது. அக்காலத்தைத் தோத்திரப்பாக்கள் படிப்பதில் செலவிடின் நமது மனம் இறைவன் திருவடியை நாடாதிருக்குமா ?

சிவனடியார்களைப் போற்றும் பண்பாடு சைவசமயமொன்றிற் கேயுடைய தொன்று. சிவனடியார்களைச் சிவமாகக் கொள்ள வேண்டுமென்பது எங்கள் சாஸ்திரங்கள் கண்டமுடிபு. சைவசாதனங்களை மேற்கொண்ட மெய்யடியாரில் நாம் சிவத்தைக் காண்கிறோம். உண்மையான தெய்வபக்தியில்லாதவர்கள் சிவனடியாரைக் கண்டபோது அவர்களைப் பொய்யர்கள் புரட்டர்களாகக் கருதி அவமதித்துத் துரத்திவிடுகின்றனர். "இவர் உண்மையான பக்தர்" "அவர்பொய்வேடக்காரர்" என்றெல்லாம் முடிவு செய்ய நமக்கு என்ன ஆற்றல் ? என்ன அதிகார முண்டோ ? எவரேனும் நெற்றியில் விபூதியணிந்து உருத்திராக்கம் முதலிய மற்றைய சாதனங்களுடன் தோற்றமளிப்பின் அவரைக் கண்டமாத்திரத்தில் தம்மை ஆண்டான் அடிமையாகப் பாவித்து சிவபெருமானின் திறமையைப் போற்றி அவ்வடியாரையுபசரித்து உணவளித்து வணங்க வேண்டும். சிவபூசையிலும் அடியார் பூசையே சிறந்ததாகச் சமயநூல்கள் எடுத்துக் கூறும். கந்த புராணத்தில், 'நண்ணருங் கதிபெறு நமது தொண்டரை, மண்ணுலகத் தவரேயென்ன வெண்ணலை, அவர்தமை யாமென்றெண்ணுதி" என்று சிவபெருமான் யமதருமராசனுக்குக் கூறியதாகக் காண்கின்றோம்.

இவ்வாறு சிறந்து விளங்குஞ் சாதனங்களைச் சைவசமயத்தவராகும் நாம் எவ்வளவு பேரன்போடு போற்றிப் புகழ்த்து கைக்கொள்ள வேண்டுமென்பது சொல்லாதே போதரும். இக்காலத்தில் இச்சாதனங்கள் மதிப்புக் குறைந்து படிப்படியாகக் கைவிடப்பட்டு வருவதைக் கண்டு சைவசமய அன்பர்கள் யார்தான் இரக்கமடையார் ? வாழ்க்கையையும் சமயத்தையும் பிரித்து வாழும் மயக்க நிலையில் நமது சமயம் ஊனமடைவது நூதனமன்று. தூய சமயவாழ்க்கை யென்பது சைவசாதனங்களுடன் மிக்க தொடர்பும் ஐக்கியமுமின்றி நிலை பெறுவதெப்படி ? ஆகவே, சைவ மக்களாகிய நாம் உண்மை ஞானத்தைப் பெற்று இறைவன் திருவடி நீழலையடைய வேண்டுமாயின், சைவசாதனங்களில் நம்பிக்கையும் ஆர்வமுங் கொண்டு அதனைப் போற்றிக் கைக்கொண்டொழுகவேண்டியதுதான்.

* * *

சிவமயம்.

# சுவேதாசுவதரம் - ஓர் உபநிடதம்

திரு. மு. ஞானப்பிரகாசம், B. A. B. Sc.,

உபநிடதங்க ளென்ருலென்ன, பகவத்கீதை என்ருலென்ன, 'ஏகான்ம வாதம் பேசும் நூல்கள்' என்னும் கொள்கை, தமிழகத்தில் நல்லாய் வேரூன்றிக் கிடக்கிறது. அதனல் அவற்றை ஒதுக்கிக் கண் ணெடுத்தும் பாராத ஒரு சைவ மரபு தமிழகத்தில் என்றுந் தான் இருந்து கொண்டு வருகிறது. அந்த நூல்கள் ஏகான்மவாதம் பேசும் நூல்களோ, அன்றி சைவசித்தாந்தம் போல் அநுபவவாதம் பேசும் மெய்ஞ் ஞானசாஸ்திர நூல்களோ என்பதை தமிழ் நாட்டு அறிஞர்கள் வடமொழி மூல நூல்களைக் கற்றுத் தெளிய முயல வேண்டும். சைவசித்தாந்த மரபில் தோன்றி, சைவ சித்தாந்த அநு பூதியில் திளைத்து உபநிடதப் பொருளை தமிழகத்திற்கு உணர்த்திய தனிப் பெருமை தாயுமான சுவாமிகள் ஒருவரையே, சார்ந்ததாகும். தாயுமான சுவாமிகள் வெறும் கல்வியாளரல்லர். உபநிடதங்களுக்குக் கருத்துரை சொல்ல வந்த பாடியகாரருமல்லர். அவர் பெரிய சிவாநு பூதிச் செல்வர். தாம் பெற்ற சிவாநுபூதிச் செல்வத்தை உபநிடதமா கிய பெருமை வாய்ந்த உரைகல்லில் உரைத்து உரைத்து, வேதாந்த சித்தாந்த சமரச ஞானப் பெருமழையை தமிழகத்தின்மீது பொழிந்து விட்டுச்சென்ற பெருங்கருணைமேகம். தாயுமானசுவாமிகள் காலத்திற் கூட தமிழகத்தில் உபநிடதங்கள் அவ்வளவு தூரம் பயிலப்பட்டு வந்த நூல்களல்ல. சுவாமிகள் தமக்குச் சிதம்பர துரிய நிலையில் வாய்த்த பேரநுபூதியைப் பற்றிச் சொல்லுங்கால், பண்டைமறைகளும் அது நானேனென் என்று பாவிக்கச் சொல்லுவது, இப் பாவகத்தைக் காணேன் என அறைகூவிநிற்பதையும், 'வேதகாமப்பொருள் இரண்டில்லை ஒன்று' என்று ஆணையிட்டு நிற்பதையும் உற்றுநோக்குக. சுவாமிகளின் பொன்னேர்ந்த திருவடிகளை மனம் மொழி மெய்களால் வணங்கி, சுவே தாசுவதரம் என்னும் உபநிடதம் பற்றி சில கருத்துரைகளை மாத்திரம் இங்கு வரைய முயலுகின்றேன்.

## உபநிடதங்களும் சைவசித்தாந்தமும்.

மிகப் பழமை வாய்ந்தன வாகிய முக்கிய உபநிடதங்களில் சுவேதாசுவதரமும் ஒன்று. ஏனைய உபநிடதங்களுக்குப் போலவே இதற்கும் ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள், ஸ்ரீமத் விஞ்ஞான

பகவான், ஸ்ரீமத் நாராயண பகவான் முதலிய பெரியார் பலர் தாங்கள் தாங்கள் பெற்ற சமயக் காட்சிகளை அடிப்படையில் வைத்து பாடியங்கள் எழுதியிருக்கின்றனர். ஈசம், கேநம், கடம், பிரசிநம், முண்டகம், மாண்டூக்கியம், சுவேதாசுவதரம் போன்ற முக்கிய உபநிடதங்களெல்லாம் சைவ சித்தாந்தப் பொருள் நுதலுவனவாகும். சொற் சுருங்கியும் பொருள் ஆழ்ந்தும் உள்ள சூத்திர வடிவாகிய வேத மந்திரங்களின் இருதயத்தை உபநிடதங்கள் முதலிய ஞான நூல்களின் உதவி கொண்டே அறிதல் கூடும். அவை யெல்லாம் சைவ சித்தாந்தப் பொருள் நுதலுவனவே என்னும் உண்மையைப் பாடியகாரர் எழுதியபாடியங்களைத் தவிர்த்து, அவற்றின் மூலங்களை மட்டும் படிப்போர் தெளிவாகக்காண்பர். உண்மையான பிரமப் பொருள் இது என ஆராய்ந்து நிச்சயித்தற் கெழுந்தது சுவேதாசுவரசுருதி. அன்னம் பிரமம், பிராணன் பிரமம், மனம் பிரமம், விஞ்ஞானம் பிரமம், ஆன்மா பிரமம், அக்கினி பிரமம், சூரியன் பிரமம் என்றிவ்வாறு வெவ்வேறு பொருள்களைப் பிரமம் என்று சுருதிகள் கூறுகின்றன. அல்லது கூறுவது போல் தோற்றுகின்றன. இத்தோற்றத்தினுல் மெய்யுணர மாட்டாத குறைந்த பக்குவமுடைய எம்போலியர்க்குப் பலவகையிலும் ஐயப்பாடு தோன்றுதல் இயல்பே. அவ் ஐயமொழித்து உண்மையான பிரமப் பொருள் இது வென உணர்த்துதல் இன்றியமையாத தொன்றே. இவ் வகையில் மற்றெல்லா உபநிடதங்களிலும் சுவேதாசுவதரம் மிகு சிறப்புடையதாகும். ஏனைய உபநிடதங்கள் 'உண்மைப் பிரமம்' ஆகிய காரணப் பொருளைப் பற்றி இயைபு பற்றி ஆண்டாண்டெடுத்துக் கூறினும், அதனையே உணர்த்துதற் கெழுந்தன வல்ல. ஆதலால் அதன் பொருட்டே எழுந்த இவ்வுபநிடதம் மற்றெல்லா உபநிடதங்களிலும் மிக்க வலிமையும் பெருமையும் உடையதாகும். இவ்வுண்மையை வைதிக சைவ நெறி நிற்போர் எவரும் மறுக்கத்துணியார்.

**பஞ்சகிருத்தியம்**

சிருஷ்டி முதலிய பஞ்சகிருத்திய தொழிலுக்குக் காரணமாதல் ஒன்றே பிரமத்திற்குச் சிறந்த இலக்கணமாகும். பஞ்சகிருத்திய பஞ்சாக்ஷரநடன தரிசனமே சைவசித்தாந்த தரிசனத்தின் பேரெல்லையாகும். சுவேதாசுவதர சுருதியும் தொடக்கத்தில் பஞ்சகிருத்தியத்திற்குக் காரணமாகிய பிரமம் யாது? என ஆராயத் தொடங்கி, வேதத்தை அறிந்த முனிவர்கள் வாயிலாகப் பின் வரும் வினாக்களை எழுப்புகிறது. நாங்கள் எங்கிருந்து தோன்றினேம்? எதனுல் ஜீவித்திருக்கின்றேம்? முடிபில் எதில் ஒடுங்குகிறேம்? எதனுல் நாங்கள் செலுத்தப்பட்டவர்களாய் சுகதுக்கங்களின் வேறுபாடுகளை அடைகிறேம்? வேதத்தை அறிந்தவர்களே! கூறுங்கள், இந்த வினாக்களினுல் பிரமப்பொருள்

இதுவென நிச்சயித்தற்குரிய குறிப்புக்களை சுருதிகாட்டுகிறது. எதிலிருந்து நாங்கள் தோன்றினேம் என்பதனல் சிருஷ்டியும், எதனல் ஜீவித்திருக்கிறேம் என்பதனல் திதியும், எதில் ஒடுங்கினேம் என்பதனல் சங்காரம், அனுக்கிரகம் ஆகிய இரண்டும், எதனல் செலுத்தப்பட்டு சுகதுக்கங்களை அடைகிறேம் என்பதனல் திரோபவமும் குறிக்கப்பட்டன. எனவே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐம்பெருந் தொழில்கள் செய்வது எதுவோ, அதுவே உலகிற்குக் காரணமாகிய பிரமம் என்பதுவே, வேதத்தை அறிந்த அந்த முனிவர்களின் கருத்தாகும்.

இவ்வாறு வினுக்களை யெழுப்பியதன் பின்னர் அந்தமுனிவர்கள் ஒன்று கூடி தெய்வ சபையில் வீற்றிருக்கிறார்கள். அன்பும், அமைதியும், சாந்தமுமே அந்தத் தெய்வ சபை எங்கணும் வியாபித்துக் கொண்டிருக்கிறது. அந்த முனீந்தரர்கள் எல்லோரும் அகமுகநோக்கம் பெற்றவர்கள். அகமுகத்தில் ஆழ்ந்து ஆழ்ந்து செல்லும் உணர்வினர் தியானயோகசாதனை முறைகளில் தினக்கு மியல்பினர். காலநியதிகள், நாமரூபங்கள், ஒன்றிலும் அகப்படாது கழன்று நிற்குந் தன்மையர். அந்த முனீந்தரர்கள் தம் ஆன்ம அறிவிலே பெற்ற காட்சியையும் அனுபவத்தையும் சுவேதாசுவதரசுருதி, முதலாம் அத்தியாயம் மூன்றும் பாடல் பின்வருமாறு உணர்த்துகின்றது. திருவருள் உண்மையை உணர்த்தும் பல பாடல்களுள் இதுவே தலைசிறந்த பாடலாகும்.

'தே-த்யான யோக அநுகதா: அபஸ்யன்
தேவாத்ம சக்திம் ஸ்வகுணை: நிகூடாம்'

வேதத்தை அறிந்த முனீந்தரர்கள் தியான யோகத்திலும், அகமுகநோக்கிலும் அதி தீவிர நிலை கைவந்த பிரமஞானிகளாதலின் ஆன்மகுணங்களால் மறைக்கப்பட்ட தேவான்மசக்தி எனப்படும் பராசக்தியை சாக்ஷாத்கரித்தார்கள். சிருஷ்டி முதலிய பஞ்ச கிருத்திய தொழில்களுக்கெல்லாம் அதுவே அந்தத் தேவான்மசக்தியே மூல காரணம் எனக்கண்டு நின்றார்கள் என்றவாறு.

**பராசக்திவணக்கம்**

கருவிகரணங்களை யெல்லாம் கழற்றி, தானுய் நின்ற நிலையில் தன் ஆன்ம அறிவிலே விளங்கித் தோன்றிய பராசத்திமீது தோத்திரப்பா மாலைகள் பாடத் தொடங்கிய அந்த முனிசிரேஷ்டர்கள் 'அவளால் வந்த ஆக்கமே இவ்வாழ்க்கை யெல்லாம்' என்றும், 'தனுகரணங்கள் புவனபோகங்கள் ஆகிய அனைத்தினுக்கும் நடுவில் நின்று நடம் புரியும் பரதெய்வம் அந்தப் பராசக்தியாகிய பரதெய்வமே'

என்றும், 'ஜீவகோடி பேதங்களையெல்லாம் என்றென்றும் விட்டுப் பிரியாது, களவாய் அவற்றோடு அத்துவிதக்கலப் புற்று அண்டங்கள் தோறும் புவனங்கள் தோறும் கன்மானுசாரியாய், அவைவேறு தான் வேறு என்பதின்றி சஞ்சரித்து உறவாடிவரும் பரதேவதை பராசக்தியாகிய அந்தப் பரதேவதையே' என்றும், இவ்வாறெல்லாம் அந்த முனிசிரேஷ்டர்கள் பராசக்தி—பரதேவதை வணக்கம் செய்து பாசங்களிலிருந்து நீங்கி பரவசமுற்று முக்தர்களாய்த் திகழ்ந்தார்கள்.

தாயுமான சுவாமிகள் பாடல்களில் பயிற்சியுள்ளவர்கள் சுவேதாசுவதரம் போன்ற உபநிடதங்களையும் தோத்திர நூல்களாகவே காண்பர். ஞானசாஸ்திர நூல்கள் என்றுலென்ன, தோத்திர நூல்களென்றுலென்ன தர்க்க மிடுவதற்கும், வாதப்பிரதிவாதம் செய்வதற்கும் எழுந்தனவல்ல. இருவகை நூல்களும் எம்மையெல்லாம் பாசபந்த நிலையிலிருந்து ஈர்த்து திருவருட் பெரும் வாழ்வில் செலுத்துவதற்கே எழுந்தன. சுவேதாசுவர சுருதி திருவருட் பெரும் வாழ்விற்கு அரண் செய்யும் ஞானசாஸ்திரப் பெருநூலாய் விளங்குவது மாத்திரமன்றி, பரசிவ வணக்கம் பராசக்திவணக்கம் முதலியன செய்யும் பெருமைவாய்ந்த தோத்திர நூலாகவும் திகழ்கின்றமையின், செந்தமிழ்நாட்டுச் சிவநெறிச் செல்வர் ஒல்லும் வகையில் அதனைப்படித்துப் பயன் பெறத் திருவருள் துணைகூட்டிவைப்பதாக.

* * *

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும்அறி வில்லா தஎன்
கர்மத்தை யென்சொல்வேன் மதியையென் சொல்வேன்
கைவல்ய ஞான நீதி
நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று
நாட்டுவேன் கர்ம மொருவன்
நாட்டிஞ லோபழைய ஞனமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழி யிலே
வல்லா ஞெருத்தன்வர வுந்த்ரா விடத்திலே
வந்ததா விவக ரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்
வெல்லாம லெவரையும் மருட்டிவிட் வகைவந்த
விந்தையென் முத்தி தருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

— தாயுமானவர்

*

உ

சிவமயம்

# குருமகிமை

சிவாகமவித்துவான்

சிவஸ்ரீ S. சுவாமிநாதசிவாசார்யர்

தலைமை ஆசிரியர்

தருமபுர ஆதீன வேதசிவாகம பாடசாலை.

தருமபுரம்.

வேதம் "ஆசார்ய தேவோபவ" ஆசாரியனைத் தேவனைக் கொள் என்று கூறுகின்றது. ஒவ்வொருவரும் பிறவிப்பயன் அடையும் பொருட்டுக் குருவினருளைப் பெறவேண்டும்.

"குருவை மனிதனாக நினையாதே; குருவை மனிதனாக நினைப்பவனுக்கு மந்திரங்களாலும் பூஜையினாலும் சித்தி உண்டாகாது."

"மறைந்து நிற்கும் நெற்றிக் கண்ணுடனும் மறைந்திருக்கும் இரண்டு கைகளுடனும் விளங்கும் சாக்ஷாத் குருமூர்த்தியாக ஆசாரியனை நினைக்கவேண்டும்."

"மந்திரம் தீர்த்தம் தெய்வம் ஜோதிஷன் ஆசான் இவர்களிடத்தில் எவ்வாறு எண்ணம் உதிக்கிறதோ அவ்வாறே சித்தியுண்டாகும்."

என்பன முதியோர்களின் அருள் மொழி.

குருவை வணங்கி அன்புடன் தொண்டு செய்தால் குரவர்க்கெல்லாம் குருவான சிவபெருமானது திருவருள் கிடைக்கும். சிவபெருமான் ஜகத் குருவாவார்.

"திருமாலிந்திரன் பிரமனுபமனியன் தபனனந்தி
செவ்வேளாதித்
தருமுது குரவருக்கும் தனதருளால் ஆசாரியத்
தலைமை நல்கி
வருமெவர்க்கும் முதற்குருவாய்மெய்ஞ்ஞானமுத்திரைக்கை
மலரும் வாய்ந்த
உருவழகுங் குறுநகையும் காட்டியருள்தருஞ்சிவனை
உளத்தில் வைப்போம்.

விஷ்ணு பிரமன் உபமன்யு சூரியன் நந்தி ஸ்கந்தன் இந்திரன் முதலானவர்களுக்குத் தம்முடைய அருளினற் குருத் தன்மையை யளித்த சிவபெருமான் ஆதிகுரு.

"யொப்ரும்மாணம்விததாதி பூர்வம்
யோவைவேதாம்சப்ரஹிணேதிதஸ்மை"

எவர் பிரமனைச் சிருஷ்டித்து அவரிடத்தில் வேதத்தை யளித்தாரோ அவர் ஜகத்குகு.

சிவபெருமானது மூர்த்திபேதங்களில் பதினன்காவது மூர்த்தியாக குருமூர்த்தியை ஆகமங்கள் கூறுகின்றன. "தக்ஷிணமூர்த்தி ரூபந்து சதுர்விம்சத் ப்ரகீர்த்திதம்"

தென்திசையை நோக்கி வடவாலின் கீழமர்ந்து சனகர் முதலிய முனிவர்களுக்கு உபதேசம் செய்தருளியதால் தக்ஷிணமூர்த்தி என்ற திருநாமம் உண்டாயிற்று. ஆகமங்களிலும் மந்திரசாத்திரங்களிலும் தக்ஷிணமூர்த்தியின் வடிவங்கள் பல பேதங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. கபில தக்ஷிணமூர்த்தி, கைலாயவாஸ தக்ஷிணமூர்த்தி, வீணைகுஞ்சித தக்ஷிணமூர்த்தி, யோகதக்ஷிணமூர்த்தி, ஞானதக்ஷிணமூர்த்தி, கௌர்யாலிங்கித தக்ஷிணமூர்த்தி, ஆசீன தக்ஷிணமூர்த்தி, சுந்தர தக்ஷிணமூர்த்தி, மேதா தக்ஷிணமூர்த்தி, க்ருச்சிர தக்ஷிணமூர்த்தி, விமல தக்ஷிணமூர்த்தி என்ற பெயரையுடைய குருமூர்த்தியின் ரூபத்யானங்கள் வெவ்வேருகக் காணப்படுகின்றன. சிவமூர்த்தங்களுள் மந்தஹாஸமுடைய மூர்த்தி குருமூர்த்தியே.

மற்றும், சிவபூஜையில் பூசிக்கப்படும் ஏழு குருக்களும், சிவபெருமானது ஆணையின் வண்ணம் நிற்கும் ஆசாரிய புங்கவர்கள் அவர்கள் சதாசிவன் அனந்தன் ஸ்ரீகண்டன் அம்பிகை ஸ்கந்தன் விஷ்ணு பிரமன் என்ற பெயருடையவர்கள். இவ்வாறு உலகின்கண் வாழையடி வாழையாய்க் குருபரம்பரையில் வந்த ஆசார்யர்கள் பலர் ஆவார்கள்.

கல்வி நிலையங்களில் கல்வி போதிக்கும் உபாத்தியாயர் வித்யாகுரு. ஞானோபதேசஞ் செய்யுங்குரு ஞானோபதேஷ்டா.

சமய விசேஷ நிர்வாண தீக்ஷை செய்வித்து மந்திரோபதேசம் செய்யும் குரு ஞானாசாரியன். இவர் "தீக்ஷைவமோசயேத் பாசான்" என்ற விதியுணர்ந்து தீக்ஷையினல் சிஷ்யனுடைய பாசத்தை நீக்கி முத்திபெற அருளுகிறார்.

சீடனுவான் குருவினுடைய பார்வையினல், பரிசத்தினல் சம்பாஷணையினல் பரிபாகத்திற்கு ஏற்றவாறு அருள் பெறுகின்றன்.

ஆசாரியனே சிவன்; சிவனே ஆசாரியன்; இவ்விருவர்களை யும் அபேதமாக உணருபவன் வேதவித் எனப்படுவன் என்று தேவீகா லோத்தராகமம் கூறுகின்றது.

ஆசாரியரைத் திருப்தி செய்து கொண்டாடுபவர், இவ்வுலகில் நோயற்ற வாழ்வுடன் இன்புற்று முடிவில் சிவகதி அடைகிருர் என்பது சிவாகம சித்தாந்தம்.

சிவஸ்ரீ: சிவாசாரியரவர்களின் பாராட்டு விழா எனக்கு மிகவும் மகிழ்ச்சியையளிக்கிறது. எத்தனை பாராட்டுக் கூட்டம் நடத்தினுலும் அவர்களுக்குப் பொருந்தும். அவர்களால் வெளியிடப்பட்டிருக்கும் நூல்கள் யாவும் மிகவும் சாரமாயும் மக்களுக்கு நன்கு பயன்தரக்கூடி யனவாயுமுள்ளன. அவற்றைப் பார்க்கும் யாவரும் அவர்களைக் கொண் டாடாமல் இருக்க முடியாது. விழாச் சபையினர்களுக்கு எனது ஆசி கூறி குருக்களவர்கள் எல்லாம் வல்ல இறைவனருளால் நீண்ட காலம் வாழவேண்டுமென அவ்விறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சுபம் பவது.

* * *

## இலங்கைச் சர்வகலாசாலை இந்துமாணவர் இயக்கத்தினரின்

# பாராட்டுரை

அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் அவர்களை நேரில் அறியும் பாக்கியம் எனக்குக் கிடைக்காவிட்டாலும், அவர்கள் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு அரைநூற்றுண்டுக்கு மேலாக ஆற்றிவரும் தொண்டிகளைப் பற்றியும், அவற்றுல் இந்தியாவிலும், இலங்கையிலும் ஏற்பட்டுள்ள புகழைப்பற்றியும் நன்கறிந்துள்ளேன். அவர்கள் எழு திய சமய நூல்கள் இளைஞருக்கும், முதியோருக்கும் ஒருங்கு பயன் படக்கூடியவையாகக் காணப்படுகின்றன. அவர்கள் நாட்டிய தாபனங் கள் மக்களுக்கு அரும் சேவைபுரிந்து வருகின்றன.

இப்படி அருந்தொண்டு புரிந்த குருக்கள் அவர்களுக்கு ஒரு பாராட்டு விழா வைப்பது மிகவும் பொருத்தமாகும். இலங்கை சர்வ கலாசாலை இந்து மாணவர் இயக்கத்தின் சார்பாகக் குருக்கள் அவர் களுக்கு எனது வாழ்த்தைத் தெரிவிக்கின்றேன். அவர்கள் இன்னும் பல்லாண்டு தொண்டு புரிய நீண்ட ஆயுளையும், சகல சம்பத்துக்களை யும் இறைவனருள வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

சர்வகலாசாலை, கே. சிவபாதசுந்தரம்,
பேராதனை. தலைவர்.

கணபதி துணை

# ஆணவமலம்

மட்டக்களப்பு சைவப்புலவர்; தேசிகமணி;
ஸ்ரீமத் கா. அருணாசல ஆசிரியர்

உலகத்திலே பலப்பல சமயங்கள் இருக்கின்றன. அச்சமயங்களெல்லாம் தனக்கு அங்கமாகக் கொண்டு தான் அங்கியாய் விளங்குவது சைவசமயம். சைவம் என்பது சிவசம்பந்தமானது என்னும் பொருளுடையது. இச்சமயம் தெளிவாகக் கூறுகின்ற கொள்கையே சித்தாந்தம். ஏனைச்சமய சித்தாந்தங்களுக்கு அவ்வச் சமயத்தின் பெயர் சேர்த்து வழங்கப் படுகிறது. சித்தாந்தம் என்ற அளவிலே அது சைவத்தைக் குறிக்கும். எல்லாத் தெய்வங்களும் சிவத்துள் அடங்கும். சமயபேதங்களெல்லாம் சைவசமயத்துள் அடங்கும். "சைவமாஞ் சமயஞ் சாரும் ஊழ்பெறல் அரிது", "சைவ சமயமே சமயம்"; "சைவத்தின் மேற் சமயமில்லை அதிற் சார்-சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வமில்லை" என ஆன்றோர் கூறுவர்.

சைவ நூல்களிலே பதி பசு பாசம் என்னும் மூன்று பொருள்கள் உள்ளன என கூறப்படுகிறது. பதி சிவபெருமான். பசுக்களாவார் பாசத்தினாற் பந்திக்கப்பட்ட ஆன்மாக்கள். ஆன்மாக்கள் எதனாற் பந்திக்கப்பட்டனவோ அதுவே பாசம். பதி ஒன்று; ஆன்மாக்கள் பல; பாசம் மூன்று. அவை ஆணவம், கன்மம், மாயை என்பன.

உயிர் சித்துப் பொருள்; உடம்பு சடம். உயிர் சடமாகிய உடம்போடு சம்பந்தப் பட்டிருக்கிறது. அதனால் இன்பதுன்பங்கள் உயிரை அடைகின்றன. இன்பதுன்பங்கள் ஆன்மாக்களை அடைதற்குக் காரணம் யாதென்று ஆராயுமிடத்து முன் செய்த கன்மத்தாலென்று தெளிவாகின்றது. கன்மத்தை இவ்வுயிர் செய்தற்கு ஏது என்னை யென்று பார்க்கும் போது, அறியாமையா லென்று தெரிகின்றது. அவ்வறியாமை எதனால் விளைந்த தென்று நோக்கும் போது ஆணவமலத்தால் என்று ஏற்படுகின்றது. அதனால் உயிர்; அறியாமையை விளைத்த ஆணவமலம்; அதனால் விளைந்த கன்மம்; அக்கன்மானுபவத்தின் பொருட்டுக் கிடைத்த தனு கரண புவன போகங்கள் என்றிப்படிப் பல பொருள்கள் ஏற்படுகின்றன. இத்தனு கரண புவன போகங்கள் காரியப் பொருள்கள். அதனால் அவை யொரு முதற்காரணத்திலிருந்து தோன்றி யிருக்க வேண்டும். அதுதான் மாயை. ஆதலின் உயிரும் மலமும் கன்மமும் மாயையுமாகிய பொருள்கள் சித்திக்கின்றன. இனி இவை இருந்தாங்கிராது தொழிற் படுதலின் இவற்றை இயைத்துத் தொழிற் படுத்தும் பதியும் வேண்டப்

படுகின்றார். பதியின் அருளாற்றலேசத்தி. ஆகவே மூப் பொருளும் சித்தித்தல் விவேகிகளாயினர் யாவருக்கும் உடம் பாடாம்.

ஆன்மாக்கள் அநாதி மலசம்பந்தத்தினல் சிற்றறிவுடையன. அவை சர்வஞ்ஞராகிய பதியினல் அனுக்கிரகஞ் செய்யத் தகுந்தன வாயுள்ளன. ஆன்மாக்கள் அநாதியாயுள்ளன. அவையுள்ளவன்றே ஆணவமலமும் அவைகளோடு சகசமாயுள்ளது. அம்மலமுள்ளவன்றே மாயையும் கன்மமும் அவைகளோடு கூடியிருக்கும். ஆகையால் மும் மலங்களும் அநாதியாயுள்ளன. அவை நெல்லிடத்துள்ள உமியும் தவிடும் முளையும் போல்வன.

ஆணவமலமானது வியாபகமான உயிரின் அறிவு இசை செயல் களை அணுத்தன்மையாக்குவது. ஆதலால் அது ஆணவம் எனப்படும். இதன் சொரூபம் மிக இருண்ட இருளின் வடிவம். இதன் செயல் ஆன் மாக்களுக்கு அஞ்ஞானத்தை விளைத்தல். இது கேவலத்தில் உயிர் களுக்கு அறியாமையையும் சகலத்தில் கருவிகளோடு கூடி விபரீத உணர் வையும் செய்யும்.

ஆணவமானது நித்தியமாய், வியாபகமாய், செம்பிற் களிம்பு போன்றதாய், ஏகமாய், கன்மத்திற்குத் தக்கவாறு பந்திப்பதாய் ஆன் மாக்கள் தோறும் வெவ்வேறாய், தத்தம் கால எல்லையில் நீங்கும் சத் திகள் பலபலவுடைத்தாய், சடமாயுள்ளது.

களிம்பு செம்புடன் சகசமாயிருந்து இரசகுளிகையால் தீரும். அதுபோல ஆணவமலமும் ஆன்மாக்களுடன் கூட இருந்தும் சிவசக்தி யாற் போக்கப்படும்.

சிவபெருமான் மாயாகாரியமாகிய தனு கரண புவன போகங் களை ஆன்மாக்களுக்குக் கொடுப்பது ஆணவமலம் கன்மமலம் என் னும் நோய்களைத் தீர்த்துப் பரஞானத்தை விளக்கிச் சிவானந்தப் பெரும் பேற்றைக் கொடுத்தற் பொருட்டாம். தனு கரணாதிகள் யாவும் மாயாமல காரியமாகவும், ஆணவ கன்மமலங்களை இம்மாயாமலத்தால் நீக்குவரென்று கூறியது என்னையெனில், ஆடையின் அழுக்கைச் சாணி உவர்மண் முதலிய பிறிது அழுக்கைக் கொண்டு முழுவதும் நீக்குவது போல, மாயாகாரியமாகிய உடல் முதலியவற்றை மருந்தா கக் கொண்டு, ஏனை ஆணவ கன்மங்களாகிய நோயைப் போக்கி அவ் வான்மாவைச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வுடையதாகச் செய்வர். அந்த மோக்ஷ இன்பமே நிலையான செல்வம். பரமசிவனை அன்போடு வழிபடின் அந்த வீட்டின்பத்தை அடைதற்குச் சந்தேகமில்லை.

இறைவன் திருவருள் உண்டாகுக. விழா மலர் மணமுறுக. பெரி யார் பாராட்டுச் சிறந்தோங்குக.

சுபம்.

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

# பாராட்டு விழாச்சபை

**தலைவர்:** ம. ஸ்ரீ காந்தா

**உபதலைவர்கள்:**
1. சு. துரைச்சாமிக் குருக்கள்
2. பொ. ஸ்ரீஸ்கந்தராஜா
3. ச. அம்பிகைபாகன்
4. சி. சிவபாதசுந்தரம்
5. க. முத்துவேற்பிள்ளை
6. மு. இ. காராளசிங்கம்

**காரியதரிசிகள்:**
1. ச. பஞ்சாட்சரசர்மா
2. மு. வைத்தியலிங்கம்

**தனாதிகாரிகள்:**
1. வித்துவான் க. நடராசா
2. ஆ. முருகேசு

**நிர்வாக சபை அங்கத்தவர்கள்.**

1. கு. பாலசுந்தரக் குருக்கள்
2. சு. இராசேந்திரக் குருக்கள்
3. ஐ. கைலாசநாதக் குருக்கள்
4. சு. பிச்சாடனக் குருக்கள்
5. சோ. சுப்பிரமணியக் குருக்கள்
6. கெ. சோமாஸ்கந்தக் குருக்கள்
7. தி. கைலாசநாத தேசிகர்
8. சு. இராசரத்தினம்
9. க. நவரத்தினம்
10. மு. மயில்வாகனம்
11. T. முருகேசபிள்ளை
12. ச. இராசரத்தினம்
13. கு. அம்பலவாணபிள்ளை
14. செ. சின்னத்தம்பி
15. மு. ஞானப்பிரகாசம்
16. பொ. கிருஷ்ணபிள்ளை
17. த. குமாரசுவாமிப்பிள்ளை
18. வே. நாகலிங்கம்
19. மு. கந்தசாமி
20. இ. குமாரவேலு
21. க. ஆறுமுகம்
22. க. வீரகத்தி
23. சி. மயில்வாகனம்
24. சி. சோமசுந்தரம்
25. சி. சிவசம்பு
26. ஆ. குமரகுரு
27. க. சுப்பிரமணியம்
28. கி. நாகலிங்கம்



சிவஶ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் பாராட்டு விழாச்சபை

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

# கும்பாபிஷேகம், வாலஸ்தாபனம்

முதலியவை நடத்திய ஆலயங்கள்

| | |
|---|---|
| மட்டுவில் | சிவன்கோயில் (சந்திரமௌலீசர்) |
| சாவகச்சேரி | சிவன்கோயில் |
| சித்தங்கேணி | சிவன்கோயில் |
| திருநெல்வேலி | சிவன்கோயில் |
| வண்ணைர்பண்ணை | வைத்தீசுரர் (சர்வசாதகம்) |
| காலி | சிவன்கோயில் (மீனாட்சிசுந்தரேசர்) |
| புத்தூர் | சிவன்கோயில் (சர்வசாதகம்) |
| திருக்கேதீச்சரம் | கேதீஸ்வரர் ஆலயம் |
| பன்னாலை | சந்திரசேகரர் |
| கோப்பாய் | வீரபத்திரசுவாமி. |
| கதிர்காமம் | மாணிக்கப் பிள்ளையார் |
| நல்லூர் | கைலாச பிள்ளையார். |
| பருத்தித்துறை | சித்தி விநாயகர் |
| வல்லிபுரம் | குருக்கட்டுப் பிள்ளையார் |
| சின்னததாய் | விநாயகர். |
| மல்லாகம் | நீலியம்பனை பிள்ளையார். |
| வண்ணை கலட்டி | பிள்ளையார். |
| கோண்டாவில் | நெட்டிலெப்பாய் விநாயகர் |
| அரியாலை | சித்தி விநாயகர். |
| அரியாலை | பிள்ளையார். |
| சங்கானை | மகாதேவப் பிள்ளையார் |
| இணுவில் | பிள்ளையார் |
| கல்வளை | விநாயகர். |
| கைதடி | விநாயகர் கோயில் சிவப்பிரதிஷ்டை |
| கோப்பாய் | இலுப்பையடி பிள்ளையார். |
| வடலியடைப்பு | விநாயகர். |
| சண்டிலிப்பாய் | பிள்ளையார். |
| அராலி | பிள்ளையார் |
| மாசார் | பிள்ளையார் |
| சோறம்பற்று | பிள்ளையார் |
| மருதங்கேணி | மடத்தடி பிள்ளையார். |
| நீராவியடி | பிள்ளையார் |
| செம்பியன் பற்று | மாவடி பிள்ளையார் |
| அச்சுவேலி | பிள்ளையார். |

| | |
|---|---|
| நல்லூர் | சிவஞானப் பிள்ளையார் |
| நீத்துவான் | பிள்ளையார் |
| பொலிகண்டி | பிள்ளையார் |
| சித்தங்கேணி | மகாகணபதி |
| பூநகரி | செட்டிய குறிச்சிப் பிள்ளையார் |
| அச்சுவேலி | மகாமாரி அம்மை. |
| அச்சுவேலி | மீனுட்சி அம்மை |
| திருநெல்வேலி | வாலை அம்மன் |
| கந்தரோடை | வட்டாக்கை அம்மன் (கந்த சுவாமிபிரதிஷ்டை) |
| காரைநகர் | மணற் காடு மகாமாரி அம்மன் |
| சிறுப்பிட்டி | இராஜேசுவரி |
| சங்கரத்தை | பத்திரகாளி |
| இடைக்காடு | புவனேசுவரி |
| வேலக்கை | சுப்பிதரமணியர் |
| சண்டிலிப்பாய் | ஆலங்குளாய் சுப்பிரமணியர் |
| வண்ணை | கதிரேசன் கோயில் |
| உரும்பிராய் | சிதம்பர சிவசுப்பிரமணிய சுவாமி |
| கழுத்துறை | சுப்பிரமணிய சுவாமி |
| பாணந்துறை | சுப்பிரமணிய சுவாமி |
| கதிரிப்பாய் | சிவசுப்பிரமணியர் |
| நெல்லியடி | கந்த சுவாமி |
| ஆனைக்கோட்டை | சுப்பிரமணியர் |
| கொக்குவில் | (புதுக் கோயில்) கந்தசுவாமி |
| நவாலி | கந்தசுவாமி |
| உசன் | கந்தசுவாமி |
| மருதன்கேணி | கந்தசுவாமி |
| கந்தவனம் | சுப்பிரமணியர் |
| சங்கானை | கந்தசுவாமி |
| தெல்லிப்பளை | வைரவர் கோயில் |
| மாவிட்டபுரம் | வைரவர் கோயில் |
| அளவெட்டி | வைரவ சுவாமி |
| சங்கானை | வைரவ சுவாமி |
| மல்வில் | கிருஷ்ணன் |
| சிறுப்பிட்டி | பூதராஜர் |
| சங்கானை | வடலியடைப்பு ஐயனர் |
| தச்சன்தோப்பு | சுப்பிரமணியர் |
| மட்டுவில் | முருகையன் |

முதலிய ஆலயங்கள்

## அச்சுவேலி சிவ ஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள்

### பிரதான நூல்கள்

#### சமஸ்கிருதம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரி பதார்த்த விவேகம் | 1933 | ஆ |
| 2. | பிரணயகலஹவர்ணனம்— கண்டனூர் இராமநாதக்குருக்கள் தமிழ் உரை | 1937 | ,, |
| 3. | சிவாகம சேகரம்; சிவப்ரதிஷ்டாவிதி 1ம் பாகம். | 1949 | ,, |
| 4. | சிவலிங்க பிரதிஷ்டாவிதி 2ம் பாகம். | 1953 | ,, |
| 5. | பிராசாத சட்சுலோகி— சங்கர பண்டிதர் தமிழுரை | 1956 | ,, |

#### தமிழ்

| | | | |
|---|---|---|---|
| 1. | அச்சுவேலிச் சித்திவிநாயகர் ஊஞ்சல் | 1915 | ,, |
| 2. | சிவபூசை விளக்கம் | 1928 | ,, |
| 3. | மகோற்சவ சந்திரிகை. | 1932 | ,, |
| 4. | பிரசாத தீப உரை. | 1933 | ,, |
| 5. | சிராத்த தீபிகை | 1933 | ,, |
| 6. | சைவப் பிரகாசிகை. (1 முதல் 5 பாகங்கள்) தொடக்கம் | 1933 | ,, |
| 7. | விநாயக பரத்துவம் | 1934 | ,, |
| 8. | சைவசாஸ்திரப் பிரமாணம் (சைவாபிமானசங்கப் பதிப்பு) | 1934 | ,, |
| 9. | சிவபூசை விதி | 1937 | ,, |
| 10. | அனுட்டான அகவல் | 1937 | ,, |
| 11. | புவனேசுவரி மகத்துவம் | 1939 | ,, |
| 12. | சிவஞானபோத 9ம் சூத்திரம் சித்தாந்த மகா நாட்டுக் கட்டுரை (தருமையாதீனம்) | 1941 | ,, |
| 13. | ஆலய சேவை (வேதாகம சங்கப் பதிப்பு) | 1949 | ,, |
| 14. | சாதியும் சமயமும் கோவை C. K. சுப்பிரமணிய முதலியாரின் B.A. கட்டுரையுடன் | 1950 | ,, |
| 15. | வேதாகம நிரூபணம் 1ம் பாகம் | 1950 | ,, |
| 16. | வேதாகம நிரூபணம் 2ம் பாகம் | 1951 | ,, |

17. சிவ சங்கர பண்டிதர் சரித்திரம் 1954 ,,
18. மகோற்சவ விளக்கம் 1958 ,,
19. முப்பொருள் விளக்கம் 1960 ,,

**பத்திரிகை**

சைவ சாஸ்திர பரிபாலனம்
(1939 ஆவணி தொடக்கம் 1941 மார்கழி வரை)

**அச்சில் இருக்கும் நூல்**

வைதிக சந்தியா வந்தனம்

**அச்சுக்கு ஆயத்தமாயிருப்பவை**

கணேச பிரதிஷ்டா விதி
சுப்பிரமணிய பிரதிஷ்டா விதி
சத்தி பிரதிஷ்டா விதி
கந்தபுராணக் கட்டுரைகள்
கந்தபுராண நீதி மஞ்சரி

*

PRINTED AT KALAIVANI PRINTING WORKS,
JAFFNA, CEYLON.